Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 96 | சர்வதேச மின் செய்தித்தாள் | மே 01 2025




## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில்
மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச
ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட
என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com
Please call & book an appointment before visiting...
I will provide the adress after booking....

TOPSTARS
RE/MAX ACE
வீடு வாங்க | விற்க | முதலீடு
BUY | SELL | INVEST
I THRIVE FOR YOUR LIFE LONG HAPPINESS
உங்கள் கனவு இல்லத்தை நனவாக்க, நம்பிக்கையும் நட்பும் கொண்ட முகவர்
Arul Amirthalingam
Realtor
Dir: 647-450-2479
Arultoprealtor5@gmail.com
Office: 416-270-1111 / 3-1286 Kennedy Rd, Toronto M1P 2L5

Kurinchi
Beauty & Makeup
647.918.9742

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing? Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you... Self Employed?
Temporary Resident? New Immigrant?
Not to Worry!
Please Call - THEVEN KANKESU
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
thevenk1.tk@gmail.com / theven.kankesu@mtgarc.ca

ACCIDENT HAPPENS!
But your injuries don't have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
Motor Vehicle Accident? Questions? Get Answers @
ARAM Legal Services
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca

விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203




"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**தமிழ் சிங்களப் பாட்டாளிகள் மத்தியில் வர்க்க ஒருமைப்பாடு ஏற்படுவதானால் தமிழரின் தன்னாட்சி உரிமையை சிங்களத் தொழிலாளர் வர்க்கம் அங்கீகரிக்க வேண்டும். தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும். ஆனால் அதே சமயம் தென்னிலங்கைப் பாட்டாளி வர்க்கமானது சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியமைப்பிற்கு முண்டுகொடுத்து நிற்கும் வரை, தமிழ் சிங்கள வர்க்க ஒருமைப்பாடு சாத்தியமாகப் போவதில்லை.**







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203

**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)
www.sangathamil.ca



அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# லெப். கேணல் நவம் (டடி)

***முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்திருந்த இந்திய இராணுவ முகாம் மீதான தாக்குதலில் விழுப்புண்பட்டு தமிழகத்தில் சிகிச்சை பெற்றுவந்த வேளை 15.05.1989 அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் லெப். கேணல் நவம் (டடி) ஆகிய மாவீரரின் 36ம் ஆண்டு வீரவணக்க நாள் - 15.05.2025.***




படைய ஆய்வு முயற்சி ஒன்றின் போது கையை இழந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றான் ஒரு போராளி. வருவோர் போவோர் எல்லாம் அவனுக்கு ஆறுதலும், இரக்கமும் தெரிவிக்கின்றனர். அது அவனுக்கு சினத்தை மூட்டுகின்றது. இறுதியாக அவனது தாய் வருகின்றாள். நீ போராடியது போதும். இனி உனக்கு ஒரு கையில்லை வீட்டிலேயே இரு. அன்பின் மேலீட்டால் இப்படியோரு வேண்டுகோளை விடுகின்றாள் தாய். அது அவனது மனக்கொதிப்பை அதிகரிக்கினறது. தனக்கு இரக்கம் கூறவந்தவர்களுக்கு சொல்ல வேண்டியதைச் சொல்ல இதுதான் சரியானவேளையெனத் முடிவெடுக்கிறான்.

“எனக்கு இன்னொரு கை இருக்கு”. உறுதியுடன் தெளிவாக ஒலிக்கின்றது அவனது சொற்கள். அவனுக்கு ஆறுதல் கூற முனைந்தவர்களும் தமது தவறை எண்ணி நாணுகின்றனர். கால் இழந்த போராளிகளுக்கு கிட்டு எப்படி நம்பிக்கை ஒளியாக, வழிகாட்டியாக திகழ்கின்றாரோ அதே போலத்தான் போராட்டத்தில் தமது கரங்களை இழந்த போராளிகளுக்கு வழிகாட்டியாக விளங்குகிறான் அவன். அவன்தான் டடி.

டடி-நவம் வன்னிக் காடுகளின் மூலை முடுக்குகள் எல்லாம் இவனுக்கு அத்துப்படி. இக்காடுகள் பற்றிய படம் இவன் நெஞ்சில் நிறைந்திருக்கும். இவன் பிறந்தது மலைப் நாட்டில். போராடியது வன்னிக் காளங்களில். வன்னியை காதலித்த... வன்னிக் களத்திலே காயமுற்ற இவன் உயிர் பிரிந்தது தமிழகத்தில்.

பசிலனையும், லோறன்சையும் சேர்த்தால் அதுதான் நவம். இவனுடன் நெருங்கிப் பழகிய ஒரு போராளி கூறிய சொற்கள் இவை. ஒவ்வொரு போராளிக்கும் தனித்துவமாக சில ஆற்றல்கள் இருக்கும். துணிச்சலுக்குப் பெயர் போனவன் பசீலன். சிறந்த மதிநுட்பத்திற்குப் பெயர் போனவன் லோறன்ஸ். இருவரது தன்மைகளையும் ஒருவரிடத்தில் கண்டதால்தான் நவத்தைப் பற்றி அப் போராளி இவ்வாறு குறிப்பிட்டான்.

விருந்தாளிகளாக வந்தோரால் எதிலியாக்கப்பட்டதுதான் மணலாற்று மக்களின் வரலாறு. இன்றோ தமது சொந்த நிலத்தை தாமே பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வுடன் நிற்கிறார்கள் மணலாறு மக்கள். வரலாற்றில் இந்நிலையை ஏற்படுத்தியதில் கணிசமான பங்காளிகள் நவமும் அவனது தந்தையுமே. எப்போதும் துப்பாக்கியுடன் காணப்படும் ஓமர்முக்தார் என்று போராளிகளால் அழைக்கப்படும் இவனது தந்தையும் இவனும் இந்த மண்ணை விட்டு நாம் எங்கும் போவதற்கில்லை என்ற செய்தியை சிறீலங்கா அரசிற்கு அடிக்கடி உணர்த்தினார்கள்.




அரசன் ஒருவன் தான் கைப்பற்றும் இடங்களைத் தன் ஆட்சியின் கீழ் வைத்திருப்பதற்கு அவனுக்கு உதவுவது அங்கு அவன் விட்டுச் செல்லும் அவனது படை முகாம்கள் அல்ல. இதைவிட அவன் தனது இடத்து மக்களை அங்கு குடியேற்றுவதன் மூலம் சிறப்பாகச் செய்யலாம். அங்கு குடியேறும் மக்கள் அங்கு நிரந்தரமாக வசிக்கப் போகிறவர்களாதலால் அவர்கள் எவ்வித இடர்களையும் எதிர் கொள்ளவும், அவ்விடங்களைத் தமதாக்கிப் போராடுவதற்கும் தயாராக இருப்பார். இது இளவரசன் என்னும் நூலில் காணப்படும் மாக்கிய வல்லியின் கூற்று. இதை அப்படியே நடைமுறைப்படுத்தியதால்தான் இன்று அம்பாறை என்றொரு தொகுதியே முழுச்சிங்களத் தொகுதி என்றாகிவிட்டது. இதையே படிப்படியாக திருமலை, மணலாறு என விரிவாக்கி வருகின்றது சிங்கள அரசு. ஆனால் இது தமிழீழ மண் என்று எல்லை போட்டுக் காட்டியது நவத்தின் துப்பாக்கி. குடியேற்றக்காரர்கள் என்பது வல்வளைப்பு படைகளின் ஒரு வடிவமே என்பதை இவன் உணர்ந்து அதுக்கேற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டபடியால் இன்னொரு ஓதியமலை வரலாறு மீண்டும் நிகழாது தடுக்கப்பட்டது.

நெருக்கடி மிகுந்த காலகட்டங்களான, எங்கும் இந்திய இராணுவமணம் வீசிய அந்த நாட்களில் இயக்கத்தையும், இயக்கத் தலைமையயும் பாதுகாக்க இவன் மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையும் பற்றி இவனுடன் பழகிய ஒவ்வொரு போராளியும் கண்கள் பனிக்க கதைகதையாய் கூறுகின்றனர். சூழலுக்கேற்ற மாதிரியும், மக்களுக்கேற்ற மாதிரியும் அமைந்த இவனது ஒவ்வொரு செயலும் போராட்டம் பற்றிய தெளிவை புதிதாகப் போராட்டத்தில் இணைந்து கொள்ளும் இளைஞர்களுக்கும், யுவதிகளிற்கும் ஊட்டியது. நெருக்கடியான காலகட்டத்தில் பதட்டபடாமல் செயற்படும் துணிவை சகபோராளிகளுக்கு ஊட்டினான். காட்டில் நவம் நிற்கும் பகுதி ஒரு பாதுகாப்பு வலயம் என்றே கூறலாம். அந்தளவுக்குச் சிறந்த முறையில் ஒரு ஒழுங்கமைப்பை உருவாக்கியவன் அவன்.

ஒற்றைக் கையால் இவன் செய்யும் வேலைகளைப் பார்த்த ஒவ்வொருவருக்கும், இவனால் இது முடியுமானால் என்னால் ஏன் முடியாது என்ற தன்னம்பிக்கையை ஊட்டியது. அவ்வாறு உருவான போராளிகள்தான் வன்னி மாண்ணைக் காத்து நிற்கின்றனர். கணக்கற்ற களங்களைக்கண்ட இவனை நாம் இழந்தது உண்மைதான். ஆனால் இவனால் ஊட்டப்பட்ட ஒழுங்கமைப்பு, போராட்ட உணர்வு எதையும் மணலாற்று மண் மறந்துவிடவில்லை. அவ்வப்போது மணலாறு பகுதியில் எதிரியிடமிருந்து இவனால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் திரியும் போராளிகளும், ஊர்காவல் படையும் சொல்லும் செய்தி இதுதான். - களத்தில்






**இந்திய இராணுவம் ஒரு கையைப் பின்னால் கட்டியபடி போராடியது என இந்தியா கூறுவது கேலிக்கூத்தானது. ஒரு கையைப் பின்னால் கட்டியபடி இந்திய இராணுவம் எமது மக்கள் மீது இத்தகைய கொடுமைகளைச் செய்தார்கள் என்றால், இரு கைகளாலும் எத்தகைய அட்டூழியங்களைப் புரிந்திருப்பார்கள் என்பதை நினைத்துப் பார்க்கவே நெஞ்சு நடுங்குகின்றது.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**






# லெப். கேணல் நவம் அறிவுக்கூடம்

லெப். கேணல் நவம் அவர்களின் ஞாபகார்த்தமாக நவம் அறிவுக்கூடம் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களினால் உருவாக்கப்பட்டது தாயக மீட்பு போரிலே அங்கவீனமான போராளிகளைப் பேணிப் பாதுகாப்பதற்காகவும் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் உருவாகிய ஒன்று. லெப் கேணல் நவம் அறிவுக் கூடம்.

இவ் நவம் அறிவுக்கூடம் நிலையத்திலே இருக்கும் போராளிகள் எமது தமிழீழ விடிவிற்கான போராட்டத்திலே பங்களித்து தம் அங்கங்களை இழந்தும் அல்லது முழுமையாக அங்கங்கள் செயற்படாது இருப்பினும் இன்னும் தாயகத்திற்கு ஏதாவது செய்யவேண்டும் எனும் துடிப்புடன் இருக்கிறார்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர் ஒரு நேர்காணலில் “தமிழீழம் கிடைத்த பிறகு என்ன செய்வீர்கள்?” என்ற கேள்விக்கு கூறிய பதில்,

“ஆட்சியை பொறுப்பானவர்களிடம் ஒப்படைத்துவிட்டு போரில் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளை பராமரிக்கும் பணிக்கு சென்று விடுவேன்” என்றார்.

இந்த பதிலிலிருந்து அவரது நேர்மையையும் பண்பையும் மட்டுமல்ல போரில் பாதிக்கப்பட்டவர்கள் மீதான அன்பையும்

















அக்கறையையும் அவர்களை பாதுகாக்க வேண்டிய சமூக அக்கறையையும் புரிந்து கொள்ளலாம்.

தமிழீழ நடைமுறை அரசில் “நவம் அறிவுக் கூடம்” என்ற பெயரில் மாற்றுத்திறனாளிகளை பராமரிக்கும் பணி மட்டுமல்ல அவர்களை துறைசார் வல்லுனர்களாக வளர்த்தெடுக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டது.




# அநுர அரசாங்கத்திற்கு பயங்கரவாதத் தடை சட்டம் தேவையாக உள்ளது

**சுரேஸ் பிரேமச்சந்திரன்**

01.04.2025

தமக்கு எதிரான மக்கள் போராட்டங்களை கையாள பயங்கரவாத தடைச்சட்டம் என்.பி.பி எனப்படுகிறது ஜே.வி.பி க்கு தேவையாக இருக்கின்றது என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், என்.பி.பி. ஜே.வி.பி இரண்டும் ஒன்றுதான் அதில் எந்த மாற்றமும் இல்லை. கொள்கை ஒன்றுதான். சர்வதேசத்தின் உதவிக்கான வேறு வேறு தோற்றப்பாட்டை காடுகின்றனரே தவிர வேறெந்த விடயமும் இல்லை.

கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரன் தமிழ் மக்களை மிரட்ட நினைத்தால் அது அவரது இயலாமையாக இருக்கும். ஏனெனில் தமிழ் தரப்பு இவரைப்போல பலரை, பலரது மிரட்டலை கண்டது. இவரது புலுட இனியும் தமிழ் மக்களுடம் எடுபடாது.

கடந்த தேர்தல் காலத்தில் சொன்னதை செய்வதற்கு அவர்கள் தற்போது தயாராக இல்லை. ஏனெனில் தங்களுக்கு எதிராக வர இருக்கின்ற மக்கள் போராட்டங்களை கையாள பயங்கரவாத தடைச்சட்டம் தேவையாக இருக்கின்றது.

அத்துடன் அபிவிருத்தி பற்றி பேசும் இவர்கள் புதிதாக எந்த வொரு அபிவிருத்தியையும் செய்யவில்லை.

குறிப்பாக பொய் மட்டுமே இவர்களது செயற்பாடுகளாக இருக்கின்றது. சொல்லாடல்கள் வித்தியாசமாக இருக்கின்றதே தவிர உள்ளடக்கங்கள் ஒன்றுதான்.

குறிப்பாக கடந்த அரசுகளின் நிலைப்படே இவர்களது பயண




மும் தொடர்கின்றது.

குறிப்பாக புத்த விகாரை கட்டுமாணங்கள் தொடர்கின்றன, கைதிகள் விடுவிக்கப்படவில்லை, இதை தடுக்கவும் இல்லை.

யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்களும் தாங்கள் எதை செய்தோம் என்பதை மக்களுக்கு கூறவேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# தமிழர்களின் இனப் படுகொலைகளை விசாரிக்க விரும்பாத அரசாங்கம் செம்மணி புதைகுழியை தோண்டுவதில் தயக்கம்

**தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

15.04.2025

யுத்த காலத்தில் போர் நிறுத்தத்தை விரும்பாத அப்போதைய ஜேவிபி என்கின்ற தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைகளை மூழ்கடிக்கும் முயற்சியே செம்மணி சித்துப் பாத்தி மனித புதைகுழி அகழ்வை மேற்கொள்வதில் தயக்கம் காட்டுவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டியுள்ளார்.



அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இராணுவத்தினாலால் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சுமார் 600 மேற்பட்ட தமிழ் மக்கள் யாழ் செம்மணியில் புதைக்கப்பட்டமை ஆதாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு இடம்பெற்ற காலப் பகுதியில் குறித்த பகுதி மறைக்கப்பட்டு இரவ இரவாக கனகர வாகனங்கள் மூலம் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட நிலையில் அதனை மூடி மறைப்பதற்கும் ஆதாரங்களை அழிப்பதற்கும் பல்வேறு முயற்சிகள் அப்போதைய அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

அதேபோன்று தற்போதைய ஜேவிபி என்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அண்மையில் செம்மணி சிந்துப் பாத்தி மயானத்தில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அதனை அகழ்வதற்கு அனுமதி வழங்காது இழுத்தடிப்பு செய்கின்றனர்.

அரசாங்கத்தை பொருத்தவரையில் மனிதப் புதகுழி ஒன்றை அகழ்வதற்கு 20 இலட்சம் ரூபாய் என்பது சிறிய தொகை அதனை வழங்குவதற்கு கூட தற்போதைய அரசாங்கம் அக்கறை செலுத்தாது இழுத்தாடிப்பு செய்கிறது.

குறித்த மனித புதைகுழியை தமிழ் பேராசிரியர் ஒருவர் ஆய்வு செய்வதற்காக அமர்த்தப்பட்ட நிலையில் அவரைக் கூட தற்போதைய அரசாங்கம் மாற்றுவதற்கான காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருவதாக அறிய கிடைத்துள்ளது.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி என்கின்ற ஜே வி பி னர் தொடர்பில் தமிழ் மக்கள் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

இறுதி யுத்த காலத்தில் போர் நிறுத்தத்தை விரும்பாத இராணுவத்திற்கு ஆட்களை திரட்டி தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலைகளை மேற்கொண்டவர்கள்.

பெயரை மாற்றிக் கொண்டு தமிழ் மக்களுக்கான தீர்வை தரப் போகிறோம் என மக்களை ஏமாற்றி தமது சிங்கள ஏகாபத்திய நிகழ்ச்சி நிரல்களை அரங்கேற்றிய வண்ணம் உள்ளர்.

இறுதி யுத்தத்தில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலும் சர்வதேச விசாரணைகளை மூடி மறைக்கும் செயற்பாடுகளில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றனர்.

தேசிய மக்கள் சக்தியினர் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் என்பதற்கு தற்போது பட்டலந்த விவகாரம் மிக சரியான உதாரணமாகும்.

அதாவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை தமிழ் மக்கள் அறிந்த விவகாரமாக பட்டலந்த விவகாரத்தை கொள்ளலாம்.

பட்டலந்த வீட்டு திட்ட குடியிருப்பில் சித்தரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தமது தோழர்கள் தொடர்பான விசாரணைகளுக்கு சர்வதேச தரப்புக்களை இணைத்து மேற்கொள்வதற்கு தயார் என கூறுகிறார்கள்.



இதிலிருந்து என்ன விளங்குகிறது இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான இனப்படுகொலைகளை சர்வதேச நீதியில் விசாரிப்பதற்கு மறுத்து உள்ளூர் விசாரணை மூலம் தீர்வு என கூறுகிறார்கள்..

ஆனால் பட்டலந்தவில் படுகொலை செய்யப்பட்ட தமது ஜேவிபி தோழர்களுக்கு சர்வதேச தரப்புக்களை அழைத்து விசாரணைக்கு தயார் என கூறும் தேசிய மக்கள் சக்தியினர் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட படுகொலைகளுக்கும் போர் குற்றங்களுக்கும் ஏன் சர்வதேச விசாரணைகளுக்கு மறுக்கிறார்கள்.

தமது அரசியல் நோக்கத்திற்காக பட்டலந்த விவகாரத்தை கையில் எடுத்துள்ள தேசிய மக்கள் சக்தியினர் செம்மணி மனிதப் புதை குழியை தோண்டுவதற்கு கூட சிறிய படத் தொகையை வழங்க பின்னிக்கும் இவர்கள் புதை குழி விவகாரத்தை சர்வதேசத்திற்கு கொண்டு செல்லத் தயாராக இருக்கிறார்களா?

ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஆறு மாதங்கள் கடந்து செல்கின்ற நிலையில் ஜேவிபி என்கின்ற தேசிய மக்கள் சக்தி தொடர்பில் தத்துவார்த்த நீதியாக தமிழ் மக்கள் உணர ஆரம்பித்து விட்டார்கள்.

ஆகவே தமிழ் மக்களை தத்துவார்த்த ரீதியாக அழிப்பதற்கு பல்வேறு செயற்திட்டங்களை வகுத்துக் கொடுத்த தற்போதைய தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் விரட்டியடிப்பதற்கான காலம் கனிந்துள்ளதாக மேலும் தெரிவித்தார்.



**“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

**www.sangathamil.ca**

# முதலில் விவசாயக் காணிகளை விடுவியுங்கள் [?]

16.04.2025

வலி வடக்கு பிரதேசத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் விடுவிக்கப்பட்ட விவசாய காணிகளையாவது முழுமையாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு தற்போதைய ஜனாதிபதி அனுரவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ரணிலால் விடுவிக்கப்பட்ட பகுதிகளிற்கு கட்டுப்பாடுகள் இன்றி சுதந்திரமாக சென்று விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட அக் காணிகளை முழுமையாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு நாளைய தினம் வியாழக்கிழமை சிறீலங்கா ஜனாதிபதி வருகை தரும் போது இராணுவத்துடன் உரையாடி விவசாய காணிகளை முழுமையாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வலி. வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டிற்குள் உள்ள ஒரு பகுதி விவசாய காணிகளை விடுவித்து, விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க அனுமதி அளிக்கப்பட்டது.

அதேவேளை "உறுமய" காணி வழங்கப்படும் திட்டத்தின் ஊடாக ஒட்டகப்புலம் பகுதியில் 408 குடும்பங்களுக்கு 235 ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்பட்டது.

விவசாய நடவடிக்கைகாக பலாலி வடக்கு, பலாலி கிழக்கு, பலாலி தெற்கு, வயாவிளான் மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் காணிகள் விவசாய காணிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர், பின்மாலை பொழுதுகளின் பின்னர் காணிகளுக்குள் நிற்க முடியாது, விவசாய நிலங்களில் ஓய்வு எடுப்பதற்கு தற்காலிக கொட்டகைகளை அமைக்க அனுமதியில்லை, போன்ற கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.



அத்துடன் காணிகளை சுற்றி உயர் பாதுகாப்பு வலய வேலிகள் அகற்றப்படாமல் இருப்பதனால், தமது விவசாய காணிகளுக்கு சுற்று பாதைகள் ஊடாக நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய நிலைமைகளும் காணப்படுகிறது.

# மன்னாரில் காற்றாலை, கனிம மண் அகழ்வு திட்டத்தை நிறுத்த வேண்டும்

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி. எஸ். சிவபரன்

16.04.2025

மக்களினுடைய நலனை கருத்தில் கொள்ளாமல் பன்னாட்டு கம்பனிகளின் விருப்பத்திற்கு ஏற்ப இந்த அரசும் செயல்படுவது வேதனைக்குரிய விடயம் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து புதன்கிழமை (16) ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் தீவுப் பகுதியில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மற்றும் கனிம மண் அகழ்வு திட்டங்களை நிறுத்துமாறு கோரி பல வருடங்களாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தாம் ஆட்சிக்கு வந்தவுடன் உடனடியாக இந்தத் திட்டங்களை நிறுத்துவதாக ஜே.வி.பி யின் சட்டத்தரணிகள் குழு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக எம்மைச் சந்தித்து வாக்குறுதி அளித்திருந்தன.

ஆனால், இதுவரை நிறைவேற்றப்படவில்லை. காற்றாலை திட்டம் டைட்டானியம் அகழ்வு கரையோர கனிம மணல் அகழ்வு, இம் மூன்று திட்டங்களாலும் மன்னார் தீவுப் பகுதி பல்வேறு விதமான சுற்றுச்சூழல் பாதிப்புக்கு உள்ளாகும் என பல துறைசார்ந்த வல்லுநர்கள் தொடர்ச்சியாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து வரும் வேளையில் அரசு அதனைப் பொருட்படுத்தாமல் செயல்படுத்த முனைகிறது.

மக்களினுடைய நலனை கருத்தில் கொள்ளாமல் பன்னாட்டு கம்பனிகளின் விருப்பத்திற்கு ஏற்ப இந்த அரசும் செயல்படுவது வேதனைக்குரிய விடயம். கடந்த காலத்தில் உள்ள ஆட்சியாளர்கள் மீது அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின் அடிமைகள் என்றும் இந்தியாவின் கைக்கூலிகள் என்றும் பல்வேறு விதமான விமர்சனங்களை தெரிவித்து வந்த ஜனாதிபதி அதே வேலையை அவரும் முன்னெடுப்பது வெட்கக்கேடான அரசியல் செயல்பாடு ஆகும்.

நடைமுறைச் சாத்தியமற்ற போலியான வாக்குறுதிகளை வழங்கி தேர்தலில் வெற்றி பெற்று அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் திண்டாடுகின்றாடுகின்றது அரசு. ஆகவே, மூன்றாவது தேர்தலிலும் போலியான வாக்குறுதியை வழங்கி வெற்றி பெற முனைகிறீர்களா? நாளை மன்னாருக்கு வருகை தர உள்ள தாங்கள் இம் மூன்று திட்டங்களையும் நிறுத்துவதாக அறிவிக்க வேண்டும்.

இல்லையேல் நீங்கள் குற்றம் சாட்டியபடி ஏனைய அரசியல் வாதிகளுக்கும் தங்களுக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லாதவராகவே காணப்படுவீர்கள்.



அரசியலிலும் அறம் மிக முக்கியம். நீண்ட காலத்துக்கு எவரையும் ஏமாற்ற முடியாது. மீண்டும் மீண்டும் இந்த மக்களை ஏமாற்றி வாக்கு பெற முனையாதீர்கள். நீங்கள் பின்பற்றுவதாக மேலிடையிடும் இடதுசாரித்துவத்துக்கே அவமானமும் இழுக்கும் ஆகும் தாங்கள் ஜனாதிபதி தேர்தலில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி.

இப்படி மன்னாரில் உள்ள இம்மூன்று திட்டத்தையும் இரத்து செய்ய வேண்டும் இல்லையேல் மக்கள் தொடர்ந்து ஏமாற மாட்டார்கள் என்பது இத்தேர்தல் தங்களுக்கு உணர்த்தும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ் – வலி. வடக்கில் காணி விடுவிப்பு கோரிய ஊடக சந்திப்பினை மேற்கொண்டவர்களை அச்சுறுத்திய அநுர திஸாநாயக்க அரசாங்கப் பொலிசார்

17.04.2025

யாழ்ப்பாணத்திற்கு இன்றைய நாள் வியாழக்கிழமை விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதியிடம் தமது காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஊடகங்கள் ஊடாக கோரிக்கை விடுத்த காணி உரிமையாளர்களுக்கு பொலிசார் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.





பலாலி உயர்பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் , பலாலி வீதி கட்டுப்பாடுகள் இன்றி முழுமையாக திறக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் ஊடகங்கள் ஊடாக முன் வைக்கும் வகையில் வசாவிளான் சந்திக்கு அண்மையில் ஊடக சந்திப்பொன்றினை "வலி. வடக்கு காணி விடுவிப்புக்கான அமையம்" எனும் அமைப்பு இன்றைய நாள் வியாழக்கிழமை ஏற்பாடு செய்திருந்தனர்.

குறித்த ஊடக சந்திப்பு ஆரம்பமாக இருந்த சமயம் அவ்விடத்திற்கு வருகை தந்த பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் இவ்விடத்தில் ஊடக சந்திப்பினை நடாத்த முடியாது என ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களை அச்சுறுத்தி, அவர்களை தனித்தனியே ஒளிப்படங்கள் எடுத்ததுதான், அவர்களின் பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை பதிவு செய்தனர்.

அத்துடன் அங்கிருந்த ஊடகவியலாளர்களையும் ஒளிப்படங்கள் எடுத்து அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.

அச்சறுத்தல்களையும் மீறி குறித்த ஊடக சந்திப்பு அவ்விடத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இனவாத ரீதியில் செயற்பட்டு வருபவர் எனவும், சட்டவிரோதமான முறையில் தையிட்டி கட்டப்பட்டுள்ள விகாரைக்கு எதிரான போராட்டங்களின் போதும் போராட்டக்காரர்களுடன் முரண்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருபவர் என்பதுடன், விகாரைக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுவர்களுக்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட்டுக்களை முன் வைத்து கைது நடவடிக்கைகளை முன்னெடுக்க முற்படுபவர் எனவும் மக்களால் குற்றம் சாட்டப்படுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சைவமக்கள் வழிபாடு செய்த புராதன இடங்களை விடுவிக்கவேண்டும்

## அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறு திருமுருகன்

17.04.2025

கீரிமலை சடையம்மா மடம், ஆதிச்சிவன் கோவிலிருந்த நிலம், காங்கேசன்துறை தல்செவன ஹோட்டல் பாவனையிலுள்ள சுக்கிரவார சத்திர மடத்து நிலம் என்பவற்றை உடனடியாக விடுவிக்க வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

நீண்டகாலமாக சைவமக்கள் வழிபாடு செய்த புராதன இடங்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இன்றும் விடுவிக்கப் படாமல் உள்ளன. தாங்கள் இவற்றை விடுவிப்பதில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அன்போடு ஜனாதிபதியிடம் வேண்டுகிறோம்.

மேலும் பொதுமக்களின் காணிகளில் வடக்கு கிழக்கில் படை யினர் தொடர்ந்து தங்கி உள்ளனர். தாங்கள் அவ்விடயத்தில் அக்கறை கொண்டு பொதுமக்களின் நிலங்களை விடுவிக்க வேண்டும். பாடல் பெற்ற தலமாகிய திருக்கோணேஸ்வரர் திருத்தலத்திற்கு அருகாமையில் பக்தர்களுக்கு இடையூறாக கோயிலுக்குச் செல்லும் பாதையில் பெட்டிக்கடைகள் அமைக்கப் பட்டு கோயில் புனிதத்தை தொடர்ந்து கெடுத்து வருகிறார்கள். இவ்விடயம் தொடர்பாக சென்ற வருடம் நல்லை ஆதீனத்துக்கு தாங்கள் வருகை தந்தபோது எடுத்துரைத்தோம்.

தயவுசெய்து வரலாற்றுப் பெருமைமிக்க திருக்கோணேஸ்வர திருத்தல சுற்றாடலை பேணுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கு மாறு சைவ மக்கள் சார்பில் வேண்டுகிறோம். தாங்கள் பதவி ஏற்றதும் நீண்டகாலமாக உள்ள தமிழர் பிரச்சினையை நிரந் தரமாக தீர்த்து வைப்பேன் என கூறி வந்துள்ளீர்கள். நிரந்தர மான பூரண உரிமைகள் உள்ளடக்கிய தீர்வை வழங்கி எம் மினத்தின் நீண்ட காலப் பிரச்சினையை தீர்த்து வைக்க



முன்வாருங்கள் என்றுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு இன்றைய நாள் வியாழக்கிழமை சிறீலங்கா ஜனாதிபதி வருகை தரவுள்ள நிலையில் குறித்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# 35 வருட காலமாக உயர்பாதுகாப்பு வலயம் எனும் பெயரில் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை உடன் விடுவியுங்கள்

## யாழ். வலி வடக்கு காணிகள் விடுவிப்புக்கான அமையத்தினர்

18.04.2025

1990 ஆம் ஆண்டு முதல் 35 வருடகாலமாக உயர்பாதுகாப்பு வலயம் எனும் பெயரில் இலங்கை அரசினால் கையகப்படுத்தப் பட்டுள்ள வலிகாமம் வடக்கில் கீரிமலை, காங்கேசன்துறை, தையிட்டி, ஊரணி, மயிலிட்டி, பலாலி, வயாவிளான், கட்டுவன், குரும்பசிட்டி, தோலக்கட்டி ஆகிய கிராம மக்களின் காணிகளை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் தேர்தல் விஞ் ஞாபனத்திலும், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றத் தேர் தல் விஞ்ஞாபனத்திலும் கூறப்பட்டதற்கு அமைய உடனடியாக விடுவிக்குமாறு வலி வடக்கு காணிகள் விடுவிப்புக்கான அமையத்தினர் சிறீலங்கா ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வியாழக்கிழமை (17.04.2025) யாழ்.வயாவிளான் சந்திக்கு அருகில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத் துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிந்து 15 ஆண்டு காலம் முடிவடைந்தும் ஐந்தாவது ஜனாதிபதி மாற்றமாகியும், நாலாவது நாடாளுமன்றம் தேர்ந் தெடுக்கப்பட்டும், பல வாக்குறுதிகள் வழங்கியும் இதுவரை சுமார் 2900 ஏக்கர் காணிகள் முழுமையாக விடுவிக்கப் படவில்லை.

.

கடந்த 10.04.2025 அன்று பலாலி வீதியின் ஒரு பகுதி நிபந் தனைகளுடன் பகல் நேரத்தில் மட்டும் திறந்து வைக்கப்பட் டதை வரவேற்கும் அதேநேரம் 2018 ஆண்டு நல்லாட்சி அரசின் ஆட்சியில் தேசிய பாதுகாப்புக் குழுவின் அனுமதி பெறப் பட்ட காங்கேசன்துறை, மயிலிட்டி பலாலி போன்ற கிராமங் களில் விடுவிக்கப்படவிருந்த சுமார் 500 ஏக்கர் காணிகளில் 50 ஏக்கர் காணிகள் மட்டுமே இதுவரை மக்களின் தேவைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக இந்தக் காணிகளை மக்கள் முழுமையாக அனுபவிக்க முடியாத நிலையில் இராணுவ கெடுபிடிகள் தொடர்ந்தும் நீடிக்கின்றன.

தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அனை வரும் சமமாகவும், சமத்துவமாகவும் நடாத்தப்படும் புதியதோர் இலங்கையை உருவாக்குவதாக வாக்குறுதி அளித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் முடிந்து 6 மாதங்கள் ஆகியும், நாடாளு மன்றத் தேர்தல் முடிந்து 5 மாதம் கழிந்தும் புதிதாக காணிகள் விடுவிக்கப்படவில்லை. மக்களின் துன்பத்தினைத் தமது அரசியலுக்கு தேசிய மக்கள் சக்தி பயன்படுத்தாது என்று கூறியிருந்தாலும், இனவாதமற்ற அரசியலை ஏற்படுத்துவதாக வாக்குறுதி அளித்திருந்தாலும் சிங்கள மக்கள் கூட ஆதரிக்கும் பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதில் ஏன் தாமதம்?

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் 06.05.2025 அன்று நடப் பதற்கு முன் வடக்கு மக்களின் வாக்குகளைப் பெற்ற நீங்களும், உங்களது அரசும் உயர்பாதுகாப்பு வலயத்திலிருக்கும் மக் களுக்குக் காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டுமென் பதை வலியுறுத்தும் அதேநேரம் பின்வரும் கோரிக்கைகளை உங்களுக்கும், உங்கள் அரசுக்கும் முன்வைக்கிறோம்.

1.வலிகாமம் வடக்கில் முப்படையினரதும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கையகப்படுத்தப்பட்டுள்ள அனைத்துக் காணிகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்.

2. 1983 ஆம் ஆண்டு முதல் விமான நிலைய விஸ்தரிப்புக் கெனக் கையகப்படுத்தப்பட்டும், இதுவரை எந்தவித பயன் பாடோ அபிவிருத்தியோ செய்யப்படாத காணிகள் உடனடியாக உரிமையாளரிடம் கையளிக்க வேண்டும்.

3 .ஜனாதிபதி மாளிகை மற்றும் தையிட்டி விகாரை போன்ற காணிகள் தொடர்பாக விசேட அவதானம் எடுத்து நீதியான முறையில் உரிமையாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக காணிகள் மீளளிப்பதற்கான வெளிப்படையான தீர்வொன்றை முன்வைக்க வேண்டும்.

4. தற்போது அரசின் அமைப்புக்களால் கையகப்படுத்தப்பட்டு அல்லது பயன்படுத்தப்படும் அனைத்துக் காணிகள் மற்றும் அவற்றின் உரிமையாளர்கள் தொடர்பான விபரங்கள் அடங் கிய முழுமையான வெளிப்படையான அறிக்கை ஒன்றைப் பொதுமக்கள் பார்வைக்கு வெளிப்படுத்த வேண்டும்.

5. விடுவிக்கப்பட்ட காணிகளைப் பாதிக்கப்பட்ட மக்கள் தங் களைப் பாதுகாப்பதும் பராமரிப்பதில் உள்ள சவால்களை நீதி யானதும், மனிதாபிமான முறையில் கையாண்டு காணிகளைப் பாதுகாப்பதற்கும், எல்லைகளை நிர்ணயிப்பதற்கும் குறைந் தது வேலி போட்டு மின்சார இணைப்புக்களைப் பெற அரச நிதி ஒதுக்கீடு செய்து 2025 தொடக்கம் கட்டம் கட்டமாக அமுல் படுத்த வேண்டும்.

6. இந்தப் பகுதிகளில் மக்களின் சொத்துக்கள் அழிக்கப்பட் டுள்ளது என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மையே. ஆகையால், நீதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வாக்குறுதி அழித்துள்ள தேசியமக்கள் சக்தி அரசு காணிகளை விடுவிப் பதுடன் குறைந்தது வீடுகளை மீளக் கட்ட அல்லது புனரமைக் கத் திட்டமிடல் செய்து வருடாந்தம் இதற்கான நிதியினை வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

7. இந்திய மீன்பிடிப் படகுகள் காரணமாக எமது மீன்பிடியின ருக்கு ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி அனைவரும் அறிவார்கள். அதேநேரம் 1981 ஆம் ஆண்டு வடக்கு மக்களுக்காக கட்டப்பட்டு 2017 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் மயிலிட்டி உட்பட வடபகுதி மீனவர்களின் தேவைக் குப் பயன்படுத்த உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

8. கையகப்படுத்தப்பட்ட இந்திய இழுவைப்படகுகள் மற்றும் தென்பகுதியிலிருந்து வரும் பெரிய மீன்பிடிப் படகுகள் குறைக் கப்பட்டு உள்ளூர் மீனவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

9. மயிலிட்டித் துறைமுகம் மயிலிட்டி மீனவர் சங்கத்தின் பரா மரிப்பிற்கு வழங்கப்பட வேண்டும். மீன்பிடித் துறைமுகங்கள்




நாடெங்கும் மீனவர் சங்கங்களின் முகாமையிலேயே உள் ளன. இருந்தபோதும் மயிலிட்டித் துறைமுகம் இலங்கைத் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பிலும், கடற்படையின் கட்டுப்பட்டிலுமே இதுவரை உள்ளது. மயிலிட்டித் துறைமுகத் தின் நிர்வாகம் உடனடியாக மீனவர் அமைப்புக்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

10. காங்கேசன்துறை கீரிமலை வீதி மற்றும் கட்டுவன் வயா விளான் வீதி உட்பட மூடப்பட்டுள்ள அனைத்து வீதிகளும் உடன் திறப்பதுடன் அந்த வீதிகள் ஊடாக பொதுமக்கள் பிர யாணம் செய்வதற்கான இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

11. நல்லிணக்க அடிப்படையில் தமது கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் அழித்துச் சேதமாக்கப்பட்ட அனைத்து மத ஆல யங்கள் மற்றும் கோவில்களை விடுவித்து அரச செலவில் மீள் புனரமைப்புச் செய்வதை அரசு உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

எனவே, ஜனாதிபதி மற்றும் பிரதமர் மட்டுமல்லாமல் தேசிய மக்கள் சக்தியின் மூன்று தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தற்போது உள்ளூராட்சி மன்றங்களில் தமது தமிழ்மக்களுக்குத் தேசிய மக்கள் சக்தி அரசு நீதியையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் என்று நம்பிக் களம் இறங்கி யுள்ள வேட்பாளர்கள் அனைவரிடத்திலும் நாம் இந்தக் கோரிக் கையை முன்வைக்கின்றோம். இந்தக் கோரிக்கைகளில் தேர் தலின் முன் இலகுவாக நிறைவேற்றக் கூடிய விடயமான மக் களின் அனைத்துக் காணிகளையும் உடன் விடுவிக்கக் கோரித் தமது கட்சியிடமும், அரசிடமும், அமைச்சர்களிடமும் ஜனாதிபதி யிடமும் பகிரங்கக் கோரிக்கை விடுக்கும் படியும், இவ் விடயத் தில் தீர்வினை நடைமுறைப்படுத்தவதற்கு உரிமையாளர் களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தி வெளிப்படையான பேச்சுவார்த்தை மூலம் காணி விடுவிப்பை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

www.sangathamil.ca

# வவுனியாவில் உள்ள சிறீலங்காப் பொலிஸ் நிலையம் சென்ற தமிழ் இளைஞன் சடலமாக மீட்பு

18.04.2025

வவுனியா, உளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ய சென்ற இளைஞனே இரத்த கறைகளுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பாவற்குளத்தின் சூடுவெந்தபுலவு அலைகரைப் பகுதியில் இருந்து கடந்த புதன்கிழமை மாலை இளைஞர் ஒருவரின் சடலம் இரத்தக் கறை காயங்களுடன் மீட்கப்பட்டிருந்தது.

சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த புதுவருட தினமன்று காணாமல் போயிருந்த வவுனியா விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த கோபிதாசன் (வயது 33) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டிருந்தது.

குறித்த இளைஞன் புதுவருட தினத்தன்றுகாலை வீட்டில் இருந்து சென்றதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.



8அதன் பின் காலையில் சூடுவெந்தபுலவு வீதியில் நின்றதாகவும் தமது கிராமத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் வீதியால் மோட்டர் சைக்கிளில் சென்ற போது, மரணமடைந்த இளைஞர் தன்னை சிலர் தாக்குவதாகவும், உளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் போறேன். பொலிஸ் நிலையத்தில இறக்கி விடும் படியும் கோரியுள்ளார்.

இதனையடுத்து குறித்த இளைஞரை உளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் இறக்கி விடப்பட்டதாகவும், அவர் பொலிஸ் நிலையத்திற்கு சென்றதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

அதன்பின் அவரை தேடியும் கிடைக்காத நிலையில் இரண்டு தினங்களின் பின் கடந்த புதன் கிழமையே சடலமாக மீட்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ள உறவினர்கள் இக் கொலைக் குற்றவாளிகளை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எனவும் தமது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளனர்.

# அன்னை பூபதியின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல் நாள்: சிவில் சமூக செயற்பாட்டாளருக்கு சிறீலங்கா பொலிஸ் அழைப்பாணை

18.04.2025

சிவில் சமூக செயற்பாட்டாளர் ச.சிவயோகநாதனுக்கு மட்டக்களப்பு கொக்குவில் பிரதேசத்தில் உள்ள சிறீலங்காப் பொலிசாரினால் விசாரணைக்கான அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை (17) பி.ப 4.25 மணிக்கு அவரது வீட்டுக்குச் சென்ற சிறீலங்காப் பொலிசார் இருவரினால் நாளை 19 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு அன்னை பூபதியின் நினைவு நாள் தொடர்பான விசாரணைக்கு வருமாறு காத்தான்குடி மற்றும் கொக்குவில் பொலிசாரினால் கையொப்பமிடப்பட்ட கடிதமொன்று வழங்கப்பட்டுள்ளது.



மேற்படி கடிதமானது சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ளது. எனவே இதன்மூலம் தனது மொழி உரிமை மீறப்பட்டுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றியத்தின் தலைவரான ச.சிவயோகநாதன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் 19 ஆம் திகதி அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வுகள் நடைபெற உள்ள நிலையில் மேற்படி விசாரணைகள் தொடங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



ස්ථානාධිපති
පොලිස් ස්ථානය
කොකුවිල්

**போரும் சமாதானமும் என்ற இந்த இரட்டை அணுகுமுறை, அடிப்படையிலேயே தவறானது. எந்தப் போராட்டச் சக்தியுடன் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டுமோ அந்தப் போராட்டச் சக்தியை அந்நியப்படுத்தி அழித்துவிட்டு, பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்பது என்றுமே நடக்கப்போவதில்லை. இது சிங்கள ஆட்சியாளர்களின் அரசியல் அசட்டுத்தனமேயன்றி வேறொன்றுமன்று.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.ca**

# யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரை கட்டுமானத்தின் முக்கிய பங்காளர்கள் ஜே.வி.பி

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

19.04.2025

தையிடி விகாரையின் கட்டுமானத்துக்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் தேசிய மக்கள் சக்தி என்கிற ஜே.விபியினர் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இனவாதத்துக்கு இடமில்லை என்று கூறும் அனுர அரசே தையிட்டி விகாரையின் கட்டுமாணத்துக்கு முக்கிய கரணமாக இருந்தனர்.

இவர்களே அன்று இந்த திஸ்ஸ விகாரையின் கட்டுமாணம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் குறித்த பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்த போது, விகாரையை அமைக்கும் நடவடிக்கைக்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் மத வாதம் பேசுவதாக கூறி சிங்கள மக்களை திசை திருப்பி விகாரையை கட்டிமுடிக்கச் செய்திருந்தனர்.

ஆனால் இன்று குத்துக்கரணம் அடித்து மக்களை ஏமாற்றி எமது மக்களின் நலன்களை முன்னிறுத்தி போராடும் தமிழ் அரசியல் கட்சிகள் மீது குறிப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மீது குற்றச்சாட்டை சுமத்தி அரசியல் செய்கின்றனர். இனவாதத்தை தூண்டும் இந்த தேசிய மக்கள் சக்தி தமிழ் கட்சிகள் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களை கூறி அவர்களது உச்சபட்ச இனவாதத்தின் வெளிப்பாட்டை காட்டுகின்றனர்.

முன்னைய அரச தலைவரான கோட்டாவுக்கு இரண்டு வருடம் தேவைப்பட்டது அவரது உண்மை முகத்தைக் காட்ட, ஆனால் இந்த ஜேவிபியின் உண்மையான முகம் 6 மாதங்களுக்கள் வெளிப்படுவிட்டது.

முன்னைய அரசாங்கத்தவர்கள் இனவாதிகள். அதை அவர்கள் வெளிப்படையாகவே காட்டினர். ஆனால் இவர்கள் அதைவிட மோசமனவர்கள். மக்களை நம்பவைத்து தம்வசப்படுத்தி கழுத்தறுக்க முயற்சிக்கின்றனர்.




இதேவேளை உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிரசார மேடைகளில் ஜனாதிபதியின் பிரசாரப் பேச்சுக்கள் தமிழ் மக்களின் இருப்பை சூட்சகமாக இல்லாதொழிக்கும் நிகழ்ச்சி திட்டங்களை உள்ளடக்கியதாகவே முன்னெடுப்பதாக உள்ளது.

இது அனுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசின் அச்சுறுத்தும் அரசியல் போக்காகவே இருக்கின்றது.

மக்களின் ஆதரவை பெறுவதற்காக பல வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய அனுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் அந்த வாக்குறுதிகளுள் ஒன்றைக்கூட நிறைவேற்றாது மீண்டும் புதிய பல வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றது. இது தமிழ் மக்களின் வாக்குகளை சூறையாடும் முயற்சியாக இருக்கின்றதே தவிர தமிழ் மக்களின் நலன்களுக்கானதாக ஒரு போதும் இருக்கப் போவதில்லை. இதை எமது மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். அத்துடன் இதன் வெளிப்பாட்டை உள்ளூராட்சித் தேர்தலிலும் வெளிப்படுத்த வேண்டும்.

அந்தவகையில் தமக்கு வாக்களித்தால்தான் பிரதேச சபைகளுக்கு நிதி விடுவிக்கப்படும் என்ற ஜனாதிபதியின் கருத்தானது ஜனநாயக விரோதத்துக்கு இதைவிட வேறொரு உதாரணம் வேண்டுமா? என மேலும் தெரிவித்தார்.

# அன்னை பூபதியின் நினைவு நாளில் கலந்து கொள்வதற்கு மீண்டும் நிபந்தனையுடன் கூடிய நீதிமன்ற தடையுத்தரவு

18.04.2025

எதிர்வரும் 19.04.2025 அன்னை பூபதி அவர்களின் 37 ம் ஆண்டு நினைவேந்தல் நடைபெறவுள்ள நிலையில்,

1. மட்டக்களப்பு தலைமை பொலிஸ்
2. சந்திவெலி பொலிஸ்
3. காத்தான்குடி பொலிஸ்.
4. கொக்குவில் பொலிஸ்



ஆகியோரால் மட்டக்களப்பு நீதவான் நீதி மன்றம் மற்றும் ஏறாவூர் நீதவான் நீதி மன்றம் ஆகிய மன்றுகளை அணுகி மேற்படி நிகழ்வுகளில் கலந்து கொள்வது தொடர்பாக கீழ் கானும் பெயர்களையுடைய 1.சபாரெத்தினம் சிவயோகநாதன் (சீலன்) 2. திரு செல்வகுமார் 3.திரு அரவிந்தன் ஆகியேருக்கு எதிராக நிபந்தனைகளுடன் கூடிய நீதவான் நீதிமன்ற தடையுத்தரவினை பெற்றுள்ளனர்.

இன்று மாலை 5.15 மணிக்கு ச.சிவயேகநாதன் அவர்களது வீட்டிற்கு சென்ற கொக்குவில் பொலிசார் மேற்படி மூன்று பொலிஸ் நிலையங்கள் சார்பிலும் பெற்றுக் கொண்ட நீதி மன்ற தடையுத்தரவுகளையும் வழங்கிச் சென்றனர்.

தடையுத்தரவில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது மேற்படி நான்கு பொலிஸ் பிரிவுகளிலும் அன்னை பூபதி தொடர்பாக அஞ்சலி நிகழ்வுகள் செய்வதையோ ஒன்று கூடுவதையோ ஊர்வலம் நடாத்துவதையோ தடை செய்வதாகவும் அத்துடன் 2011.08.29 ஆம் ஆண்டின் விசேட வர்தமாணியின் பிரிவு 01 தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மரணித்தவர்களை நினைவு கூறும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தடை செய்யப்பட்ட இயக்கத்தினை மீழுருவாக்கம் செய்வதனை துண்டும் வகையிலான நடவடிக்கைகளை மேற் கொள்வதற் கும் தற்பொழுது ஆட்சியில் உள்ள அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டுள்ள புலம் பெயர் அமைப்புக்களின் செயற்பாட் டினால் இச் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நீதவான் நீதி மன்றம் தடையுத்தர வினை வழங்கியுள்ளது.


MAGISTRATE
MAGISTRATE'S COURT
BATTICALOA

அதேநேரம் மட்டக்களப்பு நாவலடியில் உள்ள அன்னை பூபதி அவர்களின் சமாதியில் அமைதியான முறையில் நினைவு கூறுவதை மன்று அனுமதிக்கின்றது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**அன்னை பூபதி தனி மனிதப் பிறவியாக சாகவில்லை.**
**தமிழீழத் தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக**
**அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# மன்னாரில் சிறிலங்கா ஜனாதிபதி உண்மைக்கு மாறான தகவலையே வழங்கிவிட்டுச் சென்றுள்ளார்

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி. எஸ். சிவகரன்

18.04.2025

மன்னாரில் ஜனாதிபதி உண்மைக்கு மாறான தகவலையே வழங்கிவிட்டுச் சென்றுள்ளார். தேர்தல் மேடையில் வாக்கு பெறுவதற்காக நடைபெறுகின்ற சம்பவத்தை இல்லை என்று கூறுவது அரசின் ஆட்சி முறைமைக்கான அவமானம் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இன்று வெள்ளிக்கிழமை (18) பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

மன்னாருக்கு நேற்றைய நாள் வியாழக்கிழமை (17) தேர்தல் பரப்புரை கூட்டத்துக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க காற்றாலை விடயம் சம்பந்தமாக முன்னுக்குப் பின் முரணான தகவலை வழங்கிவிட்டுச் சென்றுள்ளார். அவருடைய தகவலை பார்க்கின்றபோது, கொய்யாரக் கொண்டையிலே தாழம்பூவாம் உள்ளே இருப்பது ஈரும் பேனுமாம் என்கிற கிராமத்துப் பழமொழி ஞாபகத்துக்கு வருகிறது. அவரது கதையும் அவ்வாறே அமைந்துள்ளது.

காற்றாலை மின் உற்பத்தி திட்டம் மற்றும் கனிய மணல் அகழ்வு போன்ற திட்டங்கள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருக்கின்றன என்கிற செய்தியை அரசாங்கம் அரச அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

அது மாத்திரமின்றி 16.01.2025 அன்று மாவட்டச் செயலகத்தில் காற்றாலை திட்டம் சம்பந்தமான கூட்டம் நடத்தப்பட்டு, தற்காலிகமாக அத்திட்டத்தை இடை நிறுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதன் பின்னர் 28.01.2025 அன்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்திலும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், இந்த தீர்மானங்கள் எவையும் நடைமுறைக்கு வரவில்லை. தற்போது கூட மன்னார் சௌத்பார் பகுதியில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்துக்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

ஆனால் ஜனாதிபதி நேற்றைய கூட்டத்தில் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பணிகள் நடைபெறவில்லை என்றும் தெரிவித்தார்.

தற்போது நான்கு காற்றாலைகள் அமைக்கும் திட்டம் இடம்பெற்று வருகிறது. அதற்கான புகைப்பட ஆதாரங்கள் உள்ளன. தாழ்வு பாட்டில் 10 காற்றாலைகள் அமைக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. அதற்கான சுற்றாடல் மதிப்பு அறிக்கை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மூன்று தடவை அவர்கள் கள ஆய்வுக்கு வந்தபோது திருப்பி அனுப்பப்பட்ட போதும் கூட அந்த திட்டத்தை அரசு கைவிடுவதாக இல்லை.

மூன்றாவது திட்டமான கரையோரத்தில் இருந்து மணல் அகழ்வு செய்வதற்கான நில அளவீடு செய்வதற்கு அரச திணைக்களங்கள், அனுமதி வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. அதனை வழங்குவதற்கான துரித நடவடிக்கை இடம்பெற்று வருவதாக அறிகின்றோம்.

இந்த மூன்று திட்டங்களும் மன்னாரில் நடைபெறுவதற்கும் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்குமான சூழலையே கொண்டுள்ள நிலையில், ஜனாதிபதிக்கு அவரது கட்சிக்காரர்கள் அல்லது அரச அதிகாரிகள் தவறான தகவல்களை வழங்குகின்றார்கள். அல்லது ஜனாதிபதி இதனை அரசியல் மேடையாக பயன்படுத்துகிறார் என தெரியவில்லை.



மன்னாரில் வைத்து ஜனாதிபதி உண்மைக்கு மாறான தகவலையே வழங்கிவிட்டுச் சென்றுள்ளார். தேர்தல் மேடையிலே வாக்கு பெறுவதற்காக நடைபெறுகின்ற சம்பவத்தை இல்லை என்று கூறுவது அரசின் ஆட்சி முறைமைக்கான அவமானம்.

இடது சாரித்துவத்தில் ஆட்சி நடத்துகின்றோம் என கூறுகின்றவர்கள், களத்தில் ஒன்று இடம்பெற, வார்த்தைகளில் இன்னுமொன்றை உண்மைக்கு மாறாக பேசுவது என்பது ஜனநாயக விரோதம் ஆகும்.

எனவே, இவ்விடயங்களை ஜனாதிபதி உடனடியாக கவனத்தில் எடுத்து, அவர் கூறியது போல் இத்திட்டத்தை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறைத்தபட்ச சூழல் பாதிப்போடு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்றும் அவர் கூறியிருந்தார். இவற்றை அரசு ஏமாற்றும் வார்த்தைகளாகவே பார்க்கின்றோம். இந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடாது என கடந்த 2 வருடங்களுக்கு மேலாக போராடி வருகிறோம். மன்னார் மக்கள் இத்திட்டத்தை ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள் என சிவகரன் தெரிவித்தார்.

மேலும், இந்த ஊடக சந்திப்பில் ஜனாதிபதியின் கருத்து தொடர்பாக மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதி என்.எம்.ஆலம் ஆகியோரும் கருத்துக்களை தெரிவித்தனர்.

# மாமனிதர் கி. சிவநேசன் அவர்களது 17ஆம் அண்டு நினைவுப் பேருரை நினைவு நிகழ்வு நடைபெற்றது

20.04.2025

06.03.2008 வியாழக்கிழமை அன்று கொழும்பில் இருந்து மல்லாவி நோக்கி மல்லாவி சிவன்கோவிலில் சிவராத்திரி நிகழ்வில் பிரசங்கம் நிகழ்த்தும்பொருட்டு வருகைதந்தவேளை பிற்பகல் 1.10 மணியளவில் மாங்குளம் கொல்லர் புளியங்குளம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியினர் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் கொலை செய்யப்பட்டார்.



மாமனிதர் கி.சிவநேசன் அவர்களது 17 ஆம் ஆண்டு நினைவுப் பேருரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

ஈகைச்சுடரினை அவரின் மகன் திருக்குமார் ஏற்றி மாமனிதரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து தமிழ்த்தேசிய அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் மற்றும் மாமனிதரின் உறவினர்கள் மலர்மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இந் நினைவுரை நிகழ்வில் சிறப்புரையை தமிழ்தேசியமக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நிகழ்தினார். நினைவுப் பகிர்வுகளை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் சிறீகாந்தா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஊடகப் பேச்சாளர் கனகரட்ணம் சுகாஸ், மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி யாழ்ப்பாண அமைப்பாளர் பொன் மாஸ்டரும் நிகழ்தினார்கள். இறுதியாக ஏற்புரையினை மாமனிதரின் மகன் திருக்குமார் நிகழ்தினார். இதில் சிறப்பு அழைப்பாளர்களான உதயன் பத்திரிகை நிறு



வுனரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சரவணபவன் மற்றும் தமிழ்தேச பசுமைக்கட்சி தலைவர் ஐங்கரநேசனும் கலந்துகொண்டார்கள்.

அத்தோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், தமிழ்த்தேசிய சிந்தனையாளர்கள் பொதுமக்களோடு குறிப்பாக மாமனிதரின் ஊரான கரவட்டி கிழக்கிலிருந்தும் பெருமளவான மக்கள் கலந்து கொண்டு மாமனிதரின் நினைவேந்தலை சிறப்பித்தனர்.








**எமது தாயக மண்ணில், வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான எமது சொந்த மண்ணில், நாம் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; என்பதே எமது குறிக்கோள். இதுவெ எமது தேசத்தின் அபிலாசை.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஈகைச்சுடர் அன்னை பூபதியின் 37ஆம் அண்டு நினைவேந்தல்

19.04.2025

இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக 31 நாட்கள் உண்ணா நோன்பிருந்து தாயக விடுதலைக்காக உயிர் நீத்த ஈகைச்சுடர் அன்னை பூபதியின் நினைவேந்தல்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் இன்றைய தினம் 37வது ஆண்டு நினைவு வணக்க நிகழ்வுகள் இடம் பெற்றன.

இதன்போது அக் வணக்கம் செலுத்தப்பட்டு, அன்னை பூபதியின் திருவுருப்படத்திற்கு சுடரேற்றி மலர்தூவி வணக்கம் செலுத்தப்பட்டது. மேலும் அன்னை பூபதி தொடர்பான நினை வுரையும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.





















# சிறீலங்கா அரசால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்த்தேசிய பற்றாளர் மாமனிதர் கிளிபாதர் அவர்களின் நினைவேந்தல் - 20.04.2025







www.sangathamil.ca

# வவுனியாவில் ஈகைச்சுடர் அன்னை பூபதியின் 37ஆம் அண்டு நினைவேந்தல்

19.04.2025

வவுனியாவில் அன்னை பூபதியின் 37ஆவது நினைவு நாள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் நினைவுகூறப்பட்டுள்ளது.



தொடர் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக உள்ள கொட்டகையில் குறித்த நிகழ்வு இன்று (19.04.2025) இடம்பெற்றுள்ளது

இதன்போது அன்னாரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்ட விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர், தமிழ் மக்களின் இறைமையை பாதுகாப்பதற்காகவும், உரிமைகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்த அன்னைக்கான நினவைவணக்கத்தை தமிழர் தேசம் இன்று செலுத்திக் கொண்டிருக்கிறது.

தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்ட விடயத்தை சர்வதேச பொறி முறையூடாக சர்வதேச மத்தியஸ்தத்தின் ஊடாகவே தீர்க்க முடியும். குற்றவாளிகளே பிரச்சினையை தீர்ப்பது நீதியாக அமையாது.

அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வை பெறுவதற்கு தமிழ் இறையாண்மை அவசியமான ஒன்று. அதனை



நோக்கியே எமது போராட்டங்கள் அமைந்துள்ளது. எதிர்காலத்திலும் தமிழ் இறையாண்மை எமக்கு தேவை என்ற விடயத்தை தொடர்ச்சியாக சர்வதேசத்திற்கு உரத்துச் சொல்வோம் என குறிப்பிட்டுள்ளனர்.

# கொடிகாமம் – வரணிப் பகுதியில் நீரில் மூழ்கி உயிரிழந்த இளைஞன் கொலை என சந்தேகம் எழுந்துள்ளது

20.04.2025

கொடிகாமம் - வரணி பகுதியில் நீரில் மூழ்கி உயிரிழந்த சிலுசன் என்ற 23 வயதுடைய இளைஞன் குறித்து பல்வேறு திருக்கிடும் தகவல்களை அந்த இளைஞனின் பெற்றோரும் உறவினர்களும் வெளிப்படுத்தியுள்ளனர்.

அவர்கள் இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

“கடந்த வியாழக்கிழமை(17) எனது மகன் குளித்துவிட்டு வந்த வேளை 3.00 மணிக்கு பின்னர் எனது மகனை அவரது நண்பர் அழைத்துச் சென்றார். அவருடன் சென்றுகொண்டிருந்தபோது இன்னொரு நண்பர் குளிக்க வருமாறு தொலைபேசியில் கூறியவேளை எனது மகன் அவரிடம் சென்றுள்ளார்.

இதன்போது கொடிகாமம் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அவர்களுடன் இருந்துள்ளார். அந்த கேணியில் யாரும் குளிப்பதில்லை. அது கோவில் கேணி. தாமரை கொடி சிக்கி உயிரிழந்ததாக கூறியது பொய்.

அந்த கேணியில் தாமரை கொடியே இல்லை. மரண விசாரணை அதிகாரி, பொலிசார், சட்டத்தரணி உள்ளிட்ட பலர் நேற்றையதினம் அந்த பகுதிக்கு வந்தனர். இரண்டுபேரை அந்த குளத்தில் இறக்கி குளத்தை பரிசோதித்து பார்த்தனர். ஆனால் இருவரும் எந்தவிதமான பாதிப்புமின்றி வெளியே வந்தனர்.

உயிரிழந்த மகனின் ஆடையும், செருப்பும் குளத்தின் கரையில் இருந்தது. கேணியின் அருகே 3 ரின்கள் இருந்தன. ஆனால் உடற்கூற்று பரிசோதனைகளில் இவர் மதுபானத்தை பாவித்ததாக அறிக்கையில் கூறப்படவில்லை.

தண்ணீர் சுவாசப் பையின் உள்ளே சென்று அடைத்ததால் தான் மரணம் சம்பவித்ததாக அறிக்கையில் கூறப்படுகிறது. தோளில் பிடித்து அழுத்திய கண்டல் காயம் உள்ளது. அவரது சடலம் தாண்டு இருந்த இடத்தில் ஒரு நீளமான மீற்றர் கட்டை ஒன்று குற்றப்பட்டு இருந்தது. அப்படி அவர் தாழ்ந்திருந்தால்





அத்த கட்டையில் பிடித்து ஏறியிருப்பார்.

மந்திகை வைத்தியசாலையில் எங்களது பிள்ளையின் சடலம் இருப்பதாக கேள்வியுற்று நாங்கள் அங்கே சென்றவேளை, அவரை வைத்தியசாலையில் சேர்ப்பித்தவர்கள் இருவர் பொய்யான பெயர் கொடுத்துள்ளனர் என்ற விடயம் தெரியவந்தது.

ஏன் பொய்யான பெயர் கொடுக்க வேண்டும்? அன்றைய நாள் அவர் யாருடன் பேசினாரோ அவ்வளவு விபரங்களும் கைபேசியில் இருந்து அழிக்கப்பட்டிருந்தது. எங்களுடைய தம்பி ஒருவர் கைபேசியை வாங்கும் போது அங்கிருந்த ஒருவர் கைபேசியை பறித்தார், ஒரு மணத்தியாலம் அந்த கைப்பேசியை வழங்கவில்லை.

சடலம் இருந்த இடத்தை நீதிவானுக்கு காட்டிய பொலிசார் பின்னர் அங்கிருந்து சென்றுவிட்டனர். பிறகு அவர்கள் வரவில்லை. எங்களிடம் விசாரணைகளுக்கு வந்த பொலிசார், நீதிமன்றத்தில் நீங்கள் சட்டத்தரணி வைக்க வேண்டாம், நாங்கள் உங்களுக்காக வாதாடுகின்றோம் என்றனர்.

அவரது உடலை தொட்டவேளை உடலில் சூடு இருந்தது. ஆகையால் சடலத்தை பிரேத அறையில் போடவேண்டாம் என நாங்கள் கூறியவேளை, அவரது நண்பர்கள் சடலத்தை பிரேத அறையில் போடுமாறு விடாப்பிடியாக கூறினார்கள். அவருக்கு அங்கே சிகிச்சை அளிக்கப்படவில்லை என்ற சந்தேகம் எழுகிறது.

சிவரூபன் என்ற பெயரிலேயே கையொப்பமிட்டு அவரை வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். ஆனால் அந்த சிவரூபன் யார் என இதுவரை எமக்கு தெரியவில்லை. உடனிருந்த நண்பர்கள் யாரும் இதுவரை சடலத்தை பார்ப்பதற்கு வீட்டுக்கு வரவில்லை.

இந்த சதியில் ஈடுபட்ட 4பேரை எமக்கு தெரியும். ஆனால் இதில் பலர் தொடர்புபட்டதாக கூறப்படுகிறது. இந்த சம்பவத்தை சிலர் காணொளியும் பதிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. எனவே அந்த காணொளி யாரிடம் உள்ளது என்று தேடி பிடிப்பதோடு, நாங்கள் கூறுகின்ற நான்கு பேரிடமும் விசாரணைகளை மேற்கொண்டால் என்ன நடந்தது என கண்டுபிடிக்க முடியும்

# நாம் மக்களுக்காக சேவை செய்ய தயாரக இருக்கின்றோம்

## அனைத்திலங்கை வருங்கால சுதெச மருத்துவ அதிகாரிகள் சேவை சங்கத்தின் வைத்தியர் பார்த்தீபன் உமாதேவி

20.04.2025

நாம் மக்களுக்காக சேவை செய்ய தயாரக இருக்கின்றோம் என அனைத்திலங்கை வருங்கால சுதேச மருத்துவ அதிகாரிகள் சேவை சங்கத்தின் வைத்தியர் பார்த்தீபன் உமாதேவி தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை ஊடக சந்திப்பின் போதே தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் ஆயுர்வேத, சித்த, என்ற ரீதியில் இலங்கையில் சுதேச மருத்துவம் இருக்கின்றது.

இந்த கற்கை நெறியை நிதைவுசெய்து தமிழ். சிங்களம், முஸ்லிம் என 1700 பட்டதாரிகள் வேலைக்காக காத்திருக்கின்றனர்.

இதைவிட 600 பேர் இறுதிப் பயிற்சி நிலையில் இருக்கின்றனர்.

இதேநேரம் மருத்துவப் பயிற்சி நெறியை முடித்தும் தம்மை பயன்படுத்தாத நிலையில் இலங்கையின் சுதேச மருத்துவம் இருப்பது கவலையானது.

மக்களுக்காக சேவை செய்ய நாம் தயாராக இருக்கின்றோம் ஆனால் அரசு மௌனமாக இருக்கின்றது.

அதைவிட ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக ஏறத்தாள 1600 இற்கும் அதிகமானோர் இருக்கும் போது வெறும் 350 இற்கும் குறைவானவர்களையே நியமனத்தில் உள்வாங்க அரசு முனைகின்றனர்.

ஆனால் எம்மை கிராமங்கள் தோறும் சமூக நல வைத்திய அதிகாரிகளாக கூட எம்மை பயன்படுத்த முடியும்.

இந்த போக்கால் இலங்கைக்குரிய சுதேச மருத்துவம் இல்லாது அற்றுப்போகும் நிலையே உருவாகின்றது.




நாட்டில் இருக்கும் எமது வளங்களை கொண்டே மருந்துகளை உற்பத்தி செய்ய முடியும். ஆனால் அதை அரசு முன்னெடுப்பதில்லை.

இவ்வாறன நிலையில் மேலதிக தகைமை என்று கூறி வேறு வேலைகளுக்கு கூட எம்மை இணைத்துக் கொள்கின்றார்கள் இல்லை என்றும் கூறிய அவர் இந்த நிலையை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# பிள்ளையானால் சிறையில் இருக்கும் அம்மாவை விடுவியுங்கள்

## உதயகலாவின் மகள் டிலானி

21.04.2025

அரசியல் காரணங்களுக்காக சிறையில் இருக்கும் தனது தாயாரான தயாபரராஜ் உதயகலாவை அவரது உடல்நலம் கருதியும், சிறுவர்களான எமது நலன்கருதியும் சிறையிலிருந்து வெளியில் வருவதற்கான வாய்ப்பை ஜனாதிபதி ஏற்படுத்தி தர வேண்டும் என குறித்த பெண்ணின் மகள் டிலானி தயாபரராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்றைய தினம் திங்கட்கிழமை தனது பேத்தியாரான அருனோதயனாதன் ரஜனியுடன் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டே கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

சர்வமக்கள் கட்சியின் உருவாக்கத்தால் பிள்ளையானுடன் ஏற்பட்ட முறண்பாடுகளால் தனது தயார் தண்டனைக் கைதியாக சிறையில் இருக்கின்றார்.

எமது தாயார் அரசியல் சூழ்ச்சி காரணமாக சிறையில் இருப்பதால் நாம் நான்கு சகோதரர்களும் பாட்டியின் பராமரிப்பில் தற்போது பல அசௌகரியங்களுடன் வாழ்ந்து வருகின்றோம் .

இந்நேரம் சிறையிலிருக்கும் எமது தாயார் குற்றம் செய்யாது சிறையில் இருப்பதால் பல்வேறு உடல் உபாதைகளுக்கும் மன உழைச்சலுக்கும் உள்ளாகி மருத்துவ வசதி கூட கிடையாத நிலையில் இருக்கின்றார்.

அதனால் எமது குடும்ப நிலையையும் பிள்ளைகளான எமது நிலையையும் கருத்தில் கொண்டு தாயாரை மனிதாபிமான மான நடவடிக்கையாக விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.




# சட்டவிரோத கடற் தொழிலை தடைசெய்ய முன்னின்றவரின் உந்துருளிகள் எரிப்பு

21.04.2025

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத கடற் தொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முன்னின்று செயற்பட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணையத்தலைவரின் உந்துருளிகள், அண்மையில் சட்ட விரோத கடற்தொழில் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களால் எரியூட்டப்பட்டது.






இந்த விவகாரம் தொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி செயலகம், பிரதமர், கடற்தொழில் அமைச்சர் ஆகியோரிடம் இந்த விடயத்தினைத் தெரியப்படுத்துவதோடு, பாராளுமன்றத்திலும் இந்த விடயத்திற்காக குரல்கொடுக்கவுள்ளதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்தைக் கண்டித்து முல்லைத்தீவு கடற் தொழிலாளர் சங்கங்களின் சமாசம், மீனவஒத்துழைப்பு இயக்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை (21) முல்லைத்தீவு மாவட்டசெயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வார்ப்பாட்டத்தில் பங்கேற்றதுடன், ஆர்ப்பாட்டக் காரர்களிடமிருந்து மகஜர் ஒன்றினையும் பெற்றுக்கொண்டார்.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தடைசெய்யப்பட்ட கடற்தொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக, முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்கள், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம், குறிப்பாக மீனவஇளைஞர்கள் தற்போது ஒன்று சேர்ந்து செயற்பட்டுவருக்கின்றனர்.

இத்தகைய சூழலில் தடைசெய்யப்பட்ட கடற்தொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில் முன்னின்று செயற்பட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணையத் தலைவர் அன்னலிங்கம் நடனலிங்கம் என்பவருடைய உந்துருளிகள் அண்மையில் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களால் திருடப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் உரியவர்கள் பொலிசாரிடம் முறையிட்டுள்ள போதும், இதுவரை பொலிசார் உரிய சட்டநடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. இந்தவிடயத்தில் பொலிசார் சட்டம் ஒழுங்கினைப் பாதுகாக்கத் தவறியுள்றதாகக் கருதுகின்றேன்.

ஜனாதிபதி தன்னுடைய தொடக்க உரையில்கூட சட்டம் ஒழுங்கு பாதுக்கப்படுமெனத் தெரிவித்திருந்தார். இந்த விடயத்தில் சட்டம் ஒழுங்கு காப்பற்றப்படாத காரணத்தினால், சட்டம் ஒங்கினை பாதுகாக்குமாறுகோரியே இங்கு மக்களோடு இணைந்து நாமும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.



எனவே சட்டம் ஒழுங்கினைப் பாதுகாக்கவேண்டியவர்கள் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். எதிர்வரும் மே மாதம் 08, 09ஆம் திகதிகளில் பாராளுமன்ற அமர்விருக்கின்றது.

அந்த வகையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி செயலகம், பிரதமர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோரிடம் இந்த விடயத்தினைத் தெரியப்படுத்துவதுடன், பாராளுமன்றத்திலும் இந்த விடயத்திற்கு குரல் கொடுப்பேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.









## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# அநுர அரசு உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்கத் தவறியுள்ளது

## ஊடகவியளார் செ. நிலாந்தன்

21.04.2025

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடைபெற்று ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் கடைசியாக ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்க தவறியுள்ளது என ஊடகவியலாளரும் செங்கலடி தளவாய் வட்டார தமிழரசுக் கட்சியின் வேட்பாளருமான செ.நிலாந்தன் தெரிவித்தார்.

21ஆம் திகதி திங்கட்கிழமை செங்கலடி - புலையவெளி பகுதியில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் நடைபெற்று ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இலங்கையில் நடைபெற்ற மிக மோசமான இந்த பயங்கரவாத தாக்குதலால் சுமார் 260 மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் பலியானார்கள்.

இன்றுவரை அவர்கள் எதற்காக கொல்லப்பட்டார்கள், ஏன் பலியானார்கள் என்பது யாருக்கும் தெரியவில்லை.

இன்று ஆறு வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசினால் உண்மையான குற்றவாளிகளை கண்டுபித்து நீதியின் முன் நிறுத்த முடியவில்லை.

கடைசியாக ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலை நடாத்தியவர்கள் யார் என்பதை கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்துவோம் என கூறி மக்களின் வாக்குகளை பெற்று ஆட்சிக்கு வந்தனர். அவர்களிடம் ஜனாதிபதி பதவியை கொடுத்துள்ளோம், பாராளுமன்ற பெரும்பான்மையை கொடுத்துள்ளோம் அதனை வைத்துக் கொண்டு எதனையும் செய்ய முடியவில்லை. தற்போது அவர்கள் உள்ளூராட்சி சபையின் அதிகாரங்களை தங்களுக்கு தருமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர். ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தை வைத்து செய்யமுடியாதவர்கள் உள்ளூராட்சி சபைகளை வைத்து என்ன செய்ய போகின்றனர்.

அநுரகுமார திஸாநாயக்க அவர்கள் ஜனாதிபதி ஆகி ஒரு வருடங்கள் ஆகிய நிலையில் அவர் இந்த ஆறாவது ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடாத்திய உண்மையான சூத்திரதாரிகளை கண்டுபிடித்து உலகிற்கு காட்டுவார் என எதிர்பார்த்தோம். ஆனால் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. இதுவரை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் உண்மையான குற்றவாளிகளை கைது செய்ய முடியவில்லை.



ஏய்தவர்கள் இருக்கும் போது அம்புகளை கைது செய்யும் நிலையே காணப்படுகிறது. பேராயர் கர்தினால் மால்கம் ரஞ்சித் ஆண்டகை தொடர்ச்சியாக உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலை நடத்திய சூத்திரதாரிகளை கண்டுபிடித்து தண்டனை வழுங்குமாறு தேசிய மக்கள் சக்தி அரசுக்கு அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் இலங்கை கிரிஸ்தவ மக்களை தொடர்ச்சியாக இந்த அரசும் ஏமாற்றி வருகிறது.

தாங்க ஏன் கொல்லப்பட்டோம் எதற்காக கொல்லப்பட்டோம் என்று தெரியாமலே சில குழுக்களின் சில தேவைகளுக்காக பலி கொடுக்கப்பட்ட உயிர்களின் ஆத்மா சாந்தி அடைய வேண்டுமாக இருந்தால் ஏழாவது உயிர்த்த ஞாயிறு நினைவு தினத்திலாவது இந்த மக்கள் ஏன் கொல்லப்பட்டார்கள், யாரால் கொல்லப்பட்டார்கள்? யாருக்காக கொல்லப்பட்டார்கள் என்ற உண்மையை கண்டுபித்து சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என தெரிவித்தார்.

# சிறீலங்கா அரச இந்திரத்தால் நடாத்தப்பட்ட ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் நினைவேந்தல் நிகழ்வு யாழ். பெரிய கோவிலில் இடம்பெற்றது

21.04.2025

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் 06 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு இன்றைய தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் பெரிய கோவிலில் இடம்பெற்றது.



யாழ்ப்பாண மறை மாவட்ட பங்குத்தந்தை கலாநிதி ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற நினைவஞ்சலி நிகழ்வில் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் அவயவங்களை இழந்தவர்களுக்கான பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து மௌன அஞ்சலி, பொது சுடரேற்றி, மெழுகுவர்த்திகளும் பற்ற வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.



நிகழ்வில் பங்குத் தந்தைகள், பாதிரியார்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதேவேளை தேவாலய சூழலில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிசார் குவிக்கப்பட்டு , பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

# மட்டக்களப்பு சீயோன் தேவாலயக் குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் 6ஆவது ஆண்டு நினைவேந்தல்

21.04.2025

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 6ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று திங்கட்கிழமை (21) காலை தேவாலயத்தின் முன்பாக உயிரிழந்தவர்களின் உறவுகளால் பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் நினைவுகூறப்பட்டது.



அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் கட்சியின் தலைவர் சிவதர்சன் தலைமையில் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

குண்டுவெடிப்பில் உயிரிழந்த மற்றும் படுகாயமடைந்து பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், கட்சியின் உறுப்பினர்கள் உட்பட பலர் இந்த நினைவேந்தலில் கலந்துகொண்டனர்.

இதன்போது, உயிரிழந்தவர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவித்து, மெழுகுவர்த்தி ஏற்றி, சில நிமிடங்கள் அக வணக்கம் செலுத்தப்பட்டது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்ததுடன் 80 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதலால் நாட்டின் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம், நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலயம் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களில் இடம்பெற்ற தற்கொலைத்தாக்குதல்களில் 250 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.





# கப்பலோட்டிய நாங்கள் காகிதக் கப்பல்களில் பயணிக்க மாட்டோம் என்று வல்வெட்டித்துறை மக்கள் ஜே.வி.பியிடம் உரத்துச் சொல்லவேண்டும்!

## தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்

21.04.2025

பாராளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பியை நம்பித் தமிழ் மக்களில் கணிசமானோர் வாக்களித்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கையில் ஊரும் நமதே என்று சகல உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றிவிட வேண்டும் என்று ஜே.வி.பி கடுமையாக முயற்சித்து வருகிறது. உலகில் ஈழத்தமிழினத்தின் முகவரியாக விளங்கும் வல்வெட்டித்துறையைக் கைப்பற்றிவிட வேண்டும் என்பதில் மிகத்தீவிரமாக உள்ளது என தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

ஜே.வி.பியினர் வல்வை மண்ணில் முகாமிட்டுத் தங்களை நம்புங்கள் கரை சேர்ப்போம் என்று முழங்குகிறார்கள். கப்பலோட்டிய நாங்கள் காகிதக் கப்பல்களில் பயணிக்க மாட்டோம் என்ற பதிலை வல்வெட்டித்துறை மக்கள் இந்தத் தேர்தலில் ஜே.வி.பியிடம் உரத்துச்சொல்ல வேண்டும் என்றும் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வல்வெட்டித்துறை நகரசபையில் போட்டியிடும் தமிழ்த்தேசியப் பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைக்கும் வைக்கும் வைக்கும் கூட்டம் கடந்த சனிக்கிழமை (19) வல்வெட்டித்துறை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வல்வெட்டித்துறை மக்கள் அறிவுத்திறன் மிக்கவர்கள். தொழில்நுட்பம் வளர்ச்சியடையாத காலத்திலேயே நூற்றுக்கணக்கான கப்பல்களைக் கட்டித் திரைகடலோடித் திரவியம் தேடியவர்கள்.

இவர்களது கப்பல்கள்தான் இரண்டாம் உலக யுத்த காலத்தில் உணவுப் பொருட்களைச் சுமந்துவந்து இலங்கை மக்களைப் பட்டினியில் இருந்து காப்பாற்றின. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடம் இருந்து சிங்களத் தலைவர்களைக் காப்பாற்றித் தலைமறைவாகத் தமிழகம் கொண்டுசென்று சேர்ப்பித்தன.

அன்னபூரணி அம்மாள் என்ற கப்பலின் கட்டுமான அழகில் மயங்கிய அமெரிக்கர்கள் அதனை வாங்கி வல்வை மண்ணின் மாலுமிகளின் உதவியோடு அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றார்கள்.

வல்வெட்டித்துறை மக்கள் தொன்றுதொட்டுத் தினந்தினம் கடல் அலைகளோடு போராடி வாழ்ந்தவர்கள். இதனால், இயல்பாகவே திடகாத்திரம் உள்ளவர்களாகவும், மரண பயம் அற்றவர்களாகவும், வீரம் செறிந்தவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

ஆயுதப் போராட்டம் முளைவிடுவதற்கு முன்பாகவே அத்துமீறிய சிங்களச் சிப்பாய்களை நையப்புடைத்திருக்கிறார்கள். இதன் தொடர்ச்சியாகவே, வல்வை மண்ணில் இருந்து தனியாகக் கடற்படையொன்றை வைத்து ஆளும் அளவுக்கு தமிழினத்துக்கான தலைமை ஒன்று பரிணாமித்தது.

ஆனால், இந்த வரலாறுகள் எதுவும் தெரியாததாகவே எமது இளைய தலைமுறை உள்ளது.

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளையும், ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் அது கருக்கொண்டதற்கான காரணங்கள் இன்னமும் அப்படியே நீடிப்



பதையும் எமது இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லாமல் எமது அரசியல் தலைவர்கள் தவறிழைத்துவிட்டார்கள்.

இதனாலேயே, காலங்காலமாகத் தமிழின விரோத நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வந்த ஜே.வி.பியினால் இலகுவில் இங்கு காலூன்ற முடிகிறது.

பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற ருசியில் இப்போது ஊரும் நமதே என்று வந்து நிற்கிறார்கள். ஆனால், ஊர் எங்களதுதான் என்ற தெளிவான பதிலைத் தமிழ் மக்கள் இம்முறை ஜே.வி.பிக்கு சொல்ல வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# வடமராட்சி கிழக்கு மருதங்கேணி வத்திராயன் கிராமத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளர் சற்குணதேவிக்கு எதிரான சிறீலங்கா காவல்துறையின் துன்புறுத்தல்கள் தொடர்கின்றன

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

22.04.2025

தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் சற்குணதேவியின் வீட்டிற்கு சென்ற மருதங்கேணி பொலிசார் எந்த வித காரணமும் இன்றி அவரது இளைய மகனை கைது செய்துள்ளனர் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது சமூக ஊடக பதிவில் தெரிவித்துள்ளார்





சற்குணதேவி தனது உறுதியான ஊழல் அற்ற செயற்பாட்டிற்காக பொலிசாரின் துன்புறுத்தல்களை பல முறை எதிர்கொண்டுள்ளார் என குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் சற்குணதேவி.

பருத்திதுறை பிரதேச சபைக்கான தேர்தலில் அவர் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை தாக்கல் செய்தார் எனினும் அது நிராகரிக்கப்பட்டது.

சில நாட்களிற்கு முன்னர் வேட்பாளருக்கான கூட்டமொன்று இடம்பெறவுள்ளதாகவும் அதில் கலந்துகொள்ளவேண்டும் எனவும் மருதங்கேணி பொலிசார் அவருக்கு உத்தரவிட்டிருந்தனர்.

எனினும் தனது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளதால் அவர் அந்த கூட்டத்திற்கு செல்லவில்லை.

இன்று அவரின் வீட்டிற்கு சென்ற பொலிசார் ஏன் அவர் அந்த கூட்டத்திற்கு வரவில்லை என கேள்வி எழுப்பியுள்ளனர். அவர் தான் தற்போது வேட்பாளர் இல்லை என பதிலளித்தவேளை பொலிஸார் அவரை நிந்தித்துள்ளனர் கூட்டத்திற்கு கட்டாயம் சமூகமளிக்கவேண்டும் என தெரிவித்த அவர்கள் ஜெகதீஸ்வரன் சற்குணதேவியின் இளைய மகனை எந்த வித காரணமும் இன்றி கைதுசெய்துள்ளனர்.

சற்குணதேவி தனது உறுதியான ஊழல் அற்ற செயற்பாட்டிற்காக பொலிசாரின் துன்புறுத்தல்களை பல முறை எதிர்கொண்டுள்ளார்.

அவரது கணவர் மகன் மற்றும் எங்கள் கட்சியின் ஏனைய உறுப்பினர்களிற்கு எதிராக பொலிசார் பலமுறை பொய்வழக்குகளை தாக்கல் செய்த பின்னர் விடுதலை செய்துள்ளனர்.

**அன்றுதொட்டு இன்றுவரை தமிழரின் போராட்டம் அறவழியைத் தழுவி நிற்கிறது. அகிம்சை வழியிலும் சரி, ஆயுத வடிவிலும் சரி, தமிழர் வரிந்துகொண்ட போராட்டம் தர்மத்தின் நியமத்தில் நெறிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தார்மீக அடிப்படையே எமது போராட்டத்தின் ஆன்மீக பலமாகவும் இருந்து வருகிறது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# மகிந்த ஆட்சியை விட மோசமான ஆட்சியே தற்போது நடக்கிறது

## சட்டத்தரணி வி. மணிவண்ணன்

22.04.2025



மகிந்தவின் அடக்குமுறை ஆட்சியில் கூட தற்போது போன்று அப்பட்டமான முறையில் தேர்தல் விதிமுறைகள் மீறப்படவில்லை என சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்றைய நாள் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்.

தேசிய மக்கள் சக்தி என கூறிக்கொள்ளும் ஜே.பி.வி யினர் அப்பட்டமான முறையில் தேர்தல் விதிமுறைகளை மீறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறி ஆலயங்களில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். எமக்கு வாக்களித்தாலே உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி ஒதுக்குவோம் என பகிரங்கமாக மேடையில் ஜனாதிபதி மக்களை அச்சுறுத்தும் வகையில் கருத்து கூறுகின்றார்.

காரைநகர் பிரதேச சபை செயலர் , சபையின் உத்தியோகபூர்வ சமூக வலைத்தளங்களில் தேசிய மக்கள் சக்தியினருக்கு ஆதரவாக பதிவுகள் இடுகின்றார். இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தும் இது வரையில் எந்த நடவடிக்கையும் இல்லை

ஊழலை ஒழிப்போம், மாற்றத்தை ஏற்படுத்துவோம் என கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் முந்தைய அடக்குமுறையான ஆட்சியாளரான மகிந்தவை விட மிக மோசமாக செயற்படுகின்றனர்.

இவர்களின் ஆட்சி விந்தையானது. ஊழலை ஒழிப்போம், சட்டவிரோத செயலை இல்லாமல் செய்யவோம் என கூறியவர்கள் தற்போது தம்முடன் போலியான நபர்களையும் , சட்டவிரோத செயலில் ஈடுபடுபவர்களையும் தம்முடன் இணைத்து வைத்து உள்ளார்கள்.

காரைநகர் பிரதேச சபை வேட்பாளர் ஒருவர் அண்மையில் சட்டவிரோதமான முறையில் மணல் கடத்தலில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தது.

எனவே மிக மோசமான இந்த ஆட்சியாளர்களை எமது மண்ணில் கால் ஊன்ற மக்கள் அனுமதிக்க கூடாது என உரிமையோடு கேட்கிறோம் என தெரிவித்தார்.

# புனித பாப்பரசருக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் ஒளிச்சுடர் ஏற்றி மலர் வணக்கம்

23.04.2025









புனித பாப்பரசர் போப்பிரான்சிஸ் அவர்களிற்கு வவுனியா தமிழர்தாயக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் இன்று கண்ணீர் வணகக்ம் செலுத்தப்பட்டது.

கத்தோலிக்க திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் போப்பிரான்ஸிஸ் வத்திகானில் நேற்றுமுன்நாள் உயிரிழந்த நிலையில் அவரது மறைவிற்கு இரங்கல் தெரிவித்து பல்வேறு பகுதிகளிலும் வணக்க நிகழ்கள் இடம்பெற்றுவருகிறது. இந்நிலையில் வவுனியா தமிழர்தாயக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால் நேற்று மலர் வண்ணகம் செலுத் தப்பட்டது.

அவர்கள் தமது தொடர் போராட்டத்தை மேற்கொண்டு வரும் அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக உள்ள கொட்டகையில் வைத்து புனித பாப்பரசரின் திருவுருவ படத்திற்கு ஒளிச்சுடர் ஏற்றி மலர் வணக்கங்களை செலுத்தினர். மேலும் அவர்கள் கூறுகையில் பாப்பரசரின் மறைவையொட்டி துயர அடைந்திருக்கும் உலக கிறிஸ்தவ மக்களின் துயரத்தில் நாங்களும் கலந்து கொள்கிறோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

# சித்த மருத்துவ பீடக் கற்கை நெறியின் தமிழ் மொழி மூலம் கற்பித்தலை மாற்றம் செய்யக்கூடாது

## அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன்

24.04.2025

யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறையை ஆங்கில மொழி மூலமான கற்றல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு திட்டமிடுவதாக அறிகிறோம் இது ஆபத்தானது . எமது சுதேசிய மருத்தவப் பாரம்பரியம் பேணிப்பாதுகாப்பதற்காக சித்தமருத்துவ பீடக் கற்கை நெறி தமிழ்மொழியில் தொடரவேண்டும் இதனை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு யாழ் பல்கலைக்கழக சமூகம் உறுதிப்படுத்த வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் பல சான்றோர். பெருமக்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது.

இந் நிலையில் உயர்கல்வி அமைச்சு யாழ் பல்கலைக்கழக எமது பிரதேசப் பல்கலைக்கழகம் எமது பிரதேச சுதேசிய பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் பெரும் கடமையாகும். எமது சுதேசிய மருத்தவப் பாரம்பரியம் பேணிப்பாதுகாப்பதற்காக யாழ் பல்கலைக் கழக கல்விச் சமூகம் 1970 களின் பிற்பகுதியில் எடுத்த முயற்சியின் விளைவாக சித்தமருத்துவத் துறை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் பேராசிரியர். வித்தியானந்தன் அவர்கள் அயராத முயற்சியால் சித்த மருத்தவ நுல்கள் ஏடுகள் சேகரிக்கப்பட்டு பாரம்பரிய வைத்தியர்களிடம் ஆலோசனை பெற்று பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இத்துறை ஆரம்பிக்கப்பட்டது.

இணுவில், வட்டுக்கோட்டை ,சில்லாலை, ஏழாலை பருத்தித் துறை, அளவெட்டி போன்ற ஊர்களில் இருந்து சித்த வைத்தியர்களின் நுல்கள், உதவிகள் பெறப்பட்டன. பல்கலைக் கழக நூலகர் முருகவேள், பதிவாளர் சிவராஜா போன்ற பெருமக்கள். சித்த மருத்துவத் துறைக்கான வளர்ச்சியில் அருந்துணை செய்துள்ளனர்.

சித்த மருத்துவ பீடம் முற்றுமுழுதாக சுதேசிய வைத்தியப் பாரம்பரியத்தை சிறப்பாக வளர்த்தெடுத்துள்ளார்கள். மேலும் கைதடியிலுள்ள சித்தவைத்திய போதனா வைத்தியசாலையின் வளச்சிக்கும் பெரும்பங்காற்றி வருகின்றார்கள் பல நூறு சித்த மருத்துவர்களை தொடர்ந்து உருவாக்கியுள்ளார்கள்.

துறை சார் விரிவுரையாளர்கள் பட்டப்பின் படிப்புகளை மேற்கொண்டு இன்று நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக விளங்குகிறார்கள்.

சகல கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் தமிழ்மொழி மூலம் சிறப்பாக நடைபெறுகின்றது. நீண்ட காலமாக எடுத்த முயற்சியின் பயனாக சித்த மருத்துவத் துறை தனிப்பீடமாக உயர்வு பெற்றுள்ளது மேலும் சித்தமருத்துவபீடம் விஸ்தரிப்பதற்காக புதிய நிலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.



சித்தமருத்துவத்துறையை ஆங்கிலமொழி மூலமான கற்றல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு திட்டமிடுவதாக அறிகிறோம். இது ஆபத்தானது.

இது பாரம்பரிய சித்த மருத்துவத்துறையை அருகிப்போகச் செய்யும் முயற்சியாகும். அகத்தியர் பதிணென் சித்தர்கள், திருமூலர், திருக்குறள், பரராஜசேகரம் போன்ற மூல நுல்களை மொழி பெயர்ப்ப தென்பது முடியாத விடயம்.

இதை அனைவரும் அறிவர். இந் நிலையில் சித்த மருத்துவத்தை ஆங்கில மொழியில் எவ்வாறு கற்பிக்கப் போகிறார்கள்? இவ் விடயம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழக மூதவை, பேரவை மற்றும் தூறைசார்ந்த அறிஞர்கள் விழிப்புடன் செயற்படவேண்டும்.

எக்காரணம் கொண்டும் தமிழ் மொழி மூல கற்பித்தலை மாற்றம் செய்யக் கூடாது. இதனைம் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவிற்கு யாழ் பல்கலைக்கழக சமூகம் தெளிவு படுத்த வேண்டும் என்றுள்ளது.

www.sangathamil.ca

# தமிழீழ விடுதலைப் புலிகளின் உளவுத் துறையின் துல்லிய தகவலால் ஐந்து தடவைகள் காப்பாற்றப்பட்ட என் உயிர்

### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம்

24.04.2025

வன்னியில் போர் நடந்த காலப் பகுதியில் பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட் டுள்ளது என்பதைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் உளவுத் துறையால் எங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டமையால் தான் பலர் இன்று உயிர் தப்பியிருக்கின்றோம்.



ஐந்து தடவைகள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுத் துல்லியமாக அவர்கள் வழங்கிய தகவலால் தான் என் உயிர் காப்பாற்றப் பட்டது எனத் தமிழ்த்தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜி லிங்கம் தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா அரசினால் படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 17 ஆவது ஆண்டு நினைவேந்தலும் நினைவுப் பேருரை நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (20.04.2025) மாலை யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற போது உரை ஆற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2006 ஆம் ஆண்டில் நீங்கள் கைது செய்யப்படப் போகின் றீர்கள். உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுங்கள் என்று தகவல் வழங்கப்பட்டது. அவுஸ்திரேலியா, லண்டன் போன்ற நாடுகளிலிருந்தும், தமிழ்ச் செல்வன், புலித்தேவன் போன் றோரிடமிருந்தும் எமக்குத் தகவல் வழங்கப்பட்டது. சிறீகாந்தா ஐயாவின் வீட்டில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் உயர்மட்டக் குழு கூடியிருக்கும் போது இந்தச் செய்தி வந்தது. அவர்கள் பேசும் போது உங்களுடனான தொடர்பை இத்துடன் துண்டிக் கின்றோம். உங்களைக் கைது செய்வதற்கான அணி புறப்பட்டு விட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் காலப் பகுதியில் என் காவலர்கள், கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

சென்னையிலிருந்து மீண்டும் எமது மண்ணை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த போது புலித்தேவனிடமிருந்து தொலை பேசி அழைப்பு வந்தது. உங்களில் சிலபேரை கிளைமோர் வைத்துக் கொல்வதற்குத் தீர்மானித்துள்ளார்கள். எனவே, நீங்கள் தற்போது நாட்டுக்கு வரத் தேவையில்லை என்பது தலைவரது உத்தரவு எனத் தெரிவித்தார்.

இவ்வாறான எச்சரிக்கைகள் மாமனிதர் சிவநேசன் ஐயாவுக்கு விடுக்கப்பட்டிருந்தும் கூட உயிரைத் துச்சமென மதித்து தமிழர் தாயகத்தில் தமிழ்மக்களுக்காகப் பணியாற்றினார். இத்தகைய நிலையில் தான் மகாசிவராத்திரி நாளில் மாங்குளம் பகுதியில் இராணுவத்தின் ஆழ ஊடுரும் அணியினர் நடாத்திய கண்ணிவெடித் தாக்குதலில் மாமனிதர் சிவநேசன் படுகொலை செய்யப்பட்டார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# செம்மணிப் படுகொலை நினைவு முற்றம் உருவாக்கப்படும்

### தமிழ்த் தேசியப் பேரவை

24.04.2025

தமிழர் தாயகத்தில் நிகழ்ந்த பேரவலங்களை எதிர்கால சந்ததியினருக்கு கடத்தும் வகையில் செம்மணிப் படுகொலை நினைவு முற்றம் உருவாக்கப்படுவதோடு தமிழின வரலாற் றுடன் தொடர்புடைய விடயங்கள் புனரமைக்கப்படும் என தமிழ்த் தேசியப் பேரவை தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியப் பேரவை உள்ளுராட்சி சபை தேர்தல் யாழ்ப் பாண மாநரகசபைக்கான முன்மொழிவுகள் செயல்திட்ட ஆவணத்தை இன்று வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

டிஜிட்டல் முறையிலான செயற்திட்டங்களுடன் தூய கருக் களுடன் தூய மாநகரத்தை கட்டமைப்பதற்காக, யாழ்ப்பாண மாநகரசபை வட்டாரங்களில் இருந்து தமிழ்தேசிய விடுதலைக் காக தமிழ்த் தேசிய உணர்வு மிக்கவர்களால், துடிப்புடன் செயற்படும் நேர்மையான ஊழல் அற்ற புதிய தலைவர்களை உள்ளடக்கிய அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்திற்கே உங்கள் வாக்குகளை செலுத்துங்கள்.

மாநகரசபையின் வருமானங்கள் மற்றும் அரச அரசசார நிதிகள் உரிய முறையயில் திட்டமிடப்பட்டு, நிலையான அபி விருத்தியை நோக்கி இலஞ்சம் ஊழல் அற்ற பொறுப்புக்கூறல் வெளிப்படைத்தன்மை கொண்ட நிர்வாக கட்டமைப்பை உரு வாக்குவதற்கு சைக்கிள் சின்னத்திற்கு மக்களின் ஏகோபித்த ஆணை அமையட்டும்.

எமது ஆட்சிக்காலத்தில் மாநகரசபைக்காக மக்கள் என்ற எண்ணம் நீக்கப்பட்டு மக்களிற்காகவே மாநகரசபை என்ற எண்ணம் உருவாக்கப்பட்டு மக்களிற்கான சேவைகளிற்கே முதன்மையளிக்கப்படும்.

தேங்கியிருக்கும் மக்கள் சார் தேவைகள் அனைத்தும், நாம் ஆட்சி அமைத்து மூன்று மாத காலத்திற்குள் மக்கள் நடமாடும் சேவைகள் ஊடாக சீர்செய்யப்படும்.

கழிவகற்றல் மின்விளக்கு பொருத்தல் குடிநீர் தொடர்பான சேவைகள் முறைப்பாட்டு பெறுதல்கள் டிஜிட்டல் முறையில் இலகுபடுத்தப்படுவதுடன்,சோலை வரி உட்பட ஏனைய சேவை களும் டிஜிட்டல் முறையில் இலகுபடுத்தப்படும்.

தற்காலத்தில் ஏற்பட்டுள்ள சமூகசீர்கேடுகள் மற்றும் அச்சுறுத் தல்களில் இருந்து யாழ் மாநகரசபையின் குடியிருப்பாளர்களை பாதுகாப்பதற்கு ஒவ்வொரு வட்டாரத்திலும் 24 மணிநேரமும் கண்காணிக்ககூடிய வகையில் தரமான கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுவதுடன் சட்ட விரோத செயற்பாடுகளிற்கு ஆதரவாக செயற்படுவோருக் குபாரபட்சம் இன்றிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

குடிநீர் தட்டுப்பாடு நிலவும் அனைத்து பிரதேசங்களிலும் நீர் விநியோக செயற்பாடு முன்னெடுக்கப்படுவதுடன் மழைநீர் சேகரிப்பு திட்டமும் விரிவாக முன்னெடுக்கப்படும்.

உள்ளுர் வீதிகள் பாரபட்சமின்றி செப்பனிடப்பட்டு திருத்தப் படுவதோடு வடிகால் அமைப்பும் சீர் செய்யப்பட்டு தெருவிளக் குகளும் பொருத்தப்படும்.

ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மதகுகளும் பாலங்களும் சீராக்கப்படுவதுடன் வெள்ள நீர் வழிந்தோடுவதற்கு அவசிய மான பாலங்கள் மதகுகளை அமைப்பது தொடர்பான ஆக்கபூர் வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

நகரத்தின் பிரதான வடிகால்களில் இருந்து கடலிற்கு செல்லும் வடிகால்கள் வெள்ள அனர்த்தங்கள் ஏற்படாத வகையில் நிபுணத்துவ ஆய்வுடன் சீரமைக்கப்படும்.

சிறப்பாக செயற்படும் சனசமூக நிலையங்கள் விளையாட்டு கழ கங்கள் எதிர்கொள்ளும் நிதிநெருக்கடியை நிவர்த்தி செய்வதற் காக சபையினால் வழங்கப்படும் ஒப்பந்த வேலைகளில் இவர் களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

யாழ் மாநகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட ஆலயங்கள் பள்ளி வாசல் மதவழிபாட்டு தலங்கள் போன்றவற்றிற்கு




அனைத்து விதமான ஒத்துழைப்புகளையும் வழங்குவதுடன் அவற்றிற்கு தேவையான உதவிகள் சிறப்பான முறையில் வழங்கப்படும்.

யாழ்மாநகரசபை எல்லைக்குள் காணப்படும் குளங்கள் யாவும் உரிய முறையில் புனரமைத்து பாதுகாக்கப்படுவதுடன், குளங்களை சுற்றி நடைபாதைகள் மற்றும் பொதுமக்கள் ஓய் வெடுப்பதற்கான வசதிகள் உருவாக்கப்படும்.

தமிழர் தாயகத்தில் நிகழ்ந்த பேரவலங்களை எதிர்கால சந்ததியினருக்கு கடத்தும் வகையில் செம்மணி படுகொலை நினைவு முற்றம் உருவாக்கப்படுவதோடு தமிழின வரலாற் றுடன் தொடர்புடைய விடயங்கள் புனரமைக்கப்படும்.

யாழ்ப்பாண மாநகரசபையின் உண்மையான மாற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட தயாராகவுள்ள சைக்கிள் சின்னத் திற்கு வாக்களியுங்கள்.

நீங்கள் வாக்களிக்கும் இறுதி நேரத்திலும் கூட சிந்தனை கலையான திடமான மாற்றத்தை உருவாக்க தமிழ்தேசிய பேரவையாக பயணிக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிர ஸின் சைக்கிள் சின்னத்திற்கே வாக்களிக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவத்தினர் வசமுள்ள யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான காணியை விடுவித்துத் தாருங்கள்

### யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் சி. யமுனானந்தா

24.04.2025

யாழ்ப்பாணம் கொட்டடி - மீனாட்சிபுரத்தில் உள்ள யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலைக்கு சொந்தமான காணியை விடுவித்துத் தருமாறு வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

இக்காணி தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கொட்டடி - மீனாட்சிபுரம் பகுதியில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சொந்தமான 1.4 ஏக்கர் பரப்பளவுள்ள காணி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

2010ஆம் ஆண்டு தொடக்கம் இந்த காணியை விடுவித்து தரும்படி கோரிக்கை விடுத்துவருகிற போதும் இன்று வரை காணி விடுவிக்கப்படவில்லை.

இக்காணி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மேல திக அபிவிருத்தி தேவைக்காக ஒதுக்கப்பட்டிருந்த காணியாகும்.

இந்த காணியில் பல வருடங்களாக இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதால் காணியை யாழ். போதனா வைத்தியசாலை யின் தேவைக்காக பயன்படுத்த முடியாத நிலை காணப் படுகிறது.

இக்காணியை உடனடியாக விடுவித்து தருவதற்கு வட மாகாண ஆளுநரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ். போதனா வைத்தியசாலையின் தேவைகள் அதிகரித் துவரும் தற்போதைய சூழ்நிலையில் இந்த காணி அவசிய மானது எனவும் துரித நடவடிக்கை எடுத்து காணியை விடு வித்து, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு கைகொடுக்க வேண்டும் என்றும் குறிப்




பிட்டுள்ளார்.

# கோப்பாப்பிலவில் மீனவ சங்கத் தலைவர் மீது கடற்தொழில் அமைச்சரின் உதவியாளர்கள் தாக்குதல்

25.04.2025

கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனின் சாரதி முல்லைத்தீவு - கேப்பாபிலவு மீனவ சங்க தலைவர் ஒருவரை தாக்கியதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளிப்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இந்த விடயத்தை வெளிப்படுத்தினார்.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் நேற்றைய தினம் தேர்தல் பிரச்சாரத்திற்காக முல்லைத்தீவு - கேப்பாபிலவிற்கு சென்றுள்ளார்.

இதன்போது அங்குள்ள மீனவ சங்கத் தலைவரை அழைத்து அவரது வீட்டுக்கு வெளியே வைத்து அவருடன் கலந்துரையாடியுள்ளார். இதன்போது அந்த மீனவர் சங்கத் தலைவர் தாங்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை கூறியதுடன், இந்த பிரச்சினை குறித்து கடந்த காலங்களில் பதவியில் இருந்து அமைச்சர்களிடம் தெரிவித்த நிலையில் அவர்களும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

அத்துடன் அமைச்சர் சந்திரசேகரன் கருத்து தெரிவிக்க முயன்றபோது குறித்த கடற்தொழில் சங்க தலைவர் சுகிதன், நந்தி கடலுக்கு செல்லும் வீதியின் நிலையை காண்பிக்க முற்பட்டுள்ளார்.

இதன்போது கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனின் சாரதி உள்ளிட்டோர் அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளிப்படுத்தினார்.

இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் இன்று (25) இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றிருந்த கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் வினவப்பட்டது.



எவ்வாறாயினும் அவர் இந்த கேள்விக்கு பதிலளிக்காமல் ஊடகவியலாளர்களை புறக்கணித்து சென்றுள்ளார்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஆர்ப்பாட்டம் கிளிநொச்சியில் முன்னெடுப்பு

25.04.2025

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஆர்ப்பாட்டம் இன்று (25) கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்திற்கு முன்னால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தெரிவிக்கையில்,

2,984 ஆவது நாளாகவும் தமது போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில் தமது உறவுகளை தேடி அலைந்து திரிவதாகவும் இதுவரையில் ஆட்சியில் இருந்த எந்த ஒரு அரசாங்கமும் தமக்கான தீர்வினை பெற்றுத் தரவில்லை.

சர்வதேசத்திடம் ஒரு முகமும் எம்மிடம் ஒரு முகமாக அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. தற்போதைய அரசாங்கம் கூட ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் எமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு உரிய தீர்வு பெற்று தரப்படும் என வாக்குறுதிகள் வழங்கினர்.

ஆனாலும் இதுவரையில் எந்த விதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்தனர்.



# கடற்தொழில் அமைச்சரின் அடாவடிகளை அனுமதிக்க முடியாது

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

26.04.2025

கடற்தொழில் அமைச்சரின் சாரதியால் தாக்கப்பட்ட மீனவ சங்க தலைவரை நேரடியாக சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் அடாவடித்தனங்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என தெரிவித்துள்ளார்.

கடற்தொழில் அமைச்சர் கடந்த 24ஆம் திகதி தமது கட்சிசார்ந்த சில உள்ளூர் அதிகாரசபை வேட்பாளர்கள் உள்ளடங்கலாக தமது சகாக்களுடன் முல்லைத்தீவு - கேப்பாப்புலவுப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, கேப்பாப்புலவு மீனவசங்கத் தலைவர் செபஸ்ரியாம்பிள்ளை சுகிர்தன் கடற்தொழில் அமைச்சரின் சாரதியால் தாக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில் இவ்வாறு தாக்கப்பட்ட கேப்பாப்புலவு மீனவசங்கத்தலைவரை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இன்றைய தினம் சனிக்கிழமை நேரடியாகச் சென்று பார்வையிட்டிருந்தார்.

இதன்போது கடற்றொழில் அமைச்சரும் அவருடைய சகாக்களும் மக்களோடு எவ்வாறு அணுகுவது என்பதை முதலில் அறிந்துகொள்ளவேண்டுமெனவும், இவ்வாறான அடாவடிச் செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிகமக முடியாதெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.



# சொந்தக்காணிகள் இருந்தும் அதன் பயனை பெறமுடியாது தவிக்கின்றோம்

## முல்லைத்தீவு வட்டுவாகல் மக்கள்

26.04.2025

முல்லைத்தீவு, வட்டுவாகல் கோத்தபாய கடற்படையினரால் அபகரிக்கப்பட்ட மக்களுடைய காணிகளின் விடுவிப்பு தொடர்பாக வட்டுவாகல் கிராம மட்ட அமைப்புகளின் உறுப்பினர்கள் இணைந்து உதயசூரியன் சனசமூக நிலையத்தில் இன்றைய நாள் (25.04.2025) கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமான குறித்த கலந்துரையாடலில் வட்டுவாகல் கோத்தபாய கடற்படையினரால் மக்களுடைய 617 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படாது இருப்பது தொடர்பாக பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருந்தது.

குறித்த கலந்துரையாடலில் சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் இணைப்பாளர் மதுஷனா, குறித்த நிறுவனத்தின் பணியாளர்கள், வட்டுவாகல் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், மாதர் சங்கத்தினர், சனசமூக நிலையத்தினர், மீனவ சங்கத்தினர், கமக்கார அமைப்பினர், காணிகளை இழந்த மக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போது,

தென்னை, பனைவளம், வயல் நிலங்கள், முந்திரிகை இருந்தும் அதன் பயனை பெற முடியாதளவில் இருக்கின்றோம். எங்களுடைய மூதாதையர்களுடைய சொத்தினை நாங்கள் பார்க்காமல் போய்விடுவோமோ என்ற பயம் எங்களுக்குள்ளே இருக்கின்றது. கடற்படையினர் தமது சொந்த நிலம் போல் அப்பகுதியின் அருகாலே செல்ல முடியாத நிலை இருக்கிறது. காணிகளை இழந்த மக்கள் மறுகரையில் அயலவர்களது காணிகளிலும், உறவினர்களது காணிகளிலும் குடியிருக்கிறார்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் அரிசி, தேங்காய், கஜு உற்பத்திகள் போன்ற வாழ்வாதாரத்தை நம்பி வாழ்ந்த மக்கள் நிலத்தை மக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தால் இந்த மக்களின் பொருளாதாரம் ஒருபடி மேலுயர்ந்திருக்கும் . காணிகள் விடுவிக்கப்படுமா என்ற கவலையில் இன்றுவரையிலும் இருக்கின்றார்கள்.

காணிகள் கிடைத்து அங்கு சென்று வாழ்ந்து விடலாம் என்ற ஆசைகளுடன் வாழ்ந்தவர்கள் ஆசைகள் நிறைவேறாமலே சிலர் உயிரை மாய்த்திருக்கின்றார்கள். மாற்று காணிகள் எவையும் எமக்கு தேவையில்லை எமது சொந்த நிலமே எமக்கு தேவை. எமக்குரிய வயல் நிலங்களில் கடற்படையினர் துப்பரவு செய்து மூன்று ஆண்டுகளாக வயல் விதைத்து வருகின்றார்கள். ஆனால் வயல் விதைப்பதற்கான சான்றுகள் அதாவது வயல் நிலங்களிற்கான பணம் எடுப்பதற்கான ஆதாரம் எம்மிடம் இருக்கின்றது.




மூன்று சந்ததிகளை கடந்து வந்திருக்கின்றோம். அவர்களுக்கும் இந் நிலம் கிட்டுமோ என்று தெரியாத நிலை இருக்கிறது. கடல்வளம், விவசாயம், கால்நடைகளை நம்பி வாழ்கின்றோம். தற்போது அரசாங்கம் மாறியிருக்கின்ற இந்த காலத்திலாவது உண்மையான, நேர்மையான, நியாயமான தீர்வுடன் இந்த காணிகளை எங்களுக்கு விடுவிக்க ஜனாதிபதி ஆவன செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவித்தனர்.

www.sangathamil.ca

# சிறீலங்கா அரச இயந்திரத்தால் படுகொலையான ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி யாழில் போராட்டம்

28.04.2025

சிறீலங்கா அரச இயந்திரத்தால் படுகொலை செய்யப்பட்ட ஊடக வியலாளர் தராகி சிவராம் மற்றும் ரஜீவர்மன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வும், அவர்களின் படுகொலைக்கு நீதி கோரி போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள படுகொலையான ஊடக வியலாளர்கள் நினைவு தூபி முன்பாக நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஊடகவியலாளர்கள் , தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டு சுடரேற்றி, மலர் மாலை அணிவித்து மலர் தூபி வணக்கம் செலுத்தினர்.

அதனை தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் களுக்கு நீதி கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நினைவு வணக்க நிகழ்வு ஆரம்பிக்கப்பட முன்னரே, நினைவு தூபி அமைந்துள்ள பகுதியில் பெருமளவான பொலிசார் சீரு டைகளுடன், சிவில் உடைகளுடனும் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் பெருமளவான புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டு , அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டதுடன், புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் என்பன எடுத்தனர்.

ஊடகவியலாளரான தராக்கி சிவராம் என்றழைக்கப்படும் தர்மரத்தினம் சிவராம் கடந்த 2005 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28ம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வைத்து வெள்ளை வானில் வந்த இனம் தெரியாதவர் களால் கடத்தப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்துக்கு அருகில் படுகொலையான நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் உதயன் பத்திரி கையின் அலுவலக செய்தியாளராக கடமையாற்றி வந்த




வேளை கடந்த 2007ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 29ம் திகதி காலை 10 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.







# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டங்களை ஒடுக்க முயலும் அநுர அரசாங்கம்

## மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி அமலநாயகி அமல்ராஜ்

29.04.2025

புதிய அரசாங்கம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையை அலுவலகத்திற்குள் திட்டமிட்டு புகுத்தி, போராட்டத்தினை இல்லாமல் செய்யும் முயற்சியை புதிய அரசு முன்னெடுத்து வருவதாக மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி அமல நாயகி அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

மேலும் குறிப்பிட்ட அவர், "எங்களது உறவுகளுக்கு என்ன நடந் தது என்பதை கேட்கவேண்டிய கால சூழ்நிலையிலிருக் கின்றோம்.

தற்போதுள்ள ஆட்சிமாற்றத்திலும் நாங்கள் ஏமாற்றப்பட்டுள் ளோம். புதிய ஆட்சிவந்ததும் ஏதோ புதிய ஆட்சிவந்துள்ளது எங்களுக்கு அனைத்தும் கிடைத்துவிட்டது என்று நீங்கள் ஒருபோதும் கனவு காண வேண்டாம்.

கடந்தகால ஆட்சியாளர்கள் எங்களை ஏமாற்றி எவ்வாறு எமது இனத்தினை அழித்தார்களோ அதனை விட படுமோசமான அரசியல் வியூகத்திற்குள்ளேயே நாங்கள் தற்போது நின்று கொண்டிருக்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயப்பரப்பிற்குள் பல விடயங் களை செய்யப்போகின்றோம், உண்மையினை கண்டறியப் போகின்றோம் நியாயங்களை சொல்வோம் என்று கூறி ஆட்சிக்குவந்தவர்கள் மூன்று தேர்தல்களை நடாத்தியது மட்டுமே வேலைத்திட்டமாக இருந்ததே தவிர காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தினை வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் பிரச்சினையை காணாமல் ஆக்கப்பட்டவர் களுக்கான அலுவலகத்திற்குள் திட்டமிட்டு புகுத்தி தமது போராட்டத்தினை இல்லாமல் செய்யும் முயற்சியை திட்டமிட்டு முன்னெடுத்துவருகின்றது.

நாங்கள் கேட்டுக்கொண்டிருப்பது உள்ளகப்பொறிமுறை அல்ல. சர்வதேச நீதிப் பொறிமுறையினையே நாங்கள் கேட்டுநிற்கின் றோம். எங்களது போராட்டங்களின் வடிவங்களே இன்று சர்வ தேச அழுத்தம் இலங்கை அரசாங்கத்திற்கு கொடுக்கப் படுகின்றது.

அதன் காரணமாகவே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அலு வலகத்தினை ஒரு மாயையாக காட்டி எமது போராட்டத் தினையையும் கோரிக்கையினையும் முடிவுக்கு கொண்டு வருவதன் மூலம் தங்களை நல்லரசாக காட்ட சிங்கள அரசு முயற்சிக்கின்றது.

இது தொடர்பில் நாங்கள் விழிப்பாக இருக்க வேண்டும். இன்று பல்வேறுபட்டவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்திற்குள் வந்து அதற்குள் பிளவுகளை ஏற்படுத்தி அதனை தங்களுக்கு சார்பாக கையாண்டு தேவையற்ற பிரச் சினைகளை உருவாக்கி மன ரீதியான தாக்கங்களை ஏற்



படுத்துவதுடன் உணர்வுகளை மழுங்கடிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அரசாங்கம் மற்றும் அதன் புலனாய்வு கட்டமைப்புகள் சூழ்ச் சிகளை முன்னெடுத்துள்ள அதேநேரத்தில் எங்களுடன் அதிகளவின் பயணிக்கின்றவர்களும் இதனை பிளவுபடுத்தும் முயற்சியில் செயற்படுகின்றனர்.

நாங்கள் இன்று வீதியில் நின்று போராடுவது எங்களது சந்ததிக ளுக்காக. எங்களுக்கு நடந்த இந்த அநியாயம், அட்டூழியங்கள் எதிர்கால சமூகத்திற்கு வரக்கூடாது என்பதற்காகவே நாங்கள் போராடிவருகின்றோம்" என குறிப்பிட்டுள்ளார்.

# முல்லை ஊடக அமையத்தில் ஊடகவியளார் மானிதர் சிவராமின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல்

29.04.2025

ஊடகவியலாளர் மாமனிதர் "தராகி" சிவராமின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு ஊடக அமையத்தில் உணர்வு பூர்வமாக நனைவுகூறப்பட்டது

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவர் கணபதிப்பிள்ளை குமணன் தலைமையில் இடம்பெற்று குறித்த நிகழ்வில் ஊடகவியலாளர் சிவராமின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு சுடரேற்றி மலர்தூவி அகவணக்கம் செலுத் தப்பட்டு வணக்க நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.





அதனைத்தொடர்ந்து சோமிதரனின் தராக்கி ஆவணப்பட திரையிலும் கலந்துரையாடலும் இடம்பெற்றது.

**பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு கோழைத்தனத்தின் தோழன் உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கெல்லாம் மூலமானது மரணபயம். இந்த மரணபயத்தைக் கொன்று விடுபவன்தான் தன்னை வென்று விடுகிறான் அவன்தான் தனது மனச்சிறையிலிருந்து விடுதலை பெறுகின்றான்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் ஊடகவியலாளர்களான மாமனிதர் தராகி சிவராம், ரஜிவர்மன் ஆகியோரின் நினைவேந்தல்

29.04.2025

சிறீலங்கா அரச இயந்திரத்தால் படுகொலை செய்யப்பட்ட ஊடக வியலாளர்களான தராகி சிவராம் மற்றும் செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி ஊடக இல்லத்தில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களான தராகி சிவராமின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும், செல்வராசா ரஜிவர்மனின் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று திங்கள் கிழமை அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் தராகி சிவராம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு - பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வைத்து வெள்ளை வானில் கடத்தப் பட்ட பின்னர் சுட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில் இலங்கை நாடாளுமன்றத்துக்கு அருகில் அவரது சடலம் மீட்கப் பட்டிருந்தது.

ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராக கடமையாற்றி வந்த வேளை கடந்த 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி காலை 10.30 மணியளவில் யாழ். ஸ்டான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்ல செயலாளர் இரா.மயூதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட தராகி சிவராம் மற்றும் செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு வடமராட்சி ஊடக இல்ல தலைவர் கு.மகாலிங்கம் மாலை அணிவித்தார். தொடர்ந்து ஈகைச்சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி வணக்கம் செலுத்தப் பட்டது. இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தை சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் பங்கேற்றிருந்தனர்.




# ஊடகவியலாளர்களின் படுகொலை தொடர்பில் சர்வதேச சமூகம் நீதியைப்பெற்றுத்தர வேண்டுகோள்!

29.04.2025

இலங்கையில் ஊடகவியலாளர்களின் படுகொலை தொடர்பில் எந்த அரசாங்கம் வந்தாலும் நீதியைப்பெற்றுத்தரப்போவதில லையென்றும் படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் களுக்கு சர்வதேச நீதிப்பொறிமுறை ஒன்றின் கீழ் நீதியைப் பெற்றுத்தர சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.



மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவு தூபியில் நினைவுகூரப்பட்டது.

மட்டு.ஊடக அமையம்,மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடக வியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் என்பன இணைந்து இந்த நிகழ்வினை நடாத்தியது.



மூத்த ஊடகவியலாளர் மாமனிதர் தராகி சிவராமனின் உருவப் படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட் டதுடன் இன்றைய நாளில் படுகொலைசெய்யப்பட்ட மாமனிதர் சிவராம் மற்றும் ஊடகவியலாளர் ரஜீபன் ஆகியோரின் ஆத்மசாந்திக்காக அகவணக்கம் செலுத்தப்பட்டது.

மட்டு ஊடக அமையம் மட்டக்களப்பு மாவட்டம் தமிழ் ஊடக வியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் தலைவர் வா.கிருஸ்ண குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிரேஸ்ட ஊடகவியலாளர் பா.அரியநேந்திரன், சுதந்திர ஊடக இயக்கத் தின் சிரேஸ்ட உறுப்பினர் லக்ஸ்மன் சிவில் சமூக செயற்பாட் டாளர் எஸ்.சிவயோகநாதன் உட்பட ஊடகவியலாளர்கள் சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.





**நீண்டதும் – கடினதுமான பெரும் போரில் நின்று தாக்குப் பிடிப்பதற்கும் படை நடாத்துவதற்கும், கடுமையான உடல் – உளப் பயிற்சிகள் அவசியம். அதேசமயம் எதிரியின் பலத்தையும் – பலவீனத்தையும் தெரிந்துகொண்டு, அதற்கேற்ப விதத்தில் அவனை வெற்றிகொள்வதற்குத் தேவையான தந்திரங்களையும் வகுத்துக்கொள்ள வேண்டும். பயிற்சியும் தந்திரமும் இருந்தல் மட்டும் போதாது, அதனை நடைமுறைப்படுத்தும் துணிவும் தேவை.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com




# ஒன்ராரியோ 300,000 கூடுதல் குடியிருப்பாளர்களுக்கு முதன்மை பராமரிப்பு அணுகலை விரிவுபடுத்துகிறது

17.04.2025

ஒன்ராரியோ அரசு 328,000 பேரை முதன்மை பராமரிப்பு குழுக்களுடன் இணைப்பதற்காக $110 மில்லியனுக்கும் மேல் முதலீடு செய்கிறது. இதன் மூலம் மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் குடும்ப மருத்துவர் அல்லது முதன்மை பராமரிப்பு வழங்குநர் கிடைப்பதை உறுதி செய்யும் இலக்கை நெருங்குகிறது. இந்த முயற்சியில், குடும்ப மருத்துவர்கள், செவிலியர் பயிற்சியாளர்கள், சமூகப் பணியாளர்கள் மற்றும் பிற சுகாதார நிபுணர்களை உள்ளடக்கிய 78 இடைத் தொழில்முறை முதன்மை பராமரிப்பு குழுக்களை உருவாக்குதல் மற்றும் விரிவாக்குதல் அடங்கும். இந்த விரிவாக்கம், ஒன்ராரியோவின் முதன்மை பராமரிப்பை வலுப்படுத்துவதற்கும், மாகாணம் முழுவதும் சுகாதார முடிவுகளை மேம்படுத்துவதற்கும் உள்ள பரந்த அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாகும்.

அமைச்சர் விஜய் தணிகாசலம் இந்த முதலீட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, “இந்த நிதியுதவி, பல ஒன்ராரியோ வாசிகளுக்கு அவர்களுக்குத் தேவையான பராமரிப்பு, அவர்களுக்கு தேவையான நேரத்தில், அவர்களின் சொந்த சமூகங்களிலேயே கிடைப்பதை உறுதி செய்யும்” என்று கூறினார். இந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றம், ஒன்ராரியோவின் மக்கள் அனைவருக்கும் எளிதில் அணுகக்கூடிய மற்றும் இணைக்கப்பட்ட சுகாதார அமைப்பை உருவாக்குவதற்கான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது.



# ஆபத்தான நாடாக சீனாவை அறிவித்த கனடா

22.04.2025

தேசியப் பாதுகாப்புக்கு சீனா மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருப்பதாக தெரிவித்த கனடா ஆபத்தான நாடாக சீனாவை அறிவித்துள்ளது.

வெளிநாட்டு தலையீடு, சைபர் நடவடிக்கைகள் மற்றும் ஆர்க்டிக் பிராந்தியத்தில் மூலோபாய அபிலாஷைகளை மேற்கோள் காட்டி, கனேடிய பிரதமர் மார்க் கார்ணி சீனாவை நாட்டின் முதன் மையான தேசியப் பாதுகாப்பு அச்சுறுத்தலாக அடையாளம் கண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கனடாவின் கூட்டாட்சி தேர்தல் பிரச்சாரம் இறு வாரத்தில் உள்ள நிலையில், கனடா-சீனா உறவுகள் குறித்த பிரதமர் மார்க் கார்ணியின் நேரடி அறிக்கை இதுவாகும், மேலும் தொலைக்காட்சி வேட்பாளர் விவாதத்தின் போது,

கனடாவுக்கு மிகப்பெரிய புவிசார் அரசியல் அச்சுறுத்தல் என்னவென்று வினவியபோது, அது சீனாதான் என்று கார்னி நேரடியாகக் கூறினார்.

மேலும் சீனத் தலையீடு கனடாவின் ஜனநாயக நிறுவனங்களுக்கு நேரடி சவாலாக அமைகிறது என்றும் பிரதமர் மார்க் கார்ணி எச்சரித்தார்.



# வேலைகளைப் பாதுகாக்கவும் பொருளாதாரத்தை வளர்க்கவும் ஒன்ராரியோ STEM உயர் கல்வியில் முதலிடுகிறது

23.04.2025

பொது நிதியுதவி பெறும் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் - அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் - (STEM) பயிற்சியை விரிவுபடுத்துவதற்காக ஒன்ராரியோ அரசாங்கம் 750 மில்லியன் டொலர்களை முதலிடுகிறது. இந்நிதி ஒவ்வொரு ஆண்டும் 20,500 மாணவர்களுக்கான கூடுதல் இடங்களை உருவாக்கி, மேம்பட்ட உற்பத்தி, வாழ்க்கை அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் போன்ற முக்கிய தொழில்களில் தேவைக்கேற்ப துறைசார் திறன்களை பட்டதாரிகளுக்கு வழங்கும். அமெரிக்க வரிகள் போன்ற உலகளாவிய பொருளாதார அழுத்தங்களிலிருந்து தொழிலாளர்கள் மற்றும் வேலைகளைப் பாதுகாப்பதற்கான ஒன்ராரியோவின் பரந்த செயற்பாட்டின் ஒரு பகுதியாக இம்முதலீடுகள் உள்ளன.

“உலகத் தரம் வாய்ந்த STEM கல்விக்கான அணுகலை விரிவுபடுத்துவதன் மூலமும், ஒன்ராரியோவின் தொழிலாளர்கள் உலகில் சிறந்தவர்களாக இருப்பதை உறுதி செய்வதன் மூலமும், நாளைய வேலைகளுக்கு எங்கள் அரசாங்கம் மாணவர்களை தயார்படுத்துகிறது” என்று அமைச்சர் விஜய் தணிகாசலம் கூறினார். இம்முயற்சி ஒன்ராறியோவை புதுமையில் முன்னிலைப்படுத்தவும், உலகளாவிய முதலீட்டிற்கான சிறந்த இடமெனும் நிலையைத் தக்கவைக்கவும் உதவும்.



# ரொரான்ரோ விமான நிலையத்தில் துப்பாக்கிச் சூடு: ஒருவர் பலி

09.04.2025

ஒன்ராரியோவின் ரொரான்ரோவின் பியர்சன் விமான நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

சுமார் 30 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரே இவ்வாறு சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பொலிசார் தொடர்புபட்டிருப்பதாக விமான நிலைய வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமான நிலையத்தின் புறப்பாடு முனையத்தில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது. இந்த சம்பவத்தினால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது எனவும் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தைத் தொடர்ந்து விமான நிலையத்தினை அண்டிய சில வீதிகள் மூடப்பட்டன.

இரண்டு அல்லது மூன்று பேருக்கு இடையிலான மோதல் சம்பவமொன்று தொடர்பில் பொலிசாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றதாகவும் அதன் அடிப்படையில் பொலிசார் சம்பவ இடத்திற்கு விரைந்ததாகவும் பீல் பிராந்திய தலைமை பொலிஸ் அதிகாரி நிசான் துரையப்பா தெரிவித்துள்ளார்.

மோதலை தடுக்க பொலிசார் முயற்சித்த போது ஒருவர் துப்பாக்கியை பயன்படுத்த முயற்சித்தார் எனவும் இதன் போது பொலிசார் குறித்த நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் துரையப்பா தெரிவித்துள்ளார்.






“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

www.sangathamil.ca

# கியூபெக்கில் வெளிநாட்டு மாணவர்களுக்கான கட்டண அதிகரிப்பிற்கு நீதிமன்றம் தடை

25.04.2025

கியூபெக் மாகாணத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டண அதிகரிப்பு தீர்மானத்திற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

கியூபெக் மாகாணத்திற்கு வெளியேயுள்ள மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட 3,000 டொலர் கட்டண உயர்வு அரசின் தரவுகளுக்கு ஆதாரம் இல்லாமல் எடுத்த முடிவாகும் என்று கியூபெக் மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதன் மூலம் மொன்ட்ரியாலில் உள்ள ஆங்கிலக் கல்வி நிறுவனங்கள் McGill மற்றும் Concordia பல்கலைக்கழகங்களுக்கு ஒரு பகுதிநிலை வெற்றியாக அமைந்துள்ளது.

2023 ஆம் ஆண்டு, மாகாணத்திற்கு வெளியிருந்து வருகின்ற மாணவர்களுக்கு இவ்வாறு கட்டண அதிகரிப்பு அறிவிக்கப்பட்டது.

பிரெஞ்சு மொழியை பாதுகாப்பதற்காக கட்டணத்தை 33% உயர்த்த வேண்டும் என்பதையும் மாநில உயர் கல்வி அமைச்சர் பாஸ்கல் டெரி தெரிவித்திருந்தார்.

“அரசின் முடிவுகள் நியாயமான தரவுகளால் ஆதரிக்கப்பட வில்லை” என்றும், “பிரெஞ்சு மொழிக்கு பாதுகாப்பு தேவை என்பது உண்மை என்றாலும், தவறான அல்லது இல்லாத தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முடிவுகள் எடுக்க முடியாது” என நீதிபதி எரிக் டூஃபூர் தெரிவித்துள்ளார்.

அரசின் கட்டண உயர்வை நீதிபதி தற்போது இரத்து செய்தாலும், அது இன்னும் 9 மாதங்கள் வரை அமலிலிருக்கும் வகையில் இடைக்கால அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்குள் அரசு புதிய கட்டணத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.






மேலும், ஆங்கிலக் கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாநிலத்திற்கு வெளியேயுள்ள பட்டப்படிப்பு மாணவர்கள் பட்டம் பெறும் போது, பிரெஞ்சு மொழியில் குறைந்தது நடுத்தரத் திறனடைய வேண்டும் என்ற புதிய விதியும் இந்த தீர்ப்பின் மூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

# கனடாவில் வான்கூவரில் நடைபெற்ற தெரு விழாவில் மக்கள் மீது மகிழுந்தால் தாக்குதல்: 11 பேர் பலி

27.04.2025

கனடாவின் வன்கூவரில் நடைபெற்ற ஒரு தெரு விழாவில் மக்கள் மீது ஓட்டுநர் ஒருவர் மகிழுந்தைச் செலுத்தி மோதியதில் 11 பேர் உயிரிழந்தனர்  மேலும் பலர் காயமடைந்தனர் என காவல்துறையினர் இன்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர்.

சம்பவ இடத்திலேயே ஓட்டுநர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் இந்த சம்பவம் பயங்கரவாதச் செயல் அல்ல என்பதில் தாங்கள் உறுதியாக இருப்பதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

தெற்கு வான்கூவரில் உள்ள கிழக்கு 41வது அவென்யூ மற்றும் ஃப்ரேசர் தெரு அருகே உள்ளூர் நேரப்படி இரவு 8 மணிக்கு சிறிது நேரத்திலேயே இந்த சம்பவம் நடந்ததாக வான்கூவர் காவல்துறையினர் தெரிவித்தனர்.

பிலிப்பைன்ஸ் கலாச்சாரத்தைக் கொண்டாடும் ஒரு தெரு விழாவில் பலரை கொன்று மற்றவர்களைக் காயப்படுத்திய சம்பவம் குறித்து விசாரணைகளை காவல்துறையினர் ஆரம்பித்துள்ளனர்.



ஒரு கருப்பு நிற SUV மகிழுதை ஓட்டி வந்த ஒருவர் கூட்டத்திற்குள் புகுந்து மக்கள் மீது மோதியதாக சாட்டிகள்  கூறியுள்ளன.

# கனடாவில் பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி

29.04.2025

கனேடிய நாடாளுமன்றத் தேர்தல் ஏப்ரல் 28ஆம் திகதி நடைபெற்ற நிலையில், லிபரல் கட்சியினர் மீண்டும் வெற்றிபெற்று ஆட்சியமைத்துள்ளனர். இந்த வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக நான்காவது தடவையாக லிபரல்கள் அங்கு ஆட்சியமைத்துள்ளனர்.

343 தொகுதிகளை கொண்ட கனடா பாராளுமன்றத்திற் நடந்த தேர்தலில் லிபரல் கட்சி 169 தொகுதியிலும், கன்சர்வேட்டிவ் கட்சி 144 தொகுதியிலும், பிளாக் கியூபெக் கட்சி 24 தொகுதியிலும, ஜனநாயக கட்சி 7 தொகுதியிலும், பசுமைக் கட்சி 1 தொகுதியிலும் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

லிபரல் கட்சிக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் பெரும் சரிவொன்று ஏற்பட்டிருந்தது. இதையடுத்து கன்சர்வேடிவ் கட்சிக்கு மக்கள் மத்தியில் சடுதியான ஆதரவு அதிகரித்தது. இந்த நிலையில், கட்சித் தலைமைப் பதவியில் இருந்து முன்னாள் பிரதமர் ட்ரூடோ விலக, கனேடிய மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கார்ணி லிபரல் கட்சிக்குத் தலைமையேற்றார்.




அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாகக் கனடாவை இணைப்பேன் என்று ட்ரம்ப் தொடர்ச்சியாகத் தெரிவித்துவந்த நிலையில், ட்ரம்பின் கருத்துக்களைத் தனக்குச் சாதகமாகக் கார்னி பயன்படுத்தினார். அவரின் தலைமைத்துவத்தின் கீழேயே லிபரல் கட்சியினர் அபார வெற்றியைப்பெற்று 4ஆவது தடவையாக ஆட்சியமைப்பதை உறுதிசெய்துள்ளனர்.



இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்பதை நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் ஏற்றுக்கொண்ட முதலாவது நாடாக கனடா அறியப்படுகின்றது. அது லிபரல் கட்சியின் கடந்த ஆட்சியிலேயே இடம்பெற்றது. அவர்களே தற்போது மீண்டும் ஆட்சியமைத்துள்ளனர்.

# கனடியப் பொதுத் தேர்தலில் மூன்று தமிழர்கள் வெற்றி

29.04.2025

2025 கனடிய பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ஆறு தமிழ் வேட்பாளர்களில் மூவர் வெற்றி பெற்றுள்ளனர். கனடிய பொதுத் தேர்தல் வாக்குப்பதிவு திங்கட்கிழமை (28) நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் Liberal கட்சியின் சார்பில் மூன்று, Conservative கட்சியின் சார்பில் இரண்டு, பசுமை கட்சியின் சார்பில் ஒன்று என மொத்தம் ஆறு தமிழர்கள் வேட்பாளர்களாக போட்டியிட்டனர்.

இவர்களில் Liberal கட்சியின் சார்பில் போட்டியிட்ட மூன்று தமிழர்களும் வெற்றி பெற்றனர். Oakville கிழக்கு தொகுதியில் அனிதா ஆனந்த், Scarborough-Guildwood-Rouge Park தொகுதியில் ஹரி ஆனந்தசங்கரி, Pickering–Brooklin தொகுதியில் ஜூனிதா நாதன் ஆகியோர் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகியுள்ளனர்.

இதுவரை வெளியான உத்தியோகபற்றற்ற முடிவுகளின் அடிப்படையில் அனிதா ஆனந்த் 28,498 (50.4%) வாக்குகளையும், ஹரி ஆனந்தசங்கரி 33,164 (63.9%) வாக்குகளையும்,, ஜூனிதா நாதன் 24,951 (53.2%) வாக்குகளையும் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகியுள்ளனர்.

இந்தத் தேர்தலில் அதிக ஆசனங்களை வெற்றி பெற்று Liberal கட்சி சிறுபான்மை ஆட்சி அமைத்துள்ள நிலையில் மீண்டும் அனிதா ஆனந்த், ஹரி ஆனந்தசங்கரி ஆகியோருக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தேர்தலில் Conservative கட்சியின் சார்பில் Markham-Stouffville தொகுதியில் போட்டியிட்ட நிரான் ஜெயநேசன், Markham -Thornhill தொகுதியில் போட்டியிட்ட லியோனல் லோகநாதன், பசுமை கட்சியின் சார்பில் Etobicoke வடக்கு தொகுதியில் போட்டியிட்ட சருன் பாலரஞ்சன் ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர்.



**சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்குமுறை காரணமாகவே**
**நாம் சுயநிர்ணய உரிமைக்காகவும், அரசியல் சுதந்திரத்திற்காகவும்,**
**போராட்டத்தில் குதித்தோம்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# தமிழக செய்திகள்



# ஈழ விடுதலைப் போராட்டத்தை இழிவுப்படுத்தும் 'ஜாட்' திரைப்படத்தைத் தடை செய்க!

## செந்தமிழன் சீமான் – நாம் தமிழர் கட்சி

15.04.2025

இந்தி மொழியில் வெளியாகியுள்ள ஜாட் திரைப்படம், தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி, தாயக விடுதலைக்காகப் போராடிய விடுதலைப் போராளிகளை பயங்கரவாதிகளாக சித்தரிப்பது வன்மையான கண்டனத்துக்குரியது.

வட இந்தியாவில் அயோத்தி அருகே நடக்கும் கதைக்களத்தில், கதைக்கு சிறிதும் தொடர்பின்றி யாழ்ப்பாணப் புலிப்படை என்று உள்நோக்கத்துடன் பெயர்வைத்து தமிழீழ விடுதலைப்போராட்டம் தவறானது போலவும், அதன் தளபதிகள் கொடூர வில்லன்கள் போலவும் கட்டமைப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. முழுக்க முழுக்க தமிழர்கள் மீதான இனவெறுப்பினாலேயே இத்திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளதை எளிதில் உணர முடிகிறது.

தாயகக்கனவுடன் சாவினைத் தழுவி, உலகத்தமிழர்களின் உள்ளத்தில் வைத்து வணங்கப்பெறுகின்ற எம்மாவீரத் தெய்வங்களை அவமதிப்பதை இனியும் வேடிக்கை பார்க்க முடியாது.

ஆகவே, ஜாட் திரைப்படக் குழு, ஈழ விடுதலைப்போராட்டத்தைத் தவறாகச் சித்தரிக்கும் சர்ச்சைக்குரிய காட்சிகளை உடனடியாக நீக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

தமிழ்நாடு அரசு கடந்த காலங்களைப்போல மக்களின் உணர்வுக்கு மதிப்பளித்து ஜாட் திரைப்படத்தை உடனடியாக தமிழ்நாட்டில் தடை செய்ய வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் பெரும் மக்கள் போராட்டத்தை நாம் தமிழர் கட்சி முன்னெடுத்து திரையரங்குகளை முற்றுகையிட்டு தடுத்து நிறுத்தும் எனவும் அறிவிக்கிறேன்.




# தமிழகத்தில் மகப்பேறு கால உயிரிழப்புகள் 39ஆக குறைவு

## தமிழ் நாடு பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வவிநாயகம்

19.04.2025

தமிழகத்தில் மகப்பேறு கால உயிரிழப்புகள் 45-ல் இருந்து, 39 ஆக குறைக்கப்பட்டுள்ளது என பொது சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

கர்ப்ப காலத்திலும், பிரசவத்துக்கு பிந்தைய 47 நாட்களுக்குள்ளும் பெண்களுக்கு ஏற்படும் தீவிர பாதிப்புகளுக்கு உயர் சிறப்பு மருத்துவ குழு சிகிச்சை மாநிலம் முழுவதும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக கர்ப்பிணியர்களுக்கு தீவிர சிகிச்சையுடன் கூடிய அனைத்து வசதிகளும் இருக்கும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் குறித்த பட்டியல், அவர்களின், பிரசவ காலத்துக்கு ஓரிரு மாதத்துக்கு முன் வழங்கப்படுகிறது.

அந்தந்த கிராமபுற செவிலியர்கள் வாயிலாக, அவ்வப்போது கர்ப்பிணியர்களும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இதுபோன்ற தொடர் நடவடிக்கையால் கர்ப்பால உயிரிழப்புகள் குறைந்துள்ளதாக பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வ விநாயகம் கூறியுள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

தமிழகத்தில் ஆண்டுக்கு 9 இலட்சம் பிரசவங்கள் நடைபெறுகின்றன. இதில் ஒரு இலட்சம் பிரசவங்கள் என்ற அடிப்படையில் உயிரிழப்புகள் கணக்கிடப்படுகிறது. கரோனா காலக்கட்டத்தில் 90 ஆக இருந்த உயிரிழப்பு, அடுத்தடுத்த ஆண்டுகளில், 52 மற்றும் 45 ஆக பதிவாகி வந்தது. தற்போது, கர்ப்பிணியர் தொடர் கண்காணிப்பு மற்றும் பிரசவத்திற்கான மருத்துவமனை முன்கூட்டியே திட்டமிடல் போன்றவற்றால், கர்ப்பகால உயிரிழப்பு 39 ஆக குறைந்துள்ளது. உயிரிழப்புகளை தொடர்ந்து குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல், ஆயிரம் குழந்தைகளில், 8 ஆக இருந்த உயிரிழப்புகள், 7 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இந்த இறப்புகள் குறைப்புக்கு, அதிகாரிகள் மற்றும் மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வு முக்கிய காரணம். இவ்வாறு அவர் கூறினார்.



# பரந்தூர் பன்னாட்டு வானூர்தி நிலையம் அமைப்பதனை எதிர்த்து தொடர்ந்து 1000ஆவது நாளினை எட்டியுள்ள பரந்தூர் ஏகனாபுரம் கிராமப் பொதுமக்களின் போராட்டத்தினைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு உடனடியாக இத்திட்டத்தினை கைவிட வேண்டும்

## செந்தமிழன் சீமான் –நாம் தமிழர் கட்சி

20.04.2025




4971 ஏக்கர் வளமான வேளாண் நிலங்களை அழித்து 1000க்கும் மேற்பட்டக் குடும்பங்களை இடம்பெயரச் செய்து, தலைமுறைத் தலைமுறையாக சமூகங்களை நிலைநிறுத்தி வந்த வாழ்வாதாரங்களை சிதைத்து, ஆயிரக்கணக்கான ஏக்கர் ஈர நிலங்களை சீரழித்துத் திமுக - பாஜக அரசுகளால் "முன்னேற்றம்" என்ற பெயரில் திணிக்கப்படும், இத்திட்டத்தினைத் தொடர்ச்சியாக எதிர்த்து 1000ஆவது நாளினை எட்டியுள்ள பரந்தூர் ஏகனாபுரம் பொதுமக்களின் உறுதியான போராட்ட உணர்வானது தமிழர் வரலாற்றில் இடம்பெறும் புரட்சிகர எடுத்துக்காட்டாகும். அதே நேரத்தில் 1000 நாட்கள் கடந்தும் மக்கள் போராடி வரும் நிலையில் ஒருமுறை கூட அவர்களை நேரில் சென்று சந்திக்காத ஆட்சியாளர்களின் செயல்பாடு, மக்களைப் பற்றித் துளியும் அக்கறை கொள்ளாத வெறுக்கத்தக்க ஆட்சியின் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அனைத்துவித சூழலியல் அழிவுத் திட்டங்களையும் எதிர்ப்பது போல மக்களை ஏமாற்றி, எட்டுவழிச் சாலை போன்ற திட்டங்களை எதிர்த்துப் பொது மக்கள் போராடிக் கண்ட வெற்றியின் பலன்களைத் தன்வசப்படுத்தி, ஆட்சி அதிகாரத்தை அடைந்த திமுக அரசானது அதற்கு ஈடான அழிவுத் திட்டங்களைத் தாமே முன்னெடுத்து மக்களின் குரல்களை நசுக்கி வாழ்வாதாரங்களை சிதைத்து, செயல்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது மக்களுக்கு இழைக்கும் பச்சைத் துரோகமாகும்.







இத்திட்டத்தை அமைக்கும் நிலைப்பாடெல்லாம் ஒருபுறம் இருக்க, தொடர்ச்சியாகப் போராடி வரும் பொதுமக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றைக் கருத்தில் கொண்டாவது செயல்பட வேண்டும் என்கின்ற அடிப்படை மக்களாட்சி மாண்பைக் கூடக் கடைப்பிடிக்காமல், போராடிவரும் பொதுமக்களின் மீது அதிகாரப் போக்கினைக் கட்டவிழ்த்துக் காவல்துறையின் அடக்குமுறையை ஏவி, பாஜக அரசுக்கு எவ்விதத்திலும் சளைக்காத எதேச்சதிகாரப் போக்கினைத் திமுக அரசு முழுமையாகக் கையில் எடுத்துள்ளது. பாஜக அரசினைப் பார்த்துத் திமுக வைக்கக்கூடிய அத்தனை பாசிச முழக்கங்களும் திமுக அரசுக்கும் பொருந்தும் என்பதை சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

– செந்தமிழன் சூசீமான்
தலைமை ஒருங்கிணைப்பாளர்
நாம்தமிழர்கட்சி

www.sangathamil.ca

# தாய் மொழியில் மருத்துவம், பொறியியல், உயர்கல்வி படிக்கலாம்: குடியரசுத் துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர்

25.04.2025

ததேசிய கல்விக் கொள்கை மூலம் தாய்மொழியில் மருத்துவம், பொறியியல் பயிலலாம் என்று குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் கூறினார்.

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் 4-வது ஆண்டாக பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் மாநாடு நேற்று தொடங்கியது. ஊட்டி ராஜ்பவனில் நடந்த மாநாட்டுக்கு ஆளுநர் ஆர். என்.ரவி தலைமை வகித்தார். ஆளுநரின் முதன்மைச் செயலாளர் ஆர்.கிரிலோஸ்குமார் வரவேற்றார். மாநாட்டைத் தொடங்கிவைத்து குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் பேசியதாவது:

பயங்கரவாதம் என்பது ஒற்றுமையாக கையாளப்பட வேண்டிய, உலகளாவிய அச்சுறுத்தலாகும். பாரதம் உலகில் அமைதியை விரும்பும் நாடு. நமது நாகரிக நெறிமுறைகள் வாசுதேவ குடம்பகத்தைப் பிரதிபலிக்கின்றன. பிரதமரின் தலைமைப் பண்பு நமது நாட்டுக்கு உத்தரவாதம். தேசிய நலனே எப்போதும் முதன்மையானது. தற்போது உலக நாடுகள் கடும் சவால்களையும், விரைவான தொழில்நுட்ப சீர்குலைவையும் எதிர்கொள்கின்றன.

தேசத்தை கட்டமைத்து, சமூகத்தை மாற்றும் வலிமை கல்விக்கு உண்டு. நாட்டில் 50 மில்லியன் இளைஞர்கள் உள்ளனர். அவர்களுக்கு தரமான கல்வி அளிக்க வேண்டும். தமிழ்நாட்டில் சிறந்த கல்வி நிறுவனங்கள் இருந்தன. காஞ்சிபுரம் கல்வியில் சிறந்து விளங்கியது. அதேநேரத்தில், நமது கல்வியை மேம்படுத்த வேண்டும்.

குருகுலம் என்ற சிறந்த கல்வி அமைப்பு மூலம் சமூகத்துக்கு சேவையாற்றி வந்தோம். நாட்டில் 11 செம்மொழிகள் உள்ளன. இவை நமது கலாச்சாரம், பண்பாடு, கல்வியைப் பறைசாற்றுகின்றன. கல்வியில் மாற்றம் செய்ய வேண்டிய தருணம் இது. இந்த நடைமுறையால் உலக அளவில் நமது நாடு வல்லரசாக மாறி வருகிறது.

நாம் ஆழமான ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும். மேற்கத்திய




மற்றும் காலனியாதிக்க மனப்பான்மையை விட்டு, நமது பாரம்பரிய கல்வி முறையை இளைய சமுதாயத்துக்கு அளிக்க வேண்டும். தேசிய கல்விக் கொள்கை மக்கள் நலனுக்கானது. இதன் மூலம் தாய்மொழியில் மருத்துவம், பொறியியல் மற்றும் உயர் கல்வியைக் கற்கலாம். இவ்வாறு அவர் பேசினார்.

# தமிழகம் முழுவதும் கனிம வளங்கள் சட்ட விரோதமாக வெட்டி எடுக்கப்படுகின்றன: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் சண்முகம் குற்றச்சாட்டு

27.04.2025

தமிழகம் முழுவதும் உள்ள குவாரிகளில் விதிமீறி அளவுக்கு அதிகமாக கனிம வளங்களை வெட்டி எடுப்பதும், அரசு புறம்போக்கு நிலங்களில் சட்ட விரோதமாக கனிம வளங்களை எடுத்தல் உள்ளிட்ட அத்துமீறல்கள் அதிகாரிகள் துணையுடன் தொடர்ந்து வருவதாக, மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் சண்முகம் குற்றம்சாட்டினார்.

மதுரை - கொல்லம் நான்கு வழிச்சாலை பணிக்காக ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே அச்சம் தவிர்த்தான் கிராமத்தில் கடந்த 2023ஆம் ஆண்டு கல் குவாரி அமைக்கப்பட்டது. கல் குவாரியால் மேய்ச்சல் நிலம் மற்றும் விவசாய நிலங்களுக்கு செல்ல முடியவில்லை எனக்கூறி விவசாயிகள், பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இன்று காலை கல்குவாரியை பார்வையிட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் சண்முகம் விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார்.

அப்போது அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: “அச்சம் தவிர்த்தான் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கல்குவாரியால் விவசாயிகள், கால்நடைகள் வளர்ப்போர், பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கல் குவாரிக்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்கள் பல்வேறு கட்ட போராட்டங்களிலும், நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்து உள்ளனர். இந்த குவாரி மூலம் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் வழக்கை காரணம் கூறாமல் மாவட்ட நிர்வாகம் மற்றும் கனிம வளத்துறை தலையிட்டு இப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காண வேண்டும்.

தமிழகம் முழுவதும் உள்ள குவாரிகளில் விதிமீறி அளவுக்கு அதிகமாக கனிம வளங்களை வெட்டி எடுப்பதும், அரசு புறம்போக்கு நிலங்களில் சட்ட விரோதமாக கனிம வளங்களை எடுத்தல் உள்ள விதிமீறல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதற்கு அதிகாரிகள் உடந்தையாக உள்ளனர். அரசின் அனுமதி பெற்று நடைபெறும் தொழில்களால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அதை அனுமதிக்க முடியாது.

மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்கள் மகளிர் குழுக்களுக்கு கடன் வழங்கிவிட்டு வசூல் என்ற பெயரில் அத்துமீறி பெண்களை துன்புறுத்துவதால் தற்கொலை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் தமிழகத்தில் நடைபெற்று உள்ளது. கடன் வழங்கிவிட்டு கட்டாய வசூலில் ஈடுபடுபவர்கள் மீது நட



வடிக்கை எடுக்கக்கூடிய சட்டத்தை தமிழக அரசு சட்டப்பேரவையில் கொண்டு வந்துள்ளது வரவேற்கத்தக்கது. பட்டாசு தொழிலில் பாதுகாப்பு அம்சங்களை வலுப்படுத்தி உயிரிழப்புகளை தடுக்க வேண்டும். பட்டாசு விபத்தில் காயமடைந்த தொழிலாளர்களுக்கு உயர் சிகிச்சை அளிக்கும் வகையில் சிவகாசி அரசு மருத்துவமனை தரம் உயர்த்தப்பட வேண்டும்,” இவ்வாறு அவர் கூறினார்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com



# உலக செய்திகள்

# முள்ளிவாய்க்காலில் தமிழ்ச் சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளை மறக்க முடியாது

### பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன்

17.04.2025

முள்ளிவாய்க்காலில் தமிழ் சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளை ஒருபோதும் மறக்கப்போவதில்லை என புத்தாண்டு வாழ்த்து செய்தியில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன் தெரிவித்துள்ளார்.



நாங்கள் தமிழ் புதுவருடத்தினை கொண்டாடும் இந்த தருணத்தில் பிரித்தானியாவிலும் உலகெங்கிலும் உள்ள தமிழர்களிற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன் - தமிழ் பாரம்பரியத்தின் முதலாவது பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில்,

தமிழ் புத்தாண்டு தனிப்பட்ட அர்த்தத்தை கொண்டுள்ளது.

எங்களது சமூகம் ஒரு பெருமை மிக்க சமூகம், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் எனது முதல் நடவடிக்கைகளில் ஒன்றாக, இலங்கையில் போர்குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டவர்களிற்கு எதிராக தடைகளை விதிக்கவேண்டும் என நான் அழைப்பு விடுத்தேன்.

அன்றிலிருந்து இந்த விடயம் தொடர்பில் செயற்படுவதை நான் நிறுத்தவில்லை.

கடந்த 15 வருடங்களிற்கு பின்னர் தொழில்கட்சி இது குறித்து நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் நான் பெருமிதம் அடைகின்றேன்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட அட்டுழியங்களிற்கு காரணமான இலங்கை இராணுவத்தின் சிரேஸ்ட அதிகாரிகளிற்கு எதிராக மார்ச் மாதம் பிரிட்டிஸ் அரசாங்கம் தடைகளை விதித்தது.

இது நீதிக்கான நீண்டகாலமாக காத்திருந்த பல குடும்பங்களிற்கு மிக முக்கியமானதொரு தருணம்.

ஆனால் நீதி என்பது ஒரு முறை மாத்திரம் நடக்கும் நிகழ்வல்ல,



நாம் தொடர்ந்து செயற்படவேண்டும்.

ஐநாவின் மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரைக்கு ஏற்ப இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என நான் அழைப்பு விடுத்துள்ளேன்.

மே 2009 கொடுரங்களை நாங்கள் நினைவில் கொள்கின்றோம். நாங்கள் ஒருபோதும் மறக்கமாட்டோம்.

நாங்கள் தொடர்ந்தும் பதில்களை தேடுவதை நிறுத்தக்கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன் தெரிவித்துள்ளார்.

# ஜம்மு – காஷ்மீர் பஹல்காம் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல்: 27ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலி

23.04.2025

இந்திய நிர்வாகத்திற்கு உட்பட்ட காஷ்மீரில் உள்ள ஒரு பிரபலமான அழகிய பஹல்காம் நகரைப் பார்வையிடச் சென்ற சுற்றுலாப் பயணிகள் குழு மீது துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் குறைந்தது 27 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 12 பேர் காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இன்று செவ்வாய்க்கிழமை நான்கு துப்பாக்கிதாரிகள் பல சுற்றுலாப் பயணிகள் மீது அருகில் இருந்து சுட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பஹல்காமில் இருந்து சுமார் மூன்று மைல் (5 கி.மீ) தொலைவில் உள்ள பைசரன் புல்வெளியைப் பார்வையிட்ட சுற்றுலாப் பயணிகள் மீது துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

கொல்லப்பட்ட சுற்றுலாப் பயணிகளில் பலரும் இந்தியர்களே. இந்த தாக்குதலில் தமிழர்களும் காயம் அடைந்துள்ளனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த பரமேஸ்வரம், சந்துரு, பாலச்சந்திரா ஆகிய 3 பேரின் விவரம் தெரியவந்துள்ளது.

தாக்குதல் நடத்தியவர்களைத் தேடும் பணி காவல்துறை மற்றும் இராணுவத்தினரால் தொடங்கப்பட்டுள்ளது.





ஜம்மு காஷ்மீரில் ஸ்ரீநகரில் இருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது பஹல்காம். இது காஷ்மீர் மாநிலத்தில் அனந்தநாக் மாவட்டத்தின் வடக்கே அமைந்த அற்புதமான மலைப் பகுதி சுற்றுலாத் தலம் ஆகும். அனந்தநாக் நகரத்திலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில், லித்தர் பள்ளத்தாக்கில், லித்தர் ஆற்றங்கரையில்பஹல்காம் அமைந்துள்ளது. மிகவும் அருமையான இந்த சுற்றுலா தலம் இமயமலையில் 7200 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு இராணுவமும் பொலிஸார் அனுப்பப்பட்டுள்ளதாகவும் மருத்துவமனையில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

"இது சுற்றுலாப் பயணிகள் மீதான கோழைத்தனமான பயங்கரவாதத் தாக்குதல். இதற்கு காரணமாக இருந்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று மக்களுக்கு நான் உறுதியளிக்கிறேன்" என்று பிராந்தியத்தின் லெப்டினன்ட் கவர்னர் மனோஜ் சின்ஹா தெரிவித்துள்ளார்.

# காசாவில் பாடசாலை மீது இசுரவேல் வான் தாக்குதல் 45 பேர் பலி

23.04.2025

காசாவில் உள்ள பாடசாலையொன்றின் மீது இசுரவேல் இராணுவம் நேற்று நடத்திய வான் தாக்குதலில் 45 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவின் ராபா பகுதியை குறிவைத்து நடத்தப்பட்ட இத் தாக்குதலில் அங்குள்ள இஸ்லாமிய பாடசாலை உட்பட அப்பகுதியிலுள்ள பல கட்டிடங்கள் இடிந்து விழுந்தன.

இந்த கோர தாக்குதலில் 45 பேர் உயிரிழந்தனர் எனவும் 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இசுரவேல இராணுவத்தின் இக் கொடூரத் தாக்குதலுக்கு உலக நாடுகளும் கண்டம் வெளியிட்டுள்ளன.

காசா - இசுரவேல் இடையேயான போர் ஒப்பந்தம் நிறைவுக்கு வந்துள்ள நிலையில் காசா மீது இசுரவேல் இராணுவம் மீண்டும் போர் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. பணய கைதிகளை மீட்கவும், ஹமாஸ் ஆயுத குழுவினரை முழுவதுமாக அழிக்கும் நோக்கிலும் இசுரவேல் இராணுவம் சரமாரியாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

2 ஆண்டுகளாக நீடித்து வரும் இப் போரில் இதுவரை 50



ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

# இந்திய அமைதிப்படையின் தளபதி கல்கட் மரணம்

25.04.2025

இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப்படையின் தளபதி ஓய்வு பெற்ற லெப்டினன்ட் ஜெனரல் அமர் ஜித் சிங் கல்கட் கடந்த செவ்வாய்கிழமை காலமானார் என இந்தியாவின் த பிரிண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.




இது குறித்து பிரிண்ட் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கடந்த செவ்வாய்கிழமை காலமான கல்கட்டின் உடல் அன்றைய தினமே முழுமையான இராணுவமரியாதையுடன் புதுடில்லியில் தகனம் செய்யப்பட்டது.

அவரது இறுதி நிகழ்வில் அவரது குடும்பத்தினர் சிரேஸ்ட அதிகாரிகள் அவருடன் இணைந்து இராணுவத்தில் சேவை புரிவதன் எழுச்சியையும் வீழ்ச்சியையும் அனுபவித்த சகாக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கூர்க்கா ரைபிள்ஸ் படைப்பிரிவில் இராணுவவீரராக தனது பணியை ஆரம்பித்த ஜெனரல் கல்கட்டின் புகழ்பெற்ற வாழ்க்கை இந்திய இராணுவத்தின் வரலாற்றின் பல புகழ்பெற்ற நிகழ்வுகளை உள்ளடக்கியது.

1971ம் ஆண்டு இந்திய பாக்கிஸ்தான் போரின் போது அவர் கூர்க்கா ரைபிள்ஸ் படைப்பிரிவிற்கு தலைமை தாங்கினார்.

மிகவும் கடுமையான சம்ப் மோதலின் போது வெளிப்படுத்திய மூலோபாய நுண்ணறிவு மற்றும் தலைமைத்துவ பண்புகளிற்காக பாராட்டை பெற்றார்.



எனினும் 1987 முதல் 1990 வரை இந்திய அமைதிப்படையின் தளபதியாக செயற்பட்டமைக்காக அவர் அதிகளவு நினைவுகூரப்படுகின்றார். ஒப்பரேசன் பவானிற்கு அவரே தலைமை தாங்கினார்.

# பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் திருவுடல் நல்லடகம்

26.04.2025

நித்திய இளைப்பாறிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்ஸின் திருவுடல் இன்று சனிக்கிழமை (26)நல்லடக்கம் செய்யப்பட்டதாக வத்திக்கான் அறிவித்துள்ளது.

பாப்பரசர் பிரான்சிஸ் ஏப்ரல் 21ஆம் திகதி வாத்திக்கானில் உள்ள தனது இல்லத்தில் 88 ஆவது வயதில் நித்திய இளைப்பாறுதல் அடைந்தார்.

மறைந்த போப்பாண்டவரின் இறுதிச் சடங்குகள் தொடங்கின. போப் பிரான்சிஸின் இறுதிச் சடங்கு மற்றும் அடக்கத்தில் 250,000 பேர் கலந்து கொள்வதாக வத்திக்கான் தெரிவித்துள்ளது.

நித்திய இளைப்பாறிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்ஸின்





நல்லடக்க ஆராதனை இத்தாலியின் வத்திக்கானில் உள்ள புனித பேதுரு பேராலயத்தில் இன்று சனிக்கிழமை (26) காலை 10 மணிக்கு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# காசா மீது இசுரவேல் மேற்கொள்ளும் தடைகள் மரணங்களை தோற்றுவிக்கும் - ஐ.நா

28.04.2025

மக்களுக்குத் தேவையான உணவு, நீர் மற்றும் மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட் கள் மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தடைகள் அங்குள்ள மக்களுக்கு மரணங்களை ஏற்படுத்தலாம் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான மற்றும் உதவி நிறுவனம் எச்சரித்துள்ளது.

போர் ஆரம்பமாகியதில் இருந்து கடந்த 18 மாதங்களாக காசா பகுதி மிக மோசமாக மனிதா பிமான நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது. அங்குள்ள மக்கள் வீடுகளை இழந்து தற்காலிக தங்கு மிடங்களில் வாழும்போதும் அவையும் குண்டு வீசித் தாக்கப்படுவதால் பெருமளவான மக்கள் கொல்லப் பட்டு வருகின்றனர்.

படை நடைவடிக்கைகளினாலும்,கடந்த 50 நாட்களாக நிவாரணப் பொருட்கள் செல்லும் பாதைகளை இசுரவேல் மூடியுள் ளதாலும் அங்கு மிகப்பெரும் மனித அவலம் ஏற்பட்டுள்ளது. தொண்டு நிறுவனப் பணியாளர்களையும் இசுரவேல் படுகொலை செய்து வருகின்றது என அது மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, போரினால் பாதிக்கப்பட்டுள்ள காசா மற்றும் மேற்கு கரை பகுதியில் செயற்படுவதற்கு ஐ.நாவின் அமைப்புக்கள், தொண்டுநிறுவனங்கள் மற்றும் நடுநிலைமை வகிக்கும் நாடுகளை இசுரவேல் அனுமதிக்க வேண்டும் என்ற விவாதம் ஐ.நாவின் அனைத்துலக நீதிமன்றத்தினால் அடுத்தவாரம் நெதர்லாந்தில் உள்ள அனைத்துலக நீதிமன்றத்தில் விவாதிக் கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான சட்ட ஆலோசனைகளை தமக்கு வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபை அனைத்துலக நீதிமன்றத்திடம் கோரிக்கையை விடுத்துள்ளது.

45 இற்கு மேற்பட்ட நாடுகளும் பல தொண்டு நிறுவன அமைப்



புக்களும் தமது கோரிக்கைகளை ஐ.நாவின் நீதிமன்றத்தில் சமர்ப் பித்துள்ளன. அதன் விசாரணைகள் எதிர் வரும் 28 ஆம் நாள் இடம்பெறவுள்ளது.

# வியட்நாம் போர் முடிவடைந்து 50வது ஆண்டு நிறைவு விழா

30.04.2025

வியட்நாம் போர் முடிவுக்கு வந்ததையடுத்து அதன் 50வது ஆண்டு நிறைவையொட்டி வியட்நாம் இன்று புதன்கிழமை ஒரு பெரிய விழா கொண்டாட்டத்தை நடத்தியது.



தெற்கு வியட்நாமிய நகரமான சைகோனில் ஒரு பிரமாண்டமான இராணுவ அணிவகுப்புடன் கொண்டாட்டங்களும் நடைபெற்றன.

முதல் முறையாக, சீன, லாவோ மற்றும் கம்போடிய துருப்புக்களின் ஒரு சிறிய குழு வியட்நாமிய இராணுவ அமைப்புகளுக்குப் பின்னால் அணிவகுத்துச் சென்றது.

அணிவகுப்பு பெரும் கூட்டத்தை ஈர்த்தது. அவர்களில் பலர் ஒரு இடத்தைப் பெறுவதற்காக இரவு முழுவதும் முகாமிட்டிருந்தனர். பல இளைஞர்களை உள்ளடக்கிய கூட்டம், சிவப்புக் கொடிகளை அசைத்து, தேசபக்தி பாடல்களைப் பாடியது.

சுதந்திர அரண்மனை அருகே நடைபெற்ற அணிவகுப்பில் தேசியக் கொடி மற்றும் போர் விமானங்களும் உலங்கு வானூர்திகளும் பறந்தன. துருப்புக்கள், போராளிகள், முன்னாள் படைவீரர்கள் மற்றும் உள்ளூர் குழுமக்கள் உட்பட சுமார் 13,000 பேர் அணிவகுப்பில் பங்கேற்றனர்.

1954 ஆம் ஆண்டு தொடங்கிய இந்தப் போர், ஏப்ரல் 30, 1975 அன்று கம்யூனிசத்தால் நடத்தப்படும் வடக்கு வியட்நாம் அமெரிக்க ஆதரவு தெற்கு வியட்நாமின் தலைநகரான சைகோனைக் கைப்பற்றியபோது முடிவுக்கு வந்தது.

சைகோன் நகரம் போருக்குப் பின்னர் வியட்நாமின் தேசிய தலைவரும் கம்யூனிசத் தலைவரான ஹோ சி மின் நினைவாக இந்த நகரம் ஹோ சி மின் நகரம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

இது கொடுங்கோன்மைக்கு எதிரான நீதியின் வெற்றி என்று வியட்நாமின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் நாட்டின் உயர்மட்டத் தலைவருமான டோ லாம் அணிவகுப்புக்கு முன்னதாக ஆற்றிய உரையில் கூறினார்.

வியட்நாம் ஒன்று, வியட்நாமிய மக்கள் ஒன்று. ஆறுகள் வறண்டு போகலாம், மலைகள் அரிக்கப்படலாம், ஆனால் அந்த உண்மை ஒருபோதும் மாறாது. என்ற ஹோ சி மின்னின் பொன்மொழிகளில் ஒன்றை வியட்நாமின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் நாட்டின் உயர்மட்டத் தலைவருமான டோ லாம் மேற்கோள் காட்டினார்.




அமெரிக்கா தனது கடைசி போர் துருப்புக்களை நாட்டிலிருந்து திரும்பப் பெற்ற சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், சைகோனின் வீழ்ச்சியில் சுமார் 3 மில்லியன் வியட்நாமியர்களையும் கிட்டத்தட்ட 60,000 அமெரிக்கர்களையும் கொன்ற 20 ஆண்டுகால மோதலின் முடிவைக் குறித்தது.

தனது உரையில், முன்னாள் சோவியத் யூனியன் மற்றும் சீனாவின் பெரும் ஆதரவு மற்றும் லாவோஸ் மற்றும் கம்போடியாவின் ஒற்றுமை ஆகியவை வடகொரியாவின் வெற்றிக்குக் காரணம் என்று டோ லாம் கூறினார். அமெரிக்கா உட்பட உலகெங்கிலும் உள்ள முற்போக்கான மக்களின் ஆதரவையும் அவர் குறிப்பிட்டார்.

போரின் பின்னர் வியட்நாம் அமெரிக்காவுடனான தனது உறவுகளை மேம்படுத்தியுள்ளது. இந்த ஆண்டு இரு நாடுகளும் இராஜதந்திர உறவுகளைத் தொடங்கி 30 ஆண்டுகள் நிறைவடைகிறது. 2023 ஆம் ஆண்டில், வியட்நாம் அமெரிக்காவை ஒரு விரிவான மூலோபாய பங்காளியாக அறிவித்தது. இது சீனா மற்றும் ரஷ்யாவைப் போலவே உயர் மட்டத்தில் வைத்துள்ளது.







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர் பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# மக்கள் சமூகம் விழிப்படையும் போது விடுதலை சாத்தியமாகிறது

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



ஒடுக்கப்படும் மக்கள் சமூகம் வழிப்படைந்து, புரட்சிகரப் பிரக்ஞை பெற்று, தேசியப் போராட்டத்தில் முழுமையாகப் பங்கு கொள்ளும் பொழுதே விடுதலை சாத்தியமாகிறது. மக்கள் மத்தியில் விரக்கதியும் சோர்வும், குழப்பமும், நம்பிக் கையின் மையும் தோன்றும் பொழுது ஒரு தேசத்தின் போராட்ட சக்தி வலுவிழக்கின்றது. இந்த அரசியல் உண்மையை விடு தலைக்கு விரோதமான சக்திகள் நன்கறிவர். ஆகவேதான் மக்களின் நம்பிக்கையைத் தளர்த்தி, விடுதலைப் பற்றை மழுங் கடித்து, உறுதிப்பாட்டை உடைத்து, உண்மையான விடுதலை இயக்கத்திலிருந்து மக்களை அந்நியப்படுத்த இந்த சதிகார சக்திகள் செயற்படுகின்றன.

(தேசியத் தலைவரின் “எனது மக்களின் விடுதலைக்காக…” கருத்துத் தொகுப்பு நூலிலிருந்து)









தமிழீழ விடுதலைப் போராட்டத்ததை முன்னெடுக்கும் மாபெரும் விடுதலைச் சக்தியாக எமது இயக்கம் வளர்ச்சி கண்டிருக்கிறது. ஆயுதப் போராட்ட களத்திலும் எமது விடுதலை வீரர்களே முன்னணிப்படையாக விளங்குகின்றனர். அரசியல் இலட்சியத்திலும் எமது இயக்கமே தெளிவுடனும் உறுதியுடனும் செயற்படுகிறது. வெகு சன அரங்கிலும் மிகப் பிரபல்யம் பெற்று மக்களின் நல்லாதரவு பெற்றிருப்பதும் எமது விடுதலை இயக்கமே. எமது இயக்கத்தின் இந்த மகத்தான வளர்ச்சிகண்ட பொறாமையும் எரிச்சலும் கொண்ட தீய சக்திகள் எமது இயக் கத்திற்கு மாசு கற்பிக்கும் வகையில் மிகவும் கீழ்த்தரமான, விசமத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன. மக்களிடமிருந்து எம்மை அந்நியமாக்கும் நோக்குடன் எமக்கு எதிராக மிகவும் அபாண்டமான பொய்ப் பிரச்சாரத்தை இவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். மக்களின் விடுதலை என்ற இலட்சியத்திற்காக இவர்கள் இயங்கவில்லை. எமது விடுதலை இயக்கத்தை அழித்துவிடும் ஒரே நோக்கத்திற்காவே இந்த சக்திகள் செயற்படுகின்றன. இவர்களின் சூத்திரதார நட வடிக்கைகளிலும், பொய்ப் பிரச்சாரங்களிலும் ஏமாந்து போகாது வழிப்புடன் இருக்க வேண்டுமென மக்களை நாம் கேட்டுக் கொள்கிறோம்.


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ
25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu





# ஓ மரனித்த வீரனே! உன் சீருடைகளை எனக்குத்தா

ஓ மரனித்த வீரனே
உன் சீருடைகளை எனக்குத்தா
உன் பாதனிகளை எனக்குத்தா
உன் ஆயுதங்களை எனக்குத்தா

ஓ மரனித்த வீரனே!
உன் சீருடைகளை எனக்குத்தா
உன் பாதனிகளை எனக்குத்தா
உன் ஆயுதங்களை எனக்குத்தா

உன் இறுதிப்பார்வையை பகையைவெல்லும் உன் துணிவை
எவருமே காணாத உன்னிரு துளி கண்ணீரை
உன் இறுதிப்பார்வையை பகையைவெல்லும் உன் துணிவை
எவருமே காணாத உன்னிரு துளி கண்ணீரை
தப்பியோடும் உன்விருப்பை தனித்து நிற்கும் தீர்மானத்தை
உன்தோழன் இருகூறாய் துண்டாடப்பட்டதனால்
தப்பியோடும் உன்விருப்பை தனித்து நிற்கும் தீர்மானத்தை
உன்தோழன் இருகூறாய் துண்டாடப்பட்டதனால்
உன் துன்பம் என்னவென்று நான் அறிந்து கொள்வதற்கு...

ஓ மரனித்த வீரனே!
உன் சீருடைகளை எனக்குத்தா
உன் பாதனிகளை எனக்குத்தா
உன் ஆயுதங்களை எனக்குத்தா

உன் வீட்டு முகவரியை இறுதி மூச்சில் எனக்குத் தா
எஞ்சிய வீடுகளில் பிழைத்தவர்கள் மத்தியிலே
உன் வீட்டு முகவரியை இறுதி மூச்சில் எனக்குத் தா
எஞ்சிய வீடுகளில் பிழைத்தவர்கள் மத்தியிலே
உற்றாரைக் கண்டுபிடித்து உன்னைப் பற்றிச் சொல்வதற்கு
இன்னுயிரை உவந்தளித்த உன் துணிவைப் போற்றுதற்கு
உற்றாரைக் கண்டுபிடித்து உன்னைப் பற்றிச் சொல்வதற்கு
இன்னுயிரை உவந்தளித்த உன் துணிவைப் போற்றுதற்கு
வார்த்தைகள் போதவில்லை வரலாறு பாடுமுன்னே.

ஓ மரனித்த வீரனே!
உன் சீருடைகளை எனக்குத்தா
உன் பாதனிகளை எனக்குத்தா
உன் ஆயுதங்களை எனக்குத்தா

ஓ மரனித்த வீரனே!
உன் சீருடைகளை எனக்குத்தா
உன் பாதனிகளை எனக்குத்தா
உன் ஆயுதங்களை எனக்குத்தா

தாயகப் பாடல்




# சிறுத்தைப் படையின் முதலாவது பெருஞ் சமர்

1995 ஆம் ஆண்டின் ஆடி மாதத்தின் 28 ஆம் நாள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பலமான ஒரு படையணியை தமிழீழமும் சர்வதேச சக்திகளும் உணர்ந்து கொள்ள இருந்த நாள். இவர்கள் யார் என்று சிங்களப் படைகளும் அதன் அரசும் நிட்சயமாக உணர்ந்தன. ஆனாலும் துரோகத்தால் மலிந்து போன எம் விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல இழப்புக்களை நாம் சந்திக்க நேர்ந்த . நாளாக இன்றைய நாள் பதிவாகி இருந்தது.

சிறுத்தைப்படைத் தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் கோமளா உட்பட்ட 57 சிறுத்தைப்படை போராளிகளை நாம் இழக்க நேரிட்டதும். இன்றைய நாளில் தான். ஆனாலும் இன்றைய நாளும் இந்தச் சண்டையும் எமக்கு பெரும் வெற்றியைத் தந்திருந்தது. தமிழீழ பெண்களின் வீரத்தை சிங்களம் உணர்ந்து கொண்ட முக்கியமான சண்டையாக இது அமைந்தது.



இரவோடு இரவாக மணலாறு காட்டினூடாக தகர்தழிப்புத் தாக்குதல் ஒன்றுக்கான முழுத் தயார்ப்படுத்தலுடன் நகர்ந்திருந்தது தமிழீழ விடுதலைப்புலிகளின் சிறப்புப் படையணியான “சிறுத்தைப் படை” சிறுத்தைப்படையின் சிறப்புத் தளபதியான கேணல் ராயூ அவர்களின் ஒருங்கிணைப்புக் கட்டளையின் கீழ் லெப் கேணல் கோமளாவின் வழிநடத்தலுடன் நகர்ந்து சென்ற அப்படையின் பெண் போராளிகள் பெரும் வரலாறு ஒன்றை பதிவு செய்யத் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

மண்கிண்டி மலை, கொக்குத்தொடுவாய், டொலர்பாம், கென்பாம், வெலிஓயா (மணலாறு என்ற தமிழ் பெயரை நேரடியாக சிங்களத்தில் மொழிபெயர்த்து வெலி- மணல் , ஓயா - ஆறு இப்பெயரை வைத்திருந்தது சிங்கள அரசு) என்ற இடத்தில் அமைந்திருந்த “பராக்கிரம்பாகு” முகாம் போன்ற 5 பாரிய படைத்தளங்களின் ஒருங்கிணைப்புச் செயலகமாக இருந்த வெலிஓயா படைத்தளத்தை கட்டுப்படுத்தி சம நேரத்தில் நடக்க இருந்த ஏனைய படைத் தளங்கள் மீதான தாக்குதல்களுக்கு இடையூறாக இருக்கக் கூடிய கட்டளைகளையும், வளங்கல்களையும், எறிகணை மற்றும் மோட்டார் உதவித் தாக்குதல்களையும் தடுக்கவும் என இவ்வணி வெலிஓயாத் தளத்தை நோக்கி சென்றது.

வெலிஓயா சார்ந்த பகுதிகள் எங்கும் சிறு சிறு அணிகாளாக பரவிக் கொண்டார்கள் சிறுத்தைப்படையின் பெண் போராளிகள்.

அந்த தாக்குதலுக்கு சென்ற அத்தனை போராளிகளும் சாதாரண போராளிகள் அல்ல. தமிழீழத்தின் உயிராயுதங்களுக்கு நிகரானவர்கள். கரும்புலிப் படைக்குள் உள்வாங்கப்படாமல் இருந்தாலும் சிறப்புப் படையணியாக இருந்து கொண்டு கரும புலிகளின் தீரத்தோடு செயற்பட்டவர்கள். தாக்குதலுக்கு செல்லும் போது “சார்ச்சர்” எனக் கூறக்கூடிய வெடியுடையை அணிந்தே இவர்களும் சென்றிருந்தார்கள்.

அவ்வணிகளுக்குள் மேஜர் மாதங்கி தலமையில் ஒரு அணி வெலிஓயா படைமுகாமை தாக்கி அழித்து விடும் நோக்கத்தோடு உள் நுழைந்திருந்தது. ஏனைய அணிகள் வெலிஓயா படைமுகாமை சுற்றி படையினரின் வழங்கல் அணியினர் மற்றும் உதவி அணியினரின் வருகையைக் காத்து நிலையெடுத்திருந்தனர். எவ்வகையிலும் தாக்குதல் வரலாம் என்ற எதிர்பார்ப்போடு முறியடிப்புத் தாக்குதலுக்கான ஆயுத்தத்தோடு கோமளா தனது போராளிகளை தயார்நிலையில் வைத்திருந்தார். முகாமுக்குள் உள் நுழைந்த அணி 3 பேர் கொண்ட சிறு அணிகளாக பிரிந்து அப்படை முகாமை தாக்கத் தயாராக இருந்தார்கள்.

அதே நேரம் பின்னணியில் தாம் வளர்த்த தமது சிறப்புப் படையணியின் முதல் வெற்றிச் செய்தியை கேட்க தயாராக இருந்தார்கள் தேசியத்தலைவரும் அவரது மூத்த தளபதிகளும்.

பெரும் எதிர்பார்ப்பு அனைவரிடமும் இருந்தது. எதிர்பார்ப்பு வீண்போகவும் இல்லை. உள்நுழைந்த வீர வேங்கைகள் சாதித்தார்கள். தாம் நேசித்த தலைவன் எதிர்பார்த்ததை செய்து முடித்தார்கள். விடுதலைப்புலிகளின் சிறப்புப் படையணியின் சிறுத்தைப்படையின் பெண் போராளிகள் என்றால் இது தான் என்று சர்வதேசத்துக்கும் சிங்களத்துக்கும் உணர வைத்தார்கள்.


சிறுத்தைப்படையினை உருவாக்கிய கேணல் ராயூ அவர்களும் தலைவரும்



“எந்த நேரத்திலும் எந்த சூழ்நிலையிலும்”

இவ்வாறான காத்திருப்பு நேரத்தில் உள்நுழைந்த அணி சரியான இலக்குகளுக்குப் போய்விட்டதை உறுதிப்படுத்திய கோமளாவுக்கு ராயூ அவர்கள் சண்டை ஆரம்பிப்பதற்கான சமிக்கையை கொடுக்க, தாக்குதலை ஆரம்பிக்க உத்தரவிடுகிறார் கோமளா.

பாரிய எதிர்ப்பின் மத்தியிலும் பெரும் பாதுகாப்பரன்களை உடைத்தெறிந்து உள் நுழைந்த படை சிறு சிறு அணிகளாக தாக்கத் தொடங்கியது. புலிகளின் அதிரடித்தாக்குதலை எதிர்பார்க்காத சிங்களப்படை திணறியது. எங்கு திரும்பினாலும் புலிகளின் ஆயுதங்கள் எதிரியை குறி வைத்தன. சிங்களப்படை செய்வதறியாது திகைத்த அதே நேரம் விடுதலைப்புலிகளின் மகளிர் படையணி தான் இச்சண்டையை செய்வதை எதிரி உணரத் தொடங்கினான். (சில வேளை காட்டிக் கொடுப்பாளர்கள் தகவல் சொல்லி இருக்கலாம்) அதனால் உள் நுழைந்த போராளிகள் அனைவரையும் உயிருடன் பிடிக்க வேண்டும் என்ற நினைப்பு அவர்களுக்குள் எழுந்தது. ஆனாலும் அவர்கள் எதிர்பார்க்காத தாக்குதல் வியூகங்கள் மூலமாக பெண்புலிகள் எதிரியை திக்குமுக்காட வைத்தனர்.

வெலிஓயா படைமுகாமை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள் சிறுத்தைப்படைப் போராளிகள். அங்கிருந்த தொலைத் தொடர்பு (Communication) தொடக்கம் கட்டளைப் பீடம் (Commanding Station) வரை தமது கட்டுக்குள் கொண்டு வந்தார்கள் சிறுத்தைப்படையின் சிறப்பு அணி.

தேசியத் தலைவரது திட்டத்தை நிறைவேற்றி அங்கே இருந்த ஆட்லறி எறிகணை ஏவுதளத்தை முற்றுமுழுதாக அழித்தார்கள். பக்கத்தில் இருந்த முகாம்களுக்கான வளங்கல்களையும் கட்டளைகளையும் நிறுத்தினார்கள். அங்கே தரித்து இருந்த 2 ஆட்லறிகள் முழுவதுமாக அழிந்து போனது. படைமுகாம் சிதைந்து கிடந்த நிலையில் ஆயுத வெடிபொருட்கள் முழுவதுமாக தீர்ந்து போகும் நிலை வந்து விட்டது. ஆனால் எதிரியின் துப்பாக்கிகளையும் ரவைகளையும் கைப்பற்றி எதிரியை தாக்கினார்கள். துன்பத்தை தந்தவனுக்கு துன்பத்தை அவனது துப்பாக்கியாலையே திருப்பிக் கொடுத்தார்கள். கிட்டத்தட்ட 3 நாட்களாக தொடர்ந்த சண்டை இறுதிக் கட்டத்தை நெருங்குகிறது. எதிரியின் ரவைகளும் முடிகின்ற நிலைக்கு வந்திருந்தன.

இறுதியாக உடலோடு கட்டப்பட்டிருந்த வெடியுடை (சார்ச்சர்) மட்டுமே மிஞ்சி இருந்தது. அதை வெடிக்க வைத்து தம்மை உயிர்த்தியாகம் செய்ய அவர்களால் முடியும். ஆனால் அவர்கள் தாம் பயின்ற தற்காப்புக் கலையை ஆயுதமாக்கினர். கராத்தேக் கலையின் அதி விசேட பயிற்சிகளைப் பெற்றிருந்த அப்போராளிகள் இறுதியாக எதிரிகளை கொல்வதற்கு அதையே ஆயதமாக்கினர். தமிழீழத்தின் மூத்த கராத்தே ஆசிரியர் ஒருவரின் நேரடி கற்பித்தலில் தாம் கற்றுக் கொண்ட தற்காப்புக் கலையினை இறுதிவரை பயன்படுத்தினார்கள். அவர்கள் அந்த வளர்ப்பு சரியாகவே வளர்க்கப்பட்டது என்பதை உணர்த்தினார்கள்.

தம்மிடம் இருந்த குத்துக்கத்தி மூலமாகவும் (ஆயுத்ததோடு பொருத்தப்பட்டிருக்கும் கத்தி), கிடைக்கும் எப் பொருளையும் (தடி, கம்பி, ) ஆயுதமாக பயன்படுத்தி கைகலப்பில் ஈடுபட்டார்கள். எதிரிக்கு பெண்புலிகளின் வீரத்தை உரைத்தார்கள். ஒரு நிலையில் எதிரியே “பெண்களா அல்லது பேய்களா இவர்கள்” ( எதிரியின் உரையாடல்களை விடுதலைப்புலிகளின் தொலைத் தொடர்பு கண்காணிப்பு பிரிவு கண்காணித்த போது உறுதிப்படுத்தப்பட்டது.) என்று பயந்து ஓடும் அளவுக்கு தாக்குதலை செய்தார்கள்.


சிறுத்தைப்படையினரை உன்னோட்டமிடும் தலைவர் அவர்களும் இப்படையினை உருவாக்கிய கேணல் ராயூ அவர்களும் – இதுதான் சிறுத்தைப்படையின் முதலாவது சீருடை

பெண் புலிகள் தானே இலகுவாக உயிருடன் பிடித்து விடலாம் என்ற இறுமாப்போடு வந்த சிங்களப்படைகள் ஒவ்வொருவராக உயிரற்று போனார்கள். குறித்த சில வீரப் பெண்களின் வீரச் சாவோடு அந்த சண்டை வெற்றி வாகை சூடியது. இந்த நிலை யில் ஏனைய அணிப் போராளிகளை தளம் திரும்புமாறு கேணல் ராயூ அவர்களிடம் இருந்து கட்டளை வருகிறது.

தளபதி லெப் கேணல் கோமளா தன் போராளிகளை ஒருங் கிணைத்து வெற்றியோடு தளம் திரும்புகிறார். சிறு அணிகளாக இருந்தவர்கள் ஒருங்கிணைந்து மணக்கிண்டிமலைப் படை முகாம் நோக்கி வந்து மணலாறுக் காடுகளுக்கிடையில் பயணிக்கிறார்கள். அந்த வெற்றியின் உச்ச நேரத்தில் துரொகி களின் துரோகத்தனத்தால் கோமளாவின் அணி பற்றிய முழு மையான தகவல்களுடன் அவர்களை இடை மறிக்கிறான் எதிரி. சரியாக திட்டமிட்டு இடை மறித்த எதிரியோடு சண்டை மூள்கிறது. கோமளா அணியை நிலை குலையாமல் ஒருங் கிணைக்கிறார். கேணல் ராயூ நேரடியாக வழிநடத்துகிறார். ஆனாலும் தொடர்புகள் அறுந்து போகின்றன. கடுமையான முற்றுகை. அவர்கள் சாவைக் கண்டு அஞ்சுபவர்கள் அல்ல ஆனால் சாதிக்கத் துடித்தார்கள்.


தரைச் சிறுத்தைப்படை பெண் போராளிகள் 2002.10.10

மு மு மையா கதி றனையும் பயன்படுத்தி சண்டை செய்தார்கள். இறுதியாக வெலிஓயாத் தளத்துக்குள் உயிருடன் பிடிபடாமல் போனவர்களை இங்கே பிடித்து விட வேண்டும் என்று துடித்தது சிங்களம். ஆனால் அவர்களால் முடியவே இல்லை. இறுதி வரை சிங்களத்துக்கு புலி வீரத்தை நிலைநிறுத்திய சிறுத்தைப் படையின் சிறப்பு அணி இறுதி வரை கைகளாலும் கால்களா லும் சண்டையிட்டது. நவீன போராட்ட முறைமைகள் உட்புகுத்தப் பட்ட பின்பும் இவ்வாறான தாக்குதல்களை எதிரி சிந்தித்துப் பார்க்கவில்லை. திணறிப் போன சிங்களப்படையின் உயிருடன் பிடிப்பதற்கான கனவு மண்ணுக்குள் புதைந்து போனது. இவ் வாறு ஒரு புறம் வீரத்தின் உச்சங்கள் சண்டையிட்டு வீரச்சா வடைந்த அதே நேரம் இன்னும் ஒரு அணி தலைவனின் இன்னும் ஒரு எண்ணத்தை நிறைவேற்றத் துடித்துக் கொண் டிருந்தது.

“தேவையற்ற சாவுகளை தவிர்க்க வேண்டும்” என்று தேசியத் தலைவர் அடிக்கடி குறிப்பிடுவதைப் போல பெண் போராளிகள் அவ்வெண்ணத்தை நிறைவேற்ற முனைந்தனர். சக்தி,


சிறுத்தைப்படை

அஞ்சலை, உஷா, உட்பட்ட 5 பெண் போராளிகள் உயிர்தப்பிப் பிழைத்தல் நடவடிக்கையில் இறங்குகிறார்கள்.


சிறுத்தைப்படை

“தப்பிப் பிழைத்தல்” என்பது அ ற்பதமானதும் மிகக் கொடுமை யான செயல். இதன் வ ர லாற்றை அறிந்தவர்கள் அ ல ் ல து அ னு பவித் தவர்களுக்கே அதன் உண்மை புரியும். பயங்கரமானஎ திர் வி ை ள வு க ை ள த் தாங்கிக்கொள்ளும் செயற்பாடாக இது கணிக்கப் படுகிறது. உயிர்தப்பிப் பிழைத்தல் என்ற சொல்லைக் கேட்டவுடனே எனக்கு 3 விடயங்கள் நினைவுக்கு வரும்

ஈராக்கில் தனது படையணியுடன் சண்டைக்காக சென்று உயிர் மீண்டு வந்த பிரித்தானிய இராணுவ வீரன் Chris Ryan இன் அனுபவக் குறிப்பான “தப்பியவன்” (The One That Got Away) நாவல்.

“Man vs. Wild” என்ற Discovery தொலைக்காட்சித் தொடர்.

செவ்வாய்க் கிரகத்தில் கைவிடப்பட்டு பூமிக்கு உயிருடன் திரும்பி விண்வெளி வீரன் ஒருவரின் கதையாகிய The Martian என்ற திரைப்படம்


காட்டுச் சிறுத்தைப்படை

இம் மூன்றுமே உயிர்தப்பிப் பிழைத்தல் என்ற விடயத்தின் ஆழத்தையும் அனுபவங்களையும் அக்குவேறு ஆணிவேறாக பேசுகின்றன. இதன் அனுபவம் என்பது வார்த்தைகளால் கூற முடியாதவை. அந்த வேதனைகளை யாரும் மறந்து விடவும் முடியாது.

இந்த நிலையில் தப்பிப் பிழைத்தல் பற்றி வெளிநாட்டவர்களின் அனுபவங்களை அறிந்த எமக்கு எம்மவர்கள் பற்றிய உண் மையான பல சம்பவங்களை அறிவதற்கு காலம் வழி விட்ட தில்லை. அவ்வாறான தீரம் மிக்க பக்கம் ஒன்றை பகிரப்படாத பக்கம் தன் மீது பதிந்து கொள்கிறது.

மணக்கிண்டிமலைப் படைமுகாம் அழிப்புக்குச் சென்ற இப் பெண் போராளிகள் உயிர் வாழ ஆசைப்பட்டவர்கள் அல்ல. தமிழீழத்துக்கான தமது தேவையை உணர்ந்தவர்கள். தாம்


தரைச் சிறுத்தைப்படை

எதற்காக வளர்க்கப்பட்டோம் என்பதை நன்கு அறிந்தவர்கள். அதனால் தான் இலக்குத் தகர்க்கப்பட்ட பின் நடந்து கொண் டிருந்த வீரச்சாவுகளுக்குள்ளும் அவர்கள் தாம் சாவதை தவிர் தார்கள். சார்ச்சர் வெடிக்கத் தயாராக இருந்தாலும் வெடித்து சாவதை விட சாதிக்க வேண்டி சண்டைக் களங்களின் தேவையை உணர்ந்து தப்பிக்க முயல்கிறார்கள்.

உணவில்லை, குடிக்கத் தண்ணீர் இல்லை. தேவையான ஆயுத வெடிபொருட்கள் இல்லை. சரியான தொலைத்தொடர்பு முறைமைகள் கையில் இல்லை. இருந்தவையும் கைவிடப்பட்டு விட்டன. ஆனால் எப்பிடியாவது உயிர் தப்பி தலைவனிடம் செல்ல வேண்டும் என்ற இலக்கு மட்டும் தான் அவர்களிடம் இருந்தது. சிறப்புப் பயிற்சி பெற்ற அவர்களால் தப்பிக்க இயலும் என்ற நம்பிக்கை இருந்தது. அதனால் அவர்கள் தப்பித்தார்கள்.


காட்டுச்சிறுத்தை அணியினர்

ஆட்லறித் தளத் தகர்ப்புத் தாக்குதல் நடவடிக்கைக்காக உயிர்க் கொடை செய்த தம் தோழிகளை விட்டுவிட்டு நடக்கத் தொடங்கு கிறார்கள். அங்கிருந்து பல தடைகளைத் தாண்ட வேண்டும். சிங்களக் கிராமங்களை கடக்க வேண்டும். படை முகாங்களை தவிர்த்து வெளியேற வேண்டும். அதற்குள்ளே யாராவது தப்பித்திருக்கக் கூடும் என்ற நோக்கத்தோடு அனுப்பப்பட் டிருக்கும் ரோந்துக் காவல் அணிகளிடம் இருந்து தப்பிக்க வேண்டும். இவற்றையெல்லாம் கடக்கும் போது சிங்கள வேட்டைக்காறரின் கண்களில் படவே கூடாது.

இப்படியாக பல தடைகளைத் தாண்ட வேண்டிய அவர்கள். சில முக்கிய வீதிகளையும் ஊடறுத்து வர வேண்டும். அவர்கள் வந் தார்கள். அங்கிருந்து நடக்கத் தொடங்கியவர்கள் பல வீதி களைக் குறுக்கறுத்து கவனமாக கடந்து விடுகிறார்கள். ஆனால்


தரைச் சிறுத்தைப்படை 1998





இடையில் இருந்த பல படைமுகாம்களில் பல தடவைகள் முட்டுப் படுகிறார்கள். சிறிய சண்டைகள் மூண்டாலும் அவற்றில் இருந்து விலகி ஓடுகிறார்கள்.

கிட்டத்தட்ட இரண்டு வாரங்கள் அவர்களின் முயற்சி காடு மலை என்று தொடர்ந்து கொண்டே இருந்தது. மணலாறில் தொடங்கி யவர்கள் வவுனியாக் காட்டுக்குள் வந்து மிதந்தார்கள். அத் தனை நாட்களும் உணவில்லை காட்டு இலை குழைகளை பச்



இதில் நிற்பவர்கள் (நீல சிறுத்தை சீருடையில்) கடற்சிறுத்தையினர் மற்றும் தரைச்சிறுத்தையினர் ஆவர். முன்னால் மலர்வளையம் தாங்கி வரும் சிறுத்தை சீருடை அணிந்தவர் காட்டுச் சிறுத்தையினைச் சேர்ந்தவர் ஆவார்

சையாக உண்டார்கள். சாப்பிடக் கூடியதாக எது கிடைத்தாலும் அதை பத்திரப்படுத்திக் கொண்டார்கள். காட்டுக்குள் இலை களைத் தவிர வேறெதுவும் அவர்களுக்கு கிடைக்கவில்லை மிருகங்களை வேட்டையாடினால் அதில் இருந்து வெளியேறும் வெடிச்சத்தம் இவர்களை இனங்காட்டி ஆபத்துக்களை கொண்டு வரும் என்பதை உணர்ந்து வேட்டையாடுவதை தவிர்த்தார்கள். இலைகளை மட்டுமே உண்டார்கள்.



காட்டுச் மற்றும் சிறுத்தை கடற்சிறுத்தை

காட்டுக்குள் அருவிகளை தேடிக் கழைத்து விட்ட நிலையில் வரண்டு கிடந்த உதடுகளை நனைக்க வேண்டும் என்று தண்ணீர்க் கொடியை தேடினார்கள். ஆனால் சில நேரத்தில் அவையும் கிடைப்பதில்லை. கிடைக்கும் நேரத்தில் தண்ணீர்க் கொடியைக் கொண்டு உதட்டை ஈரப்படுத்திக் கொண்டார்கள்.



கேணல் ராயூ அவர்களின் சந்தனப் பேழையினை தூக்கிச் செல்லும் சிறுத்தைச் சீருடை அணிந்தவர் காட்டுச்சிறுத்தையினைச் சேர்ந்தவர் ஆவர். இடது மூலையில் நிற்பவரும் ஏனையோரும் தரைச்சிறுத்தையினர் ஆவர்.

உடலில் கொஞ்சம் கொஞ்சமாக பலமிழக்கத் தொடங்கிய அவர்கள் இறுதி வரை சோர்ந்துவிடவில்லை. நடந்து கொண்டே இருந்தார்கள். நடந்து நடந்து வவுனியா காட்டி னூடாக எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தேறிய போது அவர்கள் போராளிகளா என்ற சந்தேகம் எழுந்தது. ஏனெனில்



கேணல் ராயூ அவர்களின் வீரவணக்க நிகழ்வின் போது அவரது சந்தனப் பேழையைச் சுற்றி நிற்கும் அவரால் வளர்த்தெடுக்கப்பட்ட படையான சிறுத்தைப்படையின் கடற்சிறுத்தை வீரர்கள்

அவர்களின் கோலம் அவ்வாறு மாகி இருந்தது. மக்கள் அவர் களை அடையாளம் கண்டு கொண்டார்கள். இவர்களும் மக்களை அடையாளம் கண்டு கொண்டு தாம் பாதுகாப்பான இடத்துக்கு வந்து விட்டோம் என உறுதிப்படுத்தியவர்களாய் நிலத்திலே மயங்கி விடுகிறார்கள்.

துரோகத்தினால் முடிக்கப்பட்ட இவ்வெற்றிச் சண்டை தன்னுள் 57 சிறுத்தைப்படையின் சிறப்புப் பெண் போராளிகளின் தியாகத் தாலும் அவர்களின் வீரத்தாலும் மட்டுமல்லது அந்த பிரதேசத் தில் அன்று நடந்த ஐந்து படைமுகாம்கள் மீதான தாக்குதல் களில் மொத்தமாக 180 எழுதமுடியாத பல காவியங்களை எழுதிச் சென்றது என்பது உண்மையே...

அனுபவக் குறிப்பு பகிர்வு:

-சிறுத்தைப்படையின் முதாலாவது அணியின் ஒரு பெண் போராளி

எழுதியது: இ. இ. கவிமகன்

---

கிளிநொச்சி

மேஜர் ஜானி (ஞானி)
அந்தோனி ஜஸ்ரின் - உயிர்த்தராசன்குளம், முருங்கன், மன்னார்

மேஜர் அமுது
சந்திராக்குட்டி மகாராஜா - மல்வத்தை, அம்பாறை

மேஜர் வைதேகி
கனகலிங்கம் பிரபாமதி - மூளாய், சுழிபுரம், யாழ்ப்பாணம்

கப்டன் சுரேந்தர்
பொன்னுத்துரை பரிபாகரன் - பாலமோட்டை, நெடுங்கேணி, வவுனியா

கப்டன் வளர்மதி (ஜெகா)
அந்தோனி வதனா - முருங்கன், மன்னார்

கப்டன் பரிமேலழகன் (தாவீது)
ஜோன்மரியதாஸ் ஜஸ்ரின் யோகராஜன் - காங்கேசன்துறை, யாழ்ப்பாணம்

கப்டன் சந்திரன்
கந்தக்குட்டி பேரின்பமூர்த்தி - அக்கரைப்பற்று, அம்பாறை

கப்டன் ரமணி (தேன்மொழி)
முத்துலிங்கம் சுதாகு - வெல்லாவெளி, மட்டக்களப்பு

கப்டன் சரண்யா
துரைராசா ரோகினி - நெல்லியடி, யாழ்ப்பாணம்

கப்டன் அல்லி
தம்பிராசா பவளமலர் - நீர்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்

கப்டன் அஜந்தா
அண்ணாமலை யாழினி - வேலணை, யாழ்ப்பாணம்

கப்டன் காவியா
பழனி வசந்தகுமாரி - பரந்தன், கிளிநொச்சி

கப்டன் அன்பு
பாலசுந்தரம் பராசக்தி - திருகோணமலை

கப்டன் எழில்ச்செல்வி
அந்தோனிசாமி சசிகலா - கண்டி, சிறிலங்கா

கப்டன் பார்த்தீபா
சிவராஜா சுபதா - சண்டிலிப்பாய் வடக்கு, யாழ்ப்பாணம்

கப்டன் வீசாலி
சிவஞானம் தனலட்சுமி - புங்குடுதீவு, யாழ்ப்பாணம்

கப்டன் செந்தமிழ்நம்பி (வேங்கை)
வேலுப்பிள்ளை ரஞ்சன் - சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி, யாழ்ப்பாணம்

கப்டன் சேந்தன்
அருந்தவராஜா ராஜராஜன் - கொத்தியகாடு, தொண்டமானாறு.




இச்சமரில் சிறுத்தைப்படையின் 57 பெண் அதிரடிப்படை ஞர்கள் உள்ளிட்ட 128 பெண்போராளிகள் உட்பட 180 போரா ளிகள் வீரச்சாவடைந்தனர். அதேநேரத்தில் மண்கிண்டிமலை படைத்தளத்தினுள் புகுந்து அங்கிருந்த 130 மிமீ வகை 59-1 தெறோச்சிகள் 2இனையும் தகர்த்தெறிந்தனர்.

லெப்.கேணல் கோமளா
சிங்கர் குபேந்திரா - இமையாணன், கரணாவாய் தெற்கு, யாழ்ப்பாணம்

கப்டன் நீரையன் (வீரையன்)
ஜெயசிங்கம் சுரேஸ்குமார் - கிளிநொச்சி

மேஜர் அன்பிற்கினியன் (இலக்கியன்)
அரியகுட்டி அஜந்தாகரன் - 3ம் வட்டாரம் முள்ளியவளை, முல்லைத்தீவு

மேஜர் இலக்கியன் (தரன்)
அந்தோனி சாமிதாஸ் - வேப்பங்குளம், வவுனியா, ஓமந்தை, வவுனியா

மேஜர் சிறிதரன் (சிறிதாஸ்)
இராமையா தமிழ்ச்செல்வன் - செல்வாநகர், கிளிநொச்சி

மேஜர் மாதங்கி
சண்முகராசா ஜீவலதா - திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்

மேஜர் ஈழப்பிரியா
தம்பையா இரஞ்சிதமலர் - 8ம்வாய்க்கால், உருத்திரபுரம், யாழ்ப்பாணம்

கப்டன் கலைமகள்
சுப்பிரமணியம் பத்மலோஜினி - மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் கவிதன்
சின்னராசா இந்திரகுமார் - வவுனிக்குளம், மல்லாவி, முல்லைத்தீவு

லெப்டினன்ட் தமிழ்நம்பி (ரஞ்சித்)
செபஸ்ரியாம்பிள்ளை சுரேஸ் இராசநாயகம் - கொக்குத்தொடுவாய், மணலாறு

லெப்டினன்ட் ஆண்டான்
தங்கராஜா கிருபராஜா - கல்லடி, மட்டக்களப்பு

லெப்டினன்ட் நிலவன்
ஞானப்பிரகாசம் சிவகுரு - கிண்ணையடி, வாழைச்சேனை, மட்டக்களப்பு

லெப்டினன்ட் தமிழ்நெஞ்சன்
செல்லையா கனகராஜ் - செட்டிக்குளம், வவுனியா

லெப்டினன்ட் அஜந்தன்
அருமைத்துரை ஞானேந்திரன் - மண்டூர், மட்டக்களப்பு

லெப்டினன்ட் ஆனந்தி
மணியம் சித்திராதேவி - முத்தையன்கட்டு, ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு



'சூலை 28, 1995 அன்று நடந்த சமரில் வீரச்சாவடைந்த சிறுத் தைப்படை வீரிகளின் சிதையாமல் (சாஜர் கட்டாதோர்/ இழுப் பதற்கு முன் வீழ்ந்தோர், ஏவுண்ணியோர் (Hit by Bullet) ஆகியோரது எதிரியால் கைப்பற்றப்பட்ட வித்துடல்கள்.

லெப்டினன்ட் உமா (கேமா)
முருகேசு சந்திரமதி – கோயிற்புளியங்குளம், வவுனியா

லெப்டினன்ட் நந்தினி
கதிரமலை மதிவதனி – மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய் தெற்கு, யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் இன்பரசி
கணபதி நாகசௌந்தரி – பரசங்குளம், நெடுங்கேணி, முல்லைத்தீவு

லெப்டினன்ட் வளர்மதி
துரைசிங்கம் ராதாலட்சுமி – தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் வினோதா
பிரான்சிஸ் பிரின்ஸ்லி – புலோப்பளை, யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் குந்தவை
சின்னத்தம்பி சிவகுமாரி – கரவெட்டி கிழக்கு, யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் தவம்
மாணிக்கம் ஜெயவதனா – ஊரெழு கிழக்கு, சுண்ணாகம், யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் மேகலா
கோபால் வாகினி – மீசாலை தெற்கு, யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் பூரணி
இராசையா நகுலேஸ்வரி – கல்வியங்காடு, யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் மலரினி
அருச்சுனன் உமாதேவி – கட்டுடை, மானிப்பாய், யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் மலர்விழி
பாலசிங்கம் நளாயினி – புத்துவெட்டுவான், கிளிநொச்சி

லெப்டினன்ட் அமலி
பாலச்சந்திரன் சந்திரகுமாரி – மட்டுவில்நாடுகிழக்கு, பூநகரி, கிளிநொச்சி

லெப்டினன்ட் வசந்தினி
சந்திரயோகு வயலற்திரேசிற்றா – பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோயில், மன்னார்

லெப்டினன்ட் இந்திரா
நமசிவாயகம் பாலநந்தினி – முள்ளியான், கட்டைக்காடு, கிளிநொச்சி

லெப்டினன்ட் நாயகி
கந்தசாமி சாந்தி – புத்தூர் மேற்கு, நவக்கிரி, யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் இயலி
லிங்கம் கலா – மயிலிட்டி, யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் விவேகானந்தி
குணநாதன் கௌரி – கந்தர்மடம், யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் கவிதா
இராசநாயகம் இவோன்ஸ்தர்சினி – சிலாவத்தை, முல்லைத்தீவு

லெப்டினன்ட் அன்பழகி
இராசதுரை சுகந்தினி – காக்கையன்குளம், வவுனியா

லெப்டினன்ட் தூயவள்
குமாரசாமி பிறேமாவதி – ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு

லெப்டினன்ட் பூங்குயில்
கனகநாயகம்பிள்ளை ஜெயசுதா – வேலணை, யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் மணிமேகலை
சிறிசேனா மேரிறோஸ் – குரநகர், யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் வேங்கைமார்பன்
ஜோசேப்இராசேந்திரம் குயின்ஸ்ரனிவிமலசேகர் – இளவாலை, யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் சுமன்
மகாதேவன் சுபாஸ்கரன் – பொன்னாலை, சுழிபுரம், யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் தீசன்
கந்தையா சந்திரகாந்தன் – வவுனியா

லெப்டினன்ட் குணசீலன் (சீலன்)
நரேந்திரன் சத்தியசீலன் – துணுக்காய், முல்லைத்தீவு

லெப்டினன்ட் வேலான் (தமிழவன்)
வினாசித்தம்பி தருமரத்தினம் – இயக்கச்சி, யாழ்ப்பாணம்

லெப்டினன்ட் தமிழ்மாறன் (ஜேம்சன்)
பாலசிங்கம் தருமசீலன் – முள்ளிவாய்க்கால் முல்லைத்தீவு

லெப்டினன்ட் ஈழநேசன்
திருமூர்த்தி மோகனதாஸ் – புத்தளம்

லெப்டினன்ட் மல்லிகைத்தேவன் (சண்முகம்)
கந்தையா உதயசிறி – இராமநாதபுரம், வட்டக்கச்சி, கிளிநொச்சி

லெப்டினன்ட் புகழ்வேந்தன் (நிலோஜன்)
வெற்றிவேல் விக்கினேஸ்வரன் – கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு

2ம் லெப்டினன்ட் அன்பன் (அன்பு)
கிருஸ்ணசாமி சிறிக்குமார் – வவுனியா

2ம் லெப்டினன்ட் மறவன் (மிரேஸ்)
இராமையா கோடீஸ்வரன் – திருவையாறு, கிளிநொச்சி

2ம் லெப்டினன்ட் ஞானச்சந்திரன்
செல்வராசா ஞானச்செல்வன் – கண்டாவளை, கிளிநொச்சி

2ம் லெப்டினன்ட் சரித்திரன்
ஆரோக்கியசாமி ஜேசுராசா – கோணாவில், கிளிநொச்சி

2ம் லெப்டினன்ட் இராசலிங்கம்
வேலு விஜயகுமார் – புளியங்குளம், வவுனியா

2ம் லெப்டினன்ட் அறிவுமணி
மோசேஸ் இதயகுமார் – கண்டி, சிறீலங்கா

2ம் லெப்டினன்ட் சுவிதன்
சபாரத்தினம் மணிவண்ணன் – இராமநாதபுரம், வட்டக்கச்சி, கிளிநொச்சி

2ம் லெப்டினன்ட் தனஞ்செயன்
கந்தையா உதயகுமார் – கூழாமுறிப்பு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு

2ம் லெப்டினன்ட் சுதன் (யூதன்)
முருகேசமூர்த்தி உதயகுமார் – விநாயகபுரம், அம்பாறை

2ம் லெப்டினன்ட் மூர்த்தி
சுந்தரமூர்த்தி சுபாகரன் – வல்வெட்டித்துறை,யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் கங்கையச்செல்வன்
சபாரத்தினம் வர்ணகுலராஜன் – நொச்சிகுளம், ஓமந்தை, வவுனியா

2ம் லெப்டினன்ட் காஞ்சனி
சுப்பிரமணியம் வசந்தி – சித்தாண்டி, மட்டக்களப்பு

2ம் லெப்டினன்ட் சந்திரமதி
ஆறுமுகம் சிவமணி – நயினாமடு, புளியங்குளம், வவுனியா

2ம் லெப்டினன்ட் ஈழநிலா
துரைராசா ஜெமிந்தலா – நெடுங்கேணி, முல்லைத்தீவு

2ம் லெப்டினன்ட் நிகிந்தா
கந்தையா சிவமலர் – கொம்மாதுறை, செங்கலடி, மட்டக்களப்பு

2ம் லெப்டினன்ட் புஸ்பலதா
செல்லத்துரை பாமினி – ஆவரங்கால், புத்தூர், யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் உசாந்தினி (வாசுகி)
செல்லத்துரை ஜெயராணி – சண்டிலிப்பாய் வடக்கு, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் சந்திரிக்கா (முகுந்தா)
நாகலிங்கம் ரவிச்சந்திரிக்கா – ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் நிவேத்திரா
தவராசா ரூபா – பருத்துத்துறை, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் மோகனா
நல்லையா சுரேந்தினி – பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் வைதேகி
பரசுராமன் விமலாதேவி – கனகராயன்குளம், வவுனியா

2ம் லெப்டினன்ட் சுதர்மினா
சிவலிங்கம் கவிதா (தங்கா) – அளவெட்டி, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் குட்டியா
பொன்னையா பானுமதி – கரணவாய் கிழக்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் சியாமளா
பரமநாதன் பேரின்பநாயகி – வட்டக்கச்சி, கிளிநொச்சி

2ம் லெப்டினன்ட் அல்லி
நாககமுத்து கண்மணி – காரைநகர், யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் பூங்குழலி
மகாலிங்கம் தர்சினி - திருகோணமலை

2ம் லெப்டினன்ட் தேன்மொழி
குமாரசாமி மல்லிகாதேவி - கொக்குத்தொடுவாய், மணலாறு

2ம் லெப்டினன்ட் கலைமகள்
தம்பு சந்திரா - கச்சாய் வீதி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் மான்விழி
மயில்வாகனம்பிள்ளை மங்கையற்கரசி - உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் இனியவள்
சின்னையா இராசலட்சுமி - நானாட்டான், மன்னார்

2ம் லெப்டினன்ட் வான்மதி
கந்தையா அருள்ராணி - வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் பிருந்தா
இரத்தினம் தனமகள் - அச்சுவேலி, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் தட்சாயினி
மகாலிங்கம் செல்வராணி - கோண்டாவில் வடக்கு, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் கனகா
இரத்தினசிங்கம் தவரஜனி - மயிலிட்டி, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் மல்லிகா
முத்துக்கிருஸ்ணன் வாசுகி - வெல்லாவத்தை, புலோலி, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் ரேகா (ஜெகா)
துரைச்சாமி அருந்தவமலர் - வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் தாயகி
நாகமுத்து ஜெயராணி - இணுவில், யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் அகல்யா
இராசலிங்கம் மதிவதனி - புங்குடுதீவு, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் பூங்கிளி
கணபதிப்பிள்ளை வசந்தராணி - காஞ்சிபுரம், மாதகல், யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் உதயலட்சுமி
பொன்னுச்சாமி அற்புதராணி - கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி

2ம் லெப்டினன்ட் புரட்சி
இராசேந்திரம் சாந்தினி - புனிதநகர், கற்கோவளம், பருத்தித்துறை, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் சந்திரகலா
பரஞ்சோதி அமுதினி - வேலணை, யாழ்ப்பாணம்

2ம் லெப்டினன்ட் ராதை
சிறிகந்தசாமி சிறிரதி - வத்திராயன் வடக்கு, தாளையடி, யாழ்ப்பாணம்

வீரவேங்கை மன்மதன்
சின்னையா சிவராசா - வட்டக்கச்சி, கிளிநொச்சி

வீரவேங்கை தமிழ்த்தென்றல்
தங்கராசா சிவகுமார் - மானிப்பாய், யாழ்ப்பாணம்

வீரவேங்கை பார்வதி
நாகூரான் ராணி - நாவாந்துறை, யாழ்ப்பாணம்

வீரவேங்கை அருள்நங்கை
கனகரட்னம் சிவதர்சினி - புங்குடுதீவு, யாழ்ப்பாணம்

வீரவேங்கை பானு
தனபாலசிங்கம் கௌரி - பூம்புகார், அரியாலை கிழக்கு, யாழ்ப்பாணம்

வீரவேங்கை செல்வி
இராமச்சந்திரன் இராஜேஸ்வரி - தம்பசிட்டி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்

வீரவேங்கை மதுமிதா
புவனேந்திரன் ஜெயசுதா - வெற்றிலைக்கேணி, யாழ்ப்பாணம்

வீரவேங்கை அறிவுச்செல்வன்
துரைசிங்கம் சிவரூபன் - இராமநாதபுரம், வட்டக்கச்சி, கிளிநொச்சி

வீரவேங்கை பதுமன்
தருமரத்தினம் அகிலன் - இராசேந்திரகுளம், வவுனியா

வீரவேங்கை கார்த்திகன்
முத்துச்சாமி சிவகுருநாதன் - செட்டிகுளம், வவுனியா

வீரவேங்கை மன்னவன்
குருசாமி சந்திரசேகர் - விசுவமடு, கிளிநொச்சி

வீரவேங்கை பரமலிங்கம்
கோபலசிங்கம் பிரபாகரன் - கொட்டடி, யாழ்ப்பாணம்

வீரவேங்கை ஆறுமுகம்
கணேசலிங்கம் சிவகுருநாதன் - பம்பைமடு, பெரியகட்டு,வவுனியா

வீரவேங்கை உதயானந்தன்
மகேந்திரன் சசிக்குமார் - புளியம்பொக்கணை, கிளிநொச்சி

வீரவேங்கை வெற்றிவேல்
அழகு அழகேஸ்வரன் - முரசுமோட்டை, பரந்தன், கிளிநொச்சி

வீரவேங்கை மருதநாயகன்
பாலசிங்கம் பாலசந்திரன் - தருமபுரம், கிளிநொச்சி

வீரவேங்கை பொன்னுத்துரை
வீரசிங்கம் ரமேஸ்பாபு - ஜெயந்திநகர், கிளிநொச்சி

வீரவேங்கை கலைச்செல்வன்
இராசையா செல்வக்குமார் - விசுவமடு, கிளிநொச்சி

வீரவேங்கை குறளமுதன்
பொன்னம்பலம் விஜிதரன் - கண்டாவளை, பரந்தன், கிளிநொச்சி

வீரவேங்கை திருமாறன்
ஞானக்கணேஸ் ஞானசீலன் - குமுழமுனை, முல்லைத்தீவு

வீரவேங்கை பாரதி
ஆறுமுகம் தங்கமலர் - மடு, மன்னார்

வீரவேங்கை மதிவதனி
சுக்ரீவன் கிருஸ்ணகுமாரி - இரணைஇலுப்பைக்குளம், வவுனியா

வீரவேங்கை அறச்செல்வி
சவிரியான் லோறன்சியா - 9ம் கட்டை, உயிலங்குளம், மன்னார்

வீரவேங்கை செம்பிறை
அழகன் சாந்தி - பதுளை, சிறீலங்கா

வீரவேங்கை அல்லிராணி
நாகமணி பரமேஸ்வரி - ஓமந்தை, வவுனியா

வீரவேங்கை யாழிசை
இராசமாணிக்கம் சரஸ்வதி - ஜெயந்திநகர், கிளிநொச்சி

வீரவேங்கை வானதி
விஜயரத்தினம் வினோதினி - நெடுந்தீவு, யாழ்ப்பாணம்

வீரவேங்கை சசி
யோசப் திலகவதி - மாத்தளை, சிறீலங்கா

வீரவேங்கை புனிதா
செல்வரத்தினம் மேரிறீற்றா - போயிட்டி, அச்செழு, நீர்வேலி, யாழ்ப்பாணம்

வீரவேங்கை நித்தியா
இராசதுரை சிவகௌரி - சுண்ணாகம், யாழ்ப்பாணம்

வீரவேங்கை சுகணா
பாலசுந்தரம் றெஜீனா - மானிப்பாய், யாழ்ப்பாணம்

வீரவேங்கை தமிழ்க்கவி
பாலசுப்பிரமணியம் திருச்செல்வி - யாழ்ப்பாணம்

வீரவேங்கை அன்பு
கந்தசாமி ஜெயந்தி - கச்சாய், கொடிகாமம், யாழ்ப்பாணம்

வீரவேங்கை மாலினி
மாணிக்கம் பிரபாலினி - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்

வீரவேங்கை பாமா
விஜயகுமார் கவிதா - நீர்வேலி தெற்கு, நீர்வேலி, யாழ்ப்பாணம்

வீரவேங்கை சாந்தி
ஜோசப் யாழினி - ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம்

வீரவேங்கை கலைச்செல்வி
இராமு புவனேஸ்வரி - கரணவாய், கரவெட்டி தெற்கு, யாழ்ப்பாணம்

வீரவேங்கை இன்பநிலா
கணபதிப்பிள்ளை காந்திமதி - சேரன்பற்று, பளை, யாழ்ப்பாணம்

வீரவேங்கை வெண்மதி
கணபதிப்பிள்ளை சுதாமதி - வண்ணாங்கேணி, பளை, யாழ்ப்பாணம்

வீரவேங்கை காயத்திரி
செல்லன் மகாராணி - இளவாலை, யாழ்ப்பாணம்

வீரவேங்கை குமதினி
அசோகன் ஜெசிக்காமாக்கிரெட் - வியாங்கொட, சிறீலங்கா

வீரவேங்கை சூரியா
செல்வம் சுகிர்தா - கிளிநொச்சி

வீரவேங்கை மாதங்கி
கந்தசாமி ஜெயந்தசிறி - காரைநகர், யாழ்ப்பாணம்

வீரவேங்கை புலிக்குட்டி
வல்லிபுரம் சயந்தினி - உரும்பிராய் கிழக்கு, யாழ்ப்பாணம்

வீரவேங்கை உமையாள்
சிவலிங்கம் மகேஸ்வரி - கிரான், மட்டக்களப்பு

வீரவேங்கை மதி
முத்துலிங்கம் கமலாஜினி - வெல்லாவெளி, மட்டக்களப்பு

வீரவேங்கை குயிலினி
அரியகுட்டி அருள்மலர் - மானிப்பாய் மேற்கு, யாழ்ப்பாணம்

வீரவேங்கை கவியரசி
பேதுருப்பிள்ளை மேரிகொன்சலாரோஸ் - மணற்காடு, குடந்தனை, யாழ்ப்பாணம்

வீரவேங்கை புத்தொளி
இராசதுரை ஜெயராணி - மடுக்கோயில், மன்னார்

வீரவேங்கை பரணி
தர்மராஜா சிவனந்தினி - மூளாய், யாழ்ப்பாணம்

வீரவேங்கை தங்கலட்சுமி
ஜேம்ஸ் ஜெனார்த்தனி - கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

வீரவேங்கை மணிமேகலை
பாலசுப்பிரமணியம் மஞ்சுளா - புலோலி தெற்கு, யாழ்ப்பாணம்

வீரவேங்கை சிவனொளி
பாலநாயகம் சுஜாத்தா - கொக்குவில் மேற்கு, யாழ்ப்பாணம்

வீரவேங்கை கிருஸ்ணகுமாரி
கணேஸ் சத்தியபவானி - புங்குடுதீவு, யாழ்ப்பாணம்

வீரவேங்கை சிவமலர்
கந்தசாமி அன்னக்கிளி - நவக்கிரி யாழ்ப்பாணம்

வீரவேங்கை வெற்றியரசி
மாணிக்கம் புஸ்பலீலா - அல்வாய் தெற்கு, யாழ்ப்பாணம்

வீரவேங்கை அருளினி
சிவராசா பூமகள் - கைதடி, நாவற்குழி, யாழ்ப்பாணம்

வீரவேங்கை யோகா
கிருஸ்ணன் சரோஜாதேவி - குடமியன், வரணி, யாழ்ப்பாணம்

வீரவேங்கை கோவழகி
சின்னையா நந்தினி - கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி

வீரவேங்கை குமதினி
செல்வராஜா செல்வரஞ்சினி - திருவையாறு, கிளிநொச்சி

வீரவேங்கை அருளினி
பொன்னன் அன்னலட்சுமி - கண்டி, சிறீலங்கா

வீரவேங்கை நட்சத்திரா
குமாரசிங்கம் சுபாஜினி - செட்டிகுளம், வவுனியா

வீரவேங்கை சரணன்
செபமாலை சூசைதாசன் - காத்தான்குளம், நானாட்டான், மன்னார்

வீரவேங்கை மணியம்மை
அன்ரன்மனோகரசீலன் புனிதசீலி - மணற்காடு, குடத்தனை, யாழ்ப்பாணம்

வீரவேங்கை மதிசுதன்
இராமசாமி மோகராஜன் - பூவரசங்குளம், வவுனியா

வீரவேங்கை பானுசுதன்
செல்லத்துரை தருமசீலன் - முரசுமோட்டை, பரந்தன், கிளிநொச்சி

லெப்டினன்ட் வசந்தா (எழில்)
துரைராஜா ரதிகலா - அலம்பில், முல்லைத்தீவு

வீரவேங்கை தமிழ்ச்செல்வி
நமசிவாயகம் தவநிதி - ஆனைவிழுந்தான்குளம், கிளிநொச்சி

வீரவேங்கை புனிதா
கந்தசாமி கமலாதேவி - சாவகச்சேரி, யாழ்ப்பாணம்

தாயக விடுதலை வேண்டி இதே நாளில் தங்கள் உயிரை அர்பணித்து மண்ணை, மக்களைக் காத்த வீரமறவர்களுக்கு எமது வீரவணக்கங்கள்...! "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"








# வல்வைப் படுகொலை 13 மே 1997

யாழ்மாவட்டத்தில் பருத்தித்துறைப் பகுதியில் வல்வைக்கிராமம் உள்ளது. 10.05.1985 அன்று சிறீலங்கா இராணுவம் வல்வைக் கிராமத்தைச் சுற்றி வளைத்தது 24 இளம் ஆண்களை கைது செய்தது. அங்குள்ள ஒரு பொதுமண்டபத்தில் இவர்கள் அனைவரும் அடைக்கப்பட்டனர். பின்னர் இம்மண டபத்தின் மேல் குண்டு வீசப்பட்டு அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த 24 ஆண்களும் கொல்லப்பட்டனர். அதே சமயத்தில் அவ்வூர் கோவில் கேணியருகே மேலும் 12 பொது மக்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப் பட்டனர். இதைவிட மேலும் 34 பொதுமக்கள் அன்று கொல்லப்பட்டனர். அவ்வூரில் அன் றைய தினம் 70 பொதுமக்கள் சிறீலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# முள்ளிவாய்க்கால் படுகொலை – 13 மே 1997

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறை பற்றுக் பிரதேச செயலர் பிரிவில் முல்லைத்தீவு நகரத்திலிருந்து பரந்தன் வீதியில் சுமார் ஐந்து கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கிராமமே முள்ளிவாய்க்கால் மேற்குப் பிரதேசமாகும். இக்கிராமத்தின் பொருளாதாரம் மீன்பிடி, விவசாயம் என்பனவற்றிலேயே தங்கியுள்ளது.

1997ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்கால் கிராமத்தில் யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்குப் போன்ற பல்வேறு பகுதிகளிலுமிருந்து போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து வந்த மீனவக் குடும்பங்கள் இங்குள்ள கடற்கரையோரங்களில் செறிவாகக் குடியேறி கடற்றொழிலில் ஈடுபட்டுவந்தார்கள்.

13.05.1997ஆம் ஆண்டு முற்பகல் விமானப் படையின் "கிபிஉ" விமானங்கள் இப்பகுதியில் கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஒன்பது மீனவர்கள் உயிரிழந்ததுடன், வீதி புனரமைப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மூவர் உட்பட பத்துப் பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. ஆறுமுகம் சிவாஸ்மகேந்திரம் - கடற்றொழில் 38
02. நாகராசா தவரத்தினராசா - விவசாயம் 24
03. சின்னையா ஆறுமுகம் - கடற்றொழில் 68
04. பொன்னம்பலம் பாக்கியராசா - கடற்றொழில் 60
05. சுப்பிரமணியம் அஜந்தன் - கடற்றொழில் 15
06. சிவகுரு மகேந்திரன் - கடற்றொழில் 39
07. சிவகரன் துதிகரன் - கடற்றொழில் 18
08. மல்லி - 42
09. இராமசிங்கம் இராசையா - கடற்றொழில் 73

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. ரவீந்திரன் 28
02. செ.கோணேஸ்வரன் 33
03. ஆ.சுதன் 20
04. கதிர்காமு சிங்கம் 25
05. கணபதிப்பிள்ளை நாகலிங்கம் 48
06. செல்வநாதன் சிறீபத்மநாதன் 31
07. க.கணேசலிங்கம் -
08. ஜெ.ரவிக்குமாா் 15

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# உதயன் பணிமனை படுகொலை – 02 மே 2006






ஊடகங்கள் ஒரு நாட்டிற்கும் சமூகத்திற்கும் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றன. இவ் ஊடகங்கள் சுதந்திரமான முறையில் செயற்படும் போதே அவற்றால் சிறப்பாகவும் நடு நிலைமைத் தன்மை யாகவும் செயற்படமுடியும். இலங்கையின் ஊடகங்களின் சுதந்திரம் பல வருடங்களாகப் பறிக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் யாழ்ப்பாணம் உதயன் பத்திரிகை நிறுவனம் மீதான தாக்குதலும் ஊடக சுதந்திரத்திற்கு சாவு மணியடிக்கும் சம்பவமாகவே அமைகின்றது.

02-05-2006 அன்று மாலை உதயன் பணிமனை தனது வழமையான பணிகளுடன் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அடுத்த நாள் பத்திரிகைக்கான தயார்ப் படுத்தலில் பணியாளர்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இவ்வேளையில் இரவு 7.30 மணியளவில் உதயன் பணி மனையினுள் புகுந்த சிறீலங்கா இராணு வத்தினரும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் அங்கு பணிபுரிந்து கொண் டிருந்த பணியாளர்கள் மீது கண் மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் இரண்டு பணியாளர் உயிரிழந்தனர் மூன்று பேர் படுகாயமடைந்தனர். மேலும் அங்கு பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன. இத்தாக்குதலானது தமிழ் ஊடகத்துறைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைவ துடன் மிகவும் காட்டு மிராண்டித்தனமானது என இலங்கை பத்திரிகையாளர் சங்கம், இலங்கை ஊடக வியலாளர் ஒன்றியம், ஊடகத்துறை அமைப் புக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் தமது கண்டனங்களை வெளியிட்டனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பஸ்ரியன் ஜோர்ச் சகாயதாஸ் (சுரேஸ்), 30
02. இராசரத்தினம் ரஞ்சித்குமார், 28

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)





# உதயன் பணிமனை படுகொலை 02 மே 2006











# நெல்லியடிப் படுகொலை – 04 மே 2006

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த இளைஞர்கள் மீது இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஏழு இளைஞுஉகள் உயிரிழந்தனர்.

இச்சம்பவமானது 04-05-2006 அன்று பிற்பகல் 2.15 மணியளவில் யாழ் வடமராட்சி நெல்லியடிச்சந்திக்கு 300 மீற்றர் தொலைவில் நவின்டிலில் அமைந்துள்ள சிறீலங்கா இராணுவத்தினரின் புலனாய்வுத்துறை முகாமிற்கு அண்மையாக இடம்பெற்றது. இவர்கள் சகநண்பர் ஒருவரின் விருந்து உபசாரத்தில் கலந்து கொள்வதற்காக முச்சக்கரவண்டிகளில் சென்றுகொண்டிருக்கும் போது இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்திற்கு சற்று முன்னதாக இப்பகுதி இராணுவமுகாம் மீது கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதில் மூன்று இராணுவப் புலனாய்வாளர்கள் காயமடைந்தனர். அதன் பின்னரே இப்படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. செல்வராசா சுமன், 22
02. வேலுப்பிள்ளை நிமலன், 21
03. நாகரத்தினம் நகுலேஸ்வரன், 18
04. பாலச்சந்திரன் கிரிசாந்தன், 18
05. தாமோதரம்பிள்ளை சர்மிலன், 17
06. நவரட்ணராஜா நாசண்ணா, 19
07. சுப்பிரமணியம் சுபாஸ், 19

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மந்துவில் படுகொலை – 06 மே 2006

யாழ். மந்துவில் கோலத்தம்மன் ஆலய கும்பாபிஷேக முன் ஏற்பாடுகளைச் செய்வதற்காக 06.05.2006 அன்று இரவு எட்டு இளைஞர்கள் ஆலயத்தில் தங்கியிருந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது இரவு 7.00 மணியளவில் அப்பகுதிக்கு வந்த இலங்கை இராணுவத்தினர் அங்கிருந்தவர்களை விசாரித்துவிட்டுச்சென்றனர். பின்னர் இரவு 11.00 மணியளவில் மீண்டும் வேறு ஒரு இராணுவ அணி அப்பகுதிக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து நள்ளிரவு 12.00 மணியளவில் ஜீப் வாகனம் ஒன்று அங்கே வந்ததைத் தொடர்ந்து பின்னிரவு 1.00 மணியளவில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன. அதனைத் தொடர்ந்து அவலக் குரல்கள் கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இராணுவ அச்சம் காரணமாக வீடுகளுக்குள் முடங்கிக்கிடந்த மக்கள் காலை வேளையில் தமது உறவுகளைத் தேட ஆரம்பித்தனர். அப்போது ஆலயத்தின் தேர்முட்டி சுவர்ப்பகுதியிலும் வீதி ஓரங்களிலும் மண்ணால் மறைக்கப்பட்ட இரத்தத் தடயங்கள் காணப்பட்டன.

பின்னர் இவர்களது உயிரற்ற உடல்கள் வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடையிலுள்ள கப்பூது கண்டல் காட்டுப்பகுதியில் இருப்பதாகக் கூறப்பட்ட போதும் பின்னர் அப்பகுதியில் சடலங்கள் எதுவும் இல்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தகவல் தெரிவித்தனர். இப்பகுதிக்கு மக்கள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. காணமற்போன எட்டுப் பேரும் இலங்கை அரசபடைகளினாலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என அப்பகுதிமக்கள் கூறுகின்றனர். இது தொடஉபாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, சாவகச்சேரி பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. கந்தசாமி பரிமேலழகன், 22
02. இரத்தினம் தயாளரூபன், 21
03. பொன்னம்பலம் பார்த்தீபன், 22
04. வைகுந்தவாசன் வைகுந்தகுமார், 22
05. இராமச்சந்திரன் இராசகுமார், 24
06. செல்வரட்ணம் சிவானந்தன், 24
07. மார்க்கண்டு புஸ்பகாந்தன், 26
08. இராசநாயகம்பிள்ளை சிவானந்தமூர்த்தி, 35

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# அல்லைப்பிட்டி படுகொலை – 13 மே 2006








இலங்கையின் வடபுலத்தில் உள்ள யாழ் மாவட்டத்தின் தீவகப்பகுதியானது யாழ்நகரில் இருந்து தென்மேற்காக 15 கிலோ மீற்றர் துராத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசம் இலங்கை கடற்படையினரது பூரண கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் உள்ளது. 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் நாள் சிறீ லங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலி களுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் மக்கள் அடையாள அட்டை, உடற் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின் னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டு வந் தனர். இப்பிரதேசத்தில் கடற்படையினருடன் இணைந்து ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் செயற் பட்டு வருகின்றனர். இலங்கையின் புதிய சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட பின்னர் தமிழ்மக்கள் மீதான வன் முறைச் சம்பவங்கள் தீவிரப்படுத்தப்பட்டன. அதன் ஒரு அங்கமாக அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய இடங்களில் 13-05-2006அன்று இடம்பெற்ற படு கொலைச்சம்பவமானது அமைகின்றது.

யாழ் தீவகம் அல்லைப்பிட்டியில் 13-05-2006 அன்று இரவு அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் தேவாலயத்திற்கு அண்மையிலுள்ள செல்லத் துரை அமலதாஸ் என்பவரது வீட்டில், அயலி லுள்ள மக்களும் இராணுவ அச்சம் காரண மாக இரவில் தங்குவது வழக்கமாக இருந்தது. அன்றும் அப்படியே அங்கு கூடியிருந்தனர். அவ்வேளை அப்பகுதிக்கு வாகனங்களில் வந்த கடற்படையினர் அப்பகுதி வீடுகளிற்குள் சென்று மின் விளக்குகளை அணைத்து விடுமாறு ஒட்டுக்குழுக்கள் மூலம் மிரட்டினர். பின்னர் அமலதாஸ் என்பவரது வீட்டிற்குச் சென்று அங்கு உறங்கிக் கொண்டிருந்த பொது மக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் அவ்வீட்டில் தங்கியிருந்த 11 பேரில் 08பேர் உயிரிழந்தனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 04 பேர் உள்ளடங்குவர். இதில் தமது பெற்றோருடன் உறங்கிக்கொண்டிருந்த் 04 மாதச்சிறுவனும் 04 வயதுச் சிறுவனும் பரிதாபகரமாக உயி ரிழந்தார்கள். காயமடைந்த ஏனையோரை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல அனு மதிக்கப்படாததால் காயமடைந்தவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

இதே வேளை சில கடற்படையினர் புளியங் கூடலிலுள்ள சண்முகலிங்கம் என்பவரது வீட்டுக்குள் புகுந்து அக்குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரைச் சுட்டுக்கொன்றனர். அடுத் தாக வங்களாவடி என்ற இடத்தில் தேனீர்ச் சாலை உரிமையாளரான செந்தூரன் என் பவரது வீட்டிற்குள் புகுந்து செந்தூரன் என் பவரைச் சுட்டுக்கொன்றனர். இவ்வாறாக அன்றிரவு 13 பொதுமக்கள் உயிரிழந்தனர். பல பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டனர். பல கடைகள், பல இலட்சம் பெறுமதியான சொத் துக்கள் அழிக்கப்பட்டன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பாலசாமி கேதீஸ்வரன், 25
02. கேதீஸ்வரன் அனெக்எஸ்தர், 25
03. கேதீஸ்வரன் தனுஷ்காந், 04
04. கேதீஸ்வரன் யதுசன், 04 மாதம்
05. ஆபிரகாம் றொபின்சன், 28
06. செல்லத்துரை அமலதாஸ், 28
07. கணேஸ் நவரட்ணம், 50
08. யோசப் அந்தோனிமுத்து, 64
09. சின்னத்துரை சிவநேசன், 46
10. எம்.சண்முகலிங்கம், 60

# முல்லைத்தீவு பாதுகாப்பு வலையப்படுகொலை 10 மே 2009

முல்லைத்தீவில் 10.05.2009 ஒரே இரவில் 2,000 பொதுமக்கள் படுகொலை செய்யப் பட்டார்கள். சனிக்கிழமை 10 மே 2009 இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை காலை வரை "பாதுகாப்பு வலயத்தில்" சிறீலங்கா இரா ணுவம் கண்மூடித்தனமாக எறிகணை வீச்சு நடத்தியது, எராளமான பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 2,000 க்கும் மேற்பட்ட பொதுமக்களை படுகொலை செய்ததாக வன்னியில் உள்ள மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. தற்காலிக மருத்துவமனையில் இறந்த உடல்கள் எல்லா இடங்களிலும் சிதறிக் கிடந்தன. சர்வதேச அளவில் தடைசெய்யப் பட்ட இராசயன (கிளஸ்டர்) குண்டுகள் மற்றும் மல்ரி ராக்கெட் மற்றும் பீரங்கிகளிலிருந்து சுடப்பட்ட குண்டுகள் போன்ற ஒவ்வொரு வகையான ஆபத்தான ஆயுதங்களாலும் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்பட்ட பகுதி ஒரு கொலைக் களமாக மாற்றப்பட்டு இருந்தது. இறந்த உடல்கள் பதுங்கு குழி களிலும், தார்ச்சாலைக் கூடாரங்களுக் குள்ளும் காணப்பட்டன.





# சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களினாலும் மற்றும் பட்டினியாலும் முள்ளிவாய்க்காலில் பொதுமக்கள் படுகொலை – 01.05.2009

சிறீலங்கா இராணுவம் முள்ளிவாய்க்கால் மீது பீரங்கி, மோட்டார் மற்றும் மல்டி-பேரல் ராக்கெட் லாஞ்சர் (MBRL) துப்பாக்கிச் சூட்டை முடுக்கிவிட்டது, இது முள்ளிவாய்க்கால் கிராமத்தில் வெள்ளிக்கிழமை 09 முதல் பொதுமக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியது. வெள்ளிக்கிழமை காலை 30 மணி. மாலை முழுவதும் பல மணிநேரம் ஷெல் தாக்குதல் தொடர்ந்ததால் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். தற்காலிக மருத்துவமனையின் மருத்துவ ஊழியர்கள் காயங்களால் இறந்தவர்களின் இறப்புகளை மட்டுமே தெரிவிக்க முடிந்தது. 110 காயமடைந்த பொதுமக்கள் மாலை 4:30 மணி வரை அனுமதிக்கப்பட்டனர். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் தாக்குதலுக்கு உள்ளான முள்ளிவாய்க்கால் வைத்தியசாலையில். காயமடைந்தவர்களில் 27 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலினால் பலர் கொல்லப்பட்டனர், அவர்களது உறவினர்களால் புதைக்கப்பட்டனர் அல்லது எரிக்கப்பட்டனர்.

வியாழக்கிழமை சுமார் 200 பொதுமக்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் 39 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

முள்ளிவாய்க்காலுக்கு வடக்கே கடுமையான துப்பாக்கிச் சூடு மற்றும் கடுமையான துப்பாக்கி சூட்டுப் பரிமாற்றம் இடம் பெற்றது பதிவாகியுள்ளது, அங்கு பொதுமக்கள் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படுவதற்குள் கிராமத்தின் நெரிசலான தெற்குப் பகுதிகளை நோக்கி பொதுமக்கள் தப்பி ஓடினர்.

கடந்த 24 மணி நேரத்தில் பொதுமக்கள் இரவும் பகலும் பதுங்கு குழிக்குள் இருக்க வேண்டியிருந்தது. பலர் உறங்கிக் கொண் டிருந்த போது கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், சிறீலங்கா அரசாங்கம் வேண்டுமென்றே மனிதாபிமான பொருட்களை வாரக்கணக்கில் மட்டுப்படுத்தியதால் முல்லை மண்ணில் பட்டினி நிலவியது.



ஏப்ரல் 30 2009 ஆம் திகதி இரவு தூக்கத்தில் தந்தையும் அவரது குழந்தையும் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலில் பலி

















# சிறீலங்கா இராணுவம் நோயாளிகளை குறிவைத்து எறிகணை வீசியதில் 64 பேர் மருத்துவமனையில் படுகொலை – 02.05.2009

சிறீலங்கா இராணுவம் சனிக்கிழமையன்று எஞ்சியிருந்த ஒரே ஒரு தற்காலிக மருத்துவமனையை இரண்டு முறை தாக்கியது, 64 நோயாளிகள் மற்றும் உறவினர்களைக் படுகொலை செய்தது, 87 பேர் காயம் அடைந்தனர். சுமார் 9 மணியளவில் சிறீலங்கா இராணுவத்தினால் எவப்பட்ட இரண்டு பீரங்கி குண்டுகள் முள்ளிவாய்க்காலில் உள்ள மருத்துவமனையை தாக்கப்பட்டது: காலை 09:00 மணிக்கு 23 பேரைக் கொன்று, 34 பேரைக் காயப்படுத்தியது, பின்னர் காலை 10:30 மணி யளவில் பல குண்டுகள் வீசப்பட்டன, 41 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 53 பேர் படு காயப்படுத்தினர். மூன்று நாட்களுக்கு முன்பு மருத்துவமனை வளாகத்தின் துல்லியமான ஆயங் களை வரைபடமாக சிறீலங்கா இராணுவத்திற்கு வழங்கியதை அடுத்து, தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ICRC மற்றும் இலங்கை விமானப்படையின் ஆளில்லா வான்வழி விமானங்கள் (UAV) ஆகியன மருத்துவமனை பகுதியை கண்காணித்து வந்தன. எனினும் பொதுமக்களை நிர்ப்பந்திப்பதற்காகவே இந்த படு கொலை கணக்கிடப்பட்டுள்ளது என மீட்பு பணியாளர் ஒருவர் கூறியது, மகிந்த ராஜபக்சவின் செய்தியுடன் வெள்ளியன்று வீசப் பட்ட துண்டுப் பிரசுரங்களை மேற்கோள் காட்டி பொதுமக்களை சிறீலங்கா இராணுவத்தின் பக்கம் வருமாறு கேட்டுக் கொண் டார்.



இதில் பெண் தொண்டர் மருத்துவர் சம்பவ இடத்திலேயே பலி யானார். மூன்று மருத்துவ ஊழியர்கள் காயம் அடைந்தனர், அவர்களில் ஒருவர் செயலிழந்தார்.

தற்காலிக மருத்துவமனையின் பிரதான OPD காலை 9:00 மணியளவில் மருத்துவமனை வெளிநோயாளிகளால் மிகவும் பரபரப்பாக இருந்தபோது தாக்கப்பட்டது. 400க்கும் மேற்பட்ட காயமடைந்த நோயாளிகள் கட்டிடத்திலும் அதைச் சுற்றியும் தங்க வைக்கப்பட்டனர்.

மருத்துவமனையின் தாக்குதலுக்கு உள்ளான பகுதியை மருத் துவ ஊழியர்களும் தன்னார்வலர்களும் சுத்தம் செய்யும் பணி யில் ஈடுபட்டிருந்தபோது இரண்டாவது தாக்குதல் நடந்தது.

ICRC உடன் ஒருங்கிணைக்கும் மருத்துவ ஊழியர் ஒருவர், கடந்த முறை மருத்துவமனை தாக்கப்பட்டபோது, மூன்று நாட் களுக்கு முன்பு மருத்துவமனையின் ஆயங்களை வரைபட மாக்கி இலங்கை பாதுகாப்பு அமைச்சகத்திற்கு வழங்கியதை உறுதி செய்தார்.
அரசு பொதுமக்களை இடமாற்றம் செய்ய விரும்பும் ஒவ்வொரு முறையும் மருத்துவமனை மீது இலக்கு தாக்குதல்கள் நிகழ் கின்றன, மீட்புப் பணியாளர் மேலும் கூறினார்.









# முள்ளிவாய்க்கால் பகுதியில் சிறீலங்கா படையின் தாக்குதல்களில் 15 குழந்தைகள் உட்பட 45 பொதுமக்கள் படுகொலை - 08.05.2009

சிறீலங்கா இராணுவம் வியாழன் மற்றும் வெள்ளி முழுவதும் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படுவதற்குள் உள்ள முள்ளிவாய்க்காலில் உள்ள பொதுமக்களின் இலக்குகள் மீது கொத்துக் குண்டுகளுடன் கடுமையான ஷெல் தாக்குதல்களை தொடர்ந்தது மேற்கொண்டது.

சிறீலங்கா விமானப்படையின் கண்காணிப்பு விமானம், பொது மக்களை குறிவைக்கப்பட்டு, மக்கள் செறிவான இடங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதலை சிறீலங்கா இராணுவம் வழங்கியதால், பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

வெள்ளிக்கிழமை மட்டும் குறைந்தது 242 பொதுமக்கள் காய மடைந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். காயமடைந்தவர் களில் 15 குழந்தைகள் உட்பட 45 பேர் பலியாகியுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளிக்கிழமை மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்ட பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் முள்ளிவாய்க்கால் கிழக்கில் கூழ் உணவு எடுக்கக் காத்திருந்தபோது காயமடைந் தவர்கள் என அறியப்படுகின்றது.



மட்டுப்படுத்தப்பட்ட மனிதாபிமான பொருட்களைப் பெறுவதற் காக வரிசையில் நின்ற மக்கள் மீது வியாழக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டது. ஐசிஆர்சி வாகனங்களும் தாக்கப்பட்டன. இருப் பினும், வியாழக்கிழமை 400 காயமடைந்தவர்களை ICRC கொண்டு செல்ல முடிந்தது. ஆனால், வெள்ளிக்கிழமை ICRC கப்பல் கடுமையான ஷெல் தாக்குதல் தொடர்ந்ததால் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களை கொண்டு செல்ல ஐசிஆர்சியால் முடிக்க முடியவில்லை.














# முல்லைத்தீவில் இருந்து ICRC கப்பல் புறப்பட்டபோது சிறீலங்கா இராணுவத்தினர் பீரங்கித் தாக்குதல் 'பாதுகாப்பு வலயத்தின்' மீது மேற்கொண்ட தாக்குதலின் போது பெரும் பொதுமக்கள் உயிரிழப்பு. 09.05.2009

சிறீலங்கா இராணுவம் சனிக்கிழமை காலை 7:00 மணியளவில் பாதுகாப்பு வலயத்தின் மீது கடுமையான எறிகணைத் தாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளது. ஒரு மணி நேரத்திற்குள், 50 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்த நிலையில் முள்ளிவாய்க்காலில் உள்ள ஒரு சிறுவர் பாடசாலையில் இயங்கும் தற்காலிக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மருத்துவமனை வட்டாரத் தகவல் சனிக்கிழமை இரவு தெரிவிக்கப்பட்டது. 120,000 முதல் 165,000 வரையிலான பொதுமக்கள் நெரிசலுக்கு மத்தியில் போதிய மனிதாபிமான பொருட்கள் இல்லாமல் பட்டினி கிடக்கும் 8 சதுர கிலோமீட்டர் பகுதியில் சிறீலங்கா இராணுவம் ஆனது பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்களை சரமாரிகளை முடுக்கிவிட்டுள்ளது. சர்வதேச சமூகத்திற்கு சிறீலங்கா உறுதியளித்த போதிலும், கனரக ஆயுதங்கள் இன்னும் பாதுகாப்பு வலயத்தை நோக்கி இலக்கு வைக்கப்பட்டது.

ICRC கப்பல் ஊடாக 30MT பொருட்கள் மட்டுமே சனிக்கிழமை வன்னியை அடைந்தது . தாக்குதல்கள் காரணமாக பாதுகாப்பு வலயத்தின் கரையை அடையத்தவறிய ICRC கப்பல், பின்பு பாதுகாப்பு வலயத்தை அடைந்து 450 காயமடைந்தவர்களையும் அவர்களது பாதுகாவலர்களையும் புல்மோட்டைக்கு கொண்டு செல்ல முடிந்ததும்.

சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலால் பெருமளவு பொதுமக்கள் உயிரிழப்புகள் ஏற்பட்டது, இறந்தவர்கள் அவர்கள் கொல்லப்படும் இடத்தில் புதைக்கப்படுகிறார்கள் அல்லது எரிக்கப்படுகிறார்கள்.

மருத்துவமனையில் உடனடி முதலுதவி வழங்க முடியவில்லை, மேலும் கடுமையான மருந்துப் பற்றாக்குறையால் பல தீவிர நோய்வாய்ப்பட்ட மற்றும் காயமடைந்த பொதுமக்களைக் காப்பாற்ற மருத்துவர்களால் முடியவில்லை.


















# முள்ளிவாய்க்கால் பகுதியில் 120,000 தொடக்கம் 165,000 தமிழ் மக்கள் மீது உணவுத் தடை - 09.05.2009













# முள்ளிவாய்க்கால் பகுதியில் ஒரே இரவில் 2,000 பொதுமக்கள் படுகொலை – 10.05.2009

சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை காலை வரை "பாதுகாப்பு வலயம்" மீது சிறீலங்கா இராணுவம் நடத்திய கண்மூடித்தனமான சரமாரியான ஷெல் தாக்குதல்களில் ஏராளமான பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 2,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாக வன்னியில் உள்ள மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்காலிக மருத்துவமனை. இறந்த உடல்கள் எல்லா இடங்களிலும் சிதறிக்கிடக் கிடந்தனர்.

மேலும் 814 காயமடைந்தவர்கள் காலை 9:25 மணி வரை தற்காலிக மருத்துவமனைக்குச் சென்றடைந்தனர் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட கொத்து குண்டுகள் மற்றும் மல்டி பீப்பாய் ராக்கெட் லாஞ்சர்கள் மற்றும் பீரங்கிகளில் இருந்து வீசப்படும் குண்டுகள் போன்ற அனைத்து வகையான கொடிய ஆயுதங்களும் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படுவதை கொலைக்களமாக மாற்ற பயன்படுத்தப்பட்டன.



முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட மீட்புப் பணியாளர்கள் கொத்துக் குண்டுகள், பல்குழல் ரொக்கட் ஏவுகணைகள் மற்றும் பீரங்கிகளைப் பயன்படுத்தி சிறீலங்கா இராணுவத்தால் சனிக்கிழமை இரவு மற்றும் ஞாயிற்றுக கிழமை காலை பாரிய அளவில் படுகொலை செய்யப்பட்ட பின்னர் 1200 க்கும் மேற்பட்ட சடலங்களை எண்ணியுள்ளனர் என்று வன்னி வட்டாரங்கள் தெரிவித்தன. இன்னும் கூடுதலான உடல்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கலாம் என்றும், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை உயரக்கூடும் என்றும் தொழிலாளர்கள் அஞ்சுகின்றனர். பல நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளதாகவும், முள்ளிவாய்க்காலில் உள்ள தற்காலிக மருத்துவமனையில் மருந்துப் பற்றாக்குறை இன்னும் பல உயிரிழப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர். இதேவேளை, முள்ளிவாய்க்கால் வைத்தியசாலை ஊழியர்கள், பிற்பகல் 3.00 மணி வரை தெரிவித்துள்ளனர். மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட உடல்களின் எண்ணிக்கை 378, காயமடைந்தவர்கள் மொத்தம் 1122. இறந்தவர்களில் 106 பேர், காயமடைந்தவர்களில் 251 பேர் குழந்தைகள் என்றும் ஊழியர்கள் தெரிவித்தனர்.




கிரேசியன் தர்மராசா என்ற அர்ப்பணிப்புள்ள தாதியர் உத்தியோகத்தரின் ஒட்டுமொத்த குடும்பமும் ஷெல் தாக்குதலில் அழிந்துவிட்டது.

பதுங்கு குழிகளிலும் தார்ப்பாய் கூடாரங்களுக்குள்ளும் இறந்த உடல்கள் காணப்படுகின்றன.

கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் சரியான எண்ணிக்கை இன்னும் கண்டறியப்படவில்லை.

67 குழந்தைகள் உட்பட 257 உடல்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

காயமடைந்தவர்களில் 112 பேர் குழந்தைகள்.



இறுதியாக முள்ளிவாய்க்காலில் உள்ள கனிஷ்ட பாடசாலையில் இயங்கி வரும் தற்காலிக வைத்தியசாலையானது நிலைமையை சமாளிக்க வார்த்தைகளால் கூறமுடியாதவாறு போராடி வந்தாக மருத்துவ வட்டாரங்கள் இருந்த தகவல்களில் தெரிய வந்தது.

"சர்வதேச சமூகமும் ஐ.நாவும் ஒரு அரசாங்கத்திற்கு கிட்டத்தட்ட பகிரங்கமான ஒப்புதல் அளித்ததன் மூலம் ஒரே நாளில் இவ்வளவு பாரிய பொது மக்களை அரசியல் ரீதியாகப் பரிசோதித்தது வரலாற்றில் இதுவே முதல் முறை" என்று கொழும்பில் உள்ள மனித உரிமை நிபுணர் ஒருவர் செய்தியைக் கேட்டதும் விவரித்தார்.

ஆட்சி மாற்றத்திற்கு முன்னர் போரை முடிக்க இந்தியா கொழும்பை தூண்டியதன் விளைவாகவே இந்த பாரிய படுகொலைகள் நடந்துள்ளதாக நம்பப்படுகிறது, கொழும்பில் உள்ள அரசியல் வட்டாரங்கள் மேலும் கூறுகையில், "பயங்கரவாதத்திற்கு எதிரான போர்" "பொதுமக்கள் மீதான போர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஒபாமா நிர்வாகத்தின் காலம்.

ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வரை தணிந்த குண்டுவெடிப்பு நண்பகல் 12:00 க்குப் பிறகு அதிகரித்தது, சிறீலங்கா விமானப் படை போர் விமானங்கள் 12:45 மணிக்கு இரண்டு குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. ஞாயிற்றுக்கிழமை, பாதுகாப்பு மண்டலத்திற்குள் இருந்து வட்டாரங்கள் தெரிவித்தன.

இறந்தவர்களின் எண்ணிக்கை தொடர்வதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கை அரசால் இதுவரை இல்லாத அளவுக்கு மோசமான மனிதப் படுகொலையில் கொல்லப்பட்டவர்களின் உண்மையான எண்ணிக்கை சில நாட்களுக்குத் தெரியவில்லை.

# முல்லைத்தீவு
# பாதுகாப்பு வலையப் படுகொலை
# 10 மே 2009

























# முள்ளிவாய்க்கால் மற்றும் வட்டுவாகல் பகுதியில் சிறீலங்கா படையினரின் தாக்குதல்களில் 3,200 பொதுமக்கள் படுகொலை – 11.05.2009

1,30,000க்கும் அதிகமான பொதுமக்கள் வசிக்கும் முள்ளிவாய்க்கால் மற்றும் வட்டுவாகல் பகுதிகளில் பாதுகாப்பு வலயம் (யுத்தமில்லாத வலயம்) என்று அழைக்கப்படும் பகுதிகள் மீது அனைத்து விதமான கனரக ஆயுதங்களையும் பயன்படுத்தி இடைவிடாத சரமாரியான ஷெல் தாக்குதல்களை சிறீலங்கா இராணுவம் முடுக்கிவிட்டது.

போதிய பதுங்கு குழிகள் மற்றும் தங்குமிடங்கள் இல்லாமல் தஞ்சம் அடைந்தனர். 7 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் மட்டுப் படுத்தப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட பொருட்கள் காரணமாக மருந்து மற்றும் உணவு பற்றாக்குறைக்கு மத்தியில் பொது மக்கள் உயிரிழப்புகள் அதிகரித்து தொடங்கியது. திங்களன்று தமிழர்கள் புனர்வாழ்வு அமைப்பின் (TRO) கள அலுவலகத் தின் தலைவர் லாரன்ஸ் கிறிஸ்டி, திங்களன்று பொதுமக்களின் இறப்பு எண்ணிக்கை ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் திங்கள் காலை வரை 3,200 க்கும் அதிகமானோர் கொல்லப் பட்டதாகக் கூறினார். இனப்படுகொலையை நிறுத்துவதற்கு பாதுகாப்பதற்கான பொறுப்பை (R2P) உடனடியாக அழைக்கு மாறு அவர் IC க்கு அழைப்பு விடுத்துள்ளார்.

திங்கட்கிழமை அதிகாலையில் பல பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக ஆரம்ப தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறீலங்கா இராணுவத்தின் நடவடிக்கையில் பீரங்கிகள், 50 கலிபர் இயந்திர துப்பாக்கிகள், பீரங்கிகள், மோட்டார் மற்றும் மல்டி-பேரல் ராக்கெட் லாஞ்சர் (MBRL) துப்பாக்கிகளைப் பயன்படுத்தி துப்பாக்கிச் சூடு நடத்தின.

தற்காலிக மருத்துவமனையில் 50% க்கும் அதிகமான ஊழியர்கள் தங்கள் குடிசைகள் மற்றும் குடியிருப்புகள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதால், அவர்கள் பணிக்கு வரவில்லை என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய நாடுகள் சபையும், இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற வல்லரசுகளும் கடந்த 5 மாதங்களில் செயல்படத் தவறிவிட்டன, அந்த நேரத்தில் 10,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 20,000 பேர் காயமடைந்தனர். திரு. கிறிஸ்டி முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து விடுக்கப்பட்ட அவசர முறையீட்டில் கூறினார்.



# சிறீலங்கா அரச படைகளின் தாக்குதலில் முள்ளிவாய்க்கால் தற்காலிக மருத்துவமனையில் 47 பொதுமக்கள் படுகொலை – 12.05.2009



செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் சிறீலங்கா இராணுவம் பீரங்கி குண்டுகளை வீசியதில் குறைந்தது 47 பொதுமக்கள், நோயாளிகள் மற்றும் நிர்வாக அதிகாரி கே.தர்ம குலசிங்கம் கொல்லப்பட்டனர். முள்ளிவாக்காலில் இயங்கி வந்த தற்காலிக மருத்துவமனை மீதான தாக்குதலில் குறைந் தது 55 நோயாளிகள் படுகாயமடைந்தனர். முள்ளிவாய்க்கால் சிறுவர் பள்ளியில். கடந்த 3 நாட்களுக்குள் சுமார் 2,000 காய மடைந்த நோயாளிகள் கப்பலில் ICRC கொண்டு செல்லப் படுவதற்காகக் காத்திருந்தபோது தாக்குதல் நடத்தப்பட்டது. வன்னியில் கடந்த 3 நாட்களில் 2,600க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சிறீலங்காப் படைகளின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

# முள்ளிவாய்க்கால் தற்காலிக மருத்துவமனையில் பொதுமக்கள் படுகொலை - 12.05.2009















# சிறீலங்கா அரச படைகளின் தாக்குதல்களினால் தற்காலிக மருத்துவமனையில் பேரழிவு - 13.05.2009

"மருத்துவமனையைப் பார்த்து, பொதுமக்கள் அழுவதைக் கேட்கும்போது, நீங்கள் பேரழிவை மட்டுமே உணர்கிறீர்கள்" என்று முள்ளிவாய்க்கால் தற்காலிக மருத்துவமனையின் முக்கிய மருத்துவ ஊழியர்கள் புதன்கிழமை ஊடகங்களுக்குத் தெரிவித்தார். பல குழந்தைகள், நோயாளிகள், மருத்துவ ஊழியர்கள், தன்னார்வ மருத்துவர் மற்றும் ஐசிஆர்சி ஊழியர் உட்பட 100 க்கும் மேற்பட்ட பொதுமக்கள், மருத்துவமனை வளாகம் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தை குறிவைத்து சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கி தாக்குதலில் கொல்லப்பட்டனர். தார்பாய் குடிசைகள். 5 நாட்களுக்குள் மூன்றாவது முறையாக குறிவைத்த சிறீலங்கா இராணுவப் படைகளுக்கு மருத்துவ மனைப்பகுதி முக்கிய இலக்காக மாறியுள்ளதால் மருத்துவமனை சில மருத்துவ ஊழியர்களுடன் போராடி வருகிறது. ஜெனீவா உடன்படிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்த சிறீலங்கா இராணுவம் ஆல் கொலைக்களமாக மாற்றப்பட்ட இரண்டு கரையோர முனைகளில் இருந்து சிறீலங்காப் படையினால் துப்பாக்கி சூடுகள் No Fire Zone என்று அழைக்கப்படுபவை முழுவதும் மேற்கொண்டனர். பொதுமக்கள் பட்டினியால் போராடி பதுங்கு குழிகளுக்கு கீழ் வாழ்கின்றனர்.

பலியானவர்களில் பலர் குழந்தைகள் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். புதன்கிழமை படுகாயமடைந்தவர்களில் 40 பேர் குழந்தைகள்.

அவர்களின் தலைக்கு மேல் ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூடுகளுக்கு மத்தியில் தெற்கு நோக்கிச் செல்லும் வாகனங்களால் சாலையில் நெரிசல் ஏற்பட்டதால் மருத்துவமனை வளாகத்திற்கு வெளியே ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து எந்த அறிக்கையும் கிடைக்கவில்லை. கடந்த 24 மணி நேரத்தில் 200 முதல் 500 பேர் கொல்லப்பட்டதாக ஆரம்ப மதிப்பீடுகள் வேறுபடுகின்றன.

பாதுகாப்பு வலயத்திற்குள் 2,000க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் சுமார் 1,000 நோயாளிகள் அவசரமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற இருந்த நிலையில், ஆனால் மருந்துகள் இல்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். படுகாயமடைந்த 250 பேருக்கு புதன்கிழமை சிகிச்சை அளிக்கப்பட்டது. சிறீலங்கா இராணுவம் சரமாரி தாக்குதல்களின் மருத்துவமனையை சீர்குலைத்ததால் சிலருக்கு மட்டுமே சிகிச்சை அளிக்கப்பட்டது, மருத்துவ ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் பதுங்கு குழிகளுக்கு கீழ் தங்குமிடம் தேட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஐ.சி.ஆர்.சி கப்பல் அவர்களை வெளியேற்றும் முன் காயங்களில் பலர் இறக்க வேண்டும். கடும் சண்டையால் காயமடைந்தவர்களை வெளியேற்ற முடியாமல் ஐசிஆர்சி கப்பல் திருகோணமலை துறைமுகத்திற்கு தொடர்ந்து இரண்டாவது நாளாக காலியாகத் திரும்பியது. கப்பலால் சுமார் 25 மெட்ரிக் டன் உணவு மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை இறக்க முடியவில்லை.

100 இறந்த உடல்களில் 30 உடல்கள் அடையாளம் காணப்



பட்டு உறவினர்களால் கைப்பற்றப்பட்டன.

கொல்லப்பட்ட தன்னார்வ மருத்துவர் செந்தில்குமரன் என அடையாளம் காணப்பட்டது. மருத்துவமனை ஊழியர் கோபால கிருஷ்ணனும் உயிரிழந்தார். கொல்லப்பட்ட ICRC ஊழியர் மயூரன் சிவகுருநாதன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரது தாயும் சிறீலங்கா இராணுவத்தினன் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

தற்காலிக மருத்துவமனையின் அருகாமையில் இன்னும் 75 சடலங்கள் அடையாளம் காணப்பட்ட மற்றும் அடையாளம் காணப்படாத நிலையில் உள்ளன. தற்போதுள்ள சூழ்நிலையில் இறந்தவர்களின் உடல்களை எடுக்க முடியாது என உறவினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.















# ‘சேரிகளின் பேராயர்’
# நீதிக்கான உலகக் குரல்
# போப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் மாற்றந்தரும் போப்பாட்சி

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

24.04.2025

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் வாழ்வைக் கொண்டாடுகிறது. உலகெங்கிலும் ஒடுக்கப்பட்டவர்கள், ஏழை எளியவர்கள் பால் தனிக் கவனம் கொண்ட போப் பிரான்சிஸ் பொருளியல் நீதியையும் சமூக நீதியையும் நிலைநாட்டப் பாடுபட்டார். உரிமை குன்றியவர்களுக்கான அவரது ஆழ்ந்த உறுதிப்பாட்டுக்குச் சான்றாக அமைப்புசார் வறுமையிலும் ஏற்றத்தாழ்விலும் கவனம் செலுத்தும்படியான கட்டமைப்பு மாற்றங்களை அவர் ஓயாமல் வலிந்துரைத்து வந்தார்.

ஏழைகளுக்கு உதவுவது பற்றிப் பேசியவர் மட்டுமல்ல, எளிய வாழ்க்கைமுறைக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்தவர், போப்பரசர் சுகபோகங்களை மறுதலித்தவர், “ஏழைகளுக்கான ஏழைத் திருச்சபை” வேண்டுமென்று குரல் கொடுத்தவர். இக கட்டில் இருப்போருக்கு உதவும் பொருட்டு அடிக்கடி உலகெங்கும் எழ்மைப்பட்ட பகுதிகளுக்குச் சென்று “சேரிகளின் பேராயர்” என்று பெயரெடுத்தவர். சிறைக்கைதிகளுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் கால்கழுவி விட்டு சர்ச்சைக்குக் காரணமானார். அதேபோது குருமார்கள் தாங்கள் சேவையாற்றும் சமுதாயங்களை முழுமையாகத் தழுவிக் கொள்ள வேண்டும் – “மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளின் வாசம் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்” – என்றார்.

போப் பிரான்சிஸ் குடிபெயர்ந்தோரின் துயரம் குறித்துத் தனி அக்கறையோடு குரல்கொடுத்தவர். அகதிகளுடன் அவர் கொண்ட உறுதியான தோழமை என்பது தேச மூலமும் ஆவணத் தகுநிலையும் கருதாமல் ஒவ்வொரு மாந்தர்க்கும் உரிய உள்ளார்ந்த கண்ணியத்தில் அவர் கொண்ட நம்பிக்கையிலிருந்து விளைந்ததாகும். 2015ஆம் ஆண்டு குடிபெயர்தல் தொடர்பான பெரும் சவால்களுக்கு ஐரோப்பா முகங்கொடுக்க நேரிட்ட போது அவர் அதனை அறவியல் வினாவாக வனைந்து, உயிருக்கு ஆபத்தான இடர் காண்பவர்கள் ஐரோப்பாவில் பாதுகாப்பான புகலிடம் பெற வேண்டுமென அயராது வலிந்துரைத்தார். போப் பிரான்சிஸ் அவர்கள் குடிவரவுத் தகுநிலையை குற்றத்தன்மையோடு இணைத்துப் பேசுவதைக் கண்டித்ததோடு, பெருந்திரளாக நாடுகடத்துவதை எதிர்த்தும் பேசினார் – இது “திரளான ஆண் பெண்களின் கண்ணியத்தையும், முழுக் குடும்பங்களின் கண்ணியத்தையும் மீறுவதாகும்” என்றார்.

போப் பிரான்சிஸ் அவர்களின் பார்வையில் சூழலியலும் பழைமைக் காப்பும் அறமும் சமயமும் சார்ந்த சிக்கலாகும். 2015ஆம் ஆண்டு முழுக்க முழுக்க சூழலியல் கவலைகளுக்கென்றமைந்த முதல் போப்பாட்சி ஆவணமாகிய “புகழ் உமதே” எனும் புதுவழி காட்டும் சுற்றுமடலை அவர் வெளியிட்டார். இந்த மைல்கல் ஆவணம் சூழலியல் சீர்கேட்டை சமூக அநீதியுடன் தொடர்புபடுத்தியதோடு, சூழலியல் சீர்கேடு எவ்வாறு மிகமிக ஏழ்மைப்பட்ட உலக மக்களைத் தகவுமீறி வாட்டுகிறது என்பதை அறிந்தேற்கும் “ஒருங்கிணைந்த சூழலியல்” தேவை என்பதைக் காட்டிற்று. இந்தச் சுற்றுமடல் கத்தோலிக்க சமூகச் சிந்தனையைப் புரட்சியமாக மாற்றியமைத்து, “நமது பொது இல்லத்தின்” பால் கவனம் என்பதை உயிருக்குயிரான அறக் கடமையாக
நிறுவி, சூழலியல் மேற்பார்வை பற்றிச் சமயங்களிடையே உலகளாவிய உரையாடலுக்கு உத்வேகமளித்தது. போப் பிரான்சிஸ் சொன்னார்: “நமது இல்லம் மென்மேலும் பெரியதோர் ஊத்தைக் குவியல் போல் காட்சியளிக்கத் தொடங்கியுள்ளது. நெருக்கடிக்கு முகங்கொடுக்கத் தேவையான பண்பாடு இன்றளவும் நமக்கில்லை என்பதுதான் சிக்கல். புதிய பாதைகள் வகுக்க வல்ல தலைமை நமக்கில்லை. அழிவுநாள் நெருங்கி விட்டது என்ற ஆருடங்களை இனியும் நக்கல் நையாண்டியாக அலட்சியப்படுத்த முடியாது.”

வரலாற்று வழிப்பட்ட வன்குடியேற்றத்தையும் புதுமக் காலத்துக்குரிய காலனிய ஆதிக்கத்தையும் கடுமையாகக் குறைகூறி வந்த போப் பிரான்சிஸ் 15ஆம் நூற்றாண்டு போப்பாட்சிக் கட்டளையால் முன்வைக்கப்பட்ட “கண்டுபிடிப்புக் கொள்கையை” வத்திக்கான் மறுதலிக்க வழிகாட்டினார். ஒருமுறை கனடா சென்ற போது அந்நாட்டின் தொல்குடி மக்களிடம் மன்னிப்புக் கேட்டார், திருச்சபையின் உறைவிடப் பள்ளித் திட்டத்துக்காக வருத்தம் தெரிவித்தார்.

1994இல் ருவாண்டா இனவழிப்பு நடந்த போது திருச்சபைத்



தலைவர்கள் மௌனம் காத்தமைக்காகவும் வருத்தம் தெரிவித்தார்.

போப் பிரான்சிஸ் உலகத் தலைவராகத் திகழ்ந்தவர். தென்பாதி உலகில் கவனம் குவிப்பதில் குறியாக இருந்தவர். இதற்குக் கல்கத்தாவில் தொண்டு செய்த அன்னை தெரெசாவை அவர் புனிதராக்கிச் சிறப்பித்தமையே சான்று. வத்திக்கான் வல்லுநர் ஜான் எல். அலன் இளையர் சொன்ன கருத்து: “ஒரு காலத்தில் நேட்டோவின் குருபீடமாக இருந்த போப்பாட்சி இப்போது பிரிக்ஸ் அமைப்பின் குருபீடமாகி விட்டது.”

பெரும்புகழ் சுமந்தவரை இழந்து மனித குலம் வருந்தும் போதே, போப் பிரான்சிஸ் விட்டுச் சென்ற மரபு அவர் குடிகொண்ட எண்ணற்ற உயிர்களில் வாழ்கிறது.



விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்




# தமிழின அழிப்பின் நினைவாக மே 18 அன்று ‘முள்ளிவாய்க்கால் கஞ்சி’ உண்போம்!






நீண்ட இனவழிப்புப் போரின் இறுதி கட்டத்தில் எம் தமிழ்மக்கள் குறுகிய நிலப்பரப்பில் முடக்கப்பட்டார்கள். செல்மழையும், துப்பாக்கிச்சூடும், விமானக்குண்டுத் தாக்குதல்களும் கொத்துக்கொத்தாய் கொண்டிருக்க உணவும் மருந்தும் ஆயுதமாக்கப்பட்ட நிலையில் உண்பதற்கு எதுவுமின்றி நாட்கணக்காக பட்டினி கிடந்து பதுங்குகுழி மக்களாக அவலப்பட்டார்கள். இந்நிலையில் அவர்களின் உயிர்காத்தது போராளிகள் வழங்கிய கஞ்சிதான்.

மாத்தளன், வலைஞன் மடம், முள்ளிவாய்க்கால் என அவலப் பயணம் நகர்ந்த போது பணக்காரன் ஏழை, படித்தவன் படிக்காதவன் என்ற எந்த வேறுபாடுமின்றி அவர்களின் உயிர்காத்த இடங்கள் தான் கஞ்சிக் கொட்டில்கள். ஆரம்பத்தில் பச்சையரிசி, சிறதளவு பால், சீனி என்பன சேர்த்து தயாரிக்கப்பட்ட இக்கஞ்சி நாளடைவில் வெறும் அரிசியும் உப்பும் கலந்த உப்புக்கஞ்சியாயிற்று.

இவ்வாறு இலட்சக்கணக்கான மக்களின் உயிர்காத்த இந்த கஞ்சியை “முள்ளிவாய்க்கால் கஞ்சி” என்ற பெயருடன் அந்த மாபெரும் அவலத்தின் நினைவை வருடாந்தம் உயிர்ப்பிக்கும் உணவாக்கி எமது சந்ததிக்கு கடத்த உலகத்தமிழர் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

எவ்வாறு யூதர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டபோது உண்ட பயண உணவை வருடாந்தம் உண்டு தம் நினைவுகளைத் தக்கவைத்து சீயோனுக்கு திரும்பினார்களோ அதுபோல் எம்மினத்தின் வீரமும் அவலமும் நிறைந்த ஒரு வரலாற்றுக்கட்டத்தை எம்மினத்தின் தேசிய இருப்பை தக்கவைக்கும் நினைவாக உயிர்ப்புடன் பேண வருடாந்தம் தமிழினவழிப்பு நினைவு நாளாகிய மே 18 இல் “முள்ளிவாய்க்கால் கஞ்சியை” உணர்வுமிகு உணவாக்குவோம்.

ஆகவே உலகெங்கும் வாழ் தமிழ் உறவுகளே!

- அன்றைய நாளில் எமது வீடுகளில் “முள்ளிவாய்க்கால் கஞ்சியை” ஒரு நேர உணவாக்குவோம். அதை உண்ணும் போது எமது தேசத்தின் வரலாற்றை எமது பிள்ளைகளுக்கு விளக்கி நினைவுகளை அடுத்த சந்ததிக்கு கடத்துவோம்!

- ஆலயங்களிலும் பொது இடங்களிலும் கஞ்சிக்கொட்டில் அமைத்து “முள்ளிவாய்க்கால் கஞ்சியை” அனைவருக்கும் வழங்கி உணர்வுகளைப்பகிர்ந்து கொள்வோம்!

நினைவுகளின் நீட்சியே தமிழினவழிப்பின் சாட்சி, இச்சாட்சியே எம்மக்களுக்கான மீட்சியின் வழியென உணர்ந்து உணர்வுபூர்வமாக இந்த நினைவேந்தலை முன்னெடுப்போம்.

இனவழிப்பின் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட உணவையே நினைவேந்தலின் வடிவமாக்குவோம் மே 18 இல் முள்ளிவாய்க்கால் கஞ்சி உண்போம்!

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

# உள்ளூராட்சி தேர்தலில் சிங்களத் தேசியக் கட்சிகளை நிராகரிப்போம்!

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

27.04.2025

எதிர் வரும் மே மாதம் ஆறாம் நாள் நடைபெற உள்ள சிறீலங்காவின் உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பாக. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கருத்துக்களை பதிவு செய்ய விரும்புகிறோம்.

நாம் முன்னரும் பல தடவைகள் சுட்டிக் காட்டியபடி தமிழ் மக்களின் சம்மதத்தை பெறாத சிறீலங்காவின் அரசியல் சட் டங்களை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் நிராகரித்து வரு கிறது. இதன் அடிப்படையில். சிறீலங்காவின் அரசியல் சட்டத் தின் கீழ் நடைபெறுகின்ற எந்த தேர்தல்களையும் கொள்கை நிலை நின்று நாம் ஏற்றுக் கொள்ளவோ அங்கீகரிக்கவோ இல்லை என்பதனை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இதேவேளை, தேர்தல்கள் மக்களின் பிரதிநிதித்துவத்தை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக அனைத்துலக அரங்கில் கருதப்படுவதால் தமிழ்த் தேசியக் கட்சிகள் தேர்தலில் பங்கு பற்றி வருகின்ற நிலைப்பாட்டை, உத்திசார்ந்த நிலையில்.நாம் புரிந்து கொள்கிறோம்.

இந்த நிலையில் நின்றே நடைபெற உள்ள உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பாக எமது கருத்துக்களை முன் வைக் கிறோம்.

தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக தமிழ் தேசம் என்ற நிலைப்பாட்டை, தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், அவர்களுக்கு பாரம்பரிய தாயகம் உண்டு, அவர்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்ற நிலைப்பாட்டை கொண்ட அரசியல் கட்சிகளே தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பெறவேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும்.

சிங்கள தேசிய கட்சியான JVP சில அமைப்புகளுடன் அணிசேர்ந்து NPP என்ற பெயரில் ஊழலுக்கு எதிராக அறை கூவல் விடுத்த ஒரு பின்னணியில் ஒரு தொகுதி தமிழ் மக்கள் அக்கட்சியினை ஆதரித்தமையினை நாம் கடந்த பாராளுமன்ற தேர்தலில் அவதானித்திருந்தோம். ஒரு சிங்கள தேசியக் கட்சி தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள் வது தமிழ் மக்களுடைய அடிப்படையான அரசியல் உரி மைகளை பாதிக்கின்ற ஒரு விடயமாக அமையும்.

இங்கு எந்த அரசியல் நிலைப்பாட்டில் இருந்து மக்கள் பிரதிநிதிக ளாக வருகின்றார்கள் என்பது முக்கியமே அன்றி தமிழர்களாக இருப்பது மட்டும் அவர்கள் தமிழ் மக்களுடைய அரசியல் உரி மைகளை பிரதிநிதித்துவப்படுத்துபவர்ளாக அமைந்து விடுவ தில்லை என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

JVP யினைப் பொறுத்தவரையில் அவர்கள் நீண்ட காலமாக தமிழ் தேசத்துக்கு எதிரான ஒரு இனவாத நிலைப்பாட்டை எடுத்த கட்சி என்பதனை நாம் அறிவோம். சிறீலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு போரை முன்னின்று நடத் திய கட்சிகளில் ஒன்றாக JVP யினை நாம் பார்க்க வேண்டும். இணைந்திருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரிக்க வேண்டும் என்ற ஒரு நிலைப்பாட்டை நீதிமன்றத்தில் முன் வைத்து செயல்பட்டது JVP என்பதை நாம் அறிவோம். இதே போல், P-Toms என்ற சுனாமி புனர்வாழ்வுக் கட்டமைப்பை சிறீலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணைந்து உருவாக்கிய போது அதனையும் நீதிமன்றம் ஊடாக தடுத்து நிறுத்தியது JVP என்பதையும் நாம் அறிவோம். முள்ளிவாய்க் காலில் சிந்திய இரத்தத்தில்.இவர்களின் கரங்கள் உள்ளன என்பதையும் நாம் அறிவோம்.

இப்பொழுது JVP வேறு NPP வேறு என்ற ஒரு வாதம் முன் வைக்கப்படுகிறது. இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் ஒரு தேசம் என்றோ, இலங்கைத் தீவில் தேசிய இனப் பிரச்சனை என்று ஒன்று உண்டு என்பதோ இன்று வரை துஷ் யாலோ அல்லது NPP யாலோ ஏற்றுக்கொள்ளப்படவில்லை, அங்கீகரிக்கப்பட வில்லை என்பதனை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இங்கு JVP யுடன் இணைந்து இருக்கின்ற ஏனைய சிறிய அமைப்புகள் JVP யின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்ட, அமைப்புகளாக உள்ளன. இங்கு JVP என்கின்ற ஒரு மரத்தை சுற்றிப் படர்கின்ற கொடிகளாகவே NPP யிலுள்ள ஏனைய அமைப்புகள் இருக்கின்றன என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த அடிப்படையில் JVP என்கின்ற அமைப்பு அது NPP என்ற முகத்தில் வந்தால் என்ன வேறு எந்த வடிவத்தில் வந்தா லென்ன தாம் தமிழ் மக்களுக்கு எதிராக எடுத்த இனவழிப்பு நிலைப்பாட்டுக்கு தமிழ் மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கோருவதுடன் தமிழ் மக்களுடைய தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமான எத்தகைய நிலைப்பாட்டை அவர்கள் கொண்டு இருக்கிறார்கள் என்பதனை, வெளிப்படுத்தி. தமிழ் மக்களின் முன் அரசியல் செய்ய செய்வதே நன்மையானதாக இருக்கும். ஆனால் அவற்றை உருமறைத்து ஊழலுக்கு எதிரான ஒரு அரசாங்கமாகவும். எல்லோரையும் சமத்துவமாக நடத்துகின் றவர்களாகவும் தாங்கள் இனவாதமற்றவர்களாகவும். இவர்கள் இப்பொழுது வெளிப்படுத்தி வருகின்றனர்.

இங்கு இனவாதம் என்கின்ற போது தனி மனிதர்களின் நிலைப் பாடு அரசியற்பார்வையில் முக்கியமானதல்ல. அரசின் நிலைப் பாடே முக்கியமானது. இப்பொது NPP தலைமை தாங்கும் சிறீலங்கா அரசு அடிப்படையில் ஒரு பேரினவாத அரசு என்பது NPP க்கும் தெரியும். சிறீலங்காவின் அரச முறைமை ஜன நாயகம் என்று கூறப்பட்டாலும் அது ஒரு இனநாயகமாக, பெரும் பான்மை இனத்தவருடைய முடிவுகளுக்கு மட்டும் இடம் கொடுக்கின்ற ஒன்றாக இருப்பதனை அனைவரும் அறிவோம்.

இச்சூழலில், இலங்கைதீவில் தமிழ் மக்களுடைய இறைமை மீட்கப்படுவதும், தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகள் வென்றெடுக்கப் படுவதும், தமிழ் மக்களுடைய தொடர்ச்சியான போராட்டத்தினால் தான் சாத்தியமாகும். இதனால், ஊழல் ஒழிப்பு என்றோ சமத்துவம் என்றோ முகம் காட்டி தமது உண்மை முகத்தை மறைத்து நிற்கும் NPPக்கு ஆதரவு வழாங்




குவீர்கள் என்றால் வரலாற்றுத் தவறு இழைத்தவர்களாக எதிர்கால தலைமுறை எங்கள் மீது குற்றம் சுமத்துகின்ற ஒரு சூழல் உருவாகும் என்பதனை எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். NPP க்கு மட்டுமல்ல எந்த சிங்கள தேசிய கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் தங்கள் ஆதரவை வழங்காமல் இருத்தல் தமிழ் மக்களுடைய உரிமை சார்ந்த நிலைப்பாட்டி லிருந்து முக்கியமானது என்று நாங்கள் கருதுகிறோம்.

மேலும், தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் தமக்குள் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளாது பிரிந்து நின்று தேர்தல்களை அணுகும் ஒரு நிலை மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் விளைவாக மக்கள் பிரதிநிதித்துவம் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளை விட ஏனைய கட்சிகளுக்கும் போகின்ற ஒரு சூழல் உருவாகி இருக்கின்றது என்பதனையும் நாம் கவலையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந் நிலையை தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் கவனத்தில் கொண்டு இது குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அவசியம் என்றும் நாம் வலியுறுத்துகிறோம்.

இதுவரை காலமும் தனித்து நின்று தேர்தல்களை எதிர் கொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி இத் தடவை கூட் டாகத் தேர்தலை எதிர்கொள்வதை நாம் வரவேற்கிறோம்.

தமிழர் தேசத்தை வலுப்படுத்தக்கூடிய ஓர் கூட்டமைப்பாக இவ் அணி வளர வேண்டும் என்பதுவும் எமது விருப்பாகும்.

விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்








JATHU
KITCHEN & RENOVATION
உங்கள் கனவுகளை
அடைய நாங்கள்
உதவுகிறோம்..
வீடு சீரமைப்பு
சேவைகளுக்கு
அழையுங்கள்
Free! ESTIMATES
Custom Kitchen
Kitchen Counter Top
Kitchen Cabinets
Plumbing
Washroom Full Work
Electrical
Pot Light
Painting
Ground Moulding
Basement
Flooring
Stairs
Tiles
Windows
Garage Door
Patio Door
Carpet
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com




அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203




The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com




Call today to Save energy
Free
Estimate!
Call today
$50 OFF
Broken Glass...? (Door & window)
We will fix it within 24 hour.
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
PTR
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com



# தொல்லியல் சுவடுகள்...

## ஆனைக்கோட்டை வட இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட இரண்டாவது மிகப் பெரிய பெருங்கற்கால மையம்

## திரிவுபடுத்தப்பட்டு வரும் ஆனைக்கோட்டை முத்திரை

ஆனைக்கோட்டை இலங்கையின் வட பகுதியில் உள்ள யாழ்ப்பாணக் குடா நாட்டின் வலிகாமம் தென்மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஊராகும்.

நாவாந்துறைப் பகுதியைச் சீர்செய்வதற்காக கரையாம்பிட்டி மண்மேட்டைவெட்டப்பட்ட பொழுது இதில் காணப்பட்ட பண்பாட்டு எச்சங்கள் 1980 களில் பேராசிரியர் இந்திரபாலா தலைமையில் அகழ்வு இடம்பெற்றது. இங்கு இரண்டு சதுர மைல் பரப்பில் ஆறு குடியிருப்பு மையங்களும் இரண்டு ஏக்கர் பரப்பில் பெருங்கற்கால ஈமச்சின்னங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன் பின்னர் பேராசிரியர் இந்திரபாலா மேற்கொண்ட அகழ்வின் போது இரு இடங்களில் பெருங்கற்கால மக்களது ஈமசின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விரு ஈம சின்னமையங்களும் பத்து அடி,இடைவெளியில் நான்கு அடி உயரம் கொண்ட மண்மேட்டில் கண்டுபிடிக்கப்பட்டன.

ஈமசின்னமையங்களில் 5 அடி உயரமுடைய இரு மனித எலும்புக்கூடுகள் கிழக்கு மேற்கு திசையை நோக்கிய வண்ணமாக அடக்கம் செய்யப்படிருந்தன. இதில் இரு கைகளும் கட்டப்பட்ட எலும்புக்கூட்டைச் சுற்றிவைக்கப்பட்ட மட்பாண்டங்களில் கருப்பு சிவப்பு, தனி கறுப்பு சிவப்பு நிறகிண்ணங்கள் வட்டில்கள், பானைகள் என்பன குறிப்பிடத்தக்கன. சிலமட்பாண்டங்களில் சுறா மீன், மிருக எலும்புகள் நண்டின் ஓடுகள் என்பவற்றுடன் சிற்பி, சங்கு போன்ற பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. இப்பண்பாட்டு இங்கு இரும்பின் பயன்பாடு புழகத்தில் வந்ததனை உறுதிப்படுத்த இரும்புகருவிகளும், கழிவிரும்புகளும் கிடைத்துள்ளன.

சிற்பி , சங்கு சுறா மீன் எலும்புகள் இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது கலை மரபுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. அதே சமயம் ஆனைக்கோட்டை மையம் கடலுடன் கொண்ட தொடர்பையும் காட்டுகின்றன. வடமாகாணத்தினை பொறுத்த வரை இங்கு கிடைக்கப்பட எலும்புக்கூடுகள் இரண்டாவது ஆகும். முதலாவது திருக்கேதீஸ்வரத்தில் மறைந்த திரு. சண்முகநாதன் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் போது கிடைத்தது.

ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட பிராமி எழுத்து பொறித்த மட்பாண்டம் லட்சுமி நாணயம் உரோம மட்பாண்டம் என்பவறை ஆதாரமாக கொண்டு இரு ஈமசின்னங்களும் இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்கால மக்களுக்குரியது என உறுதிபடுத்த முடிகின்றது.

எலும்புக்கூட்டின் தலை மாட்டின் அருகில் பெறப்பட்ட வெண்கல முத்திரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் காலம் கி.மு 3 நூற்றாண்டு 1.7 , 1.5 cm நீள அகலம் உடையது .இதன் மேல் வரிசையில் 3 குறியீடுகளும் கீழ் வரிசையில் 3 பிராமி எழுத்துக்களும் உள்ளன. இது மோதிரத்தின் முன் பகுதியாக இருக்கலாம் எனக் கருதப்டுகின்றது .



2021 இல் எடுக்கப்பட்ட முத்திரையின் புகைப்படம்

இது எதானால் செய்யப்பட்டது என்பது தொடர்பாக கருத்து முரண்பாடுகள் இருந்து வருகின்றன. பேராசிரியர் கா. இந்திரபாலா இந்த முத்திரையானது உலோக முத்திரை எனத் தமிழக இந்து பத்திரிகையில் 1981 இல் எழுதிய கட்டுரையில் கூறியிருந்தார்.

ஆனால், அவர் எந்த உலோகத்தால் செய்யப்பட்டது என்பதைக் குறிப்பாகக் குறிப்பிடவில்லை. பொ.இரகுபதி (1987) இந்த முத்திரையானது வெண்கலத்தினால் (Bronze) செய்யப்பட்டது என்றுள்ளார். ஐராவதம் மகாதேவனும் (2003), பேராசிரியர் சி. பத்மநாதனும் (2006),அது உலோகத்தால் ஆனது என்றுள்ள போதும், அது எந்த உலோகத்தினால், அல்லது உலோகக் கலவையால் ஆனது என்பதைக் குறிப்பாகக் கூறவில்லை.

எது விதத்திலும் க. இந்திரபாலா 2006ஆம் ஆண்டில் எழுதியிருந்த நூலில், அது Steatite (Soapstone) ஆல் ஆனது என்றுள்ளார். இந்திரபாலாவின் வாசிப்பு இதனை வாசித்த பேராசிரியர் கா. இந்திரபாலா இம் முத்திரையில் கீழ் வரியில் அடங்கியுள்ள மூன்று எழுத்துக்களையும் இடப்பக்கத்தில் காணப்படும் எழுத்துக்கு மேலுள்ள புள்ளியையும் பிராமிப் பகுதியாகக் கொண்டுள்ளார்.

ஆனைக்கோட்டை முத்திரை தொடர்பாகச் சமீபத்தில் வெளிவந்த ஆய்வுகள் சிலவற்றில் முத்திரையில் பொறிக்கப்பட்டிருந்த சில எழுத்துக்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு அதற்குப் புதிய வாசிப்பும், புதிய விளக்கங்களும் கொடுக்கப்பட்டு வந்திருப்பதைக் காணமுடிகின்றது. முத்திரையில் காணப்படும் எழுத்துக்களுக்கு அறிஞர்கள் வேறுபட்ட வாசிப்புக்களும், விளக்கங்களும் கொடுத்து வருவது அவர்களுக்குரிய சுதந்திரமாகவே நோக்கப்படும். ஆனால் அவற்றின் எழுத்துக்களை மாற்றிவிட்டு

அகழ்வாய்வில் பேராசிரியர் கா.இந்திரபாலா, சி.க.சிற்றம்பலம், பொ.இரகுபதி



அகழ்வாய்வில் பங்கெடுத்த பல்கலைக்கழக மாணவர்கள்













அதற்கு புதிய வாசிப்புகளும் விளக்கங்களும் கொடுப்பதைத் திட்டமிட்ட வரலாற்றுத் திரிபாகவே பார்க்கப்படும்.

இத்தவறுகளை ஊடகங்கள் மூலம் அறிஞர்களுக்கும், வரலாற்று ஆர்வலர்களுக்கும் மக்களுக்குத் தெரியப்படுத்தவே இக் கட்டுரை எழுதப்படுகின்றது. கடந்த காலங்களில் ஆனைக் கோட்டை முத்திரையின் வரலாற்று முக்கியத்துவத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிய ஊடகங்கள் தமது சேமிப்பில் இருக்கும் ஆனைக்கோட்டை முத்திரையின் திரிவுபடுத்தப்பட்ட புகைப்படங்களை நீக்கவும், எதிர்காலத்தில் இவ்வாறான புகைப்படங்களை பிரசுரிப்பதைத் தவிர்க்கவும் முன்வந்தால் மிக்க மகிழ்ச்சி அடைவோம்.

யாழ்ப்பாண நகருக்கு வடமேற்கே ஏறத்தாள 5.5 கிலோ மீற்றர் தொலைவில் ஒரு குக்கிராமமாக இருந்த ஆனைக்கோட்டை 1980 களின் பின்னர் தொல்லியல், வரலாற்று அறிஞர்களாலும், வரலாற்று ஆர்வலர்களாலும் அதிகம் பேசப்படும் ஒரு வரலாற்று இடமாக மாறியுள்ளது. இதற்கு அக்கிராமத்தில் முன்னெடுக் கப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்னங்களும், அவற்றுடன் கிடைத்த கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த முத்திரை மோதிரமும் முக்கிய காரணங்களாகும். 1980 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் இளம் தொல்லியல் ஆசிரியராக இணைந்த பொன்னம்பலம் இரகுபதி (ஓய்வுநிலைப் பேராசிரியர் உத்கல் பல்கலைக்கழகம், ஒறிசா, இந்தியா) தனது முதல் தொல்லியல் ஆய்வுப் பணிகளில் ஒன்றாக தன் மாணவர்களுடன் இணைந்து ஆனைக்கோட்டையில் தொல்லியல் ஆய்வினை முன்னெடுத்திருந்தார்.

இந்த ஆய்வின் மூலம் அங்கு ஆதியிரும்புக்கால (பெருங் கற்கால) மக்கள் வாழ்ந்துள்ளனர் என்ற உண்மை முதன் முதலாகத் தெரியவந்தது. இவ்விடத்தின் வரலாற்று முக்கியத் துவத்தை உணர்ந்த பேராசிரியர் கா.இந்திரபாலா தலைமையிலான ஆய்வுக் குழுவினர் அங்கு 1980 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் விரிவான அகழ்வாய்வினை மேற்கொண்டிருந்தனர். இந்த ஆய்வில் வரலாற்றுத்துறையுடன் ஏனைய துறைசார்ந்த ஆசிரியர்களும் மாணவர்கள் சிலரும் பங்கெடுத்தனர். இவ் வகழ்வாய்வின் மூலம் ஏறத்தாழ 2200 ஆண்டுகளுக்கு முன்னரே ஆனைக்கோட்டையில் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்ற உண்மை உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும் கந்தரோடையை அடுத்து யாழ்ப்பாணத்தில் கண்டு பிடிக்கப்பட்ட இரண்டாவது பெருங்கற்கால மையம் என்ற பெருமையையும் இது பெற்றது. இருப்பினும் கந்தரோடையுடன ஒப்பிடும் போது ஆனைக்கோட்டை அகழ்வாய்வு இரு அம்சங் களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது. ஒன்று யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களது மனித எலும்புக்கூடுகள் இரண்டு முதன் முதலாக ஆனைக் கோட்டை அகழ்வாய்வின் போதுதான் கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டாவது இந்த மனித எலும்புக்கூட்டுடன் பெயர் பொறித்த முத்திரை மோதிரம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இதுபோன்ற முத்திரை மோதிரம் ஆனைக்கோட்டையைத் தவிர தென்னாசியாவின் வேறு எந்தவொரு பெருங்கற்கால ஈமச்சின்ன மையங்களிலும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இம்முத்திரை மோதிரத்தின் மேலப் பகுதியில் சிந்துவெளி எழுத்தை நினைவுபடுத்தும் மூன்று குறியீடுகளும். அக்குறியீடு களுக்குக் கீழே மூன்று பிராமி எழுத்துக்களும் பொறிக்கப்பட் டுள்ளன. இம்முத்திரை தென்னாசிய வரலாற்று ஆய்விற்குப் புதிய சான்றாதாரமாகக் கிடைத்திருப்பதால் சாசனவியல் அறி ஞர்கள் பலரும் தமது பிராமிச் சாசனங்கள் பற்றிய ஆய்வுகளில் ஆனைக்கோட்டை முத்திரை மோதிரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர் அதிலும் தமிழ் எழுத்தின் தோற்றம், தமிழ் மொழியின் தொன்மை பற்றிய ஆய்வுகளிலும், கருத் தரங்குகளிலும் இம்முத்திரைக்கு முதன்மையிடம் கொடுக் கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அண்மைக்காலத்தில் வெளிவந்த சில ஆய்வுகளிலும், கருத்தரங்குகளிலும் இம்முத்திரை மோதிரத்தின் உண் மையான புகைப்படத்திலும், அதன் வரைபடங்களிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டு அதன் வாசத்திற்கு புதிய வாசிப்பும், அதற்குப் புதிய விளக்கங்களும் கொடுக்கப்பட்டு வந்துள்ளமை தெரிய வந்துள்ளது. இச்செயற்பாடுகள் ஆனைக்கோட்டை முத் திரையில் இருந்து அறியப்பட்ட வரலாற்று உண்மைகளைத் திரிவுபடுத்துவதாக உள்ளது. ஆனைக்கோட்டை அகழ்வாய்வை முன்னெடுத்த அறிஞர்களால் உத்தியோகபூர்வமாகப் பிரசுரிக்கப்பட்ட முத்திரையின் எழுத்துகளை மீள்வாசிப்பு செய்வதும், அதற்குப் புதிய விளக்கம் கொடுப்பதும் ஆரொக் கியமான ஆய்வுமுறையாகும். அதற்குப்பததிலாக அதன் எழுத் துக்களில் மாற்றங்களைச் செய்துவிட்டு அதற்குப் புதிய வாசக மும், விளக்கமும் கொடுத்திருப்பது மோசடியான வரலாற்று அணுகுமுறையாகும். இது பற்றிய முறைப்பாடுகள் அண்மையில் எனக்கும் கிடைதுள்ளன. இதனால் ஆனைக்கோட்டை ஆய்வில் மாணவனாகப் பங்கெடுத்தவன் என்ற முறையிலும், வரலாற்றுத்துறை ஆசிரியனாகக் கடமையாற்றியவன் என்ற வகையிலும் ஆனைக்கோட்டை முத்திரையின் உண்மை நிலை பற்றிக் கூறுவதை எனது கடமையாகவும். பொறுப் பாகவும் கருதுகின்றேன்.

இம்முத்திரை மோதிரம் ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப் பட்ட மனித எழும்புக்கூட்டின் தலைமாட்டுப் பகுதியில் வைக்கப் பட்டிருந்த மண்சட்டியொன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம்முத்திரை கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் வைத்தே உரிய முறையில் துப்பரவு செய்யப்பட்டு அது யாழ்ப்பாண வளாகத் தலைவராக இருந்த பேராசிரியர் க.கைலாசபதியின் கையில் வைத்து பல கோணங்களில் பொருளியல்துறை விரிவுரை யாளர் திரு.வி.பி. சிவநாதன் (பொருளியல்துறை ஓய்வுநிலைப் பேராசிரியர்) அவர்களால் படமெடுக்கப்பட்டன. அப்போதைய சூழ்நிலையில் கறுப்பு - வெள்ளைப்படம் எடுக்கும் சூழ்நிலையே காணப்பட்டது. அவ்வாறு எடுக்கப்பட்ட புகைப்படத்திருந்தும், முத்திரையில் இருந்தும் படிக்கப்பட்ட "கோவேத" என்ற பெயரை வைத்தே பேராசிரியர் கா. இந்திபாலா மற்றும் பொ.இரகுபதி ஆகியோரால் இந்து பத்திரிகையில் விரிவான இரண்டு கட் டுரைகள் முதன் முதலாகப் பிரசுரிக்கப்பட்டன. இதன் சமகாலத் தில் உள்ளூர் ஆங்கிலம் மற்றும் தமிழ்ப் பத்திரிகைகளில் இப் படத்தை ஆதாரமாகக் கொண்டு பல கட்டுரைகளும், செய்தி களும் வெளிவந்தன. அவற்றுள் தமிழில் வெளியிடப்பட்ட கவிஞர் சேரனின் (பேராசிரியர் சமூகவியல், கனடா) "சிந்து வெளியில் இருந்து வழுக்கியாறுவரை ஒரு எழுத்தின் பயணம்", என்ற கட்டுரையும், கவிஞர் ஜெயபாலனின் "கற்காலக் கிளவியும், குறுந்தாடி அழகனும்" என்ற தலைப்பிலான கவிதையும் முக்கியமானவை. இவற்றின் தொடர்ச்சியாகப் பாடசாலை, பல்கலைக்கழக சஞ்சிகைகளினதும், ஆய்வு நூல்களினதும் அட்டைப்படங்களை அலங்கரிப்பதில் ஆனைக்கோட்டை முத்திரை முக்கிய இடம்பிடித்தது.

இந்நிலையில் சிந்துவெளி நாகரிககால எழுத்துப் பற்றி ஆய்வை மேற்கொண்ட தமிழகத்தின் முதன்மைச் சாசனவியலாளரில் ஒருவரான ஐராவதம் மகாதேவன் 1980 களில் எடுக்கப்பட்ட ஆனைக்கோட்டை முத்திரையின் புகைப்படத்தையே முக்கிய ஆதாரமாகக் கொண்டு தனது ஆய்வை முன்னெடுத்துள்ளார். அவ்வாறே தமிழகத்தில் தமிழ்ப் பிராமி பற்றி ஆய்வு செய்த பேராசிரியர்களான எஸ் ரமேஸ், வை.சுப்பராயலு, க.இராசன், எஸ். இராஜவேலு மற்றும் கலாநிதி சு.இராஜவேலுவும், தென் னிலங்கையில் பேராசிரியர் அனுராமனதுங்க, பேராசிரியர் ராஜ்சோமதே முலிதயோரும் இப்புகைப்படத்தைப் பயன்படுதியுள்ளனர்..







விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு.
விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு
நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும்.
அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை
தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203





இவ்வாறு பலதரப்பட்ட அறிஞர்களால் ஆய்வுசெய்யப்பட்ட ஆனைக்கோட்டை முத்திரை தொடர்பான வேறுபட்ட வாசகங்களையும், பொருள் விளக்கங்களையும் கருத்தில் எடுத்த பேராசிரியர் இந்திரபாலா 25 ஆண்டுகள் கடந்த நிலையில் மீண்டும் இம்முத்திரையை விரிவாக ஆய்வு செய்து அதன் வரலாற்று முக்கியத்துவம் பற்றி எடுத்துக்காட்டியுள்ளார். அவற்றை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

"கோவேத என்ற சொற்தொடர் பிராகிருத மொழியைச் சேர்ந்தது அன்று. இதனைக் கோவேத எனப் பிரிக்கலாம். இது சமகாலத்துத் தமிழ்நாட்டுத் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் சொற்றொடர்களாகிய "கோ ஆதன்", "கோபூதி விர" ஆகிய சொற்றொடர்களுடன் ஒப்பிடத்தக்கது. இதில் வரும் "கோ" மன்னனைக் குறிக்கும் ஆதித் தமிழ் / திராவிடச் சொல்லாகும். முத்திரைகளிலும், நாணயங்களிலும் வரும் பெயர்கள் பொதுவாக ஆறாம் வேற்றுமை உருபுடன் (அதாவது உடைய என்ற பொருள்படும் சொல் இறுதியுடன்) காணப்படும்... இதே போன்று, ஆனைக்கோட்டை முத்திரையிலும் பெயர் ஒன்று ஆறாம் வேற்றுமை உருபுடன் காணப்படுகின்றது. அந்த உருபு பழந் தமிழில் காணப்படும் "அ" உருபு ஆகம்...".

அண்மையில் ஆனைக்கோட்டை முத்திரையை நேரில் பார்த்து படமெடுக்கவும், அதுபற்றிய மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தது. இம்முத்திரை மோதிரம் எவ்வகையான மூலப்பொருள் கொண்டு செய்யப்பட்டதென்பதில் அறிஞர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் நீண்டகாலமாக இருந்து வந்தன. இந்நிலையில் தமிழக அறிஞர்கள் இது ஸ்டிட்டைட் எனப்படும் ஒரு வகைக் கல்லில் செய்யப்பட்டதென்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். இம்முத்திரைக்கல் 10.2. மி.மீ நீளமும், 10.6 மி.மீ. அகலமும், 5.05 மி.மீ, தடிப்பும், 1.9 கிராம் நிறையும் கொண்டது. இக்கல்லை முத்திரை மோதிரமாக பயன்படுத்தும் நோக்கில் கல்லின் பின்பக்கத்தில் சற்சதுரமன சிறிய பீடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் இரண்டு பக்க விழிம்பில் காணப்படும் சிறிய அடையாளங்கள் மோதிரத்திற்குரிய வளையம் பொருந்தியிருந்ததை உறுதிப்படுத்துவதாக உள்ளன. ஆயினும் அந்த மோதிர வளையம் என்ன மூலப்பொருள் கொண்டு செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. ஆயினும் அது ஸ்டிட்டைக் கல்லினால் செய்யப்பட்டிருக்க முடியாதென்பது தெரிகின்றது. இக்கல்லின் முன்பக்கத்தில் முத்திரையாகப் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளும், பிராமி எழுத்துக்களும் தெளிவாகப் பார்க்கமுடிந்தது. அவற்றைப் பல கோணங்களில் கலர் படமாக எடுத்துப் பார்த்த போது அவை 1980 களில் பேராசிரியர் சிவநாதனால் எடுக்கப்பட்ட கறுப்பு-வெள்ளைப்படங்களில் இருந்து சிறிதும் மாறுபடவில்லை.

உண்மைகள் இவ்வாறு இருக்கும் போது அண்மைக்கால ஆய்வுகள் சிலவற்றில் இம்முத்திரையின் குறியீடுகளிலும், பிராமி எழுத்துக்களிலும் ஏன் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது என்பது தெரியவில்லை. இதன் மூலம் ஆனைக்கோட்டை முத்திரையில் இருந்து புதிய வரலாறு படைத்துவிட்டதாகப் பெருமை கொள்வது இதன் நோக்கமாக இருந்திருக்கலாம். இதனால் ஆனைக்கோட்டை முத்திரையின் வரலாற்றுப் பெறுமதியும், அதனால் அறியப்பட்ட வரலாற்று உண்மைகளும் திரிவுபடுத்தப்படுகின்றது என்ற உண்மைகளை ஏன் அவர்கள் மறந்துவிடுகின்றனர்?












நன்றி: - பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் - ஈழத்து வரலாறும் தொல்லியலும் - முகநூல்







# கிட்டுப் பூங்காவில் அநுர கூறியதன் பொருள்?

21.04.2025

“திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு தீர்வு காண்பது இலகுவானது. வடக்கில் இதை மையமாக வைத்து செய்யப்படும் அரசியலை விலக்கி வைக்க வேண்டும். தெற்கில் இதை மையமாக வைத்து செய்யப்படும் அரசியலை விலக்கி வைக்க வேண்டும். திஸ்ஸ விகாரையை மையமாக கொண்ட அரசியலை விலக்கி விட்டு, விகாராதிபதியும் மக்களும் சேர்ந்து பேசி இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்.”

இது. கடந்த வியாழக்கிழமை கிட்டு பூங்காவில் அநுர பேசிய பேச்சின் ஒரு பகுதி. தையிட்டி விகாரையில் இருக்கும் தமிழ் அரசியலையும் சிங்கள அரசியலையும் நீக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார். மிகத் தவறான ஒப்பீடு. தையிட்டி விகாரை என்பதே ஓர் அரசியல் விவகாரம்தான். அது ஓர் ஆக்கிரமிப்; நிலப் பறிப்பு; சிங்கள பௌத்த மயமாக்கலின் ஆகப்பிந்திய நடவடிக்கைகளில் ஒன்று. அதில் உள்ள சிங்கள பௌத்த அரசியல்தான் இங்கு பிரச்சினையே. அதற்கு எதிராகத்தான் தமிழ் மக்கள் போராடுகிறார்கள். தமிழ் மக்களுடையது ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு போராட்டம். இங்கு ஒடுக்கும் அரசியலையும் ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தின் அரசியலையும் சமப்படுத்த முடியாது. ஒடுக்குமுறை இல்லையென்றால் போராட்டத்திற்கு தேவையும் இருக்காது. எனவே முதலில் நீக்க வேண்டியது அந்த விகாரையைக் கட்டிய சிங்கள பௌத்த அரசியலைத்தான்.

அதைவிடக் குறிப்பாக பிக்குகள் அந்த அரசியலின் ஒரு பகுதி. இலங்கைத்தீவின் இன ஒடுக்குமுறையில் மகாசங்கம் அரச கட்டமைப்பின் ஒரு பகுதி. எனவே ஒடுக்குமுறையின் ஒரு பகுதியாகக் காணப்படும் மத குருக்களிடம் போய் பேசித் தீருங்கள் என்று கூறுவதே ஒடுக்கு முறைதான். எனவே தையிட்டி விகாரை விடயத்தில் அதன் அரசியலை நீக்க வேண்டும் என்று அநுர கேட்பதே அரசியல்தான். ஒடுக்கும் அரசியல்தான்.

அப்படித்தான் அவருடைய யாழ்.மாநகர சபைக்கான பிரதான வேட்பாளர் கூறுகிறார், தான் அரசியல் கதைப்பதை விடவும் அபிவிருத்தியைத்தான் கவனிக்கப் போவதாக. ஆனால் அரசியல் இல்லாமல் அபிவிருத்தி இல்லை. எதை அபிவிருத்தி செய்வது? எங்கே செய்வது? எப்படிச் செய்வது? எப்பொழுது செய்வது? யாரை வைத்துச் செய்வது? போன்ற எல்லாமே அரசியல் தீர்மானங்கள்தான். அபிவிருத்தி என்பது அரசியலின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதி. இந்த அடிப்படை விளக்கம் வேட்பாளரிடம் இல்லையா? அல்லது அபிவிருத்திக்குள் இருந்து அரசியலை நீக்கும் அரசியலை அவர் வேண்டுமென்று செய்கிறாரா?

அதே போலதான் உள்ளூராட்சி சபைத் தேர்தல் களம் தொடர்பாக ஒரு கோட்பாட்டு விடயம் சுட்டிக்காட்டப்படுகிறது. உள்ளூராட்சி சபைகள் உள்ளூருக்கானவை; உள்ளூர் உணர்வுகளைப் பிரதிபலிப்பை; உள்ளூர் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கான பயில் களங்கள். எனவே அந்த சபைகளுககான தேர்தல் களங்களிலும் தமிழ்த்தேசிய அரசியலைப் பேசக்கூடாது என்று ஒரு விளக்கம்.

அப்படிச் சொல்பவர்கள் தமிழ்த் தேசிய அரசியலை விளங்கிக் கொள்ளவில்லை. தேசியவாத அரசியல் என்றால் என்ன? ஒரு மக்கள் கூட்டத்தை ஆகப்பெரிய திரளாகக் கூட்டிக்கட்டுவது. அதை எங்கிருந்து தொடங்க வேண்டும்? கீழிருந்து மேல் நோக்கித்தான் அதைத் தொடங்க வேண்டும். மேலிருந்து கீழ்நோக்கி அல்ல. அதாவது ஊர்களில் இருந்து தொடங்க வேண்டும். எனவே கீழிருந்து மேல் நோக்கி அதாவது ஊர்களில் இருந்துதான் தேசியவாதக் கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும்.

ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் காணப்படும் அசமத்துவங்கள் அதிகமாக கிராமங்களில்தான் நிலவும். பால், சாதி, சமய, பிரதேச அசமத்துவங்கள், முரண்பாடுகள் கிராமங்களில் ஆழமாக இருக்கும். எனவே அங்கேயே அவற்றைத் தீர்க்க வேண்டும். அதற்கு தேசியவாத தரிசனமும் அணுகுமுறையும் வேண்டும். ஒரு மக்கள் கூட்டத்தை பெரிய திரளாகக் கூட்டிக் கட்டுவது என்றால் எந்த அடிப்படையில் கூட்டிக்கட்டுவது? ஒருவர் மற்றவருக்குச் சமம் என்ற அடிப்படையில்தான் அதைச் செய்யவேண்டும். ஒருவர் மற்றவருக்குச் சமம் என்ற அடிப்படையில் ஜனநாயக அடிச்சட்டத்தின் மீதுதான் தேசியவாத அரசியலைக் கட்டியெழுப்ப வேண்டும். எனவே தேசிய உணர்வைக் கட்டியெழுப்புவது என்ற விடயத்தை ஊர்களில் இருந்தே, ஊராட்சி அரசியல் களத்தில் இருந்தே தொடங்க வேண்டும்.

ஊரில் சாதிமானாக இருப்பவர், சமய வெறியராக இருப்பவர், பால் அசமத்துவத்தை ஆதரிப்பவர் போன்றவர்களை தேர்தலில் நிறுத்தி உள்ளூராட்சி சபைகளை உருவாக்க முடியாது. ஊருக்கு நல்லவர்; அல்லது சாதிக்கு நல்லவர்; அல்லது சமயத்துக்கு நல்லவர்; தேசியவாதியாக இருப்பார் என்று இல்லை. உள்ளூராட்சி சபைகள் உள்ளூர்த் தன்மை மிக்கவை என்றாலும் உள்ளூரில் இருக்கக்கூடிய அசமத்துவங்களை தேசியவாத நோக்கு நிலையில் கடக்கின்ற, நீக்குகின்ற ஒருவர்தான் உள்ளூராட்சி சபைகளில் உறுப்பினராக இருக்க வேண்டும். எனவே வேட்பாளர்களைத் தெரியும்போது தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்தே அதைச் செய்ய வேண்டும். இப்படிப் பார்த்தால் தேசியவாத அரசியலை கிராமங்களில் இருந்துதான் கட்டியெழுப்ப வேண்டும். எனவே உள்ளூராட்சி சபை தேர்தல்கள் அதற்குரியவைதான். உள்ளூர் உணர்வுகளை பிரதிபலிப்பது என்பது தமிழ்த்தேசிய உணர்வுக்கு எதிராக இருக்க முடியாது. அது தமிழ்த் தேசிய கூட்டுணர்வின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்




உள்ளூர் அபிவிருத்தி தொடர்பான பொருத்தமான தரிசனங்களை கொண்டவர்களும், அதேசமயம் உள்ளூர் அசமத்துவங்களை நீக்கி ஊர் மட்டத்தில் தேசிய ஐக்கியத்தை,தேசியக் கூட்டுணர்வைக் கட்டியெழுப்பக் கூடியவர்களுந்தான் தேர்தலில் நிற்க வேண்டும். அங்கிருந்து தொடங்கி மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் தாயகம் அளவிலும் தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

கிராம மட்டத்தில் பலமான கட்டமைப்புகளை அல்லது வலைப்பின்னலையோ கொண்டிராத கட்சி மாகாண மட்டத்திலோ அல்லது தாயக அளவிலோ வெற்றி பெற முடியாது. தமிழரசுக் கட்சியின் பலமே அதற்கு கிராம மட்டங்களில் இருந்த அடிமட்ட வலைபின்னல்தான். அக்கட்சி வடக்கு கிழக்கு தழுவியதாக எழுச்சி பெறவும் அதுதான் காரணம். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். தேர்தல் தொகுதியில் வெற்றி பெற்ற ஒரே வேட்பாளராகிய சிறீதரனுக்கு கிளிநொச்சியில் உள்ள பலமும் அதுதான்.

எனவே கிராம மட்டத்தில் பலமான கட்டமைப்பு இல்லையென்றால் மாவட்ட, மாகாண, தாயக மட்டத்தில் கட்சியைப் பலப்படுத்த முடியாது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களுடைய ஒவ்வொரு அரசியல் அசைவும் தம்மைத் தேசமாகத் திரட்டும் நோக்கத்தைக் கொண்டதாகவே இருக்க வேண்டும். அதை குடும்பத்தில் இருந்தே தொடங்க வேண்டும். நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் ஒரு குடும்பத்திலேயே வாக்குகள் சிதறி விழுந்தன. தமிழ் மக்கள் ஒரு சமூகமாகச் சிதறுகிறார்கள். எனவே ஊர்களில் இருந்தே தேசத்தைக் கட்டியெழுப்பத் தொடங்க வேண்டும்.

உள்ளூராட்சி சபைகளில் மட்டுமல்ல மாகாண சபைகளிலும் இனப்பிரச்சினையை அதிகம் விவாதிக்கக்கூடாது என்ற ஒரு விவாதம் விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்தபொழுது எழுந்தது. வட மாகாண சபையில் அபிவிருத்தித் திட்டங்களை விடவும் இனப் பிரச்சினை அரசியல்தான் அதிகமாக பேசப்பட்டது என்ற ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. விக்னேஸ்வரனிடமும் வடமாகாண சபையிடமும் தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலான பொருத்தமான பொருளாதார தரிசனங்கள் இருக்கவில்லை என்பது உண்மை. ஆனால் அதற்காக மாகாண சபை மட்டத்தில் இனப்பிரச்சினையைப் பேசக்கூடாது என்று கூறுவது தமிழ் அரசியலை தமிழ்த் தேசிய நீக்கம் செய்யும் நோக்கத்தைக் கொண்டது.

மாகாண சபை எனப்படுவது மக்களால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு சட்டமன்றம். ஒற்றையாட்சிக்கு கட்டமைப்புக்குள் அதற்குள்ள அதிகாரங்கள் போதாது. எனினும் இருக்கின்ற அதிகாரங்களை உச்சபட்சமாக பயன்படுத்தி எப்படி மாகாணத்தைக் கட்டியெழுப்பலாம் என்பது தொடர்பில் பொருத்தமான பொருளாதார தரிசனங்கள் தமிழ்க் கட்சிகளிடம் குறைவு. அதேசமயம் மக்கள் ஆணையைப் பெற்ற ஒரு மாகாண சபையில் இன அழிப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை மகத்தானது. அத்தீர்மானத்துக்கு மக்கள் ஆணை உண்டு. தேச நிர்மாணம் என்பது அதாவது தேசத்தைக் கட்டியெழுப்புவது என்பது அதன் பொருளாதார அர்த்தத்தில் தமிழ்த் தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதுதான்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் உள்ளூராட்சி சபை மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் மாகாண சபை மட்டத்திலும் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் நிகழ்ச்சி நிரல் இருக்க வேண்டும். உள்ளூராட்சி சபைகளில் இனப் பிரச்சினையை பேசக்கூடாது என்பது தையிட்டி விகாரையில் இருந்து இன அரசியலை அகற்றுவோம் என்று கூறும் அநுரவின் கோரிக்கைக்கு நிகரானது. அது ஒடுக்குமுறையின் ஒரு பகுதி.

தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான கோஷம் “வெற்றி நமதே ஊரும் எமதே” என்பதாகும். உள்ளூராட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த வெற்றியை அடுத்த கட்டத்திற்கு விஸ்தரிப்பதுதான் அவர்களுடைய நோக்கம். நாடாளுமன்றத் தேர்தல்களில் அவர்கள் பெற்ற வெற்றியானது தமிழ்த்தேசிய கட்சிகளைத் தோற்கடிக்கலாம் என்ற நம்பிக்கையை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது. இப்பொழுது தமிழ்த் தரப்பு எனப்படுவது தமிழ்த் தேசியத் தரப்பு மட்டும் அல்ல என்பதனை அவர்கள் அழுத்தமாக டில்லியிலும் ஜநாவிலும் கூறத்தொடங்கி விட்டார்கள். உள்ளூராட்சி சபைகளிலும் அந்த வெற்றியை அவர்கள் ஸ்தாபிப்பார்களாக இருந்தால் அதாவது ஊரும் அவர்களிடம் போய்விட்டால் தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாக் தேசிய இனமாகக் கருதவில்லை என்று கூறத்தொடங்கி விடுவார்கள். எனவே உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் தமிழ் மக்கள் மிகத்தெளிவான முடிவை எடுக்க வேண்டும். தாங்கள் ஒரு தேசமா? இல்லையா? என்று. அது உள்ளூர்த் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு தேர்தல்தான். உள்ளூர் உணர்வுகளை பிரதிபலிக்கும் ஒரு தேர்தல்தான். அதைவிட ஆழமான பொருளில் அது தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலின் ஒரு பகுதி.





நன்றி: நிலாந்தன்

# இரண்டே இரண்டு அன்னை கேட்டது
# இந்திய ஆணவம் உயிரைக் குடித்தது

பா. அரியநேத்திரன்

அன்னை பூபதி உயிர் நீத்து இன்று 37 ஆண்டுகள். அவர் என்ன கேட்டார் இரண்டே இரண்டு சொல்தான் “நிறுத்து” ”பேசு” இந்த இரண்டு சொல்லையும் மதிக்காத பாரததேசம் 56 வயதுடைய ஒரு தமிழ்த்தாயின் உயிரை குடித்தது.

இதுதான் உண்மை இதுதான் அன்று 1988 ஏப்ரல் 19 ல் இந்திய அமைதிப்படையின் சதியால் இன்னுயிரை தியாகம் செய்த தாயாக உலகவரலாற்றில் அன்னை பூபதி இடம்பிடித்தார். இன்று (19.0402025)ல், 37 வது ஆண்டு நினைவை அனுஷ்டிக்கிறோம்.

இலங்கை அரசை நம்பி தியாகி திலீபனோ, தியாகி அன்னை பூபதியோ உண்ணாவிரப் போராட்டத்தில் ஈடுபடவே இல்லை.

இலங்கை அரசு அகிம்சை போராட்டத்தை, அறவளிப்போராட் டங்களை மதிக்காத இனழிப்பு அரசாங்கங்கள் என்பதால் அவர்களுக்கு எதிராக ஆயுதப்போராட்டம் ஒன்றே சாத்தியம் என்பதை நம்பித்தான் தலைவர் பிரபாகரன் 1975 காலப்பகுதி யில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆரம்பித்து போராடினார்.

அந்த போராட்டத்தின் பலம் இலங்கை இந்திய அரசுகளின் மனச்சாட்சியை தட்டியமையால் இந்தியாவின் தலையீடு காரணமாக 1987, யூலை 29ல் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்திக்கும். இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவுக் கும் இடையில் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் காரண மாக இந்திய அமைதிப்படை என்ற போர் வையில் ஈழமண் ணில் ஆக்கிரமித்தன.

தமிழ் மக்கள் மீதும், விடுதலைப்புலிகள் மீதும் மேற்கொண்ட மோதல்கள், சண்டைகள், துன்புறுத்தல்கள், துரோகங்கள் தொடர்ந்தன. இதனை நிறுத்தவேண்டும் என்பதற்காகவே அறப்போரால் விடுதலை பெற்றதாகவும், காந்தீயத்தை மதிக் கின்ற நாடாகவும் கருதப்படும் பாரதநாட்டுக்கு அறப்போரால் பதில் கொடுக்கவே யாழ்ப்பாணத்தில் 1987ல் தியாகி திலீபன் நல்லூர் கோயில் வீதியில் 12 நாட்கள் நீர்கூட அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார் 23 வயதுடைய ஆயுதம் ஏந்தி போராடிய அந்த இளைஞன்.

அதே போல் ஆயுதம் ஏந்தி போராடாத ஒரு தாயாக 56, வயது நிரம்பிய அன்னைபூபதி இரண்டு கோரிக்கைகள் “நிறுத்து” “பேசு” அதாவது:

1-இந்தியப்படை உடனடியாகப் போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்.

2-விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்.

இந்த இரண்டு மிகவும் செய்யக்கூடிய கோரிக்கைகளை அன்னை பூபதி முன்வைத்து 1988 மார்ச் 29ல் உண்ணா விரதத்தை மட்டக்களப்பு மாமாங்கேஷ்வரர் ஆலய முன்றலில் ஆரம்பித்தார். அவர் தமிழீழத்தை பெற்றுத்தாருங்கள் என்று இந்திய அரசை கேட்கவில்லையே போரை நிறுத்துங்கள், புலிகளுடன் பேசுங்கள் மிக எளிமையான இரண்டு விடயங்கள் இதனை கூட செய்ய அன்றைய இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி முன்வரவில்லை, ஏறு எடுத்துக்கூட பார்க்கவில்லை, உதாசீனம் செய்தார் அதனால் அன்னை பூபதித்தாய் சரியாக 30, நாட்களால் 1988, ஏப்ரல் 19ல் எம்மண்ணை விட்டு ஆகதியானார் என்பதே வரலாறு.

இலங்கை இந்திய ஒப்பந்தம் கற்றுத்தந்த பாடம் இரண்டு உயிர்கள் உண்ணா விரதம் இருந்து மாண்டதுதான் வரலாறு.

இந்திய அமைதிப்படையால் ஈழத்தமிழர்கள் இரண்டு உயிர் களை அகிம்சை வழியில் தியாக மரணத்துக்கு ஆளாகிய கொடுமைக்கான முழுப்பொறுப்பும் இந்திய அரசையே சாரும்.

இன்று 37 ஆண்டுகள் அன்னை பூபதி உண்ணாவிரதம் இருந்த இதே மாதம் கடந்த 2025, ஏப்ரல் 04ல் இப்போதைய பாரதப்பிரதமர் நாலாவது தடவை இலங்கைக்கு வருகை தந்து இலங்கை அரசுக்கு பாரிய பொருளாதார உதவிகளை வழங்கிவிட்டுச்சென்றுள்ளார்.

அவர், 38வருடங்களுக்கு முன்பு செய்யப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் தொடர்பாக மௌனமாகவே இலங்கை பயணத்தை வழமை போன்று நிறைவு செய்தார்.

வெறும் படம் எடுப்பதற்காக மட்டும் தமிழ்த் தேசிய கட்சிகளை சேர்ந்த ஏழுபேரை பக்கத்தில் வைத்து கலர் படம் எடுத்து விட்டு இலங்கை ஜனாதிபதி அநுராவால் வழங்கப்பட்ட விருதை கழுத்தில் வாங்கி போட்டுவிட்டுச் சென்றுள்ளார்.!

சந்திக்கச்சென்ற தமிழ்த்தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒரே குரலில் ஒரு கோரிக்கையை முன்வைக்க முடியாத சாபக் கேடான தமிழ்தேசிய அரசியலாகவே 2009, மே 18 தொடக்கம் எதிர்வரும் 2025 மே18, வரை 16, வருடங்களாக தொடர்கிறது.

அன்னை பூபதி இம்மண்ணில் உயிர்நீத்து 37 வருடங்களாக இந்திய இலங்கை ஒப்பந்தத்தைப் பற்றியும், 13 வது அரசியல் தீர்வு பற்றியும், இணைந்த வடகிழக்கு பற்றியும், மாகாசபை தேர்தல் பற்றியும் தமிழ்தேசிய கட்சிகளும், தலைவர்களும் தொடர்ச்சியாக பேசிவரு வதுமட்டுமே தொடர்கதை.

இணைந்த வடகிழக்கில் முதலாவது மாகாணசபை 1988 நவம்பர், 28ல் நடந்து சரியாக 1990 மார்ச் 31ல் அதாவது ஒருவருடமும் நான்கு மாதங்கள் மட்டுமே அதன் ஆயுள்காலம் இணைந்த வடகிழக்கு மாகாணசபை செயல் இழந்தது.

இதில் அவதானிக்கவேண்டியது என்னவெனில் இலங்கை இந்திய ஒப்பந்தம் இணைந்த வடகிழக்காகவே அப்போது எல்லோராலும் பேசப்பட்டது. இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தியும் தமிழ் தலைவர்களிடம் வாய்மூலமான உத்தரவாதத்தை கொடுத்தார். வடக்கு கிழக்கு தொடர்ந்தும் இணைந்தே இருக் கும் இலங்கை ஜனாதிபதிகள் எவரும் அதனை பிரிக்க மாட் டார்கள் என்ற நம்பிக்கையை இந்திய பிரதமர் வழங்கினார் அது அப்போது ஊடகங்களிலும் வெளிவந்தது.

ஆனால் இணைந்த வடகிழக்கு மாகாண சபை கூட ஒரு வருடமும், நான்கு மாதங்களுடன் செயல் இழந்தது இந்தியப் படை 1990, மார்ச்31ல் கப்பலில் ஏறி திருகோணமலையில் இருந்து இந்தியா சென்றபோது வடகிழக்கு மாகாண சபையும் இந்தியாப்படையுடன் காலவதியாகியது. இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி நினைத்திருந்தால் மீண்டும் உடனே இணைந்த மாகாணசபை தேர்தலை நடத்துங்கள் என இலங்கையை வற் புறுத்தியிருக்கலாம் அதனை செய்யவில்லை ஆளுநரின் அதி காரத்தில் இணைந்த வடகிழக்கு நிருவாகம் திருகோணமலை யில் செயற்பட்டது.

2004ல் அதிகாரத்துக்கு வந்த மகிந்த ராஜபக்ஷ அரசு 2005, ஜனாதிபதியாக மகிந்த தெரிவாகி ஒருவருடத்தால் இப்போதைய ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி அப்போதைய ஜே வி பியினரை ஏவிவிட்டு 2006, அக்டோபர் 16ல் இணைந்த வட கிழக்கை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து பிரித்தனர். அதன் பின்னர் அவசரமாக கிழக்கு மாகாணத்தில் 2008, மே 10ல் தேர்தலை நடத்தி தமக்கு வேண்டிய தற்போது சிறையில் உள்ள பிள்ளையானை முதலமைச்சராக பதவியில் அலங்கரித்து பிரதேசவாத அரசியலுக்கு தூபம் இட்டனர். இதிலும் இந்தியா வின் அனுசரணை இருந்தது. அடுத்த கிழக்கு மாகாண தேர்தல் 2012, செப்டம்பர், 08ல் இடம்பெற்றது. வடமாகாணத்தில் ஒரே ஒரு தேர்தல் மட்டும் 2013, செப்டம் 21 இடம்பெற்றுள்ளது 2018, தொடக்கம் 2025, வரை ஏழு வருடங்களாக எந்த மாகாண சபையும் இயங்கவில்லை ஆளுநர்களை மட்டும் வைத்து ஜனாதிபதிகள் மாகாணசபைகளை கையாளும் ஒரு நாடகமே தொடர்கிறது.

அன்னை பூபதி உயிர்நீத்து 37, வருடங்கள் கடந்தும் ஈழத் தமிழர்கள் இலங்கையில் தொடர்ந்தும் அரசியல் தீர்வை பெற முடியாதவர்களாகவே உள்ளனர்.






# REWARDING YOUR EVERYDAY

MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.




1-855-856-6875

## Merchant Benefits

- Website Template: Modern design for improved user experience.
- Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
- Convenient Payment Options: EV gift wallet for seamle transactions.
- Comprehensive Analytics: Access full reporting and tracking online.
- Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
- Financial Security: Build income for future sale or retirement.
- One-time Registration Fee: $199 to unlock these benefits.

## Member Benefits

- Point Accumulation: Earn 4% to 60% on purchases.
- Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
- Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
- Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
- Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
- Networking Opportunities: Build your own shopping network effortlessly.
- Exclusive Privileges: Gain mining rights worth $60.













Reward Points



WWW.MYEVERYDAYSHOPPING.COM



# தகனம்




–செம்பியன் செல்வன்–

இருளும் அச்சமும் கொண்ட நீண்ட இரவுப்பொழுது, அந்தி வேளை உதயத்தின்போதே ஊரை உறக்கத்திலாழ்த்தும். இடையிடை வெடிக்கும் துப்பாக்கி ஓசைகள் அவர்களை அடிக்கடி மூத்திரத்திற்கு எழுப்பிவிடும். ஆர்.பி.ஜிக்கள் தொலை தூரத்தில் வெடித்துச் சிதறும். பக்கத்துக் கல் வீடுகள்... பங்களாக்களில்... மாடிக் கட்டிடங்களில் நள்ளிரவில் எழும் சந்தடிகளும்... சரசரப்புக்களும்... அச்ச வெடிகளும்.. "எங்க இருக்கு? எங்க ஒழிச்சுப் புதைச்சு வைச்சிருக்கிறியன்.. சொல்லமாட்டியா... உன்ர சின்ன மகன்ர சின்னிவிரலை வெட்டி எடுத்தாத்தான் சொல்லுவியா? எங்களிட்ட ஒண்டுமில்லையெண்டு நீ சொன்னாப்போல நாங்கள் ஒண்டும் பேயர் மடையரல்ல.. நம்புறதுக்கு.. நீங்கள் ஆரு? உங்கட வைப்புச் சொப்பென்ன?... எல்லாத்தையும் அறிஞ்சுகொண்டு தான் வந்திருக்கிறம்.. டேய்.. அந்தப் பெட்டையைப் பிடிச்சுக்கொண்டு வாடா... அப்பத்தான் இவருக்கு எங்களைப் புரிய வரும்"

"ஐயோ.. வேண்டாம், வேண்டாம்... என்ர சொத்துப் பத்தெல்லாத்தையும் கொண்டு போங்கடா.. என்ர குஞ்சுகளை ஒண்டும் செய்து போடாதேங்களடா".

"ஏய் வாய் பொத்தோணும்... சத்தம் போட்டா பொடியங்கள் வருவாங்கள் எண்டு நினைப்போ.. இப்ப வந்து பாக்கவேணும்... வரச் சொல்லுங்கடி பாப்பம்... தெரு முழுக்க இந்தியன் ஆமி நிக்குது எங்களுக்குக் காவலா... கூப்பிடுங்களடி அவன்களை" என்று எழும் குரல்களும். சப்பாத்துச் சரசரப்புக்களும்... தெரு நாய்களின் குரைப் பொலிகளும் எல்லாவற்றையும் உணர வைக்க, இருளில் கூட மூச்செழா வண்ணம் முடங்கிக்கிடப்பர்.

தெரு நாய்கள் கூட நன்றாக இனம் கண்டுகொண்டன. வருவது இந்தியன் ஆமியா... துரோகக் கும்பலா... பொடியளா என்று... நாய்களின் குரைப்பொலி வித்தியா சத்திலிருந்தே மக்களும் இனம் பிரிக்கவும்... வெடியோசைகளிலிருந்து இது பொடியளின்ர... இது ஆமியின்ர என்று வேறுபடுத்தவும்... வானத்தில் எழும் சப்தங்களிலிருந்து பொம்மரா... அவ்ரோவா... சீப்பிளேனா..? என்று குழந்தைகள் கூட பந்தயம் கட்டுவதை ஒரு போர்க்கால விளையாட்டாகவே மாற்றிக்கொண்ட அவர்கள்...

எதற்கும் விடியட்டும்... செய்தி தெரிய வரும் என்று நித்திரையில்லாமல் படுக்கையில் புரளும் ஆண்களை... என்னப்பா... என்று மெல்லக் குசுகுசுக்கும் மனைவிமார்களை, அதைத் தெரியப்படுத்த விரும்பாமலோ... வெறும் ஊகங்களைச் சொல்லி இதுகளை ஏன் கலவரப்படுத்துவான் என்ற நினைப்பில்... ஒண்டுமில்லையப்பா நீரேன் வீணாக் கவலைப் படுகிறீர்?.. பேசாம நித்திரையைக் கொள்ளும்... அவங்கள் எங்கையோ கடலுக்கை அடிக்கிறாங்கள் போல... என்று சொல்லப் போக, என்னப்பா... பொடியள் ஏதும் ஆயுதங்கள் வண்டியில கொண்டு வந்து இருப்பாங்களோ... அதைக் கண்டுட்டுத்தான் ஆமிக்காரன்கள் அடிக்கிறான்களோ... என்று கவலையில் விசாரணை விரிய... உந்த விசர் எண்ணங்கள் தானே உங்களுக்கு வரும்... பொடியளைப்பத்தி இவ்வளவுக்குப் புறகும் என்ன நினைக்கிறியள்?... பொடியளின்ர வீரத்தில... புத்தியில கால்தூசி பெறுவாங்களே... இவங்க... என்று பேச்சிலேயே மிகுதிப் பொழுதையும் கழித்து வெளியே வருவார்கள்.

அவர்களுக்கு இந்த நித்திய வாழ்க்கை வழக்கமான பழக்கமாகி விட்டது.

அன்று விடிகாலையில் எழுந்த சடசட சடசட பட் பட் வேட்டுச் சத்தங்கள் கிராமத்தையே ஒரு உலுப்பு உலுக்கிவிட்டது.

ஊருக்குள் ஏதோ அனர்த்தம் நடந்து விட்டது.

எங்கே..? எங்கே?
"கோயில் குருக்களின்ர மகனை... சின்ன ஐயரை இந்தியன் ஆமி சுட்டுப்போட்டாங்களாம் "பொடி" கோயிலுக்குள்ளையாம்... ஏன் சுட்டவங்களெண் தெரியாது... காலைப் பூசைக்குப் போனவையும் உள்ளயாம்... ஒருவரையும் வெளிய விடுறாங்களில்லையாம்...

செய்தியை காற்றிலே பறக்க விட்டவர்கள் யார்?

கிராமமே கோயிலை நோக்கி ஓடியது.

சடலத்தை வாங்க நீண்ட நேரம் போராட வேண்டியதாயிற்று. கோயிலுக்கு வெளியே கிராமமே திரண்டிருந்தது. சின்ன ஐயரை ஏன் சுட்டீர்கள்... என்ற மக்களின் கேள்விக்குப் பதிலில்லை... இந்தியா இன்னொருமுறை தனது அஹிம்சையில் சேற்றை அள்ளிப் பூசிக் கொண்டது.

"சின்ன ஐயரை எங்களிடம் தாருங்கள்... அவர் எங்கட கிராமத்தின் சொத்து... அவரின் கொலைக்கு யார் காரணம்?.." மக்களின் கொதிப்புக்கு அவர்கள் இறங்கி வரவேண்டியதாயிற்று.

"பிரேதத்தைத் தரலாம். ஆனால் நீண்ட நேரம் வைத்திருக்கக்கூடாது. இரண்டுமணிக்குள் அடக்கம் செய்து விடவேண்டும்... ஊர்வலத்தில் ஐம்பது பேருக்குமேல் கூடாது... நாங்கள் அடிக்கடி வந்து பாப்பம்..."

இந்திய ஆமி வெளியேறியது.

உள்ளே அகப்பட்டிருந்த அடியார் கூட்டம் திகைத்துச் சூழ்ந்து நிற்க வித்தியா வியாகரண சித்தாந்த சிரோன்மணி சாம்பசிவக் குருக்கள் தனது ஐம்பதாவது வயதிலும் தளராத உடல் நிலை குலைய கர்ப்பக்கிருகப் படிக்கட்டில் உறைந்து போயிருக்க, அவர் காலடியில் சின்ன ஐயர் நெஞ்சில் குண்டு பாய்ந்த அடையாளக் குருதியில் கிடக்க...

உள்ளே நுழைந்த கூட்டத்திலிருந்த நாலைந்து இளைஞர்கள் பரபரப்பாக கடமையாற்றத் தொடங்கினர். யார்? என்ன செய்கிறார்கள்? என்பதைப் புரிந்து கொள்வதற்கிடையில் சின்ன ஐயரின் சடலம் வீடுபோய் சேர்ந்து விட்டது.

வீடு சிறிது நேரத்தில் அழுகை ஒலியால் நிறையலாயிற்று. ஊரும் உறவும் கூடியது. சாம்பசிவக் குருக்களின் பத்தினியார், மகனின் சடலத்தைப் பார்த்து மயங்கி விழுந்தவரின் மயக்கத்தைப் போக்க சில அம்மாக்கள் முயன்று கொண்டிருந்தனர். சின்ன ஐயரின் சகோதரிகள் சகோதரனின் முகம் பார்த்துக் கதறிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஒரேயொரு சகோதரன்; ஆளும் நல்ல அழகன். சைவானுஷ்டானங்களைக் கடைப் பிடிப்பது மட்டுமல்லாமல், இருக்கு வேதம் கற்றுக் கொள்கிறான்... வேதங்களில் மிகப் பெரியது... இதனைக் கற்றாலே யசுர், சாம, அதர்வணங்களைக் கற்றுவிட்ட நிறைவு ஏற்படும்... சமூகத்தில்... சடங்குகளில்... நல்ல மதிப்பும் ஏற்படும்... இவற்றுடன் யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரியில் ஏ.எல் மருத்துவம் படிக்கிறான். தோளிற்கு மேல் வளர்ந்த பிள்ளை, அதனால் அடிக்கடி தந்தைக்கும் மகனுக்கு மிடையில் தர்க்கங்கள் நிகழ்வதை தாயும், சகோதரிகளும் பார்த்தும், கேட்டும் மகிழ்வர். அந்தச் சகோதரன் இன்று இப்படி... வாய்பேசா மௌனியாக... நீண்ட துயிலில் சூழ்ந்திருக்கப் பொறாமல் இரு சகோதரிகளும் வாய்விட்டு அடிக்கடி அலறினர்.

சாம்பசிவக் குருக்களோ பார்வையை அவனது நெற்றிப் பொட்டினூடாக வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"மகன் இப்ப எங்கட சமூக ஆசாரங்களெல்லாம் கெட்டுக் கொண்டு வருகிறது... அவனவன் ஆசாரங்களைக் கைவிட்டு விட்டு கிராப் வைத்துக் கொண்டு அரசாங்க உத்தியோகத்திற்கும் வேறு மாதச் சம்பளத்திற்கும் போய் விடுறாங்கள்... பணம்... செல்வம்... மட்டுமா வாழ்க்கை... பிழைப்பு... நாங்கள் தெய்வத்தை தொட்டு வாழுறவங்கள்... மக்கள் தங்கள் விக்கினங்களுக்கு கடவுளைத் தேடி வருகினம்.. நாங்கள்தான் கடவுளுக்கும் அவர்களுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்திக் கொடுப்பவர்கள்... நாங்கள் எங்கள் குல தர்மத்தை... புனிதத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்."

"எல்லாம் சரிதான் அப்பா... ஆசாரம்.. ஆசாரம்... என்று சொல்லிக்கொண்டு சில சமயம் மக்களை விட்டே வெகுதூரம் போய் விடுகிறோமோ என்று அச்சமாக இருக்கு..."

"நாம் என்ன? அரசியலில் தேர்தல் காலத்தில் வாக்குக் கேட்கும் அரசியல் வாதிகளே?... நாம் எட்ட எட்ட நிக்கத்தான் புனிதம் பெருகும்... தூய்மை சிறக்கும்... ஏனெண்டா இது தெய்வ சங்கல்பம் தெய்வ சேவை.. அதோட..."

அதோட என்னப்பா...

"ப்பிராஹ்மணோ ஸ்யமுகமாசித் பாஹூன்ய". பிராமணர்கள் யஜ்ஜப்ரௌஷகள் முகத்திலிருந்து வந்ததாக ஸூக்தம் சொல்கிறது...

அப்பா... உங்களிடம் வேதம் கற்றுக் கொள்கிறேன். உங்களிடம் பெற்ற பிரம்மோபதேசம்.. திரிகால சந்தியாவதனம்... காயத்திரி மந்திரம் எல்லாமே எனது உடலுக்கு ஆத்மாவுக்கு இன்பமாக இருக்கிறது... கல்லூரியிலே கற்கும் கல்விக்கும் நிறையப் பயன் தருகிறது... சமூகத்திலே உயர் நிலையிலிருந்த பிராமண சமூகம் இன்று என்ன நிலையில் உள்ளது? இந்தியாவில் உயர் சமூகமெனக் கூறி தாழ்நிலைப் படுத்துகிறார்கள்... அரசியல் மேடைகளில் எங்களைச் சதுரங்கக் காய்களாக நகர்த்துகிறார்கள். ஏன் எங்களைப் பலிக்கடாக்களாக்கி வருகின்றார்கள்... இது எங்கள் பொருளாதாரத்தை நிறையப் பாதிக்கின்றது... ஏன் இன்றைக்கு பிராமண சமூகம் கோயிலை விட்டு வெளியே வேலை தேடுகின்றது...? பூசகர் வேலையில் போதிய வருமானம் இல்லை... மாறிவரும் விலை வாசிகளுக்கேற்ப சன்மானம் வழங்குகிறார்களா?. அதுவுமில்லை... ஆனால் அந்த சொற்ப சன்மானத்தைக் கொடுக்கும் போதும் எவ்வளவு எள்ளல்கள்... கேலிகள்.

சாம்பசிவக் குருக்கள் மகனை உற்றுப்பார்த்தார். எவ்வளவு உண்மைகளை உணர்ந்து பேசுகிறான், தந்தைக்கு உபதேசித்த தகப்பன் சாமிபோல... அவர் நெஞ்சம் விம்மக்கேட்டார்.

"அதற்கு என்ன செய்வது?"

"ஒன்றும் செய்யவேண்டாமா?.. நாங்கள் வெறும் பூசகர் மட்டுமல்ல, தமிழர்களின் பண்பாடு... கலாச்சாரம். சடங்கு...



சம்பிரதாயங்களை வழிவழியாகக் கட்டிக்காத்து மக்களுக்கு அளித்து வருபவர்கள்... கோயில்கள் இவற்றின் களஞ் சியங்கள்... இந்த உண்மையை மக்களுக்கு புலப்படுத்த வேண்டும்... இதைத்தான் ஆதிசங்கரரும் இன்னொரு வழியில் செய்தார்."

அவர் திடுக்கிட்டார்.

ஆதிசங்கரர்?

"ஆமாப்பா, தானறிந்த பிரம்மோபதேசம் பிறருக்கு... முக்கிய மாக சூத்திரருக்கு தெரியக்கூடாது... தெரிந்தால் தனக்கு நரகம் என்பதை நன்குணர்ந்தும் லோகாமோஷத் திற்காக ஊர் அறியப் பிரசங்கிக்க வில்லையா... அதனால் இந்துமதம் வளர்ந்த தேயன்றிக் குன்றவில்லையே"

"நீ என்ன சொல்ல வருகிறாய்?"

"இந்த உண்மையைப் புரிந்து கொண்ட மக்களுடன் நாம் இணைந்துகொள்வோமானால் எமது தனித்துவமும் வளரும்... நாடும் நன்மை பெறும்... அதற்காக நாம் போராட வேண்டிய காலம் வந்து விட்டது..."

"சண்டையா? அது பிராமண தர்மமல்லவே?"

"தர்மங்களை நிலைநாட்ட நடந்த போர்களில் பிராமணர்கள் பங்குகொள்ளவில்லையா?"

அவர் நெற்றி சுருங்கியது.

என்ன சொல்கிறாய்?

பாரதப் போர் நடந்தது. எதற்காக?... நடத்தியவர் யார்?... குரக் களின் விழிகளில் நீர் பிரவாக மெடுத்தது மகனே!... மகனே!...

---

ஏய்!. ஏய்!- இங்க நிண்டு இப்ப ஆர் ஓடினது உண்மையைச் சொல்லிப்போடவேணும்.

யார் யாரோ வேகமாக குறுக்கும் நெடுக்குமாக ஓடுகிறார்கள்... சப்பாத்துக் கால்களின் ஒலி... தெய்வ சந்தி தானத்தையே கொலைக்களமாக்கிய பாதகர்கள்... தெய்வ சந்நிதானத் திலேயே தெய்வமாகி வந்து சயனம் கொள்ளும் இந்தப் புனித இடத்தைக் கூடவா சற்று நேரம் தூய்மையாக இருக்க மனம் விடவில்லை யார் இந்த அரக்கர்கள்..?

எல்லாக் கைகளிலும் துப்பாக்கிச் சனியன்கள்..

உதவி செய்து கொண்டிருந்த இளவட்டங்கள் எல்லோரும் எங் கேயோ போய் ஒளிந்துகொண்டார்கள்... பெண்களின் விழி களில் நீர் பயத்தால் உறைய... சில வயோதிபர்கள் திண்ணை யில் இருந்தவாறு மௌனமாகப் பார்வையை விரித்தவாறு...

இங்க ஆர் வந்தது?... நிண்ட பொடியள் எல்லாம் எங்க?

யார் யாரையோ விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் இழவு வீட்டிற்கு வந்தாக்கள்... இண்டைக்கு என்ன இண்டைக்கு - இனி இந்த வீட்டிற்கு துக்கம் விசாரிக்க ஆக்கள் வந்து போவினம்... செத்தது என்ன உங்களைப்போல சாதா ரண மனுசனா..? வேதவித்து.. கிராமமே நம்பிக்கையோட காத்திருந்த உத்தம மனுசன்... கிராம மக்களின் கனவையே அழிச்சிட்டீங்களே... இங்க வந்து போறவையள கணக் கெடுக் கவே வந்திருக்கிறம்? போதாததற்கு நீங்கள் வேற சப்பாத்துக் காலோடு.

ஏய் கிழடு என்ன கனக்க கதைக்கிறா?... துப்பாக்கியின் பின் பக்கத்தால் யாரோ அடிக்கும் ஓசை.

ஐயோ... ஐயோ... முரகா...

கெதியெண்டு சவ அடக்கத்தை முடிக்க வேணும்... ஆரும் பொடியள் இளம் பொடியள் இங்க நிக்க வேண்டுமெண்டால் எங்கட சம்மதம் எடுக்கவேணும்..

ஏன்?... ஏன்?...

அவர் கண்களில் எதுவோ காட்சியாக விழுகிறது.

உதயகாலப் பூஜைக்காக அவரும் மகனும் வீட்டை விட்டு புறப் பட்டபோது எல்லாம் சரியாகத் தானிருந்தது. ஆள் அரவமற்ற வீதி... வெட்டவெளியில் உறங்கும் தோட்டங்கள்... ஆட்களற்ற துலாக்கள்... வானோடு மௌன இரகஸ்யம் பேசும் பெரிய தோட்டக் கிணறுகள்.. காலைப்பனி தூறியிருந்த தார் வீதி பச்சைப் பசும் புல் நிலங்களுக்கு சமன்தான். வீதியின் வலது புறம் கழிவு வாய்க்கால்.. அதற்கப்பால் பரந்திருந்த தோட்டம்... தோட்டத்திற்கு அப்பால் புகையிரத வீதி... அதற்குமப்பால் வெறும் பற்றைகள்... பனைவடலிகள் புல் மேடுகள்.. வழக் கமான பார்வையில் மாற்றம் தெரியவில்லை. தந்தையும் மகனுமாகக் கோயிலைத் திறந்து உள்ளே புகுந்து பூசைக்கான யுத்தங்களை மேற்கொண்டனர். பெரியவர் கர்ப்பக்கிருகம் புக சின்னவர் மடப்பள்ளியிலிருந்த சருவக்குடமும் கயிறுமாக தீர்த் தக் கிணற்றை நோக்கிச் சென்றபோது, அவர்கள் நுழைந் தார்கள்.

ஐயா சத்தம் போடாதேயுங்க... நாங்கதான்..

இரண்டு இளைஞர்கள் அவசரமாக நுழைவதற்காக காலில் சிலிப்பருமில்லாமல், சாறம் சேட்டுடன் ஒருவன் கையில் உரப் பையில் எதனையோ சுருட்டி வைத்திருக்கிறான்...

அவருக்கு விளங்கி விடுகிறது.

தண்டவாளத்துக்கு அங்கால ஆமிக்காரன் விடியவிடிய படுத்துக் கிடக்கிறான்... ஐயா, நாங்க வந்ததைக் கண்டிட்டாங்கள் எண்டு தான் நினைக்கிறம். எப்படியும் அவர்கள் வாறதுக்குள்ள நாங்க போயிடுவம். நீங்க ஓடிப்போய் பூசைமணியை அடியுங்க...

பஞ்சாட்சரம் மணியை நோக்கி ஓட, அங்க என்ன கதை யாரோட கதைக்கிறா...? என்றபடி சாம்பசிவக் குருக்கள் கர்ப்பக் கிருகத்தை விட்டு வெளியே வந்தவர் திக்கித்துப் போகிறார்.

அவர்கள் வடமேற்குத் திசையாக வாகனசாலையிருந்த இட மாக ஓடுகிறார்கள்.

வெளியேயிருந்து சிற்சில அடியார்கள் கோயிலுக்குள் நுழைந்து சில மணித்துளிகளில் இந்திய ஆமி "படபட" வென உள்ளே புகுகின்றது. கோயிலின் உள் வீதியெங்கும் சப்பாத்துக்களுடன் ஓடுகின்றனர். புல் வெளிகளில் தட்டாம் பூச்சியைத் துரத்தி வெறும் கையுடன் திரும்பும் சிறுவர்கள்போல...

ஏய்... ஐயர்... இங்க வா... இரண்டு பேர் வந்தாங்கள் எங்க...

எந்த ரெண்டு பேர்?

சாறனோட வந்தாங்கள்...

நான் கர்ப்பக்கிரகத்திற்குள் நிண்டனான் கவனிக்கேல்ல.

ஏய்... பூஜாரி பொய் சொல்லுறா? இல்லை, நீயும் அவங்கட ஆளா...? நீ நிசம் சொல்லாட்டா உங்களையும் எல்லாம் சுடுறது... வா. எல்லோரும் வரிசையா நில்லுங்க... ஆ... ஒண்ணு... ரெண்டு

வெடிச்சத்தம் வானைப் பிளக்கிறது...

பஞ்சாட்சரம்... கர்ப்பக்கிருக வாசலில்,



**ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கையில்; அந்தத் தியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்தப் புனிதர்களை எண்ணும் போதெல்லாம் எனது நெஞ்சு புல்லரிக்கும்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

இந்த வெடிச்சத்தம் எதனையோ வெளியில் நின்றவர்களுக்கு உணர்த்தியிருக்க வேண்டும்.

தண்டவாளத்திற்கு அப்பால் பல வெடிச்சத்தம் கேட்க ஆமி நகர்கிறது...

ஐயோ... மகனே...! பஞ்சாட்சரம். அவரது இதயம் ஓலமிட்டு அழுகிறது...

இந்திய இராணுவம் நுழைந்த போது தமிழர்களுக்கு ஏதாவது இவர்களால் நன்மை கிடைக்கலாம் என அறியாமை வசத்தில் நம்பியவர்... இந்தியா என்றால் தமிழகம்... தமிழகம் என்றால் எமது தாய்நாடு என்ற மனப்பான்மையில் வளர்த் தெடுக்கப்பட்ட பரம்பரை வேறெப்படி சிந்திக்கும்? அதிலும் சாம்பசிவக்குருக்கள் போன்றோருக்கு?

இந்தியா வேதங்களின் விளை நிலம், அங்கிருந்து வரும் படை நிச்சயம் நல்லதே செய்யும்.

"அப்பா படை எண்டால் படைதான்... அதில் சைவப்படை. அசைவப்படை என்ற வித்தியாசமில்லையப்பா"

பரமசிவம், வாய்க்கு வந்தபடி பேசாத, உனக்கென்ன தெரியும் இந்தியா பற்றி...? எங்கும் நதிக்கரைகள்... புண்ணிய தலங்கள்... கன்னியாகுமரியிலிருந்து இமயமலை வரை வேத வித்துக்களின் விளை நிலங்களில் அரக்கர் முளைத் தெழுந்தது எப்படி..?

கோயிலில்... மடப்பள்ளிப் பாத்திரங்களில்... மாமிசக்கறி... பொறுப்பதிகாரியின் சட்டையில் ஏதோ சர்மாஜி எனப் பெயர் பொறித்திருந்ததாக ஞாபகம்...

அவர் இடிந்துபோய் உட்கார்ந் திருக்கிறார்...

கோயிலை எப்படிப் புனிதப் படுத்துவது...?

"யார் வீட்டில..?"

அவர் எட்டிப்பார்க்கிறார். வெளியே இந்திய ஆமி.

என்ன?

இந்த வளவு வேலியை வெட்டிப் போடவேணும்... நாளைக்கு நாங்க வரேக்க வெட்டாமலிருந்தா எரித்துப் போடுவோம்.

ஏன்...?

அதென்ன கேள்வி... சொன்னதை செய்யும் ஐயர் சரியா...

அதெப்படி இந்த வளவுக்கு மேற்கால பிரதான வீதி... தெற்கால சின்ன வீதி... வேலியை வெட்டி விட்டா... நடுச்சந்தியிலதான்




புண்ணிய பூமியிலிருந்து வருபவர்கள் வேறுயாருமல்ல... எங்கட சாதி சனம். நீ ஒரு கண்டறியாத கல்லூரி ஒண்டிலை படிக்கப் போய்த்தான் இப்பியெல்லாம் பேசிறா... பாரன் என்ன நடக்கப் போகுது எண்டு..

அவர் எதிர்பாராதது நடந்தது.

மக்கள் அனைவரும் உடனடியாக தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி அருகிலுள்ள கோயில், பாடசாலைகளில் போய் இருக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

அவர் மனதில் ஏதோ ஒன்று நகர்வது போல் பட்டது. குடம் பத்துடன் நல்லூரை நோக்கி நடந்த போதுதான் அவருக்கு அரசியல் அறிவு ஏன் அவசியம் என்று புலப்படலாயிற்று. மனை வியோ... வீடு வாசல் எப்படியிருக்குமோ... பண்டம் பாத்திரம் பறிபோகாமல் இருக்குமோ என்று கவலைப்பட்டதற்கு வந்த வங்கள் என்ன கொள்ளைக்காரன்களோ? நீ ஒண்டுக்கும் பயப்படாத, அதோட கோயில் குருக்கள் வீட்டில் கை வைக்கிற அளவுக்கு மோசமா இருக்கமாட்டாங்கள்... என்று தேற்றியவர் ஒரு வாரத்தின் பின் வீட்டிற்குச் சென்றவர் அதனைத் திறக்க வேண்டியிருக்கவில்லை வீடு சூறையாடப்பட்டிருந்தது. கோயிலை நோக்கி ஓடினார்...

கோயிலின் உட்பிரகாரங்களில், மடப்பள்ளிப் பாத்திரங்கள் மாமிசக் கறி எச்சங்களுடன்...

ஐயா... முருகா... என்ற அலறலுடன் அவரின் இன்னொரு மூலையில் எதுவோ தகர்ந்தது.

என்ர வீடு... இது பிராமண வீடு... அப்படியிருக்க முடியாது...

ஏய் ஐயர்.... அதிகம் பேசாத... சொன்னதைச் செய்...

அவர் அடுத்த நாள் பூசை முடிந்து வரும்பொழுது அவரது வேலி எரிந்துகொண்டிருந்தது... இந்தியன் ஆமி தனக்குப் பாதுகாப்புத் தேடிக்கொண்டிருந்தது.

அவரது நெஞ்சம் எரிந்து கொண்டிருந்தது. இப்படைகளுக்கு இப்படியெல்லாம் ஆணையிட்டுக் கொண்டிருக்கும் அந்தப் பெரியவன் யார்? நல்லாயிருப்பானா?... அவனும் இப்படியா?... வரம் கொடுக்கும் வாய் சபிக்கிறதா?

ஏய்... ஐயர்... நீ என்ன பொடியன் கட்சியா?...

என்ன பேசாமலிருக்கிறாய்? அந்த வேலியை நீ ஏன் வெட்டிப் போடேல்ல...?

எதை...?

அதிர்ந்து போகிறார்.

கிணற்றடிக்கு மறைவாகப் போட்டிருக்கிறதையா? அதை வெட்டி விட்டா பெண் புரசுகள் எப்படி மானம் மறைப்பாக நின்று குளிக் குங்கள்?...

ஏன் பொடியள் மறைவா நிண்டு எங்களுக்கு குண்டு சுடவா...

சொன்னதைச் செய்... படைக்குப் பாதுகாப்புத் தேவை?...

அவரது குடும்பம் விடிகாலைக்கு முன்னதாகவே கிணற்றடிக்கு செல்லத் தொடங்குகிறது...

---

திருப்பொற் சுண்ணம் இடித்தாயிற்று. பஞ்சாட்சரத்தின் சடலத் திற்கு இறுதி மரியாதைகள் நடந்து கொண்டிருக்கின்றன. விம்மல்... அழுகை எங்கும் நிறைகிறது. பெண்கள் பெருங் குரல் எடுத்து அழுகின்றார்கள்...

பெட்டி... பெட்டி...

பெட்டி வருகின்றது...

கிரியைகள் தொடர, பேச்சுக்கள் கிசுகிசுக்கின்றன.

பெட்டியைக் கொண்டு வாறது பெரும்பாடாப் போச்சு... பெட்டி எடுக்கிற இடத்தில வைத்து மறிக்கிறாங்கள்... யாருக்கு... எங்க செத்ததெண்டு ஆயிரம் பதில் வழி வழிய சொல்லிக்கொண்டு வர வேண்டியுள்ளது... பெட்டிக்குத் தேவையான மரங்களில்லை எண்டு பெட்டி செய்யிறவன் அழுகிறான்.. வரேக்க இந்தப் பெட்டி ஒன்றுதான் கடைசியாகக் கிடந்தது... அவனும் கடையைப் பூட்டிக் கொண்டு போறான்...

வேலிகளில்லாததால், பெட்டி வாசலால் வருகிறதா... வீட்டைப் பிளந்து கொண்டு வருகிறதா என்று புரியாத நிலையில் பாடை யும் மக்களுமாகத் தெருவில் இறங்குகின்றனர். தூரத்தே வெடிச் சத்தங்கள் கேட்கின்றன.

சுடலையில், மண்டபத்தில் மீண்டுமொருமுறை சடங்குகள் நடக்கின்றன. பெட்டியில், இருந்து சடலம் "பச்சைப்பன்னாங் கு"க்கு மாற்றப்பட்டு சைவக்காரருக்கான இறுதிக் கிரியைகள் மிக வேகமாக...

சுடலைக்கு வந்தவர்களுக்கோ வீடுகளுக்குத் திரும்பும் அவ சரம்... மந்திர கோஷங்களும்... யாக்குண்டப் புகையும்... எங் கும் சூழ...

சுடலை கட்டைகுத்தி தனது உதவியாளர்களுடன் சிதையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறான். கிடைக்கப் போகும் துணி மணி... சாராயத்திற்கான காசு... என்பவற்றின் நினைவில் படு உற்சாகமாக... கட்டைகளை அடுக்கி... பக்க அணையாக கம் பிக் கட்டைகளை அடித்து... வாகாகப் பற்றி எரிய பழைய ரயர் களையும் காற்று வீசும் திசை பார்த்து காய்ந்த தென்னோலை, காவோலைகளை அடுக்கி... அவன் காத்திருக்கிறான்.

சடலம் கிடத்தப்பட்டு, நெஞ்சாங்குத்தி ஏற்றி, அவர் கொள்ளிக் குடம் கொண்டு மூன்று முறை சுற்றி தீயிட்டபின் தான் அது நிகழ்ந்தது.



சவப்பெட்டியைக் கொத்தி எரியும் நெருப்பில் சிதையில் போடு வதற்காக கட்டைகுத்தி வேகமாக கோடரியை உயர்த்தினான். யாரோ ஒருவன் வந்து அவன் கைகளைப் பிடித்து நிறுத் தினான்.

என்ன?

கொஞ்சம் பொறு... பெட்டியை வீணாக்காத இப்ப பெட்டி தேவை யாக இருக்கு...

அப்படி சவப்பெட்டியை இரவல் கொடுக்கிற வழக்கமில்லை. அத் தோட இது குருக்கள் வீட்டுப் பெட்டி... அவர்கள் சம்மதமின்றி...

அந்த இளைஞர்கள் குருக்களை நெருங்குகிறார்கள்.

முதல் தடவையாக அவர் முகத்தில் ஒரு புன்னகை மலர்கிறது.

மகனே!... நீயே இல்லை... இதில் உடமை பற்றிய பேச்சு... வேடிக்கையாக இல்லையா...? தெய்வமானபின் சடங்குகளும் சம்பிரதாயங்களும்... நீ அன்று ஆதிசங்கரரை உதாரணம் காட் டினாய்... ஆனால்... இன்று நீயே... உன் சவப்பெட்டியை இன் னொரு போராளிக்கு உதவப் போறதை நினைத்தால் என் மெய்யே புல்லரித்துப் போகிறது...

அவரது உள் மனம் ஏதேதோ பேசுகிறது...

பிள்ளையள்... என்ன தயங்குகிறீர்கள்...? உங்கள் போராட் டங்களின் புனிதமும் பொருளும்... ஏன் எங்கட வேதத்தின் உட் பொருளும் இப்ப தான் எனக்குப் புரியுது... ஆனா எப்பவோ புரிந் துகொண்ட என் மகன்... போங்கள்... கெதியாப் போங்கள்.... அந்த அறுவான்கள் இங்க வருமுன் பெட்டியைக் கொண்டு போய்விடுங்கள். போராட்டம் வெற்றி பெறும். அப்பொழுது... நாங்கள் எங்கட பிள்ளைகளை இப்படி அநியாயமாகப் பறி கொடுத்துக் கொண்டிருக்க மாட்டம்.

தூரத்தே எதுவோ நொருங்கித் தகர்வது போல் பேரோசை ஒன்று எழுகிறது.

# தமிழர் தாயகத்திலும் அதை அண்டிய கடலிலும் உள்ள வளங்கள் பயன்படுத்தப்படும் போது தமிழர் தேசத்தின் சம்மதம் அவசியம்!

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

15.04.2025




இன அழிப்பு சிறீலங்கா இராணுவத்துக்கும், இந்திய இராணுவத்திற்குமான புரிந்துணர்வு உலகெங்கும்வாழும் தமிழர்களை வேதனைக்குள்ளாக்குகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் சிறீலங்கா பயணம் தொடர்பாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் பின்வரும் கருத்துகளை பதிவு செய்யவிரும்புகிறது.

1. சிறீலங்காவின் புதிய ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசநாயக்கா தெரிவு செய்யப்பட்ட பின்னர் இந்திய பிரதமரின் முதலாவது பயணமாக இந்தப் பயணம் அமைந்திருந்தது. இந்தபயணத்தில். சிறீலங்கா, இந்தியா ஆகிய இருநாடுகளுக்கு இடையிலான சில புரிந்துணர்வு உடன் பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

2. சம்பூர் பகுதியில் அனல் மின் நிலையத்தினை அமைப்பது தொடர்பான உடன்பாடும் கைச்சாத்திடப்பட்டு இருக்கின்றது.

நாம் இவ்விடத்தில் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டும் அவசியம் இருக்கிறது. இலங்கைத்தீவில். தமிழ்த் தேசிய இனத்தின், தமிழர் தேசத்தின் தாயகமாக வடக்கு கிழக்கு பகுதிகள் அமைந் திருக்கின்றன. வடக்கு, கிழக்குப் பகுதிகள் தமிழர் தாயகம் என்பது இலங்கை இந்திய ஒப்பந்தத்திலும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள ஒருவிடயமாகும். இந்த நிலையில், தமிழர் தாயகத் திலும் அதை அண்டிய கடலிலும் இருக்கின்ற வளங்கள், அவை இயற்கை வளம், மனித வளம் என எந்த வளங்களாக இருந் தாலும் அந்த வளங்கள் பயன்படுத்தப்படும் போது, ஏனைய அரசுகளுடன், நாடுகளுடன் பங்கிடப்படும்போது தமிழ் மக்க ளுடைய, தமிழர் தேசத்தினுடைய சம்மதம் பெறப்படுதல் மிகவும் முக்கியமானதாக இருக்கவேண்டும் என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தமிழர் தேசத்துடன், தமிழ் மக்களுடன் கலந்து பேசாத, அவர் களுடைய சம்மதத்தைப் பெறாது மேற்கொள்ளப்படுகின்ற எந்த உடன்பாடுகளும், தமிழ்மக்களின் அங்கீகாரத்தினை பெறா தவை என்கின்ற அடிப்படையில் தமிழ் மக்களுடைய இறை மைக்கும், தமிழ் மக்களுடைய தாயகத்துக்கும் அவை உடன் பாடில்லாத விடயங்களாக இருக்கின்றன என்பதனையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது .

இந்திய அரசு சிறீலங்கா அரசுடன். உடன்பாடுகளை செய்து கொண்டு தனக்கு தேவையான நலன்களை அடைந்து கொள் ளும் ஓர் அணுகுமுறையை எடுத்துவருகிறது. இதனால். இவ்விடத்தில் நாம் சுட்டிக்காட்டும் விடயம் மிகவும் முக்கிய மானது; அடிப்படையானது என்பதை புரிந்து கொள்ளுமாறு இந்திய பிரதமரையும் இந்திய கொள்கை வகுப்பாளர்களையும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ் மக்களுடைய தாயகத்திலும் அதை அண்டிய கடலிலும் இருக்கின்ற எந்த ஒரு விடயத்தையும் எந்த வளங்களையும் தமிழ் மக்களுடைய சம்மதத்துடன் பெறவேண்டும் என்கின்ற ஒரு நிலைப்பாட்டை அனைத்து நாடுகளும் எடுக்க வேண்டும் என்பதும் எமது கோரிக்கையாகும்.

3. சிறீலங்கா இராணுவத்துக்கும், இந்திய இராணுவத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாடும் இதில் முக்கியமான ஒன்றாக அமைந்தது. சிறீலங்கா இராணுவத்தின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளும், மனித குலத்திற்கு எதிரான குற்றச் செயல்களும் உலகம் அறிந்தவை. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் படையில் சிறீலங்கா இராணுவத்தினை இணைத்துக்கொள்ளக் கூடாது என்ற கண்டனங்கள் அனைத்துலக சிவில் சமூக அமைப்புகளால் எழுப்பப்பட்டு வருவதையும் நாம் அவதானித் திருக்கின்றோம்.

ஈழத்தில், தமிழர் தாயகத்தில் நடைபெற்ற தமிழினஅழிப்பினை ஈழம், தமிழ் நாடு, உலகம் அனைத்தும் வாழ்கின்ற தமிழ் மக்கள் முழுமையாக அறிந்திருக்கிறார்கள். அந்த இன அழிப்பு தந்த வேதனையின் வடுக்கள் தமிழ் மக்களின் மனங்களில் நிலைத்து இருக்கின்றன. இத்தகைய ஒரு சூழலில், சிறீலங்கா இராணுவமும் இந்திய இராணுவமும் புரிந்துணர்வு ஒப்பந் தத்தை மேற்கொண்டமை உலகமெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்களை மிகவும் வேதனைக்கு உள்ளாக்கி இருக்கின்றது என்பதனை இந்திய பிரதமருக்கு நாம் சுட்டிக்காட்ட விரும்பு கிறோம்.

4. மேலும். இந்தியப் பிரதமர் சிறீலங்காவின் யாப்பினை முழு மையாக அமுல்படுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார். நேரடியாகக் குறிப்பிடப்படாவிட்டாலும் சிறீலங்காவின் யாப்பில் தற்போது இருக்கின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தினை சிறீலங்கா அமுல்படுத்தவேண்டும் என்கின்ற அர்த்தத்தினை இந்தக் கூற்றின் ஊடாக இந்திய பிரதமர் வெளிப்படுத்தியிருக் கலாம் என்பது எமது ஓர் அவதானிப்பாகும்.

வரலாறு சொல்லுகின்ற உண்மைகளை புறம்தள்ளிவிட்டு அரசியலை நாம் மதிப்பீடு செய்ய முடியாது.இலங்கைத்தீவில், சிறீலங்கா அரசு ஒரு சிங்கள மேலாதிக்க, இனவாத அரசாக இருக்கின்ற ஒருநிலையும், இலங்கையின் ஜனநாயகம் என் பது, இனநாயகமாக இயங்குகின்ற நிலையும் உலகம் அறிந்த தொன்று. பல உலக அறிஞர்கள் இதனைச்சுட்டிக்காட்டி இருக் கிறார்கள்.

இதனால் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் என்ன வென்றால், தமிழ் மக்களுடைய தேசிய பிரச்சினையை தீர்வு காண்பதற்குரிய ஒரு அரசியல் சமூகமோ (Polity), தீர்வு காண் பதற்குரிய ஒரு அரசியல் விருப்போ தென்னிலங்கையில் இருப் பதாக வரலாறு நமக்கு காட்டவில்லை. தற்போதைய நிலையும் அவ்வாறுதான் இருக்கின்றது. தற்போதைய தேசியமக்கள் சக்தி அரசாங்கம் இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை என ஒன்று இருப்பதைக்கூட இதுவரை அங்கீகரிக்கவில்லை. இப்படியான ஒருசூழலில், தமிழ் மக்களுடைய தேசிய இனப்பிரச்சினைக்கு சிறீலங்காவின் அரசகட்டமைப்புக்குள் தீர்வைக் காண்பது என்று எதிர்பார்ப்பது அர்த்தம் அற்றது. இந் நிலையில் இந் தியஅரசு சிறீலங்கா அரசிடம் வேண்டுகோள் விடுப்பது எந்த விதமான மாற்றத்தையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்தி விடப் போவதில்லை.

இந்த விடயங்களை நாம் சுட்டிக் காட்டுகின்ற அதேவேளை தமிழ் மக்களுடைய தேசிய இன உரிமைகளை தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், ஒரு தேசம் என்பதனையும் தமிழ் மக் களுக்கு வடகிழக்கும் அதை அண்டிய கடலும் பாரம்பரியமாக தாயகமாக உள்ளது என்பதனையும், தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையையும் அங்கீகரித்து அதன் அடிப்படையில் இந்திய - ஈழ உறவைக் கட்டியெழுப்ப இந்திய அரசு முன்வர வேண்டும் என நாம் வேண்டுகிறோம்.

தமிழர் தலைவிதி தமிழரின் கையில்!
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்!

# "தமிழர் தாயகம் தமிழர் இல்லாத மாயம்' குடிசன மதிப்பீட்டில் அதிர்ச்சித் தகவல்...!

பா. அரியநேத்திரன்



15.04.2025

"குடிசன தொகைமதிப்பு 2024" அறிக்கை கடந்த (07.04. 2025) ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் கையளிக் கப்பட்டது.

2012ல், இலங்கையின் சனத்தொகை 2 கோடியே 40 இலட்ச மாக குறிப்பிடப்பட்டது. தற்போது 12 வருடங்கள் கடந்து 2024ல் எடுக்கப்பட்ட சனத்தொகை புள்ளிவிரம் ஒப்பிடுகையில் சனத் தொகை 14,03731 அதிகரித்து காணப்படுகிறது. 2024 இலங் கையின் மொத்த சனத் தொகை 21,763,170 ஆகும். அதாவது, இரண்டு கோடியே 17 இலட்சத்து 63 ஆயிரத்து 170 ஆகம்.

15 வது தேசிய சனத் தொகை கணக்கெடுப்பு 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கி 2024 முதல் பெப்ரவரி மாதம் 2025 இரண்டாவது வாரம் நிறைவு செய்யப்பட்டது. அதில் இன ரீதியாக, மத ரீதியான விபரம் வெளிவரவில்லை. மொத்த சனத்தொகை புள்ளி விபரத்தை நோக்குகையில் வடக்கு கிழக்கு தாயக தமிழ் மக்களின் தொகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

முழுமையாக இன ரீதியாக புள்ளிவிபரம் வெளியிடும்போது இது அறியலாம்.

***2024ல் மொத்த சனத்தொகையில்...***

**கிழக்கு மாகாணம்:**

1. மட்டக்களப்பு- 595453 பேர்.
2. அம்பாறை- 744150 பேர்
3. திருகோணமலை- 442465 பேர்

**வடமாகாணம்:**

1. யாழ்ப்பாணம்- 594333 பேர்
2. கிளிநொச்சி- 136434 பேர்
3. முல்லைத்தீவு- 122542 பேர்
4. வவுனியா- 172257பேர்
5. மன்னார்- 123674 பேர்

வடக்கு கிழக்கில் சனத்தொகை கூடியமாவட்டமாக அம்பாறை யும் குறைந்த சனத் தொகையுள்ள மாவட்டமாக முல்லைத் தீவையும் பார்க்க முடிகிறது. வடக்கு மாகாணம் இலங்கையில் குறைந்தளவான சனத்தொகையை கொண்ட மாகாணமாக உள்ளது. (இலங்கையிலும் குறைந்த சனத்தொகை கொண்ட மாவட்டமாக முல்லைத்தீவு தொடர்ந்தும் உள்ளது) 2012 சனத் தொகை கணிப்பீட்டுடன் வட கிக்கில் உள்ள எட்டு மாவட்டங் களையும் 2024 கணிப்பீட்டுடன் ஒப்பீடு செய்தால் எனது ஆய் வில் யாழ் மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் சந்தேகம் எழுந்தது.

**வடமாகாணத்தில்...**

2012ல் யாழ்பாணம் 583,882 தொகை 2024ல் 594,333 பேர் கூடியுள்ளனர் மேலதிகமாக 10,451 பேர் மட்டுமே கூடியுள்ளனர்.

2012ல் கிளிநொச்சி 113,510, தொகை 2024ல் 136,434 பேர் கூடியுள்ளனர் மேலதிகமாக 22,924 பேர் கூடியுள்ளனர்.

2012ல் மன்னார் 99,570 தொகை 2024ல் 123,674 பேர் கூடியுள்ளனர் மேலதிகமாக 24,104 பேர் கூடியுள்ளனர்.

2012ல் முல்லைத்தீவு 92,238, தொகை 2024ல் 122,542 பேர் கூடியுள்ளனர் மேலதிகமாக 30,304 பேர் கூடியுள்ளனர்.

2012ல் வவுனியா 172,115 தொகை 2024ல் 172,257, பேர் கூடியுள்ளனர், மேலதிகமாக 142 பேர் மட்டுமே கூடியுள்ளனர்.

மொத்தமாக வடமாகாணத்தில் 2012ல் 1,061,315 சனத் தொகையானது 2024ல் 1,149,239 ஆக அதிகரித்தாலும் மேலதிகமாக 87,925 மக்கள் தொகை மட்டுமே கூடியுள்ளது.

**கிழக்கு மாகாணத்தில்...**

2012ல் மட்டக்களப்பு 526,567 தொகை 2024ல் 595,453 மேலதிகமாக 68,886 பேர் கூடியுள்ளனர்.

2012ல் அம்பாறை 649,402 தொகை 2024ல் 744,150 மேலதிகமாக 94,748 பேர் கூடியுள்ளனர்.

2012ல் திருகோணமலை 379,541 தொகை 2024ல் 442,465 மேலதிகமாக 62,924 பேர் கூடியுள்ளனர்.

மொத்தமாக கிழக்கு மாகாணத்தில் 2012ல் 1,555,510 சனத் தொகையானது 2024ல் 1,782,065 ஆக அதிகரித்துள்ளது மேலதிகமாக 226,544 மக்கள் தொகை மட்டுமே கூடி யுள்ளது. (இதில் தமிழர்களை விட இஷ்லாமிய மக்களே அதிகள வில் உள்ளதாக கருதலாம்)

ஆச்சரியம் என்ன வெனில்.. 2012 சனத்தொகை கணிப்பீட் டுக்கு பின்னர் 2024, தற்போது 12 வருடங்களில் பின்னர் யாழ் மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் ஏன் இவ்வாறு சடுதி யாக மக்கள் தொகை குறைந்தனர் என்பதை ஆராயப்பட வேண்டும் அதிலும் வவுனியா மாவட்டத்தில் 142 பேர் மட்டுமே 12 வருடங்களில் கூடியுள்ளனர் கணிப்பீட்டில் தவறா அல்லது அந்த இரண்டு மாவட்டங்களில் அதிகளவான மக்கள் நாட்டை விட்டுச்சென்றனரா? வேறு மாவட்டங்களில் குடியமர்த்தப்பட் டனரா? அல்லது பிறப்பு வீதம் குறைந்ததா? இதனை மீளவும் சமூக ஆர்வலர்கள் கணக்கில் கொள்வது அவசியம் என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

இனம் இல்லாத நிலத்தால் எந்த முன்னேற்றமும் இல்லை நிலத்தை பாதுகாக்க இனம் முக்கியமானது.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஆரம்பத்தில் 1977ல் 10 பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தது.

பின்னர் 8, 7, 6 என பிரதி நிதித்துவம் குறைந்து வந்துள்ளது. இறுதியாக 2024 பொதுத் தேர்தலில் 6 பாராளுமன்ற உறுப் பினர்கள் மட்டுமே யாழ் மாவட்ட தேர்தல் மாவட்டத்தில் கிளி நொச்சியையும் உள்ளடங்கலாக தற்போது உள்ளனர்.

இது எதிர்வரும் 2030ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 5 பாராளுமன்ற உறுப்பினர்களாக மாறும் அபாயம் உள்ளது. இதேபோல் கிழக்கு மாகாணத்தில் மொத்த சனத்தொகையில் இன ரீதியிலான கணக்கெடுப்பு புள்ளிவிபரப்பட்டியல் வந்த பின்னர் முதல் இடத்தை முஷ்லிம் மக்கள், இரண்டாம் இடம் தமிழர்கள் என்ற கணிப்பு நிச்சயம் வரும்.

அதில் அம்பாறை மாவட்டத்தில் முஷ்லிம் மக்களின் சனத் தொகை பாரிய அதிகரிப்பை காட்டும்.

அதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2012 கணிப்பீட்டில் தமிழர்கள் 72.61 வீதமாகவும், முஷ்லிம் மக்கள் 25.49 வீதமாகவும், சிங்களவர் 1.17 வீதமாகவும் சனத்தொகை இருந்தது.

தற்போதைய 2024, புள்ளிவிபரம் முழுமையாக வெளி யிடப்பட்ட பின்னர் அவதானித்தால் நான் நினைக்கிறேன் மட்டக்களப்பில் தமிழர் 68 தொடக்கம் 70 வீதத்திற்கு குறையக் கூடிய நிலை வரலாமோ தெரியாது. அடுத்த 12 வருடத்திற்கு பின்னர் அதாவது 2036ஆம் ஆண்டு கணக்கெடுக்கும்போது கிழக்கில் தமிழர்களின் விகிதாசாரம் மூன்றாவது நிலையில் வரக்கூடிய அபாயம் உள்ளது தொடர்ந்து தமிழர்களின் பிறப்பு வீதம் குறையுமானால் இது நடக்கும், நிலங்களைக்கூட தக்க வைக்க முடியாமல் இழக்கும் நிலை ஏற்படலாம்.

வடமாகாணத்தில் சனத்தொகை புள்ளி விபரம் இப்படி தமிழர்கள் குறைவாக இருக்கும் நிலையில் வடமாகாண கல்வி அமைச்சு வெளியிட்ட இன்னும் ஒரு தகவல் பேரதிர்ச்சியை தந்துள்ளது.

50 மாணவர்களுக்கு குறைவான 56 பாடசாலைகளை மூட வுள்ளதாகவும் வடமாகாணத்தில் 13 கல்வி வலையத்தில் 981 பாடசாலைகளில் 2 இலட்சத்து 29 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்பதாகவும் 451 பாடசாலைகளில் 100 க்கு குறைவான மாணவர்கள் கல்வி கற்பதாகவும். அதில் 265 பாடசாலைகளில் 50 க்கு குறைவான மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

**அந்த 265 பாடசாலைகளில்**

யாழ்மாவட்டத்தில்- 95
கிளிநொச்சி- 20
மன்னார்- 41
வவுனியா- 72
முல்லைத்தீவு- 37

பாடசாலைகள் என குறிப்பிடப்பட்டுள்ளது இந்த சகல பாட சாலைகளும் தமிழ்பாடசாலைகளாம்.

இதேநிலைதான் கிழக்கில் தமிழ் பிரதேசங்களிலும் உள்ளது.

தமிழ் மக்களின் இடப்பெயர்வு, மத்திய கிழக்கு நாடுகளில் வேலைக்காக சென்றது மட்டும் காரணங்களை காட்டி இதனை சமாளிக்க முடியாது. உண்மையில் தமிழ்மக்கள் ஏனைய இனங்களுடன் ஒப்பிடும்போது பிறப்பு இரு பிள்ளைகளுடன் பொருளாதாரம், வேலைப் பழுவை காரணம் காட்டி நிறுத் துவதும் இதற்கான அடிப்படைக் காரணம் என்பதும் உண்மை. எதிர்காலத்தில் இதற்கான திட்டம் என்ன என்பதை இப்போதே சிந்திக்க தவறினால் தமிழர்தாயகம் தமிழர் இல்லாத மாயமாக மாறும்.

# நில ஆக்கிரமிப்பு! மத ஆக்கிரமிப்பு! மொழி ஆக்கிரமிப்பு!

# முடிவுறாத ஜே.வி.பியின் பேரினவாதம்

– நவீனன் –

21.04.2025

ஈழத் தாயகத்தில் தொடரும் பேரினவாத ஆக்கிரமிப்புகளின் விளைவாக தமிழ் தேசிய இனத்தின் இருப்பு சிதைவடைகிறது. ஒரே மொழியும், கலாசாரமும் கொண்ட மக்களின் கூட்டமைப்பே ஒரு தேசிய இனம் என்று அழைக்கப்படுகிறது.







நீண்டகால தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் 2009 இல் மௌனிக்கப்பட்டதன் பின்னர், சிறிலங்காவில் ஆட்சியேறும் பேரினவாத கட்சிகள் தமிழர்களின் தாயக கோட்பாட்டை சிதைப்பதிலேயே முனைப்பாக இருக்கின்றனர்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் உருவெடுத்த ஒரு தொன்மையான மூத்த இனமான தமிழர் உலகெங்கும் பரந்து வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் தமிழ் மொழி பழமை வாய்ந்த மூத்த மொழியாகவும் அறியப்பட்டது.

தமிழ் மொழியின் எதிர்கால இருப்புக்கு தமிழர்களின் தாயகம் விடுதலை அடைய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஆனால் தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களை அழிக்க தொடரும் சிங்கள ஆட்சியாளர்கள் ஒரே நாடு, ஒரே இனம் என்ற அடிப்படையில் தமிழர்களின் உரிமைகளை பறிக்க முயல்கின்றனர் என்பதை பலரும் அறியாமல் உள்ளனர்.

## தமிழ் தேசிய தாயகம் :

ஒரு தேசிய இனம் வாழும் நிலப்பகுதி, எல்லைகளோடு கூடிய நிலப்பரப்பு, ஒரு நாடாக அழைக்கப்படுகிறது. அத்துடன் ஒரு தேசம் என்பது மரபு வழியாக ஒரு மொழி, கலாசாரம் கொண்டதாக இயங்க வேண்டும்.

தேசிய இனம் வாழும் நிலப்பகுதி, எல்லைகளோடு கூடிய தமிழர் மண்ணில், மாற்றங்களை உருவகித்து - தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வு காண வந்த அநுரவின் அரசு, அரியணை ஏற 5 மாதங்கள் முடிவடைகின்றது.

கடத்த பொதுத் தேர்தலில், ஜேவிபி 2/3 பெருன்பான்மையுடன் முழுமையாக அதிகாரத்திற்கு வந்தும், இதுவரை எந்தவித தீர்வையும் முன்மொழியக் கூட இல்லை என்பது வெளிப்படையாக தெரிகிறது.

சிறீலங்கா அரசின் இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்கும் 3,575.29 ஏக்கர் நிலப்பரப்பை யாழ்ப்பாணத்தில் மீள பெற்று கொடுப்பதாக வழங்கிய வாக்குறுதி தொடர்பாக எந்தவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

ஏன் அண்மையில் ஜனாதிபதியின் யாழ் விஜயத்தில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது தெளிவாகிறது.

தமிழர்களின் பொருளாதாரத்திற்கு கணிசமாக பங்களிக்க கூடிய வளமான 2,624.29 ஏக்கர் தனியார் காணிகளிருந்து பூர்விக தமிழ் மக்களை விரட்டி விட்டு இராணுவம் விவசாயம் முதல் வியாபாரம் வரை செய்வதை வேடிக்கை பார்க்கின்றது ஆளும் அரசு.

தமிழர் தாயகத்தில் இது போதாதென்று 72,348 ஏக்கர் நிலத்தை வன ஜீவராசிகள் திணைக்களம் ஆக்கிரமித்துள்ளது. இதில் 14,171 ஏக்கர் நிலம் மக்கள் ஏற்கனவே வாழ்ந்த நிலங்களாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. அதே போல வன வள திணைக்களத்திடம் மட்டும் 5,000 ஏக்கர் நிலம் சிக்கி இருக்கின்றது என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

## தையிட்டி சட்டவிரோத விகாரை:

சட்ட விரோதமாக தமிழர் நிலத்தை ஆக்கிரமித்து விட்டு அங்குள்ள வெறும் இரண்டரை கிலோ மீட்டர் வீதியை பயன்படுத்த விட்டனர். ஆனாலும் சட்டவிரோதமாக நிபந்தனைகளை விதித்து அதனை மீறினால் சட்ட நடவடிக்கை என்றும் இந்த அரசின் கைக்கூலிகள் மக்களை அச்சுறுத்துகின்றார்கள்.

மறுபுறம் தையிட்டி சட்டவிரோத விகாரை சூழலில் புதியகட்டுமானமொன்றை அரச ஊழியலாரான உயர் பொலிஸ் அதிகாரி மூலம் திறந்து வைக்கின்றார்கள்.

**தமிழ் மொழியின் எதிர்கால இருப்புக்கு தமிழர்களின் தாயகம் விடுதலை அடைய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஆனால் தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களை அழிக்க தொடரும் சிங்கள ஆட்சியாளர்கள் ஒரே நாடு , ஒரே இனம் என்று தமிழர்களின் உரிமைகளை பறிக்க முயல்கின்றனர் என்பதை பலரும் அறியாமல் உள்ளனர்**

இதற்கெதிராக போராடும் நில சொந்தக்காரர்களான பூர்விககுடி மக்களை பயங்கரவாத விசாரணை பிரிவு மூலம் அச்றுத்துகின்றார்கள்.

அது மாத்திரமன்றி நெடுந்தீவு முதல் மருதன்கேணி வரையில் கடற்தொழிலை நம்பி வாழும் 50,000 குடும்பங்களின் கோரிக்கைகளில் ஒன்றான இழுவை மடி வலைகளை தடைசெய்யும் சட்டத்தை நடைமுறைப் படுத்த முடியாமல் இருக்கின்றார்கள்.

விசேடமாக சட்டவிரோத சுருக்கு வலை உட்பட்ட சட்டவிரோத தொழில்கள் குறித்து ஆட்சியாளர்களுக்கு எந்த புரிதலுமில்லை என்பதே உண்மையாகும்.

## தேசிய இனம் என்பது என்ன?

ஓர் இனக்குழு மூலத்திலிருந்து தோன்றிய பழங்குடிகள் பொது மொழி அடிப்படையில் இனமாக ஒருங்கிணைந்து வளர்ந்து, கால வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியில் பொது மொழியும் பொது பண்பாடும் கொண்டு நிலைத்துவிட்ட சமூகம் ஒரு தேசிய இனமாக விளங்கும்.

மொழி அடிப்படையில்தான் ஒரு தேசிய இனம் உருவாகிறது. மத அடிப்படையிலோ, மரபின அடிப்படையிலோ ஒரு தேசிய இனம் உருவாகவே முடியாது.

மொழி பேசுகிற இனம் தனக்கென ஒரு நாடும் கொண்டிருந்தால், ஒரு நீண்ட வரலாறு கொண்டு ஒரு தொடர் நிலத்தில் அந்த இனம் வாழ்ந்தால், அது தேசிய இனமாகிறது.

## ஆனையிறவு உப்பள விவகாரம்:

போரின் பின்னர் சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளை பாதுகாப்பதற்கான எந்த பொறி முறைகளுமில்லை. ஆனையிறவு உப்பள விவகாரத்தில் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பை பெற்று கொடுக்க மறுத்துவிட்டு உப்பின் பெயரில் விளையாடி கொண்டு இருக்கின்றார்கள்.

பனை அபிவிருத்தி சபை, திக்கம் வடிசாலை, வட கடல் நிறுவனம் உட்பட்ட நிறுவனங்களை வினைத்திறனாக இயக்குவது குறித்து வெறுமனே பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

கூட்டுறவு அமைப்புகள் இப்போதும் கூட கவனிப்பாரற்று முயற்சி

களுமின்றி முடங்கி போய் கிடக்கின்றன. உள்ளூர் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகள், சந்தை கழிவு நெருக்கடிகள், உரிய காலத்தில் உரத்தை பெற்றுகொடுத்தல் என்பனவெல்லாம் இன்னமும் வாக்குறுதிகளாகவே இருக்கின்றன.

## இந்திய மீனவர் ஆக்கிரமிப்பு!

ஒரு நீண்ட வரலாறு கொண்டு ஒரு தாயக கடல் வளம், இந்திய மீனவர் ஆக்கிரமிப்புகளால் இப்போது பாரிய அச்சுறுத்தலுக்கு ஆளாகி உள்ளது. தமிழ் மீனவர்கள் வாரத்திற்கு மூன்று நாட்கள் தொழிலுக்கு போக முடியாமல் அல்லல்படுகின்றார்கள்.

மேய்ச்சலுக்காகவும், இருப்புக்காகவும், விருத்திக்காகவும் மீன்கள் வந்து நடமாடும் கடற்காணிகளை கடலட்டை பண்ணை என்கிற பெயரில் முறை தவறி வழங்கும் செயல்களும் அப்படியே தொடருகின்றன.

யாழ்ப்பாணத்தின் ஒரே ஒரு மீன்பிடி துறைமுகமான மயிலிட்டி துறைமுகம் இப்போது கூட முழுமையாக தமிழ் மீனவர்களால் பயன்படுத்த முடியாமலிருக்கின்றது.

குறிப்பாக யாழ்ப்பாண நகரை இலக்கு வைத்து இந்திய வர்த்தகர்கள் படையெடுக்கின்றார்கள். அதே போல பருவகாலங்களில் தென்னிலங்கை வர்த்தகர்கள் தமிழ் வர்த்தக நிலையங்கள ஆக்கிரமிக்கின்றார்கள்.

## ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள்:

யாழ்ப்பாணத்தில் மட்டும் நிலவும் 1,503 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள், சுகாதார ஊழியர்கள் நெருக்கடிகள் என எதற்கும் தீர்ப்பதற்கான முயற்சிகளில்லை.

சுகாதாரம் மற்றும் கல்வி கட்டமைப்புகள் எதிர்கொள்ளும் வள நெருக்கடிகளும் எந்த மாற்றமுமின்றி தொடருகின்றது. யாழ்ப்பாண மக்களுக்கான குடிநீர் பிரச்சினை அரசியலாகி இப்போதும் சிக்கி சீரழிகின்றது.

இது தவிர பாதுகாப்பற்ற புகையிரத தடவைகள், வீதிவிளக்குகள், வீதி சமிச்சை விளக்குகள் என ஆயிரக்கணக்கான பிரச்சனைகள் நெருக்கடிகளாகவேஇருக்கின்றன. இது போதாதென்று யாழ்ப்பாணம் போதைவஸ்து கடத்தலின் கேந்திர நிலையமாகவே மாறிவாருகின்றது.

இதன் பிண்ணனியில் கடற்படை அதிகாரிகள் இருப்பதால் ஆட்சியாளர்கள் மிக அமைதியாக இருக்கின்றார்கள். மிகவிசேடமாக பலவந்தமாக காணாமலாக்கப்பட்டோர் நெருக்கடி முழுமையாகவே மறக்கப்பட்டு விட்டது.

போர் வீரர்களை பாதுகாப்போம் என ஆட்சியாளர்கள் பேசுவதால் இந்த அவலங்களை பேசுவதெல்லாம் இனவாதம் என்கின்றார்கள். ஆனால் யாழ்ப்பாணத்திற்கு வரும் அநுரா குமார திசாநாயக்க உட்பட்ட ஜேவிபி தலைமைகள் இலங்கையராக வாயச்சவாடலாக ஒன்றிணைவோம் என்கின்றார்கள்.

அத்துடன் சிறீலங்காவில் இனவாதம் ஒழிக்கப்பட்டு விட்டதாக கூச்சமில்லாமல் பொய் சொல்லமளவிற்கு போலி அரசியலை நடாத்துகின்றனர்.

இது போதாதென்று ஊழலை ஒழிப்போம் என மீண்டும் மீண்டும் சொல்லுகின்றார்கள். இங்கே வெறும் ஐந்து மாத காலப்பகுதியில் நீண்டகால நெருக்கடிகளை தீர்த்து விட முடியாது என்கின்ற போதும் எந்த முயற்சிகளுமில்லை என்பது தான் சிக்கலாக இருக்கின்றது.











# தெள்ளும் வேண்டாம் நாயும் வேண்டாம்; தேசத் திரட்சியே வேண்டும்!

16.04.2025



பிரதமர் ஹறினி மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு வருகை தந்துள்ளார். 50 ஆண்டுகளுக்குப் பின் நடந்த கும்பாபிஷேக வைபவத்தில் அவர் விருந்தினராக வரவேற்கப்பட்டுள்ளார். அங்கே தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரையும் காண முடியவில்லை.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குத் தமிழ் மக்களின் போராட்டத்தில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் உண்டு. 1968 ஜூன் மாதம் சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் போராடி வெற்றி பெற்ற கோவில் அது. அந்தப் போராட்டத்திற்கு கலாநிதி சண்முகதாசன் தலைமையிலான சீன சார்பு கொம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கியது; வெற்றி பெற்றது. ஆனால் இங்குள்ள முரண் என்னவென்றால் அந்தப் போராட்டத்தில் கொம்யூனிஸ்ட் கட்சி போராடும் தரப்பின் பக்கம் நின்று தலைமை தாங்கியது. தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தராகிய சுந்தரலிங்கம் ஒடுக்கும் தரப்பின் பக்கம் நின்றார். குறிப்பிட்ட சில சமூகப் பிரிவைச் சேர்ந்தவர்களை கோவிலுக்குள் அனுமதிக்க கூடாது என்ற தரப்பின் பக்கம் சுந்தரலிங்கம் நின்றார்.

அவர் அடங்காத் தமிழன் என்று அழைக்கப்பட்டவர். எனினும் சமூக விடுதலை இல்லாத தேசிய விடுதலை என்பது விடுதலையே அல்ல என்ற அடிப்படை விளக்கம் அவரிடம் இருந்திருக்கவில்லை. ஆனால் இது நடந்து கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகளின் பின் 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபொழுது சமூக விடுதலை இல்லாமல் தேசிய விடுதலை இல்லை என்ற கொள்கை விளக்கம் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் உருவாகியிருந்தது. எனினும் இப்பொழுதும்கூட தமிழ்த்தேசிய முகமூடி அணிந்திருக்கும் பலரிடம் இந்த விளக்கம் இல்லை. அல்லது அது அவர்களுடைய வாழ்க்கை முறையாக இல்லை.

சீன சார்புக் கொமியுனிஸ்ராகிய சண்முகதாசன்(சண்) தமிழர்களுடைய விடுதலைப் போராட்டம் தொடர்பில் விமர்சனங்களைக் கொண்டிருந்தாலும் தெளிவான ஆதரவு நிலைப்பாட்டையும் கொண்டிருந்தார். கட்சியின் இளையோர் அணிக்குத் தலைவராக இருந்த ரோகன விஜயவீர 1964இல் கட்சியிலிருந்து பிரிந்து 1965இல் ஜேவிபியை உருவாக்கினார். "ஜேவிபி ஓர் அரைப்பாசிச, இனவாத அமைப்பு" என்று சண்முகதாசன் குற்றம் சாட்டினார். ஜேவிபியின் முதலாவது கொழும்புக் கூட்டத்திலேயே அதன் வகுப்புவாதத்தை அம்பலப்படுத்தி சண்முகதாசனின் கட்சியின் தோழர்கள் துண்டுப் பிரசுரம் விநியோகித்தார்கள். பின்னர் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபோது சண் பின்வருமாறு கூறினார்... "பழைய இடதுசாரிக் கட்சிகள் இந்திய விஸ்தரிப்பு வாதத்தை எதிர்க்கத் தவறியதால் வகுப்புவாத, அரைப் பாசிச ஜேவிபி சிங்கள இனத்தின் இரட்சகராகத் தோன்றி இந்திய விஸ்தரிப்பு வாதத்தை எதிர்த்தது. அரசாங்க எதிர்ப்பு, தமிழர் எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு உணர்வுகளை ஜேவிபி நன்கு பயன்படுத்திக் கொண்டது" இத் தகவல்களை சண் எழுதிய "ஒரு கம்யுனிச போராளியின் அரசியல் நினைவுகள்" என்ற நூலின் 332ஆம் பக்கத்தில் காணலாம்.

ரோகண விஜயவீர உருவாக்கிய ஜேவிபியை அடித்தளமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இப்பொழுது ஆட்சி செய்கின்றது. 1965இல் ஜேவிபி உருவாக்கப்பட்டு மூன்று ஆண்டுகளின் பின் மாவிட்டபுரம் ஆலய பிரவேசப் போராட்டம் இடம்பெற்றது. இப்படிப்பட்டதோர் பின்னணியில், பிரதமர் ஹறிணி மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு வந்தது. தற்செயலானதா ?அல்லது திட்டமிடப்பட்டதா?

பிரதமர் ஹறிணி அவருடைய வடக்கு விஜயத்தின் போது அவர் எங்கெங்கே போகிறார் என்று பார்த்தால் தமிழ்த்தேசிய நிலைப்பாடு தொடர்பாக விமர்சனங்களை கொண்ட அல்லது தமிழ்த் தேசிய நிலைப்பாடு தொடர்பில் முழு உடன்பாடு இல்லாத இடங்கள், நபர்களைத் தேடிச் அவர் செல்வது தெரிகிறது.

ஹறிணி மட்டுமல்ல அரசாங்கத்தின் பிரதானிகள் அடிக்கடி வடக்குக்கு வருகிறார்கள். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சபைகளை கைப்பற்றும் நோக்கத்தோடு தீயாக வேலை செய்கிறார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அவர்களுக்கு கொடுத்த வெற்றி அவர்களை உற்சாகப்படுத்தியுள்ளது. அந்த வெற்றியை அவர்கள் வெளியரங்கில் குறிப்பாக டெல்லியிலும் ஐநாவிலும் ஒரு மக்கள் ஆணையாக காட்டி பேசுகிறார்கள். இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு தமிழ் மக்கள் தங்களுக்கு ஆணை வழங்கியிருப்பதாக அதை வியாக்கியானப்படுத்துகிறார்கள். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் யாழ். தேர்தல் தொகுதியில் கிளிநொச்சியில் மட்டும் தமிழரசுக் கட்சிக்கு ஓர் ஆசனம் கிடைத்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனம் கூட கிடைக்கவில்லை. தேசிய மக்கள் சக்திக்கு மொத்தம் மூன்று ஆசனங்கள் கிடைத்தன. அந்த வெற்றியை அடுத்த கட்டத்திற்கு விஸ்தரிப்பதன் மூலம் தமிழ் மக்களின் ஆணை தமக்கே அதிகம் உண்டு என்று அவர்கள் நிரூபிக்க முயற்சிக்கிறார்கள். கடந்த நாடாளுமன்ற தேர்தலின் பின் தமிழ் தரப்பு எனப்படுவது தமிழ் தேசிய தரப்பு மட்டுமல்ல என்ற ஒரு வாதத்தை அவர்கள் முன்வைத்து வருகிறார்கள். அந்த வாதத்தை மேலும் பலப்படுத்துவதற்காக அவர்களுக்கு உள்ளூராட்சி சபைகளில் வெற்றி தேவைப்படுகிறது.

அந்த வெற்றியை நோக்கி அவர்கள் தீயாக வேலை செய்கிறார்கள். 34 ஆண்டுகளின் பின் பலாலி வீதியைத் திறந்ததும்





அந்த நோக்கத்தோடுதான். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து 15 ஆண்டுகளின் பின்னர் தான் ஒரு பிரதான வீதியை அதுவும் யாழ்குடா நாட்டின் நெஞ்சை ஊடறுத்துச் செல்லும் ஒரு வீதியைத் திறக்க முடிகிறது என்றால் யுத்தத்தில் அவர்கள் பெற்ற வெற்றியின் பொருள் என்ன? போருக்கு பின்னரான அரசியல் என்பதன் பொருள் என்ன? நிலை மாற்றம் என்று ஜநா கூறுவதன் பொருள் என்ன? 15 ஆண்டுகளின் பின்னரும் கூட அந்தப் பாதையை முழுமையாக திறக்க முடியவில்லை என்பதை தான் அந்தப் பாதை வழியே நிறுத்தப்பட்டிருக்கும் அறிவிப்பு பலகை காட்டுகின்றது. அந்தப் பலகையில் பின்வரும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

காலை 6:00 மணியிலிருந்து பிற்பகல் 6:00 மணி வரையிலும் தான் அந்த பாதையைப் பயன்படுத்தலாம். பயணிகள் பேருந்துகள் தவிர ஏனைய கனரக வாகனங்களுக்கு அனுமதி இல்லை. வாகனங்களை இடையில் நிறுத்தவோ திருப்பவோ கூடாது. வாகனங்கள் குறிப்பிட்ட வேகத்தில்தான் பயணம் செய்ய வேண்டும். வாகன சாரதிகள் தேவையான ஆவணங்கள் அனைத்தையும் கைவசம் வைத்திருக்க வேண் டும். அந்த வழியால் யாரும் நடந்து போக முடியாது. அந்த வழியில் இரு புறங்களிலும் உள்ள உயர் பாதுகாப்பு வலையத்தை யாரும் படம் எடுக்க முடியாது. இவைதான் விதிகள். இந்த விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்டப்படி நட வடிக்கை எடுக்கப்படும் என்று அந்த அறிவித்தல் கூறுகின்றது.




எந்த சட்டத்தின் அடிப்படையில் அந்த அறிவித்தல் பலகை அங்கே வைக்கப்பட்டிருக்கிறது என்று சுமந்திரன் கேள்வி கேட்டிருக்கிறார்.

அந்த அறிவிப்பு ஏறக்குறைய போர்க்காலத்தை நினைவுபடுத்துவது. ஒரு போர்க்காலத்தில் அப்படிப்பட்ட பாதையால் போகும்போது அவ்வாறான நிபந்தனைகள் விதிக்கப்படுவதுண் டு. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த 15 ஆண்டுகளின் பின்னரும் அவ்வாறான நிபந்தனைகளை விதிப்பதன் பொருள் என்ன? நாடு யாருக்குப் பயப்படுகின்றது? உயர் பாதுகாப்பு வலையங்கள் இல்லாத பாதுகாப்பான ஒரு நாட்டை ஏன் சிங்கள பௌத்த அரச கட்டமைப்பால் கட்டியெழுப்ப முடியவில்லை? சிங்கள பௌத்த அரச சிந்தனை அல்லது மகாவம்சம் மனோநிலை எனப்படுவது எப்பொழுதும் தற்காப்பு உணர்வோடு எதிரிக்கு எதிரான அச்சத்தோடு முள்ளுக் கம்பிகளுக்குள் இருப்பதுதானா?

தேர்தல் காலத்தில் பாதை திறக்கப்பட்டமை தேர்தல்



நோக்கங்களைக் கொண் டதா என்று வழக்கறிஞர் கே.எஸ்.ரட்னவேல் கேள்வி எழுப்பி உள்ளார். கொழும் பில் இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகைக்கு வழங் கிய பேட்டியில் அவர் அவ் வாறு கேட்டிருக்கிறார். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மதிப்புக்குரிய ஒரு சட்டச் செயற்பாட்டாளர் அவர்.

ஏற்கனவே நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல்களை முன்னிட்டு தமிழ்ப் பகுதிகளில் காணப்பட்ட சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டதையும் வீதித் தடைகள் அகற்றப்பட்டதையும் குறிப்பாக பலாலி பகுதியில் ஒரு கிலோ மீட்டர் தூரமான ஒரு பகுதி விடுவிக்கப்பட்டதையும் இங்கு நினைவூட்ட வேண்டும்.

ஆனால் அவ்வாறு திறக்கப்பட்ட பெரும்பாலான வீதித் தடைகளும் சோதனைச் சாவடிகளும் பின்னர் மீண்டும் தேர்தல்கள் முடிந்ததும் முளைத்து விட்டன. குறிப்பாக ஆனையிறவு மண்டை தீவின் நுழைவாயில், புங்குடு தீவின் நுழைவாயில், வன்னியில் உள்ள சோதனைச் சாவடிகள் போன்ற பல சோதனைச் சாவடிகள் அல்லது வீதித் தடைகள் தொடர்ந்தும் இயங்கி வருகின்றன. சில மாதங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஐநாவின் வதிவிடப் பிரதிநிதியிடம் இது தொடர்பாக சிவில் சமூகங்கள் சுட்டிக்காட்டியிருந்தன.

தேர்தல் நோக்கங்களுக்காக அரசாங்கம் பாதைகளை திறக்கின்றது. தேர்தல் தேவைகளுக்காக அரச வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தேர்தல் வெற்றியை இலக்காக வைத்து அதாவது நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மேலும் உறுதிப்படுத்தி பலப்படுத்த வேண்டும் என்ற இலக்கோடு தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் வடக்கு கிழக்கில் தீவிரமாக செயற்பட்டு வருகிறார்கள்.

“வெற்றி நமதே ஊர் எமதே” என்பது தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான தமிழ்க் கோஷமாகக காணப்படுகிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு அது எதிர்பார்க்கும் வெற்றிகள் கிடைக்குமாக இருந்தால் தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாகக் கருதவில்லை; தங்களை ஒரு தேசிய இனமாகக் கருதவில்லை என்று அரசாங்கம் வெளி உலகத்துக்குக் கூறப்போகிறது. தமிழ் மக்கள் இன அழிப்புக்கு எதிராக நீதியைக் கேட்கவில்லை; ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு தீர்வைக் கேட்கவில்லை என்றும் கூறப்போகிறது. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மீது கொண்ட வெறுப்பினால் தமிழ் மக்கள் ‘தெள்ளும் வேண்டாம் நாயும் வேண்டாம்’ என்று தீர்மானித்து வாக்களித்தார்கள். ஆனால் தேசமும் வேண்டாம் என்று தீர்மானித்து வாக்களிக்கவில்லை என்பதை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நிரூபிக்க வேண்டும்.

நன்றி: நிலாந்தன்

# பண்டாரநாயக்கவின் தனிச் சிங்கள சட்டமும்; ஜேவிபியால் சிங்கள மயப்படும் தமிழர் தாயகமும்!

– நவீனன் –

11.04.2025

தமிழர் தாயகத்தில் உள்ள நிர்வாக கட்டமைப்புகளை மிக மிக தீவிரமாக தற்போதய அனுர அரசும் திட்டமிட்டு சிங்கள மயப் படுத்தி வருகின்றது. அதன் ஒரு வெளிப்பாடாகவே இந்தியப் பிரதமர் மோடியின் வருகையின் போது தமிழ் மொழி முழுமை யாக புறக்கணிக்கப்பட்டது.

1956 ம் ஆண்டில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் தனிச்சிங்கள சட்டமே ஈழத்தில் நீண்ட காலமாக நடக்கும் இனப் போராட்டத்தின் மூல காரணி என்பதை இந்த அரசும் மறந்து போய்விட்டது போல தோன்றுகிறது.

இனப் பிரச்சினைக்கு அடிப்படை காரணம் மொழி வெறி என்பது தான் காரணம் என்றாலும், தற்போது ஆளும் இடதுசாரி அரசும் சிங்கள மொழிக்கே தொடர்ந்தும் முன்னுரிமை கொடுத்து வரு கிறது.




## மோடிக்கு தமிழில் வரவேற்பு இல்லை:

இந்தியப் பிரதமர் இலங்கைக்கு ஏப்ரல் 4இல் வருகை தந்த வேளை தமிழ் வரவேற்பு பாதைகைகள் எங்குமே வைக்கப்பட இல்லை.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது மூன்று நாள் உத்தி யோகபூர்வ இலங்கைப் பயணத்திற்காக கொழும்பில் வந் தடைந்த போது, தலைநகர் முழுவதும் பெரிய விளம்பரப் பலகைகள் மற்றும் வரவேற்புப் பதாகைகள் காணப்பட்டன. ஆனால் குறிப்பாக எந்த தமிழ் மொழி உள்ளடக்க வரவேற்பு பதாகைகள் இருக்கவே இல்லை.

தமிழ் உலகின் பழமையான வாழும் மொழி, மற்றும் இந்திய பாரம்பரியத்தின் புதையல் என்ற பிரதமர் மோடியின் அறிவிப் புகள் உட்பட, மோடி மீண்டும் மீண்டும் தமிழ் மொழியின் மீதான அபிமானத்தைப் பாராட்டிய போதிலும், இலங்கை அரசு அதன் செய்தியில் இந்த உணர்வுகளை முழுமையாக புறக் கணித்ததாகத் தோன்றியது.

அத்துடன் மத்திய கொழும்பில் கட்டப்பட்ட முக்கிய பதாகைகள் சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே எழுதப்பட்டிருந்தன. சிறீலங்கா நாட்டின் அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்றான தமிழை முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டிருந்தது.

இலங்கையில் இந்திய முதலீடு அதிகரித்து வரும் நிலையில் மோடியின் வருகை நிகழ்ந்துள்ளது. இதில் எரிசக்தித் திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவை அடங்கும். அவற்றில் பல தமிழர் தாயகத்தில் மையப்படுத்திய நிலையில் உள்ளன.

ஆயினும் இலங்கையின் வடகிழக்கு தமிழ் மக்களின் பூர் வீகமே என்பதனை புறக்கணிக்க இந்த அனுர அரசும் முயலு கின்றது.




## 1956 தனிச் சிங்களம் சட்டம் :

ஈழத்திலும் நீண்ட காலமாக நடக்கும் இனப் போராட்டத்தின் மூல காரணியும் மொழியே ஆகும். தனிச் சிங்களம் மட்டும் சட்டம் (Sinhala Only Act) அதிகாரபூர்வமாக 1956 ம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.

அன்றைய காலகட்டத்தில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்க தலைமையிலான இலங்கை அரசாங்கத்தால் 1956 ஆம் ஆண்டு யூன் 5 ஆம் நாள் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. சிங்களம் மட்டுமே இலங்கையின் அரச கரும மொழியாக (Official Language Act) அறிவிப்பின் பின்னரே தமிழ் மக்கள் கொடுமையாக அரசால் ஒடுக்கப் பட்டனர்.



தனிச் சிங்கள சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் இலங்கை யின் ஆட்சிமொழியான ஆங்கில மொழி அகற்றப்பட்டு 70% பெரும்பான்மை சிங்களவர்கள் பேசும் சிங்கள மொழி மட்டுமே ஆட்சி மொழியாக்கப்பட்டது. நீண்ட காலமாக பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்தது. அரசுப் பதவிகளுக்கு ஆங்கிலம் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இருந்தது.

ஆயினும் 1936 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்க சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற இடதுசாரிகளான என். எம். பெரேரா, பிலிப் குணவர்தனா போன்றவர்கள் ஆங்கிலத்திற்குப் பதிலாக




சிங்களம், மற்றும் தமிழ் ஆகியவற்றை ஆட்சிமொழிகளாக்க வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

நவம்பர் 1936 இல், "இலங்கைத் தீவு முழுவதும் உள்ளாட்சிகள் மற்றும் காவல்துறை நீதிமன்றங்களில் உள்ளூர் மொழிக ளிலேயே வழக்குகள் நடத்தப்பட வேண்டும்" மற்றும் "காவல் நிலையங்களில் சாட்சிகளின் மொழிகளிலேயே வழக்குகள் பதியப்பட வேண்டும்" போன்ற சட்டமூலங்கள் அரசாங்க சபை யில் கொண்டுவரப்பட்டு சட்டச் செயலாளருக்கு மேலதிக ஆணைக்காக அனுப்பப்பட்டடன.

## 1944 இல் ஜே. ஆரின் இனவாதம்:



ஆனால் 1944 ஆம் ஆண்டில் ஜே. ஆர். ஜெயவர்தனா ஆங் கிலத்துக்குப் பதிலாக சிங்களத்தை மட்டுமே அதிகாரபூர்வ மொழியாக்க வேண்டும் என அரசாங்க சபையில் கோரினார். இதனூடகவே இனவாதம் இலங்கையில் வேரூன்றியது. ஆனா லும் ஆங்கிலம் தொடர்ந்து 1956 வரை ஆட்சி மொழியாக

**எமது மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் வாழவேண்டும். இந்த இலட்சியம் நிறைவேற வேண்டுமாயின் நாம போராடியே ஆகவேண்டும், இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும்.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

இருந்து வந்தது.




1956இல் சிங்கள மொழி அரசகரும மொழியானது மட்டுமன்றி இந்த சட்ட மூலமே தீவெங்கினும் வாழ்ந்து வந்த சிங்கள - தமிழ் இனங்களிடையே முரண்பாடுகளை உருவாக்கக் காரணமாயிற்று. இதன் பின் தமிழர்கள் செறிந்து வாழ்ந்து வரும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுக் கப்பட்டதுடன் அங்குள்ள அரச நிறுவனங்களில் பணிகள் முடக் கப்பட்டன.

## தந்தை செல்வா தலைமையில் போராட் டங்கள்:

தனிச் சிங்கள சட்டமூலத்தின் காரணமாக அரசுப்பணியில் உள்ள தமிழர்களும் சிங்களம் படிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள்.



இச்சட்டத்தினை தமிழ், மற்றும் சிங்கள இடதுசாரி உறுப் பினர்கள் எதிர்த்தனர். ஆயினும் தமிழர் தரப்பில் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் பல போராட்டங்கள், முன் னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற தமிழர் பகுதிகளில் அரசின் செயற்பாடுகள் இயங்க விடாது செய்யப்பட்டன.



இந்தப் போராட்டங்களையடுத்தே பண்டாரநாயக்கா 1958 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க திருத்தச் சட்டமொன்றை கொண்டு வந்ததுடன் தமிழ் மொழிக்கு சில விட்டுக்கொடுப்புகளை வேண்டா வெறுப்பாக ஏற்படுத்தினார். ஆயினும் இத்திருத் தங்கள் வெறும் கண்துடைப்பாகவே இருந்தன.

அன்று தொடங்கிய ஈழத் தமிழரின் போராட்டம் இன்னமும் ஓயவில்லை. எத்தனையோ இனப்படுகொலைகள் தமிழர் தாயகம் மீது நிகழ்த்தப்பட்டும், சர்வதேசம் இன்னமும் கண்ணை மூடிக் கொண்டே உள்ளது.

## கிழக்கு பல்கலை கழத்தில் சிங்கள மயம்:

இத்தனை ஆண்டுகளாக தமிழர்கள் வஞ்சிக்கப்பட்ட போதும் இன்னமும் சிங்கள அரசு அதனது நிலையை மாற்றவில்லை என்பது மிகவும் கவலைக்கிடமான விடயமாகும்.

தற்போதைய கிழக்கு பல்கலைக்கழகத்தின் மேல் சபையான பேரவையின் (University Council) 15 வெளிவாரி உறுப்பினர் களில் 7 இடங்களுக்கு சிங்கள உறுப்பினர்களை இந்த அரசால் நியமித்திருக்குகின்றார்கள்.

கண்துடைப்புக்காக வெறும் 5 இடங்களுக்கு தமிழ் உறுப் பினர்களும் 3 இடங்களுக்கு முஸ்லிம் உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.



சிறீங்காவில் இனப் பிரச்சினைக்கு அடிப்படை காரணம் மொழி வெறி என்பது தான் அடிப்படைக் காரணம் என்றாலும், தற்போது ஆளும் அனுர அரசும் சிங்கள மொழிக்கே தொடர்ந்தும் முன்னுரிமை கொடுத்து வருகிறது

எதிர் காலத்தில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நியமனங்கள், துணைவேந்தர் தெரிவு, விரிவுரையாளர்களை அமர்த்தவும் நீக்கவும் அதிகாரமுள்ள பேரவையில் சிங்கள உறுப்பினர்கள் முதல் முறையாக ஆதிக்கம் செலுத்த இருக் கின்றார்கள்.

இதன் தொடர்ச்சியாக கிழக்கு பல்கலை கழகத்திற்கு மிக விரைவில் சிங்கள துணைவேந்தர் ஒருவரை நியமிக்க இருக்கின்றார்கள் என்றும் சொல்லப்படுகின்றது.

இது போதாதென்று வவுனியா பல்கலைக்கழக பேரவையின் 7 வெளிவாரி உறுப்பினர்களில் 3 சிங்கள உறுப்பினர்களும் 3 தமிழர்களும் 1 முஸ்லிம் பிரதிநிதியும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

## யாழ் பல்கலை கழக அவலம்:

சிங்கள மயமாகி வரும் யாழ்ப்பாண பல்கலை கழக பேரவை யின் 15 வெளிவாரி உறுப்பினர்களில் 3 சிங்கள உறுப்பினர்கள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவலும் வெளிவந்துள்ளது.

இது தவிர கிழக்கு மாகாணத்தை குறி வைத்திருக்கும் ஜேவிபி சிங்கள ஆளுநருக்கு மேலதிகமாக அதன் பிரதம செயலாள ராகவும் சிங்கள அதிகாரியை நியமித்துள்ளது.

## பொதுசேவையில் முழு சிங்கள மயம்:

அத்துடன் கிழக்கு மாகாண பொதுசேவை ஆணைக்குழுவின் தலைவராகவும் சிங்கள அதிகாரியே நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர் காலத்தில் மக்களால் தெரிவு செய்யப்படும் எந்தவொரு முதலமைச்சருக்கும் பொறுப்பு கூற வேண்டிய அவசியம் 13 ஆம் திருத்தத்தின் கீழ் இந்த அதிகாரிகளுக்கு இருக்க போவ தில்லை.

அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முதலமைச்சருக்கே பொறுப்பு கூற வேண்டிய கட்டாயம் இல்லாத நிர்வாக அலகை ஜேவிபி உருவாக்கி வருகின்றது.

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் திருகோண மலை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு வழமை போல சிங்கள அதிகாரிகளே அரச அதிபர்களாக நியமிக்கப்பட் டுள்ளார்கள்.

வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்திற்கும் சிங்கள அதிகாரி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிங்கள ஆக்கிரமிப்புகளை எதிர்கொண்டுள்ள வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கும் கல்கமுவ சாந்தபோதி தேரர் உட்பட்டவர்களுடன் தொடர்புடைய சிங்கள பிரதேச செயலாளர் ஒருவரே நியமிக்க பட இருக்கின்றார்.

## அமைச்சு செயலாளர் சிங்கள மயம்:

வன்னி மாவட்டத்தில் ஜேவிபியில் போட்டியிட்டு இரு தமிழ் பாராளமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையிலும் தேசிய பட்டியல் மூலம் நியமிக்கப்பட்ட சிங்கள உறுப்பினரே ஒருங்கிணைப்பு குழு தலைவராக்கப்பட்டள்ளார்.

இவ் நியமனங்கள் ஊடக வவுனியா வடக்கு தமிழ் கிராமங் களின் எல்லைக்கோட்டின் வழி ஊடக நகர்ந்து மணலாறு சிங் கள குடியேற்றங்களை இணைத்து பரவும் பரந்த குடியேற்றத் தினை செறிவாக்க முயற்சிக்கின்றார்கள் போல் உள்ளது.

இது போததென்று 27 பேர் அங்கம் வகிக்கும் அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர் பட்டியலில் வெறும் இரண்டு தமிழ் அதிகாரிகளுக்கு மட்டும் இடம் கிடைத்துள்ளது.

அரசாங்கத்திற்கு சொந்தமான 52 அரச நிறுவனங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ள தலைமை பதவி நியமனத்திலும் எந்த வொரு தமிழ் அதிகாரிகளுக்கும் இடம் வழங்கப்படவில்லை.

அதே போல அரசாங்கத்தின் திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள், சபைகள் உட்பட அரச கட்டமைப்புகளிலும் தமிழ் அதிகாரிகளுக்கு போதிய பிரதிநித்துவம் கிடைக்கவில்லை.

## வெளிநாட்டு தூதுவராலயங்களின் சிங்கள மயம்:

50 நாடுகளில் இயங்கும் இலங்கையின் வெளிநாட்டு தூது வராலயங்களின் தலைமை பதவிகளுக்கும் வெளிநாட்டு சேவையியுள்ள எந்த தமிழ் அதிகாரிக்கும் வாய்ப்பு வழங்கப் படவில்லை.

வெளிநாட்டு சேவையுள்ள திறமையுள்ளோருக்கு மட்டுமே வாய்ப்புகள் வழங்கப்படும் என ஜேவிபி அறிவித்திருந்துள்ள நிலையில் அதற்கு மாறாக தங்கள் கூட்டாளிகளை நியமித்து வருகின்றது.

ஆனால் இதிலும் ஜேவிபி யில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்களுக்கு எந்த வாய்ப்பும் வழங்கப்படவில்லை

விசேடமாக திரு அனுரா குமார திஸ்ஸநாயக்க நியமித்துள்ள 'Clean Sri Lanka' செயலணியிலும் தமிழ் அதிகாரிகளுக்கு இடம் வழங்கப்படவில்லை.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சுற்றுல்லா ஆலோசனை சபை யிருக்கும் கூட தமிழ் பிரதிநித்துவம் முழுமையாக மறுக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் அரசியல் நியமனங்கள் ஒன்றும் புதிய விடய மல்ல . ஆனால் இலங்கையராக ஒன்றிணைவோம் என பேசும் ஜேவிபி காலத்தில் தான் இது மோசமான நிலையை எட்டி யுள்ளது.

இன மத மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் திறமை அடிப் படையில் அரசியல் வேறுபாடு கடந்து நுங்ரயடவைல, Diversity, and Inclusion (EDI) தத்துவங்களை உள்வாங்கி வெளிப்படையான நிர்வாகத்தை உருவாக்கும் அடிப்படை விடயத்தில் தவறிழைத்து விட்டு அபிவிருத்தி மற்றும் ஊழல் பற்றி பேச முடியாது.

## 70 ஆண்டுகளாக தொடரும் இனவாதம்:

ஆனால் அபிவிருத்தி மற்றும் ஊழல் என வெறும் வாயால் பேசும் ஜேவிபி எல்லாவிதமான அசிங்கங்களையும் செய் கின்றது.

இங்கு வடக்கு கிழக்கு பல்கலைக்கழகங்கள் உட்பட அரச நிர் வாக கட்டமைப்பில் சிங்கள அதிகாரிகள் பணியாற்ற முடியாது என்று வாதிட முடியாது.

போட்டி தேர்வு / நேர்முகம் மூலம் திறமை அடிப்படையில் தேர்வு செய்யப்படும் யாரும் எங்கும் பணியாற்ற முடியும்.

ஆனால் குறித்த இன / சமூக பிரிவை சேர்ந்தவர்கள் என்பதன் அடிப்படையில் வாய்ப்புகளை மறுப்பதும் திட்டமிட்ட ரீதியில் நிர்வாக கட்டமைப்புகளை சிங்கள மயப்படுத்துவதும் அரு வருக்க தக்க செயல்களாகும்.

கடந்த 70 ஆண்டுகளாக தொடரும் இந்த அருவருக்க தக்க பாரம்பரியத்தை ஜேவிபியும் வெளிப்படையாக தொடருகின்றது.

ஆனால் வெறும் வாயில் இனவாதம் தோற்கடிக்கப்பட்டு விட்டதாக ஜேவிபி அலம்புகின்றது.

# நூல் வெளியீடு

# BOOK LAUNCH

சாள்ஸ் அன்ரனியோடு
செயற்பட்ட போராளிகள் மற்றும்
ஏனைய துறைப் போராளிகளாகக்
களமாடியவர்களின் எழுத்துகளைத்
துளசிச்செல்வன் அவர்கள் தொகுக்க,
உலகத்தமிழர் உரிமைக்குரல்
வெளியிடும் நூல்

**பிரபாகரன்**

## சாள்ஸ் அன்ரனி




**Book compiled by Thulasiselvan, featuring the writings of those who fought alongside Charles Antony and other sectoral fighters, to be published by Voice of Global Tamil Rights**

**Prabakaran**

## Charles Antony



இடம் 90 Littles Road,
Scarborough,
Ontario, M1B 5E2

**May 3rd 2025**

**5.00PM to 8.00PM**

தொடர்புகளுக்கு:
மகாஜெயம் 647.262.5587
ஜெயந்தன் 647.853.2918

Voice of Global Tamil Rights VOICE உலகத்தமிழர் உரிமைக்குரல்



# தமிழீழ விடுதலை வரலாற்றில் மே



## தமிழினப் படுகொலை ஆரம்பம்:

22.05.1958 அன்று ஒரு தொடரூந்தில் பயணம் செய்துகொண்டிருந்த 500ற்கும் மேற்பட்ட தமிழர்களை சிங்களக் காடையர்கள் தாக்கி இனக் கலவரத்தை ஆரம்பித்தனர். அப்போதைய சிறீலங்காப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவினது குண்டர்களாலும், சிங்களக் காவல்துறையினராலும் தமிழர்களது வீடுகள், உடமைகள் யாவும் அழிக்கப்பட்டன. 300 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.





## தமிழீழ விடுதலைப் புலிகள் என்று பெயர் சூட்டப்பட்ட நாள்:




1972ம் ஆண்டில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களினால் “புதிய தமிழ்ப் புலிகள்” என்ற பெயரில் உருவாக்கப்பட்டு வழிநடத்தப்பட்டு வந்த புலிகள் இயக்கம் “தமிழீழ விடுதலைப் புலிகள்” எனப் பெயர் மாற்றம் பெற்று இயங்கத் தொடங்கிய நாள் 05.05.1976 .

## யாழ். நூலகம் எரிக்கப்பட்ட நாள்:

மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்கென வந்திருந்த அமைச்சர்களான காமினி திசநாயக்கா மற்றும் சிறில் மத்தியு முதலானவர்கள் தலைமையிலான சிங்களக் காடையர்களால் தமிழ் மக்களின் பண்பாட்டு அறிவுப்பெட்டகம் 31.05.1981 அன்று தீ மூட்டி எரிக்கப்பட்டது. தென்னாசியா விலேயே அதிக நூல்களைக் கொண்டதும் சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான பண்டைய நூல்களையும் ஏட்டுச் சுவடிகளையும் கொண்ட அழகிய அரிய கலைக்கருவூலத்தை சிங்களக் காடையர்கள் எரியூட்டி, சிங்களத்தின் எண்ணம் தமிழின அழிப்பு ஒன்றையே நோக்காகக் கொண்டது என்பதை புலப்படுத்தினர்.



## கந்தர் மடம் வாக்குச்சாவடித் தாக்குதல்:

18.05.1985 அன்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது கந்தர் மடம் தேர்தல் சாவடியில் காவலில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீதும், பொலிசார் மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட 10 நிமிட அதிரடித் தாக்குதலில் இராணுவக் கோப்ரல் ஜெயவர்த்தனா கொல்லப்பட்டான். ஒரு இராணுவக் கோப்ரலும், 2 பொலிசாரும் காயமுற்றனர்.

## லெப்டினன் சீலனைக் காட்டிக்கொடுத்த பொலிஸ் அதிகாரி அழிப்பு:

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது தாக்குதலணித் தளபதியான லெப்டினன் சீலனின் மறைவிற்குக் காரணமாக விளங்கிய இனத் துரோகி பொன்னையா சுப்பிரமணியம் 04.05.1984 அன்று மீசாலையில் வைத்து விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டான்.

## விடுதலைப் புலிகளில் முதன் முதல் சயனைட் அருந்தி வீரச்சாவடைந்த புலிவீரன் பகீன் [செல்வம்] அவர்களின் 41ஆம் ஆண்டு வீர வணக்க நாள்



விடுதலைப் புலிகளின் வரலாற்றில் எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற மரபுக்கமைய முதன் முதலின் சயனைட் அருந்தி வீரச்சாவடைந்த புலிவீரன் வீரவேங்கை பகீன் (வேலுப்பிள்ளை அன்னலிங்கம் பகீரதன், பிறப்பு: 02.05.1959 - மண்டைதீவு, யாழ்). வல்வெட்டித்துறையில் நடந்த ஒரு திடீர் சுற்றிவளைப்பின் போது இந்த வரலாற்று நிகழ்வு நடந்தது.

## மன்னார் பொலிஸ் நிலையத் தகர்ப்பு:

10.05.1985 தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலணிகளால் மன்னார் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது. வெற்றிகரமாக நடந்து முடிந்த இத் தாக்குதலின்போது, மன்னார் பொலிஸ் நிலையத்தின் 7 கட்டிடங்கள் தகர்க்கப்பட்டன. பெருமளவிலான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. பல பொலிசார் கொல்லப்பட்டனர்.

## வல்வெட்டித்துறைப் படுகொலை:

09.05.1985 அன்று வல்வெட்டித்துறை நகர்பகுதியை சுற்றிவளைத்த சிறிலங்காப் படையினர் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட 50 பொதுமக்கள், பொது நூல் நிலையத்தினுள் அடைத்துவைக்கப்பட்டு குண்டுவைத்துக் கொல்லப்பட்டனர். தெருக்களில் வைத்தும் பொது மக்கள் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டனர். எல்லாமாக 90 பொது மக்கள் ஜே.ஆரின் ஆயுதப் படைகளால் படுகொலை செய்யப்பட்டனர்.



## சிங்களப் படை அதிகாரி மேஜர் சிறிலால் மெண்டிஸ் பலி:

12.05.1985 அன்று உடுப்பிட்டி பேரூந்து நிலையத்தினுள் தமிழின அழிப்பிற்கென தயாராக இருந்த சிங்களப்படையினர். மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எறிகுண்டுத் தாக்குதலில் மேஜர் சிறிலால் மெண்டிஸ் உட் பட ஐவர் கொல்லப்பட்டனர்.

## வவுனியாவில் இந்தியச் சிறையுடைப்பு:

01.05.1989 அன்று வவுனியாவில் இருந்த இந்தியப் படையினரின் சிறையை உடைத்து அங்கிருந்த போராளிகளும் பொதுமக்களுமாக 42 பேர் தப்பினர். இச்சிறையுடைப்பு நடவடிக்கையில் இரு போராளிகள் உட்பட நான்கு தேசத்தின் புதல்வர்கள் வீரச்சாவடைந்தனர்.

## லெப். கேணல் நவம் [டடி] அவர்களின் 36ஆம் ஆண்டு வீரவணக்க நாள்






விடுதலைப் புலிகளின் முதன் நிலைத் தளபதிகளுள் ஒருவரான நவம் (செல்லப்பெருமாள் அருமைராசா, பிறப்பு: 02.02.1961 - கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவு), கை ஒன்றை இழந்திருந்த நிலையிலும் இந்திய படையினருக்கு எதிரான புகழ்பெற்ற மணலாற்றுச் சமரில் முக்கிய பங்கு வகித்தார். முல்லை மாவட்ட தளபதியாக நியமிக்கப்பட்டிருந்த போது நெடுங்கேணி பாடசாலை இந்திய முகாம் மீதான பிரசித்தி பெற்ற தாக்குதலின் போது விழுப்புண்ணடைந்து பண்டுவத்திற்காக சென்றபோது தமிழகத்தில் 15.05.1989 அன்று வீரச்சாவடைந்தார். போரில் உறுப்புக்களை இழந்த போராளிகளின் தொழில் நுட்ப பயிற்சிக் கல்லூரிக்கு இவர் நினைவாக இவரது பெயரைச் சூட்டினார் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள்.

## அபித்தா கப்பல் தகர்ப்பு: இரு கரும்புலிகள் வீரச்சாவு

கடலில் பல போராளிகளினது அழிவுக்கும் பல பொதுமக்களது அவல இறப்பிற்கும் காரணமாக இருந்த அபித்தா கட்டளைக் கப்பல் 04.05.1991 அன்று கடற் கரும்புலிகள் கப்டன் ஜெயந்தனன் (கம்புக்குட்டி பத்மநாதன், பிறப்பு: 05.01.1972 - சோதிபுரம் மட்டு), கப்டன் சிதம்பரம் (பெரியதம்பி சந்திரன், பிறப்பு: 26.12.1972 - வல்வெட்டித்துறை, யாழ்) ஆகியவல்களால் அழிக்கப்பட்டது.





www.sangathamil.ca







## இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி கொல்லப்பட்டார்:



இந்திய அமைதிப் படையை தமிழீழத்திற்கு அனுப்பி, 8000 தமிழர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி 21.05.1991 அன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல் லப்பட்டார். இவரால் அனுப்பிவைக்கப்பட்ட படைகளால் தமிழீழத்தின் பல கோடிப் பெறுமானமுள்ள சொத்துக்கள் அழிக்கப்பட்டன. ஆயிரக் கணக்கான தமிழ்ப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

## தமிழீழ வைப்பகம் ஆரம்பம்:

23.05.1994 அன்று தமிழீழ நிர்வாகக் கட்டமைப்புகளில், ஒன்றான தமிழீழ வைப்பகம் திறந்துவைக்கப்பட்டது.



யாழ் நகரில் முதலாவது தமிழீழ வைப்பகத்தை தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் திறந்து வைப்பதையும், அருகில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தமிழீழக்காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் கரிகாலன், நீதிப்பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோருடன் நிகழ்ச்சியில் கல ந்து கொண்ட ஒரு பகுதி மக்களையும் மேலுள்ள படத்தில் காணலாம்.

## லெப். கேணல் ரத்தி அவர்களின் 28ஆம் ஆண்டு வீரவணக்க நாள்



புலிகளின் கதை முடிகிறது எனக் கூறிக்கொண்டு "வெற்றி உறுதி" எனப் பெயரிட்டு பெரும் படைக்கல ஒருங்கிணைப்புடன் தொடங்கப்பட்ட ஜெயசிக்குறுய் படையெடுப்புத் துருப்புக்கள் மீது நெருங்கேணிப் பகுதியில் 15.05.1997 அன்று நடாத்தப்பட்ட எதிரித் தாக்குதலின் போது மாலதி படையணியின் துணைத் தளபதி லெப். கேணல் ரத்தி (கிருஸ்ணபிள்ளை சுபாஜினி, பிறப்பு: 30.06.1975 - கரவெட்டி, யாழ்) வீரச்சாவடைந்தார்.

## 27.05.1997 அன்று முல்லைக் கடற்பரப்பில் எற்பட்ட வெடிவிபத்தின் போது வீரச்சாவடைந்த கடற்கரும்புலிகளின் வீரவணக்க நாள்







27.05.1997 அன்று முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்கரும்புலிப் படகுகளுக்கிடையே ஏற்பட் வெடி விபத்தின் காரணமாக 8 கடற்கரும்புலிகளான மேஜர் இளமகன் (தருமலிங்கம் திருக்கணேசன், பிறப்பு: 01.01.1973 - ஆரயம்பதி, மட்டு), மேஜர் அன்பு (முத்துவேல் ரவீந்திரன், பிறப்பு: 06.10.1973 - முரங்கள், மன்னார்), மேஜர் சந்திரா (தம்புசெபஸ்ரியான் மரிய கொறட்டி, பிறப்பு: 19.12. 1975 - குருநகர், யாழ்), மேஜர் வினோதா (தேவசிகாமணி விஜயகுமாரி, பிறப்பு: 12.09.1976 -வல்வெட்டித்துறை, யாழ்) மேஜர் வலம்புரி (கைலாசம்பிள்ளை புஸ்பாவதி, பிறப்பு: 18.01.1977 - அநுராதபுரம்), கப்டன் சித்தா (பாலசிங்கம் சித்றூபன், பிறப்பு: 10.11.1969 - சுழிபுரம், யாழ்), கப்டன் அருளரசன் (துங்கராசா தியாகராசா, பிறப்பு: 27.03.1977 - களுதாவளை, மட்டு), கப்டன் சுதாகர் (கனகசபை அருள், பிறப்பு: 25.03.1977 - மொறக்கொட்டாஞ்சேனை, மட்டு) ஆகிய கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.



















## லெப் கேணல் சுகந்தன் அவர்களின் 28ஆம் ஆண்டு வீரவணக்க நாள்



ஜெயசிக்குறுய் களத்தில் புலிகளின் பலமான எதிர்த்தாக்குதலுக்கு வலுச்சேர்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த வேளை கோதண்ட நொச்சிக்குளம் பகுதியில் 30. 05.1997 அன்று சிறீலங்கா படையினரின் பதுங்கிகத் தாக்குதலின் போது லெப். கேணல் சுகந்தன் (கணபதிப்பிள்ளை உதயகாந்தன், பிறப்பு: 26.08.1974, - 3ம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு) வீரச்சாவடைந்தார்.

## லெப். கேணல் விமல் [அப்பன்] அவர்களின் 27ஆம் ஆண்டு வீர வணக்க நாள்



01.05.1998 அன்று திருகோணமலை சூரன்கல் பகுதியில் சிறீலங்காப் படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் லெப். கேணல் விமல் (ஆயுமுகம் பரமேஸ்வரன், பிறப்பு: 14.04.1968 - திருவையாறு, கிளிநொச்சி) அவர்கள் வீரச்சாவடைந்தார்.

## லெப் கேணல் பிரசாந்தன் அவர்களின் 26ஆம் ஆண்டு வீரவணக்க நாள்



புல்மோட்டைக் கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையுடன் இடம்பெற்ற திடீர் மோதலில் 25.05.1999 அன்று லெப். கேணல் பிரசாந்தன் (வின்சன் ஜெயச்சந்திரன், பிறப்பு: 07.07.1974 - தர்மபுரம், கிளிநொச்சி) போது வீரச்சாவடைந்தார்.

## கரும்புலி மேஜர் அரசப்பன் அவர்களின் 26 ஆம் ஆண்டு வீரவணக்க நாள்




சிறீலங்கா இனவாத இராணுவத்துடன் இணைந்து தமிழின அழிப்பில் தீவிரமாய் ஈடுபட்டிருந்த தேசவிரோதி ராசீக் 29.05.1999 அன்று கரும்புலி வீரரால் அழிக்கப்பட்டான். மட்டு, அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் மீது நடந்துவந்த காணாமல் போதல், கொலை, கைது, சித்திரவதை என்பவற்றிற்கு காரணமாய் இருந்த துரோகி ராசீக்ஜ மட்டக்களப்பு நகரில் வைத்து அழித் தொழிக்கும் புனிதப் பணியேற்று அதனை வெற்றியுடன் செய்து முடித்து மேஜர் அரசப்பன் (மயில்வாகனம் அருட்செல்வன், பிறப்பு: 06.11.1978 - சந்திவெளி, மட்டு) வீரச்சாவடைந்தார்.

## ஓயாத அலைகள்–03 மே மாதத்தில் நகர்வு:

10.05.2000 அன்று நாவற்குழிப் பாலம் மீட்கப்பட்டது. 11.05.2000 அன்று தென்மராட்சிக் கோட்டத்தில் கோயிலாக்கண்டி தனங்கிளப்பு படைத்தளங்கள் கைப்பற்றப்பட்டன. யாழ். மாநகரை நோக்கிய நகர்வில் அரியாலைப் பிரதேசம், கொழும்புத்துறை இறங்குதுறைப் பகுதி கைப்பற்றப்பட்டது. 16.05.2000 அன்று தச்சன்தோப்பு நாவற்குழிப் பகுதி படை முகாம்கள் தகர்க்கப்பட்டன. ஓயாத அலைகள் -03 படையணிகளால் கைதடிச்சந்தியில் அமைந்திருந்த இராணுவத்தளம் விடுவிக்கப்பட்டது. 20.05.2000 ஓயாத அலைகள் -03 படையணிகளால் தென்மராட்சியின் தலைநகர் சாவகச்சேரி மீட்கப்பட்டது.



## கேணல் ரமணன் அவர்களின் 38ஆம் ஆண்டு வீரவணக்க நாள்



மட்டக்களப்பு மாவட்டத் துணைத் தளபதி கேணல் ரமணன் (கந்தையா உலகநாதன், பிறப்பு: 14.10.1965 - திருப்பளுகாமம், மட்டு) 21.05.2006 அன்று வவுணதீவு பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் முன்னரங்க பாதுகாப்பு நிலைகளைப் மேற்பார்வை செய்து கொண் டிருந்தவேளை சிறீலங்கா இராணுவம் போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறி மேற் கொண்ட குறிசூட்டுத் (சினைப்பர்) தாக்குதலில் வீரச் சாவடைந்தார். தேசியத் தலைவரின் கெரில் லாத் தந்திரோ பாயங்களுக்கு மிகச் சிறந்த முறையில் களநிலை வடிவம் தந்தவர் களில் ரமணனும் ஒருவர். எந்தப் பொருள் எப்போது வெடிக்கும் எங்கிருந்து சன்னங்கள் கிளம்பும் என்று இரவும் பகலும் எதிரியை ஏங்கவைத்த பெருமை ரமணனுக்கே உண்டு.

## சமர்க்கள நாயகன் பிரிகேடியர் பால்ராஜ் அவர்களின் 17ஆம் ஆண்டு வீரவணக்க நாள்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் 1984 இல் தன்னை இணைத்துக்கொண்ட இவர், ஓர் ஆற்றல் மிக்க ஆளமை மிக்க இலட்சியப் போராளியாக தேசியத் தலைவர் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டவர். மணலாற்றுப் பகுதி கட்டளைத் தளபதியாகவும், சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் முதல் தளபதியாகவும், விடுதலைப் புலிகளின் இராணுவத் துணைத் தளபதியாகவும் செயலாற்றியவர். மகத்தான இமாலய இராணுவ வெற்றிகள் பலவற்றுக்கு நடு நாயகமாக நின்று சண்டையணிகளையும் மரபுப் படையணிகளையும் வழிப்படுத்தி நெறிப்படுத்தி




சமராடிய தலைசிறந்த போர்த் தளபதியாக பிரகேடியர் பால்ராஜ் / லீமா (பாலச்சேகரம் கந்தையா.




பிறப்பு: 27.11.1965 - கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவு) கடைசிவரை தகிழ்ந்தவர். 20.05.2008 அன்று சுகவீனம் காரணமாக வாவடைந்தார்.

## பிரிகேடியர் சொர்ணம் அவர்களின் 16 ஆம் ஆண்டு வீரவணக்க நாள்



15.05.2009 அன்று முள்ளிவாய்க்கால்ப் பகுதியில் சிறீலங்கா படைகளுக் கொதிரான நடவடிக்கையின் போது பிரிகேடியர் சொர்ணம் (ஜேசப் அன்ரனிதாஸ், பிறப்பு: 08.04.1964 - மானிப்பாய், யாழ்) வீரச்சாவு

## பிரிகேடியர் பிரிகேடியர் சசிகுமார் அவர்களின் 16 ஆம் ஆண்டு வீரவணக்க நாள்



தமிழீழ விடுதலைப் புலிகளின் முதன்மைத் தளபதிகளில் ஒருவராக விளங்கிய சசிகுமார் 'சசி மாஸ்டர்' என்று அழைக்கப்படும் பிரிகேடியர் சசிகுமார் அவர்கள் 15.05.2009 அன்று முள்ளிவாய்க்கால் பகுதியில் சிறீலங்காப் படையினருடனான மோதலின்போது வீரச்சாவு

## தமிழின இனப்படுகொலையின் உச்ச நாள் மே 18

சர்வதேச நாடுகளின் துணையுடன், தேசத் துரோகிகளினதும், தமிழீழ விரோதிகளினதும் முழுமையான ஒத்துழைப்புடன் பொய்மை புனைந்து உலகை ஏமாற்றி தன்னை நியாயப்படுத்தியபடி வீரமிக்க தமிழீழ தேசத்தை சிங்கள இன வெறியரசு கோழைத்தனமாக ஆக்கிரமித்துக்கொண்ட நாள் மே 18. 21ஆம் நூற்றாண்டில் மனிதம் அதன் உரிமைகள் பற்றிய புதிய கருத்தேற்றங்கள் சபைகள் தோறும் நிறைந்து விரவிக்கிடக்க இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை பலிகொண்டு பல்லாயிரம் தமிழர்களை அங்கவீனர்களாக்கி மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை கைதியகளாக்கி அடைத்து வைத்தபடி தமிழீழத்தை சிங்கள பௌத்த தேசம் முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டது.
















முள்ளிவாய்க்கால் நினைவு நாள்
Mullivaikkal Remembrance Day
ஈழத்தமிழின அழிப்பு நாள்
Eelam Thamil GENOCIDE DAY
தமிழ்த்தேசிய துக்க நாள்
Thamil National MOURNING DAY
Only in 2009
Over 146. 679 Eelam Thamils were murdered and more then 70,000 Thamils unaccounted. Over 95,000 Thamil Women Widowed by Sri Lanka's Government Forces, More then 50,000 Thamils Children Orphaned.
1948 தொடக்கம்
ஈழத் தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு தொடர்கிறது...
Since 1948
Structural Genocide Continues Against Eela Thamils by Sri Lankan Government
2009
மே
May 18
2025
16 Years
ஆம் ஆண்டு
The Genocide of Thamils in Sri Lanka's one of the biggest tragedies of 21st century and the World still remains Silent.
Government of Canada & United Nations Recognize Thamil Eelam Genocide and demand International Investigation on Genocide of Eelam Thamils
"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The Thirst of Thamils is the Homeland of ThamilEelam"
சங்கத்தமிழ்